அகஸ்தியர்

பூஜாவிதி 200 - தீட்சாவிதி - 200

முதலிய நூல்கள்



தாமரை நூலகம், சென்னை - 600 026.

அகஸ்தியர்

பூஜாவிதி 200 தீட்சாவிதி 200

முதலிய நூல்கள்

பூஜாவிதி 200, ஞான சைதன்யம் 51
தீட்சாவிதி 200, துறையறி விளக்கம்,
தத்துவம் 300, தர்க சாஸ்திரம்,
300 ஊத்து முறை 24.

பதிப்பாசிரியர்
எஸ்.பி. ராமச்சந்திரன்

தொலைபேசி எண் : 9940073194

தாமரை நூலகம்
7, N.G.O. காலனி, 3வது தெரு
வடபழனி, சென்னை – 26

தாமரை வெளியீடு : 107
முதல்பதிப்பு : அக்டோபர் - 1993
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 1997
மூன்றாம் பதிப்பு : மே 2009
நான்காம் பதிப்பு : அக்டோபர் 2016
ஐந்தாம் பதிப்பு : ஜனவரி : 2024

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	அகஸ்தியர் பூஜாவிதி 200 தீட்சாவிதி 200 முதலிய நூல்கள்
பதிப்பாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம், 7, N.G.O. காலனி, வடபழனி, சென்னை - 600 026
பதிப்பு ஆண்டு	:	ஜனவரி : 2024
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1/8
அச்சுத்தாள்	:	மாண்டியா 10-7 கி.
அட்டை	:	13.8 சேஷசாயி போர்டு
எழுத்துக்கள்	:	10 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	305
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூல் விலை	**:**	**ரூ. 190/-**
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 34.

பதிப்புரை

அகஸ்தியர் பெருமானார் அருளிய ஞான நூல்களில் தலைசிறந்த சிலவற்றைப் பொறுக்கி எடுத்து வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

இந்த நூல்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித் தனியாக ஒரு நூல் எழுதலாம், அவ்வளவு பெருமையும் சிறப்பும் பெற்ற நூல்கள் இவை!

இந்த நூல் தொகுப்பு மெய்வழி - ஈரோடு குழந்தைசாமிக் கவுண்டர் அவர்களின் கருணையால் நமக்குக் கிடைத்து அச்சேறும் பாக்கியம் பெற்றது. அன்னாருக்கு நமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

எஸ்.பி. ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

அகஸ்தியர் பூஜாவிதி 200

உ

பரமபதி துணை

பதினென் சித்தர்களி லொருவரான

அகஸ்தியர் பூஜாவிதி 200

காப்பு

ஆதார மாறு மகண்ட குருபாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கம் - நாதமுறும்
விந்துவே மூலம் விளங்கும் பூஜாவிதியாந்
தந்திமுகத் தோன்கருணை தான்.

காரணமாஞ் சிவயோகச் சித்தர் பூஜை
களங்கமறச் சொல்லுகின்றேன் நன்றாய்க்கேளு
பூரணமா மவுனமல்லோ ஞானவாழ்க்கை
புகழான அஷ்டாங்கம் நடனமாடும்
சீரணமாய்ப் போகாமற் பூஜைமார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க்கையா
வாரணமா முகத்தோனே முதலே பூஜை
மற்றதொரு பூஜையெல்லாம் பிறகு செய்யே. 1

செய்யப்பா அதன்பிறகு சுப்பிரமண்யன்
தீர்க்கமாய் அதன்பிறகு வயிரவன்றான்
செய்யப்பா அதன்பிறகு தெட்சணாமூர்த்தி
சித்திபெற்ற மூலகூட் சங்களாலே
செய்யப்பா அஷ்டகன்மம் வாலைவாலை
சிதம்பரத்தின் பதமாறி யாடுமூலஞ்
செய்யப்பா தாக்குநோக் காலேசிந்தை
சிறப்பாக மவுனத்திற் சித்தியாமே. 2

ஆமப்பா சாலோக சாமீபத்தில்
அழுந்தாமற் சாரூப மறியுங்காலம்
காமப்பால் கானற்பால் ரெண்டுங்கொண்டால்
கைக்குள்ளாம் பூசையுமெய்க் கருவைச்சொன்னேன்
நாமப்பா யிப்படியே சித்தரெல்லாம்
நயமீறும் பூசைசெய்வார் நண்பினாலுந்
தாமப்பா நியாசத்தால் முத்திரைகளாலுஞ்
சக்கரத்தின் பூசைவிதி சாற்றுவேனே. 3

சாற்றுவேன் யாகசா லைக்குள்ளாகச்
சாபங்கள் நிவர்த்திசெய்து சத்திபூசை
தேற்றுவேன் சிவபூசை வாலைபூசை
சிதம்பரத்தின் பூசைவிதி துர்க்கைபூசை
ஏற்றுவேன் அட்டகெஜ அட்டநாகம்
இயல்பான அட்டாங்க வாசியோடு
போற்றுவேன் நந்திபெலிக் கொடிக்கம்பத்திற்
புகழான மவுனத்திற் பூசைபண்ணே. 4

பண்ணவே சிவயோகம் அனுட்டானங்கள்
பண்பாகத் திருநாமம் பாங்காய்ச்செய்து
யெண்ணவே மவுனமுதற் சூரியபூசை
இலகுசிவ மாலைசிவ லிங்கபூசை
நண்ணவே ரசலிங்க சுயம்பாம்பூசை
நாற்பத்து முக்கோண சதாசிவத்தின்பூசை
உண்ணவே மஹேஸ்வரரும் ருத்திரன்பூசை
உருதியாய் மவுனத்தி லூணிச்செய்யே. 5

செய்யவே கொங்கணர்தான் கடைக்காண்டத்தில்
திறமாகப் பூசைவிதி செப்பினார்கேள்
உய்யவே அவர்நூலெந் நூலும்பாரு
உறுதியாய் மனந்தேறு முருமையாகும்
பைய்யவே விழிபுதைத்து விண்ணுக்கப்பால்
பளிச்சென்று தீபவொளி பார்க்கப்பார்க்க
மையமாய்க் கண்கடுத்தால் உருட்டிப்பாரு
வாசலிலே குவளையா மருவிப்பாரே. 6

குகைவாசல் கார்க்க

பார்கையிலே பூரணத்தின் மாத்திரைதானொன்று
பரிவாக ரேசகத்தில் மாத்திரைதானொன்று
ஏர்க்கையிலே லாடவிழி கண்ணோட்டத்தி
லிருகிநின்ற மேல்வாசல் திறக்கும்பூட்டு
கார்க்கையிலே குகைவாசல் கார்த்தாயானால்
கற்பழியா தொருநாளுங் கண்தூங்காது
சேர்க்கையிலே யிதுபோத மவுனவீடு
திடங்கொண்டால் புலியூர்க்குச் செல்லலாமே. 7

செல்லலாம் சிதம்பரத்தின் நடனங்காணச்
செப்புகிறேன் சக்கரத்தி னியல்புசொல்வேன்
வெல்லலாம் வாமத்தில் வாமிவாலை
வெகுகாமி வெகுமோகி வெகுசொரூபி
சொல்லலா மிடகலையாற் றியானஞ்சத்தி
தொந்தமென்றே ஆடுதற்குச் சுரதராகி
மல்லலா மயேஸ்பரியாள் விசுத்திமீறி
மாறியா டும்மவுனி வாழ்கண்டத்தே. 8

கண்டத்தே புரியட்ட மிருத்துவாசி
கண்பார்வை விழிமருட்டாற் கலந்தயோகி
அண்டத்தே சிவயோகி யந்தரங்கி
ஆசையினா லிடக்காலை மாறியாடி
விண்டத்தே குண்ட லியாஞ் சத்திசத்தி
மேல்வாசற் குள்ளாக விழிமேலாடம்
பிண்டத்தே பாயாமல் விண்ணோட்டத்திற்
பேசாமல் மவுனமுத்தி யாடினாரே. 9

ஆடியதோர் பூச்சக்கரம் சத்தலோகம்
அடுக்கடுக்காய் சத்தசா கரமஞ்சுக்குள்
ஆடியதோர் கிரிகையிலே சித்தாந்தத்தில்
அகண்டபரி பூரணமாய் வேதாந்தத்தில்
ஆடியதோர் கூத்தெல்லா மாத்தாளாலே
அருமைந்த னாசையினால் சித்தாந்தங்கள்
ஆடியதோர் மன்மதனாங் காரம்நீங்கி
ஆடினால் திகம்பரமா யாடுங்கூத்தே. 10

சிதம்பரச் சக்கரம்

கூத்தான சக்கரந்தான் வரையச்சொல்வேன்
கூறாக ஆறுவரை நேரேகீறி
கீத்தாக ஆறுவரை குறுக்கேகீறி
கேசரியா மிருபத்தைந் தரையுமாச்சு
மாற்றான அரையொன்றில் அரைஐந்தாக
வரைகீறல் நால்மூலை நால்முக்கோணம்
பார்த்தாலே நடுக்கோணஞ் சதுரமாகும்
பண்பாக யிதினுள்ளே விந்துபோடே. 11

விந்துவட்டத் திரிகோணம் நூற்றிருபத்தைந்தும்
விளங்கவே ரேகைவரை ஒழுங்காய்க்கீறி
அந்தவட்டத் திரிகோணம் நூற்றிருபத்தைந்தும்
அரைதோறும் அட்சரங்க ளறியச்சொல்வேன்
முந்தியதோர் அரையொன்றி லரையைந்துக்குள்
மூர்த்தியாம் சிவயநம வென்றுமாறி
செந்தழலாம் நடுக்கோணஞ் சிகரமாச்சு
தீர்க்கமுறத் திரிகோண மகாரமாச்சே. 12

ஆச்சிதுக்கு ளிடபாகம் நகாரமாச்சு
ஆதியாங் கோணத்துக் கெதிர்கோணத்தில்
ஆச்சிதுக்குள் யகாரந்தான் மறுகோணத்தில்
அடைவாக வகாரமிடு ஐந்துமாச்சு
ஆச்சிதுக்கு ளரைவிந்து நாதங்கூட்டி
அட்சரங்கள் தப்பாமல் மாறியாடு
ஆச்சிதுக்கு ளடுத்தரையா மைந்துக்குள்ளே
அடைவாக நடுவரையில் நகாரமாக்கே. 13

ஆக்கடா முதற்கோணம் யகாரம்போடு
அடுத்திடையில் வகாரமிடு முதற்கோணத்தெதிரே
தாக்கடா சிகாரமிடு முதற்கோணத்தில்
தப்பாமல் மகாரமிடு ஐந்துமாச்சு
நோக்கடா தீக்கண்ணாம் மாரன்றானும்
நுட்பமா யணங்கனென்ற மாரணந்தான்
போக்கடா பின்பல்லோ வாசித்தம்பம்
புகழாக நமசிவய வென்றுபூணே. 14

பூணவே பிர்மரட்சர மைந்தினாலே
புகழாக யவசிமந வென்றுமாறித்
தோணவே தம்பனமாம் வாசித்தம்பம்
துரியவெளிக் குள்ளொளியா மினிமேற்கேளு
தாணவே யிதினிடைக் கோணமைந்தில்
நாசிவிட்டு வாசலின்மேல் வாசலூடு
ஊணவே ரேசிக்க மேலேதாக்கு
ஒளியான விழிநோக்கி யுரைக்கப்பாரே. 15

பாருநீ யிந்தரைக்கு ளிடபாகத்தில்
பரிவாக வயநமசி யென்றுமாறி
தீருநீ கண்டத்தே யிருத்தியூது
தேருதற்கு உச்சாட னத்தைச்சொல்வேன்.
காருநீ உள்ளரையில் வகாரசத்தி
கைமுறையாய் முதற்கோணஞ் சிகாரம்போடு
சேருநீ யிந்திடையில் மகாரம்போடு
சிறப்பாக முதற்கோணத் கெதிரேகேளே. 16

கேளுநீ நகாரமிடு மறுகோணத்தில்
கெட்டியா யகாரமிடு ஐந்துமாச்சு
வாளுநீ யிந்தரையி னிடையிற்கேளு
மகத்தான நடுவரையில் மகாரம்போடு
ஆளுநீ முதற்கோணம் நகாரம்போடு
அடுத்திடையில் யகாரமிடு முதற்கோணத்தெதிரே
தாளுநீ காலையிடு மறுகோணத்தில்
சாரவே சிகாரமிடு ஐந்துமாச்சே. 17

ஆச்சப்பா நயவசிம யென் றுமாறில்
அதிமோக மோகனமாம் அமிர்தஞ்சிந்தும்
வாச்சப்பா நிராகாரத் தேகமாகும்
மகத்தான கத்திநடு வோடும்பாரு
மூச்சப்பா மகாரமதை மாலெழுத்தாமென்பார்
மூடர்சொல்வார் பெரியோர்கள் மவுனமென்பார்
ஏச்சப்பா ஞானமது லோகத்துக்கு
இதைவிட்டு யிந்தரைக்கு ளிடபாகத்தே. 18

இடையான வாமபா கத்திற்கேளு
யியல்பாகப் பரைவ்சியம் செகவசியமாகும்
அடையான நடுவரையில் யகாரம்போடு
அப்பனே முதற்கோணம் வகாரம்போடு

உடையான சிகாரமிடு யிடப்பாகத்தில்
உறுதியாய் முதற்கோணத் தெதிரேகேளு
சடையேறும் மகாரமிடு மறுகோணத்திற்
சதுர்முகவன் நகர்ரமிடு ஐந்துமாச்சே. 19

ஆச்சடா யிவ்வண்ணம் கால் தலையாய்மாறி
ஆடிடுவாய் வசிமநய வென்றுதானே
பாச்சடா ரெண்டான கீழரையைத் தொட்டுப்
பரிவான ஐந்தரையி லிருபத்தைந்தும்
வாச்சடா யிவ்வீதி மறுவீதிக்குள்
வகையாக நூற்றிருபத் தைந்தும்போடு
பேச்சடா இனியேது சொல்லப் போறேன்
பிறத்துருவம் சூலமிட்டுப் பக்கஞ் சேரே. 20

சேரப்பா சுழிமுனையை இடைபின்னோடு
சேர்த்தபின்பு இடையிலே உகாரம்போடு
சாரப்பா பின்கலையில் அகாரம்போடு
சந்தியிலே ஓங்காரந் தன்னைப் போடு
காரப்பா சூலத்துக் கிடையிற்கேளு
கைமுறையாய் விந்திட்டு மகாரம்போடு
தூரப்பா பாராமல் முடியைப் பார்த்தால்
சொற்பனத்தில் அவத்தையடி மாய்கையாமே. 21

அஷ்ட கும்ப சிதம்பர பூசை

ஆமப்பா இதுவல்லோ மாறிமாறி
ஆடுகின்ற நடனசக் கரந்தானையா
ஓமப்பா சிதம்பரத்தின் பூசைமார்க்கம்
ஒளியான குண்டலியாம் சத்தியோகம்
தாமப்பா ராசிதங்கத் தகட்டிற்கீறித்
தாம்பிரகும் பத்திலிட்டுத் தண்ணீர் வார்த்து
வாமப்பா மாங்குலையும் தேங்காயும் வைத்து
வளமான திரிகோணத் தெர்ப்பைசாத்தே. 22

சாத்தடா பட்டுவஸ்திர முப்புரி நூல்சுற்றி
தருவான கும்பத்திற் சொர்ணம் போட்டு
சாத்தடா புனுகுசவ்வா தோடுபுஷ்பஞ்
சந்தனமுங் குங்குமப்பூ சார்கற்பூரம்

சாத்தடா குளவிந்த மிதினோடொக்கத்
தானரைத்துக் கும்பத்திற் றளமாய்ப்பூசிச்
சாத்தடா ஆபரணம் புஷ்பமாலை
சாருவாங் கும்பத்தைத் தளமாய்வையே. 23

வையப்பா பச்சரிசி பாத்திக்கொண்டு
வளமான விந்திட்டு மவுனந்தாக்கிச்
செய்யப்பா பின்பல்லோ அஷ்டகும்பம்
திடமாக அங்கங்கே ஆபரணமணிந்து
மெய்யப்பா கும்பமெல்லா மிவ்வீதந்தான்
விளங்கவே அஷ்டகும்ப பூசைசெய்து
உய்யப்பா ஓமகுண்டங் குண்டலியாஞ்சத்தி
உத்தமியைத் தோத்திரஞ்செய் யுரைக்கத்தானே 24

தானென்ற சத்திபதி னொன்றுங்கூட்டித்
தடையறவே அட்டசத்தி வாலையெட்டும்
கானென்ற ஓமத்திற் கடலைமொச்சை
காராம ணிப்பயரு பசும்பயரினோடு
வானென்ற நெல்பொரிதேன் சர்க்கரையினோடு
வாழைக்கனி இதுவெல்லாம் வாரித்தூவு
கோனென்ற குருநந்தி சூட்சம்செய்து
கொடுஞ்சுருக்கு ஓமத்தின் சமித்தைக்கேளு. 25

சமித்து விபரம்

கேளப்பா மாவிலிங்கு விளா அத்திநொச்சி
கெடியான அறுசுடனே வில்வம்யெட்டி
வாளப்பா மாஞ்சிப்பி இதுவெட்டுந்தான்
வளமான எரிதுரும்பாம் அசுராளண்டார்
நாளப்பா துட்டகண பூதமெல்லாம்
நாடாது ஓமத்தில் வலுத்தசித்தி
மூளப்பா செபஞ்செய்து ஓமசாந்தி
தீர்க்கமாம் கும்பத்திற் போடுபோடே. 26

போடப்பா பரமான்னம் பால்பழங்கள்
புகழான தாம்பூலம் நெய்வேத்தியங்கள்
நாடப்பா கும்பத்திற் பிறகுசேரும்
நலமாக நூற்றிருபத் தைந்துமோது

சூடப்பா வில்வபாத்திரம் சுகந்தபுஷ்பந்
தோத்தரித்து தூவியே சுழினைதாக்கு
வீடப்பா பிலத்துதிந்தச் சக்கரந்தான்
வெளியொளியாய்ப் பூரணமாய் விளங்குவாரே. 27

வாரான பரமானம் பலகாரங்கள்
மதுவான தேனோடு சக்கரை தேங்காயும்
பேரான யிளநீர்கள் பால்பழங்கள்
பிதற்றாதே தாம்பூலம் நெய்வேத்தியம் செய்து
கூறாக சோடசமா முப்சாரங்கள்
கொடுத்திடுவாய் கற்பூர தீபந்தானும்
வீறாக தேனின் முத்திரை யோனி முத்திரை
மேலான சின்மயத்தின் முத்திரையுங்காட்டே. 28

காட்டியே அர்ச்சித்துத் தெண்டஞ் செய்து
கரத்தினில் விபூதிலலா டத்தில்பூசி
சூட்டியே ஓங்காரந் தன்னைப்போடு
சுழினையிலே திலதமிடு தேகங்கட்டும்
நாட்டியே அட்டகும்பந் தனக்குப்பூசை
நலமாக அவரவர்தம் மூலபீசம்
தீட்டியே தோத்திரஞ்செய் வசமாமட்டுஞ்
சிதம்பரச் சக்கரத்தின் பூசை காணே. 29

கொங்கணருக்குக் காயாச மீய்ந்தது

காணப்பா யிப்படியே கொங்கணர்தான்
கைமுறைகள் சொல்லவில்லை மூலம்தானும்
பூணப்பா யிந்தமுறை சக்கரத்தைப்
போதித்துக் காயாச மவருக்கீய்ந்தேன்
தூணப்பா துரும்பாகுந் துரும்புதூணாஞ்
சுகாதீதக் காதலால் அனந்தமாகும்
வீணப்பா போகாது யிந்தப்பூசை
வேதாந்தங் கைக்குள்ளாம் விந்தைக்கட்டே. 30

விந்துநிலை பற்றாட்டா லிந்தப்பூசை
வீணாசை கொள்ளாதே சமாதிமுட்டு
மந்தகதி யாகாது மறலிவந்தால்
மாப்போமோ சித்தாந்த மாடேகேளு

விந்துவென்ற பலகையின்மே லிருந்துகொண்டு
யிதமாக மதியமுர் தமுண்டுதேரு
வந்துதான் மேருவின்கீழ் குகையிற் செல்லு
வாசலின்பூட் டுத்தெரிக்குங் கற்பம்கொள்ளே. 31

ரசகற்பங் கொள்ள

கற்பமென்ற கற்பமெல்லாங் கற்பமல்ல
காசினியிற் செடிபூடு கற்பமல்ல
கற்பமென்ற ரசகற்பம் மகாகற்பந்தான்
கைமுறையாய்க் கடுகளவாய்க் குன்றிமட்டுங்
கற்பமென்ற வருஷமொன்று கொண்டாயானால்
காலனென்ற பேச்சேது பிரமநிட்டை
கற்பத்தை விட்டேதான் யுகம்வரைக்குங்
கருதியே சமாதியுற்றால் கதிகாணாதே. 32

காணாதே போகாம லேங்கிடாமல்
காலேதோ தலையேதோ யென்றெண்ணாமல்
தோணாதே தோற்றுவிக்கும் கணேசன்மூலந்
துண்டத்தின் கீழ்நுனியி னொளியைக் கண்டால்
பூணாதே பூணுகிற சுவாதிட்டானம்
புகழான அசைநாபியி லொளியைப்பாரு
வீணான வீணல்லாச் சுழினைக்கண்டம்
வேதாந்தத் துரியமது மவுனந்தானே. 33

தானென்ற மவுனமணி பூரகந்தான்
சானகியு மாலுநிற்கு மொளியைப்பாரு
தானென்ற அனாகதம்பின் கடைக்கண்பாரு
கதிரான ருத்திர னொளியைப்பாரு
வானென்ற காலடங்கும் விசுத்திமூலம்
மயேசனுட கண்ணொளியை மருவிப்பாரு
வானென்ற ஆக்கினையில் சச்சிதானந்த
மணிமேவும் சதாசிவத்தி னொளியை நோக்கே. 34

நோக்கியதோர் வகைகேளு ஒருபோதுண்ணு
நோகாமற் பின்கலையி லோடும்போது
நாக்குநுனி சுவைபாக மாறுங்கொள்ள
நலமான உமிழ்நீ ரிறக்கங்கொள்ள

மூக்கினிலே பின்கலையி லோடும்போது
மூட்டுவாயிப்படியே முக்கால்சொன்னேன்
பாக்குவெற் றிலையருந்தி யிப்படியே கொள்ளப்
படுக்கும்போ திடக்கரத்திற் றலையைத்தாங்கே. 35

யோகம்

தாங்குவா யனுயோகம் பின்கலையில்கூடுஞ்
சையோகம் சிவயோகந் தானேயாகும்
தூங்குவது மவுனமாய்த் தூங்கு சொன்னேன்
சுயம்பிரகா சம்மதிலே நினைவாய்ப்பாரு
ஓங்குவது பிரணவத்தி லொடுக்கமாகும்
உயிர்நிலைக்கு மேல்வாச லூடுதாக்கு
வாங்குவது யிடையூடு வாங்குவாங்கு
வளமான ரேசகந்தான் மேலே தாக்கே. 36

தாக்கையா மேல்வாசற் குள்ளே சென்று
சாக்கிரத்திற் கண்மூடி சதாநித்தம் பாரு
நோக்கையா நோயெல்லாம் நிர்த்தூளியாகும்
நோகாமற் பார்த்துவரக் கண் திறக்கும்
ஆக்கையா பொறிகளைந்து மடித்துத் தள்ளில்
ஆனந்த மதியமுர்தஞ் சிந்துஞ்சிந்தும்
வாக்கையா பேசாதே சமாதிமூட்டு
மைந்தனே பூசையெல்லாம் வழங்கும்பாரே. 37

வழங்கிநின்ற பரைநேயம் நடுலாடத்தில்
வைத்துப்பார் விழிரெண்டு மருவுங்காலம்
உளங்கொண்ட புரியட்ட பூரணமுமேலாய்
ஒருமையினால் ஒளிவெளியா யோடியேறும்
தளங்கொண்ட சமாதியுறும் பிரமநிட்டை
தத்துவலய நிருவிகற்பஞ் சவ்விகற்பம்
களங்கொண்ட ஆரூட மவுனமட்டுங்
கைமுறையாய்ச் சமாதியிது உரைக்குந்தானே. 38

தானென்ற தியானமைந்து முன்னேசொன்னேன்
தாரகமாம் நிராகார மைந்தினுள்ளே
கானென்ற தவ்விடங்கள் ஒளிகள் காணக்
கருவான தியானமிது கண்டுசொன்னேன்

மானென்ற சத்தியைந்துந் தியானமங்கே
மந்திரபீ சாட்சரங்கள் வைத்துப்பாரு
தேனென்ற சடாதார யோகத்துக்குத்
தியானமிது கண்டுறைத்து வாசியூதே. 39

வாசியிலே இடகலையில் பூரகந்தானிரண்டு
மகத்தான சுழினையிலே கும்பகந்தானாலு
தேசியென்ற பின்கலையில் ரேசகந்தானொன்று
தெளிவாகப் பூரணையைத் தொட்டேசம்பு
நேசியிந்த முறைவீதம் அமாவாசை தொட்டு
நிலையாக வளர்பிறையைத் தாக்கிமாறு
மாசியிலே பித்தநீர் பாயா வண்ணம்
மதிபார்த்துக் கண்ணாலே நோக்குவாயே. 40

நோக்குவது நிராதார மாறும்பாரு
நுனியான தமர்வாசற் குள்ளேதாக்கு
தாக்குவது ரேசகமாங் கண்டம்பாயுஞ்
சத்தியிடை பாயாமற் பின்கலைக்கே ரேசி
போக்கதனில் மேல்வாசல் பூட்டுவிட்டார்
பொரியேது மனத்தோடே பூதாதையா
ஆக்குவது வாயுதா ரணையீ தாச்சு
அப்பனே சுழிமுனையி லுரைத்து நில்லே. 41

நில்லடா அக்கினிதா ரணையீ தாச்சு
நிட்கலமாய் விந்து விட்டு நாமமோங்கச்
சொல்லடா திசைநாதங் கிளம்பும்போது
திடமாகப் பூரணமா மதியினுள்ளே
அல்லடா அமுர்தமங் கேகலக்கும்
அடைவான அமுர்ததா ரணையீ தாச்சு
கல்லடா வுன்தேகம் காலன்மாண்டான்
காலனென்ற யிடகலைதான் ரவிதானுண்டே. 42

உண்டதொரு ரவியாலே மதியமுர்தமாச்சு
ஊதியே அனல் கொளுத்தில் நோய்நீர் வேர்வை
கண்டதொரு அப்புதா ரணையீதாச்சு
கல்தேக மானதினாற் தாரணையாம் பூமி

விண்டதொரு மேல் வாசல் திறந்தபோது
விசும்பினுட தாரணையாம் வெளிச்சங்காணில்
அண்டமென்ன பிண்டமென்ன ரெண்டுமொன்றாய்
ஆனதுவே யிருவினையு மற்றதாமே. 43

ஆமிந்த வாசிரவி யூடேசென்று
அற்றதுவே பிராணாய மையாசொன்னேன்
ஓமிந்த வாசிரவி மேலேயேறி
உரைத்திட்டார் பிரத்தியா காரமாச்சு
நாமிந்தப் பிரமந்தான் பிரமமாகி
நண்ணுமன மறிவிலே சொக்கிப் போனால்
ஏமிந்த நேயமொடு யியமந்தானும்
யிருக்கையிலே செத்தவன்போ லிருக்கப் பூணே. 44

பூணுவது கன்மமெட்டின் பூசை சொல்வேன்
புகழான கொங்கணர் தான் கடைக்காண்டத்தில்
தோணுவது நந்தியொடு கணேசன் கந்தன்
சொர்ணவயி ரவன்வீர பத்திரன்றான்
காணுவது தெட்சணாமூர்த்தி சொக்க
நாதனாஞ் சண்டிகேசன் வெய்யோனுந்தான்
காணுவது நாற்சதுரந் திசைகளெட்டிற்
காட்டியே கும்பத்திற் செபித்திடாயே. 45

செபிப்பதற்கு யெட்டுவகைத் தேவதைக்குந்
திடமாக ஐந்தெழுத்தை மாறிமாறிச்
செபிப்பதற்கு யெட்டுவகைப் பலகை சொன்னேன்.
திறமாக மணிகள்சொன்னேன் புட்பஞ்சொன்னேன்
செபிப்பதற்கு யெட்டுவகை திசையுஞ் சொன்னேன்
திடமாக மனமுரைத்துத் தெளிந்துநீயும்
செபிப்பதற்கு அட்டகன்மம் வாலை சொன்னேன்
சித்தியாம் மச்சமுனி செப்பினாரே. 46

தம்பனம்

செப்பினார் கொங்கணரு மொன்று போலத்
தெளிவாகு மெந்தனுட தீட்சை பாரு
செப்புகிறே னாறுவரை நேரே கீறி
திடமாக ஆறுவரை குறுக்கே கீறிச்

செப்புகிறேன் தம்பனத்தின் கன்மஞ் சொல்வேன்
செயமாக நமசிவய வென்று மாறி
செப்புகிறேன் யவசிமந வென்றுஉன்னி
சித்தியிடை கலையிருத்த வாசித்தம்பம். 47

தம்பனமாம் விந்துவொடு யிருகண் நாட்டம்
தருப்பில்லா புரியட்ட மாளுங் கோபம்
தம்பனமாங் கோடான கோடிகன்மஞ்
சாற்றுறே னையைந்தாய் மாறிச் செபிக்க
தம்பனமாம் நிராதலத்திற் பஞ்சகர்த்தாள்
தளமான யிந்திரிய விடையமெல்லாந்
தம்பனமா மெடுத்தெடுத்த கன்ம மெல்லாஞ்
சாதிக்கு மட்ட சத்தி மவுனந்தானே. 48

மோகனம்

தானென்ற மோகனத்தின் கன்மஞ் சொல்வேன்
சார்பாக யிருபத்தைந் தரைக்குள்ளாக
ஏனென்ற மசிவயந வென்று மாறி
யியம்புகிறேன் நயவசிம வென்று மாறி
பானென்ற வரைதோறும் கால் தலையாய் மாறிப்
பரமாக வடமுகமாய்ச் செபிக்கமுத்தி
கோனென்ற நந்திகுரு சச்சிதானந்தம்
கும்மென்ற மோகனமா மவுனத்தூணே. 49

மவுனத்தால் நவசாபம் நிவர்த்தியாகும்
மறுபடியே சிவயோக அனுட்டானங்கள்
மவுனத்தால் சிவதீட்சை சத்திதீட்சை
வளமான அட்டகன்ம மந்திர தந்திரம்
மவுனத்தாற் சித்தியாம் சடாதாரங்கள்
வாசியோடு தியானந் தாரணை சமாதி
மவுனத்தா லெந்தெந்த மாந்திரீகம்
வலுக்கொள்ளும் பிரத்தியா காரம்பூட்டே. 50

மாரணம்

பூட்டவே மாரணத்தின் கன்மஞ் சொல்வேன்
புகழாக ருத்திரசங் காரமாகும்
நாட்டவே சிவயநம வென்றுமாறி
நவிலுகிறேன் மநயவசி யென்றுமாறி

ஆட்டவே யிருபத்தைந் தரையில்மாறி
ஆங்கார மாரனைச்சங் காரஞ்செய்து
மூட்டவே சத்துருசங் காரமாகும்
முறை முறையே சகலமுமா ரணங்கள் பாரே. 51

பாரப்பா ஓம்அங் அவ்வென்றுந்தான்
பரிவாக அட்டசத்தி மூலமாகும்
நேரப்பா விதினாலே கன்மஞ் சித்தி
நிலையாட்டா லிதுவெல்லாம் பலியாதொன்றுந்
தாரப்பா ஓடுகிற வோட்டைச் சொல்வேன்
தருகண்டத் தடியில் நின்ற வாசிமூலம்
சேரப்பா வயநமசி யென்று சொல்லத்
திறவு கோல் மாறியே ஆடினாரே. 52

உச்சாடனம்

ஆடினார் சிமநயவ வென்றுமாறி
அரையிருபத் தைந்துள்ளே ஐங்காயம்பூசி
சூடினார் வாசிதனை மேலேரேசி
துரியஉச் சாடனமாஞ் சங்குநாதஞ்
சாடினார் திசை வாய்வு பத்துங் கூடிச்
சந்திரனும் ரோகணியுந் தயங்கத்தாக்கி
ஓடினார் மாய்கை சத்தியாட்டம் போச்சு
உரைத்துமன தறிவோடே யுறுதியாச்சே. 53

உறுதியாம் புலனும் போச்சு பொறியும் போச்சு
உட்கோட்டை தளகர்த்தா வோடலாச்சு
அறுதியாய் சத்தியுடன் மையல் போச்சு
அலக்கழிக்கும் வறுமையெல்லா மகன்று போச்சு
சுருதியாய் வருகின்ற சத்துருக்கள் போச்சு
துன்பமணி பதினாறுஞ் சூட்சத்தாலே
பிரிதியா யிடக்காலை மாறியாடிப்
பேரண்டஞ் சித்தண்டஞ் சத்தி போச்சே. 54

வசியம்

சத்தியிடை கால்மாறி யாடுங்கூத்து
தானான பரைமூச்சு உள்ளேயாச்சு
முத்தியாம் வசிகரத்தை முறையாய்ச் சொல்வேன்
முத்தமிழ்சேர் புலத்தியனே ஐயா கேளு

சித்தியாய் நமசிவய வென்றுசொல்லித்
திரும்பியே கால்மாறி வசிமநய வென்று
புத்தியா யிருபத்தைந்து அரையில் மாறிப்
போடுவாய் அட்சரங்கள் புகழ் வில்வத்தே. 55

வில்வத்தே ஆதிரை நாள் வெண்பட்டாலே
மிக நன்றாய்க் காப்பணிந்து தூபதீபஞ்
செல்லத்தான் கனி தேங்காய் சர்க்கரை நெய்வேத்தியம்
செய்து கொண்டு வசிமநய வென்று தோத்திரம்
சொல்லித்தர் னூறுருவிற் பிடுங்கச் சொல்வேன்
துடியாக வடமுகத்தின் வேரை வாங்கி
மெல்லத்தா னிழலுலர்த்திப் பலகை செய்து
விளங்கவே யிருபத்தைந் தரையுங்கீறே. 56

கீறிபே நமசிவ வென்றுமூலங்
ழ்மேலாய் மேல்கீழாய் வசியமநவென்று
தேறிய அரைகளெள்ளாம் மாறியிட்டு
செகவசியம் பரைவசியம் குருவசியமாகும்
மாறியே அட்டசத்தி துர்க்கைபாலாள்
அனந்தனென்ற நாகமொடு கிரிகெஜங்கள்
கூறியே வசியமதாம் உலகமெல்லாம்
குலகோத்திர மனசத்தி வசியமாமே. 57

ஆமட்பா நந்திபிர காசமாகும்
ஆகாச வெளிவொளியுங் காணலாகும்
தாமட்பா அகத்தீசர் காயாசமீய்வார்
ந்தேக மனதுக்குத் தடையோயில்லை
காமட்பால் விந்தங்கே உரைந்துபோகும்
ல்தேகம் கைலாய தேகமாகும்
சேமட்பா லுதரத்தி னுள்ளே பாரு
சுகாதீதக் காதலானன ந்தமாமே. 58

ஆகிருஷ்ணம்

ஆனந்தக் கடலாகி அழைப்புச்சொல்வேன்
ஐயைந்து அரை தோறும் சியமவநவென்று
தானந்த வரை தோறும் மாறிமாறி
தாளம்பூச் சாற்றியீ சானம்நோக்கி

ஆனந்தப் பொருளாகி அருணகாந்தி
மாய்கைவிட்டுத் தேவியன்பாய் வருவாள்பாரு
தேனந்தத் தேவர்களும் பாருள்ளோருந்
திருப்பதியாம் ஆக்கிருஷணஞ் ஜெயமாம்பாரே. 59

பேதனம்

ஜெயமான பேதனத்தின் கன்மஞ் சொல்வேன்
திறமாக வநசிமய வென்றுமாறி
நயமாக யிருபத்தைந் தரைக்குள்ளாக்கி
நன்றாக ஆயிரத்தெண் ணுருவிற்சித்தி
பயமாக பத்தியொடு ஒருமையாகிப்
பலசிந்தை விட்டுவிட்டுப் பண்பாயோதி
சுயமான பசிகோப முறக்கஞ்சோம்பல்
துன்மார்க்க மைதினங்த்ள் துட்டர்காணே. 60

வித்துவேடணம்

துட்டிக்கப் பேதிப்பாம் பேதனத்தைச்சொன்னேன்
சுகவித்து வேட்ணத்தைச் சொல்வேன்கேளு
அட்டிக்க மயவநசி யென்றுதானே
ஐயைந்தா யவரைதோறும் மாறிமாறி
திட்டிக்கப் பிரமவித்தை வித்துவேசித்தி
தேகத்தில் நேர்ந்ததொரு மாய்கையெல்லாம்
மட்டிக்க மனக்குரங்கு கொம்பேறாது
வந்துதடா காயசித்தி வாசியோகம் 61

வாசியென்ற வாமியடா யிடகலையாஞ்சத்தி
வாலைசிறு பெண்மாய்கை வளங்குந்தேவி
தேசியென்ற மவுனியவள் கண்டத்துள்ளே
சித்தருக்குத் தாய்போலே சிறந்தாளாத்தாள்
நேசியென்ற சடாதாரத் தேவன் தேவி
நிராதாரப் பூஜைவிதி நெறியாய்ச்சொல்வேன்
ஆசியென்ற குண்டலியாம் மூலத்தோங்கும்
ஐங்கரனார் பூஜைதனை அன்பாய்ச்செய்யே. 62

செய்யவே துண்டத்தின் முனைக்கண் நாட்டித்
திட்டிக்க ஒளியாகித் தோத்திரமேநன்றாய்
செய்யவே ஓம்அங்உங் அவ்வும்உவ்வும்
சிறியும் சிவாயகங் கணடிதியேநமாவென்று

உய்யவே ஆயிரத்தொ ணுருவிற்சித்தி
ஒளிகண்டால் மூலாதாரத்தின்சித்தி
மையலாய் பெண்மாய்கை வாராதென்றும்
மாரனைச் சங்கரிக்கும் பிரமம்பாரே. 63

பிரமன் பூஜை

பாரப்பா அசபையிலே பிரமன்பூஜை
பரிவாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
சேரப்பா பிர்மதிஷ்டிக் குள்ளேயாகும்
செகமெல்லாம் படைத்தகர்த்தன் பூஜைமார்க்கம்
பேரப்பா ஓம்அங்உங் நமசிவாயம்
பிர்மதே வாயநம வென்றுஓது.
சாரப்பா சுத்தவெள்ளை பிரகாசிக்கும்
சரஸ்பதியும் வார்த்தைசொல்வாள் கலைக்கெல்லாமே. 64

ஆமப்பா நாலைந்து பாஷைக்கெல்லாம்
ஆசுமதுரஞ் சித்திர வித்தாரங்கள்
ஓமப்பா சிவயோக ஞானபீடம்
உற்பனமா யானந்த வரைக்குமேற்றி
காமப்பால் கட்டிவைப்பாள் அமுர்தமீய
கபாலவா சல்திறப்பாள் கருத்தைமுட்ட
தாமப்பா சாதகமே செய்யச்செய்யத்
தாள்திறக்கு மப்பாலுந் தடைவாராதே. 65

நவசாபம் தீர்க்க

வாராது பிறவிலபி விந்துநாதம்
மருவியங்கே செனிக்கும்போ தமர்ந்தவாழ்க்கை
தீராது பிரபஞ்சத் தாசைவாழ்க்கை
ஜெகமெல்லா முண்டுடுத்திச் சையோகித்து
சாராது ஞானவழி யேறுங்காலம்
சாபமென்ற நவசாபம் போட்டதாலே
சேராது வதினாலே சாபகோபந்
தீர்ப்பதற்கு வகைசொல்வேன் உண்மைகாணே. 66

விஷ்ணு பூஜை

காணவே சுழியினையிலே மவுனபூஜை
கண்ணார மகாரவிந்து மாயோன்பூஜை
தோணவே வழியிரண்டும் சொக்குங்காலம்
சூரியன்போல் வட்டமாய்ப் பிரகாசிக்கும்
பூணவே நீலம்போல் கார்வண்ணன்றான்
பொன்மாய்கை கருப்பாகப் பூண்டுவீசும்
வேணதொரு பலமேக வர்ணங்காணும்
மேலான லட்சுமிப்பெண் மேவுங்காலே. 67

காலான சத்தியடி வகாரத்தோடு
கண்டத்திற் காலாச்சு சிகாரமீசன்
மேலாக ரெண்டுமொன்றாய் நந்தியாச்சு
வெளியொளியாய் குருவர்ணம் ஒளியைக்கண்டால்
மாலான விஷ்ணுவுஞ் ஜானகியுங்கூட
மாதுளம்பூ வர்ணமாய் ஒளியைக்கண்டால்
சாலோக சாமீப மிரண்டும்போச்சு
தாரணிக்கோ ரெட்சகர்த்தாள் தயவுண்டாமே. 68

உண்டான மகாரத்தால் மவுனியானாள்
ஓமென்றே மேல்வாச லூடுதாக்கு
விண்டான ஓம்அங்உங் மசிவயநவென்று
விஷ்ணு தேவாநம வென்றேயோது
கண்டாயோ பசுமரத்தி லாணிபோலக்
கண்பொருத்தால் அருணநிறங் காந்திவீசும்
கொண்டாடும் பூஜையிது யிதனைவிட்டுக்
கூறுகெட்ட சித்தாந்தி குறிகாணாரே. 69

குறிவைத்துக் கண்ணோட்டங் கூர்ந்துசொல்வோன்
குருவான ஆச்சாரி யவனேசித்தன்
நெறிதப்பிச் சொல்கிறவ னாசானல்ல
நிராதாரக் குருநாதன் சொல்லவேண்டும்
அறிவுக்குள் மனஞ்சிக்கி அறிவில்மாளும்
அதினாலே பூரணத்தை யறியலாகும்.
உரிவெண்ணெய் காத்திருக்க தேசந்தோறும்
ஊர்சுத்தி நெய்க்கலைந்த வுலுர்த்தர்காணே. 70

காணப்பா மவுனத்தின் வாசிமூலம்
கருத்துவைத்துக் குருசொன்னால் சாபம்நீங்கும்
பூணப்பா வென்றுசொன்ன ஆசானுக்குப்
பொன்கோடி ஈய்ந்தாலும் பொருளொப்பல்ல
வீணப்பா லோகத்தில் ஆசானென்று
வீண்பேச்சால் உபதேசம் வைப்போமென்பான்
ஊணப்பா குருகாட்டித் தாக்குனோக்கு
உண்மைசொல்லத் தெரியாது அசட்டுமாடே. 71

மாடுபோல் திரிவார்கள் பெண்டுபிள்ளை
வாழ்வதற்குப் பிழைப்புக்காய் ஒன்றைச்சொல்லி
வீடுதோறும் போய்த்திரிந்து பணங்கள்வாங்கி
வேணபடி உபசாரம் குழைவாய்ப்பேசி
நாடுதோறும் அலைகிறதோர் குருக்களாகி
நான்பெருமை யென்றுசொல்லும் நாய்களப்பா
ஆடுவது அவனுடைய கூத்தேகூத்து
அடிபணிந்து தொழுவதில்லை ஞானிதானே. 72

மயேஸ்வரன் பூஜை

தானான மயேஸ்வரன்றன் பூஜைமார்க்கஞ்
சாற்றுகிறேன் நிராதாரம் மேலேகேளு
வானான மயேஸ்பரியாள் வாமிவாமி
வாதசித்தி சவுட்டுவித்தை வழங்குந்தேவி
கோனான ரசகுளிகை செய்பற்பங்கள்
கொள்வதால் நாதவிந்தால் வழலைமுட்டி
ஊனான காலமறிந்து தலைமீதேறி
உறுதியாய் ரசபற்ப மூணிக்கொள்ளே. 73

கொள்ளப்பா வருடமொன்று சமாதிமுட்டு
குகைவாசற் குள்ளாகத் தேவிபூசை
விள்ளப்பா பச்சைவர்ணம் ஒளிதான்வீசும்
மேவிப்பார் யிடதுகலை கண்ணோட்டத்தில்
உள்ளப்பா கண்டத்தி லிருத்தியூது
ஓகோகோ சுவாசத்தில் ஊடாடாமல்
மெள்ளப்பா ரேசிக்க மேலேதாக்கு
வழிரெண்டும் காலூணி மெருட்டிநோக்கே. 74

நோக்குவாய் கண்கடுத்தால் மிளகுரைத்துப்போடு
நுட்பமாய் வெண்ணெய்ரெண்டு பாதம்பூசு
ஆக்குவாய் மூதண்டக் கியாழந்தன்னை
அந்தியிலே யொருபோதாய் நித்தியங்கொள்ளு
சீக்கிரமாய்த் தீக்கொளுத்து காந்திதாச்சு
சிறப்பாக பின்கடைக்கண் ருத்திரபூசை
வாக்கான கால்மேலாஞ் சடாசாரத்தில்
மருவிநின்ற வாசியிடை மவுனத்தீயே. 75

தீயென்றா லனந்தமாம் வலக்கண்ணோட்டம்
தெரிசனையும் சிவயோகத் தீயாய்க்காணும்
வாயென்றால் வகாரசித்தி வாமியாலே
வாசியிலே பூரிப்பாய் தீயால்ரேசி
தாயென்ற மவுனத்தில் வலக்கண்ணாகும்
சச்சிதா னந்தவரை சார்ந்துபற்றும்
ஓயென்றா லோதுயாது சங்காரகர்த்தன்
ருத்திரப்பெண் பார்வதியா ளுமையாள்மேலே. 76

மேலான காலிடைக்குள் மாறியாடி
மெச்சுமவள் காலடிக்குள் சிகாரமீசன்
மாலாகி மவுனமென்ற சுழினைக்குள்ளாய்
மாறியங்கே யாடினார் ஞானயோகம்
பாலாகி மதியமுர்தஞ் சிந்துமுன்னம்
பாயவே வாயியிலே வாமிபாகம்
நாலான பூரணத்தையுள்ளே தாக்கி
நடிக்கின்றார் அண்ணாடி யுண்ணாடிக்கே. 77

அண்ணாக்கு

அண்ணாக்கு ளுண்ணாக்கே பற்றவேதான்
அகார முதல் பதினாறு மிதற்குள்ளாக
விண்ணாடிப் பாயுமந்தக் காலமேற
விழிரெண்டும் நடுநிற்க மேவிப்பார்க்கக்
கண்ணாடி நீங்குமப்போ தமர்வாசல் புக்கிக்
கால்மாறி யாடுமங்கே சிங்குரேசி
பண்ணாடி ஆறுவரைக் கேறும்வாசி
பளிச்சென்று கோடிரவி காந்தியாமே. 78

ஆமிந்த வாசியினால் மயேசன் பூஜை
ஆச்சடா ருத்திரன்றான் பூஜை மார்க்கம்
வாமிந்த ஓம் அங்உங் வயநமசியென்றே
மயேஸ்வர தேவாயநமா வென்றுமாறி
ஓமிந்த ஓம் அங் சிவாயநமாவென்று
ருத்திர தேவாயநமா வென்றுமாறி
தாமிந்த சிவயோகம் வாசியோகம்
சாதித்த பூசையிது மவுனந்தாக்கே. 79

மவுனமென்றால் நாலுவகை மவுனமுண்டு
வாசியிலே மவுனமொன்று கண்டத்தூணல்
மவுனமென்ற சடாதார நிராதாரத்தில்
மவுனமொன்று சர்க்கிரமா மதிலேநில்லு
மவுனமென்றால் மேல்வாசல் மவுனமொன்று
வாய் திறந்தால் விந்துவிலே மவுனமொன்று
மவுனமென்றால் வாலையடா வாமியோகி
மகத்தான சரஸ்பதிலெட் சுமியும்பாரே. 80

பாரிந்த வட்டமது பிரமனுக்குப்
பரிவான விஷ்ணுக்குஞ் சேர்ந்தவாலை
நேரிந்த வாசியினால் புவனையானாள்
நெறியான ருத்திரியாள் திரிபுரையுமானாள்
காரிந்த பாமளைதான் மயேஸ்பரியுமானாள்
கருணை தரும் சாமளைதான் மனோன்மணியுமானாள்
சாரிந்த தேவியைந்து தீட்சையிலே
சதாசிவத்தின் ஒளிகாணப் பூஜை கேளே. 81

பூஜையென்றால் சச்சிதானந்த பூஜை
புகழான தோத்திரமுன் தொக்குஞ்சட்சும்
பூஜையென்றாற் சிங்குவையாகக் கிரணத்தோடு
புகழான யிந்திரிய விடையமைந்து
பூஜையிலே விந்துவல்லோ நிலைக்கவேணும்
பூரணத்திற் றிசைவாய்வு நாதங்காணும்
பூஜையிலே மானதமாம் விந்துநாதம்
பூரணமா மதிக்குள்ளே மாறியாடே. 82

மாறியே யிடைக்காலை யாடக்கேளு
வகாரமென்ற மனோன்மணியாள் மாறியாட
மாறியே சிகாரவிந்து நாதத்தொப்பாய்
மகாரமொடு ஆக்கிருஷ்ண மாறியாட
மாறியே சதாசிவனுங் கூத்துப்பார்த்து
மனோன்மணியை வர்வழைத்து ளண்டமாடி
மாறியே ஆடுகிற அட்டதுர்க்கி
மாகாளி வடமுகத்தில் மாறினாளே. 83

ளென்ன ரவியென்ன சோமனென்ன
நந்தியென்ன மதியென்ன தீய்தானென்ன
காளென்ன கோபமென்ன மோகமென்ன
கொடிதான மாரனென்ன மால்தானென்ன
பாழென்ன முப்பாழும் பாழாங்காலம்
பரையென்ன நாதமென்ன விந்துவென்ன
ஊழென்ன பத்தினதீ யுரைத்தகாலம்
ஒருமனதா யறிவுநின்று வுரைக்கும் போதே. 84

கொங்கணர் பெருமை

போதமென்று நிறைந்துநின்ற பொருள் மெய்ஞ்ஞானம்
பூரணமாம் சமாதியின்றன் நடனவோசை
நாதமெல்லாம் நிறைந்துநின்ற நடன மூர்த்தி
நளினபரா பரையோடு மாறியாடி
வேதமெல்லாம் நிறைந்துநின்ற வெளியா மண்டம்
வெட்டவெளிப் பொட்டலது தீக்காடாச்சு
சூதமென்ற சொரூபமணிக் குளிகையாலே
துடியான கொங்கணர்தா னேறினாரே. 85

சித்தர்கள் குளிகை கொடுத்தது

ஏறினா ரவரைப்போல் சித்தர்காணேன்
ரிஷிகளென்ன ஞானியென்ன பேருங்காணேன்
மாறினார் ஆறுவரை கண்டுதேறி
மனமடங்கி அறிவிழந்து நடனத்துள்ளாம்
தேறினர் சொரூபமணிக் குளிகையாலே
திரும்பினார் க்ஷணத்தில் வந்து பிழைத்தோமென்றார்
ஆறினார் அண்டத்தில் அறிவில்நின்று
அமர்ந்திருந்தார் காயாச மவருக்கீய்ந்தேன். 86

ஈய்ந்தேனான் சட்டைமுனி திருமூலர்க்கு
மியல்பான சுந்தரர்க்கு மவுனிகட்கும்
ஈய்ந்தேனான் மேருவிலே கைலாசத்தில்
ஏகியந்நாள் மணக்கோலங் காணவேண்டி
ஈய்ந்தேனான் நவகோடி சித்தர்கட்கும்
இலகுதமிழ் கோரக்கர் தமக்குமன்பாய்
ஈய்ந்தேனான் சதாசிவனும் பரையுங்காண
எளிதாக மானதத்தில் பூஜை செய்யே. *87*

பூஜையிலே ஓம் அங் உங் யநமசிவ வென்ற
புருவமையம் சதாசிவத்தே சிவாயநமாவென்று
பூஜையிலே மானதமா யூதுங்காலம்
புகழான சிவயோகம் பூட்டலாகும்
பூஜையிலே சிவபூஜை கிரிகைபூஜை
பூண்ட பின்பு நாற்பத்து முக்கோண பூஜை
பூஜையிலே வாரத்திற் சக்தி பூஜை
புருவமையத் தாயாரைப் பூஜைபண்ணே. *88*

பூசித்தால் சடாதார நிராகாரத்தின்
புகழான மானதமே வலுத்த பூஜை
நேசித்தால் அகண்டவெளி வொளியாய்க்காணும்
நெறியான தீக்ஷைவிதி யிருநூறுக்குள்
பாசித்த தேவியுட பூஜை சொன்னேன்
பரிவான கொங்கணரப் படியே சொன்னார்
ஆதித்த பூஜையிது சரிகைபூஜை
அறிந்த பின்பு யிப்பூஜை அகண்டம் பாரே. *89*

இடகலை சந்திர பூஜை

அண்டமென்ற பேரண்டம் சித்தண்டமெல்லாம்
அளந்து விட்டேன் மவுனத்தா லாராய்ந்து பார்த்து
பிண்டமென்ற பஞ்சபூ தத்தினாலே
பிரிதியென்ன தொக்குடம்பு மனஞ் செவ்வையானால்
சண்டனென்ற தூதாக்கள் சலுகையென்ன
சாதகமாய் வாதபித்த சிலேற்பனத்தால்
கொண்டதென்ன இடகலையே காலன்காலன்
குறிப்பான மவுனத்தால் மாண்டார்பாரே. *90*

பாருநீ மவுனசக்தி மவுனவாலை
பஞ்ச சத்தி தீக்ஷையொடு வாசிமூலம்
பாருநீ சந்திரகலை பூரணையினன்று
பதினாறு கலையுமொன்றாய்ச் சூரியன் போல்
பாருநீ பின்கலையி லிருத்தியூது
பளிச்சென்று மேல்வாச லூடுதாக்கு
பாருநீ விழிரெண்டும் யிமையொட்டிப்பார்
பகலவனுஞ் சந்திரனும் பாருபாரே. 91

பாருநீ சூரியனைப் பூஜைபண்ணப்
பன்னிரண்டு மொன்றான பருவங்காணும்
காருநீ பின்கலையில் பன்னிரண்டு
கருவதுவாம் ஓம் அவ்வும் நமசிவயமென்ன
சேருநீ சூரியதே வாயநமவென்று
செப்புவாய் ஓம் யவ்வும் நமசிவயமென்ன
கூறுநீ சந்திரதேவாய நமசிவயவென்று
கைலாச லூடுபோய் நின்று தாக்கே. 92

தாக்குநீ ரவிமதியுந் தானே தோன்றும்
சகமெல்லா மாகிருஷ்ணமுச் சாடனமாம்
நோக்குவது கும்பகமாம் தம்பிதம்பி
நோயெல்லா முச்சாடல் வேர்வை நீராய்
போக்குவது சஞ்சிதத்தைப் பூரணந்தான்வசியம்
போதகமாந் தமரிலே பேதனமே தாக்கு
ஆக்குவது மோகனமாந் தேவிதேவி
ஆதியாஞ் சிறு பெண்போல் வருவாள் காணே. 93

காணவே ஆங்காரம் வித்வேசிக்கும்
காந்தியென்றால் ரவிகோடி மதிதான் கோடி
பூணவே மன்மதனை நெற்றிக்கண்ணால்
பூட்டியே மாரணஞ்செய் மேலேரேசி
தோணவே யாங்கார மாண்டு போச்சு
சூரரோடு அசுரரெல்லா மாண்டுபோச்சு
நாணவே மவுனத்திற் சுழினைவாசி
நாடியே சண்முகனைத் தியானஞ் செய்யே. 94

தியானத்தால் நிருவிகற்பஞ் சமாதிமுட்டி
சிருஷ்டிக்கும் பிரமநிட்டை ஜெயமாங்காலம்
மயானத்தால் சுடுகாடு நோயெல்லாம்போம்
மயிலான சூரன்மேல் மடக்கியேறும்

வியானத்தால் வேல் பிடித்துக் கடைக்கண் மேவி
விடுகோழிக் கொடிநாட்டி விருதுகூறி
பயானத்தால் சத்துருமா ரணங்களாச்சு
படையெடுத்த வல்லபையாள் பரிசுகேளே. 95

பரிசுகெட்ட யோணிவாய்க் கணேசன் தும்பி
பாய்ச்சியே கரிகரணம் வலஞ்சுத் தாட்டி
திரிதிகரம் கரநியாசம் கொண்டாளாகி
க்ஷணநேரம் பிரியாமல் மோகங் கொண்டாள்.
வரிசையந்த வல்லபையுங் கணேசனுமே கூடி
மருவியதோர் சுகங்கொண்டாள் குண்டலிக்
குள்ளானாள்.
பிரிசமுற்றால் சத்திகண பதியுமானால்
பேரணியாய்ச் சுப்பிரமணியன் பின் செய்தானே. 96

தானென்ற யுகமொன்றில் அசுராள் கூட்டஞ்
சங்காரஞ் செய்துவிட்டார் விஷ்ணுமூர்த்தி
மானென்ற பெண்மாய்கை உலகஆசை
மாண்டிடவே மனங்கொண்டு ஒருமையாக்கி
கானென்ற பெரும்பாதை மகாரத்தாலே
கலங்கினார் பெரியோர்கள் சித்தரெல்லாம்
ஊனென்ற மந்திரத்தை யுறவுசெய்து
ஒமுடிந்தார் சூரரெல்லா மூர்த்திகாணே. 97

காணப்பா தத்துவந்தான் தொண்றூற்றாறு
கண்டதிலே அசுரர்தத்துவம் அறுபதும்பாழாச்சு
ஊணப்பா தேவதத்துவ முப்பத்தாறும்
உரைத்துதடா மவுனத்தி லூதும்போது
தோணப்பா ரசபற்பம் சமாதிமூட்டு
சொற்பெரிய வரையாறுந் தொடர்ந்துயேறும்
வீணப்பா தீட்சைவிட்டால் விழலாய்ப்போகும்
வேதாந்த சற்குருபதத்தை மேவிக்கேளே. 98

குருபூஜை

கேளுநீ குருபூசை மார்க்கஞ் சொல்வேன்
கெடியான சத்தியிடை சுழினைமீதில்
ஆளுநீ குருவினுட விந்துநாதம்
அண்டரண்ட சிவாநந்தி வாசியோசி

தாளுநீ பதம்போற்றி விந்துநாதம்
சன்னிய தானத்தில் மனமேசெல்ல
நாளுநீ அறிவோடே கட்டியேறி
நற்குருவே சற்குருவே யென்றுபோற்றே. 99

போற்றியவர் தன்னிருகா லிடைபின்னாகப்
பூரணமாம் நந்திகுரு வொளிபாய்க் காணும்
தேற்றியே ஓம்அங்உங் சிவயநமவென்று
செப்பியே குருமூர்த்தி தேவாயநமவென்றுமாறி
சாற்றியே பூசைசெய்வா யுபசாரங்கள்
சதுராக மானதமா மவுனத்தூணி
சோற்றியமே வாராமல் தொண்டுபண்ணு
சொற்குருவா மவுனத்தைச் சொல்வோங்காணே. 100

சொல்லாத மவுனத்தைச் சொல்வோனாசான்
தொல்புவியிற் காரியகுரு ஆசானல்ல
யெல்லாத புரியட்டங் கண்டந்தன்னில்
இதமாக யிருத்தியே யூதும்போது
சொல்லாத பூரணந்தா னாலுமேலாய்ச்
சென்றேறும் பரமட்டுங் கொண்டு தாக்கி
மல்லாத ராசகுரு சற்குருவாய்வந்து
மவுனத்தை வைத்திட்டால் மனமொன்றாமே. 101

ஒன்றான மனமல்லோ சற்குருவின் பூசை
ஒருகோடி தவஞ்செய்வோர் தமக்குவாய்க்கும்
நன்றான ஆத்துமதத்துவ மிருபத்துநாலும்
நலமான குருவுக்குத் தோற்றப்பண்ணும்
சென்றாடும் வாசியிலே சின்மயத்தில்
தேவியாய் மனங்குளிரப் பூஜைபண்ணு
கன்றாமற் பின்கலையிற் பிதிர் சூட்சஞ்செய்வாய்
காரணமாம் நந்திகுரு வாதங்காணே. 102

நற்சீடன்

குருவாக வந்துஉப தேசஞ்சொன்ன
குருமவுனங் குருசுழினை நோக்கஞ்சொன்ன
குருவல்லோ தியானிக்க உறுதியாகும்
குணத்திலே சற்புத்திரன் யென்றவாறு

நருநிறைபோல் மனச்சாய்கை பற்றுஞ்சீடன்
கோடிக்கு மேலாகச் சுகுர்தந்தாலும்
குருவாய்த்தால் மவுனகுரு வாய்க்கவேணும்
குமாரனென்ற சற்புத்திரன் குணம்நன்றாமே. 103

நன்றான சீடன்வந்து சேர்ந்தானானால்
நலமான மவுனத்தை முன்னேசொல்லு
ஒன்றான மனதுரைக்க வேதநூலை
உரைசொல்லி அறிவுபெற வூணிச்சொல்லி
வின்றான கண்ணாடி மேவச்சொல்லு
மேலான குருபதத்தைப் பற்றச்சொல்லு
க்ன்றான குருவிருந்த யிடத்தைச்சொல்லி
காரணமாய் வித்தாலே மேல்வித்தாமே. 104

வித்தென்ன தத்துவந்தான் தொண்ணூற்றாறும்
மேவியதோர் வித்தாச்சு ரவிமதியாந்தீயால்
வித்தான வித்துள்ளே பதிபாசங்கள்
விளங்குமென்ற பொருளப்பா மெய்வேதமாச்சு
வித்தான விந்துவினா லாகாசந்தோன்றி
மீறுமதில் கால்தோன்றி அதில் தீதோன்றி
வித்தான மகாரமதில் நீர்மண்ணாச்சு
விளங்குபுவி யாலாத்துமா பின்னேயாச்சே. 105

ஆச்சப்பா பிள்ளையாண் பெண்ணுமாகி
யளவற்ற விடையற்றார் பிறப்புக்கோடி
வாச்சப்பா கதலிகுலை சாய்ந்தபின்பு
மகவாகச் கனிவெடுத்துப் பிறப்பேயாச்சு
மாச்சப்பா மனக்குரங்கு கொம்பிற்றாவி
வளர்ந்துதே ஜெனனங்கள் கோடாகோடி
ஒச்சப்பா தோற்றமொடு யோனிநாலு
ஓங்காரப் பிரணவங்கள் அளவில்லாதே. 106

அளவேது கரைகண்டோர் யாருமில்லை
ஆசையென்ற பொரிக்குரங்கா லனந்தசென்மம்
அளவேது தாபரங்கள் சங்கந்தொட்டு
அந்தந்த வித்தா லண்டமெல்லாமாச்சு
அளவேது தன்மாத்திரை பத்தினாலே
ஆதியந்த அடிமுடியுந் தெரியாதுஜென்மம்
அளவேது பசுபதிபா சத்தினாட்டு
ஆரறுப்பார் பாசக்கயிற்றை சித்தர்காணே. 107

காணப்பா பிறவியது யேதுமில்லை
கரையில்லாப் பிறப்பிறப்பு யிதுதானென்ன
ஊணப்பா மவுனத்தை யுபதேசித்தால்
உரைக்கமன மாவதற்கு உண்மைசொல்லு
வீணப்பா சித்தாந்தம் பாராதேயென்னும்
வேதாந்த மெந்நாளும் விடாதேயென்னும்
பூணப்பா சிவயோக மவுனமூட்டி
பூட்டியே பிறப்பறுக்க வகையைச்சொல்லே. 108

சொல்லியே மனந்தேறி உரைத்தாயானால்
தூலம்விட்டு சூட்சமதில் நிராதாரத்தில்
வில்லைநா ணேற்றிகணை தொட்டாப்போல
மேவியே யிருவிழியும் சுழினைநோக்கு
அல்லியே படர்ந்தாப்போல் காலைத்தாக்கி
அண்டத்தின் அக்கினியால் சுட்டுநீற்றி
மெல்லவே யிந்திரிய விடையமெல்லாம்
வெட்டவெளி யாக்கியே விண்ணிலேறே. 109

சூரியயோகம்

ஏறுமென்ற பங்குனிசித் திரையிரண்டில்
பிதமாக வுதையத்தில் ரவியைப்பாரு
தேருமடா கண்கூசி டாதிளமைவெய்யில்
தீர்க்கமாய்ப் பின்கலையிற் கண்மூடிப்பாரு
நூறுமடங்காய் அருணன் காந்திவீசும்
நுனியான சுழினையிலே உற்றுப்பாரு
பேறுதருஞ் சுழினையிலே கண்கெடாது
பேராக யின்னமொரு சேதிகேளே. 110

சந்திரயோகம்

கேளப்பா பூரணச்சந் திரனைநோக்கிக்
கெட்டியாய் நவமிமுதல் தொட்டுப்பாரு
ஆளப்பா யிடகலையிற் சுழினைநோக்கி
அண்டரண்டத் திரெல்லா மகன்றுபோகும்
மாளப்பா தீபத்திற் சுழினைநோக்கி
மருவியங்கே பார்க்கையிலே ஒளிதான்வீசும்
நாளப்பா அறுபதுநாள் பிடிப்பாடியேபாரு
நலமான சாக்கிரத்தில் யேறலாமே. 111

ஆமிந்த யிடகலையில் வங்கென்றுவாங்கி
அப்பனே சுழினையிலே கும்பித் தேறில்
நாமிந்தப் பின்கலையிற் சிங்குரேசி
சாதகமாய் வாசிகொண்டு தாக்கிப்பாரு
ஓமிந்த மூலத்திற் குண்டலித்தீசாடி
உயர்ந்தசத்தி யுறவாகும் வசியத்தாலே
நாமிந்த மோகனத்தால் மேலேபோற்றி
நாட்டுவாள் விந்துநிலை நாட்டுவாளே. 112

மேல்வாசல்

நாட்டுவாள் மேல்வாசல் மூலாதாரம்
நலமான ஓம்அங்உங் அவ்வுங்
கூட்டுவாள் மவுனமென்ற வாலைப்பெண்தான்
குண்டலிப்பெண் கணேசன் சத்தியாகி
காட்டுவாள் சித்தத்தின் பதவியாச்சு
கண்கண்ட சித்தாதி யென்றமூலம்
சூட்டுவாள் நகாரமென்ற பதியினுள்ளே
துடியான விந்துவிலே பிரமன்தானே. 113

தானான ஓம்அவ்வு மாய்த்தொட்டுச்
சரஸ்பதி பிரகாச மறிவிதாச்சு
கானான வீணாதண் டுத்தமூலம்
கருதியப்பா சுத்தவெண்மை யாகத்தோணும்
மானான உந்தியிலே பிறைக்குள்ளாக
வாழுகின்ற அம்நம யவசியென்றோது
கோனான பிரமதிஷ்டி சித்தியாச்சு
குரங்கான மனம்பிலக்கும் மாய்கைபோமே. 114

போமப்பா மால்சீதை மனத்துள்ளாக
பூரணத்திற் பற்றாமற் செய்யுங்கோடி
தாமப்பா ஒழிந்துபோம் சூட்சஞ்சொன்னேன்
சதுராக விசித்திவழி ஓம்நவசிவய
ஓமப்பா ஓம்நமோ மயேசன் தானும்
ஒளியான தீக்காட்டி லூணிப்பார்த்து
ஆமப்பா கால்மாறி யாடுங்கூத்து
ஆதித்தன் மண்டலத்தி லறிந்துபோற்றே. 115

அறிவாலே மனமாளும் அடியில்நின்று
ஆதிஓம் சிவயநம சிங்குரேசி
குறியான அக்கினியில் அச்சங்கொன்று
கூர்ந்துநீ நோக்கையிலே சூரியன்போல்வட்டம்
நெறியாகத் தோணுமங்கே பலரூபந்தான்
நீதியாய் வேதமென்ற நூலைக்கேளு
பிரியாதே மவுனத்தி லிருந்துகொண்டு
பேரான மனோன்மணியில் அங்கென்றோதே 116

அங்கென்ற நால்வேதம் பூரணத்தை
ஆகாச மேலேறிக் குகையிற்செல்லு
சிங்கென்ற ஒளிதானே அங்கியாலே
தீக்காடு சடாதார நிராதாரத்திற்
சங்கென்று மேலோடி விந்துக்குள்ளாய்
சாதகமாய் சுழினைபத்தி விட்டகாடு
மங்கென்ற மவுனமப்பா மவுனவாலை
மகத்தான சித்தர்களும் சொல்லார்பாரே. 117

வான் பொருள்

சொல்லாத வான்பொருள் தான்வெளியாய்க்காணும்
சுகாதீத லாடவிழி யிருகண்ணாட்டி
கொல்லாதே கொல்லுமடா சிவாயமென்று
கூறியே மேல்வாசல் கும்பிக்குங்காலை
மல்லாதே வாசியிடை மூக்குநுனிதோண
வளமாகும் ஓம்வங்கு யென்றுவூணு
கல்லாகும் உன்தேகம் பொன்னாம்பின்பு
கைலாச தேகமா மவுனத்தாலே. 118

கைலாச தேகம்

மவுனத்தால் மானதமே பூஜைபூஜை
வளமான சுழிமுனையி லுள்ளமுள்ளல்
மவுனத்தால் புரியட்டமா ளுமாளும்
மயேசனுட அடியில்நின்று வயநமசியென்று
மவுனத்தால் ஓமென்ற வழியிற் செல்லு
வளமாக அங்கென்று தன்னைப்பாரு
மவுனத்தால் தன்ரூபம் கண்ணாடிக்குள்
வாசமாய்த் தெரிசனையாம் மறைப்பில்லாதே. 119

மறையாது வெளியாகும் கற்பூரதீபம்
மருவிநின்ற நிருவிகற்பஞ் சமாதிமூலம்
குறையாது குகைவாசல் நாடியெல்லாம்
குலைந்துபோம் சதையடைப்பு நீராய்த்தள்ளும்
முறையாது காலாலே ஊதுஊது
உற்றுப்பார் மனக்கண்ணால் விகாரந்தோணும்
மறையாது மேல்வாசல் நம்மிடத்தில்
காந்தியடி யாதீதக் காடுதானே. 120

மவுனம்

தானென்ற அகாரமாம் உகாரங்கூட்டில்
சாதகமாய்ச் சமரசமாய் மவுனமாச்சு
கோனென்ற பூரணச்சந் திரனைப் போலக்
கூர்மையாய் யொளிவீசும் கண்தான் கூசும்
தேனென்ற அமுர்தமது உதரம்பாயும்
தேகசித்தி யனந்தகற்ப காலங்கூட்டி
பானென்ற ராப்பகல் பொழுதாம் சமாதியாலே
பஞ்சகண தத்துவந்தான் பாலாய்ச்செண்ணே. 121

பாழான மனத்தாலே கெட்டுப் போனார்
மாய்ந்தபின் மாய்ப்போனா லென்னசெய்வோங்
கோளான சீடரைக்கை யணைக்க வேண்டாம்
குருநிலையிற் பந்தம் வைக்கக் கண்ணேறாது
தேளான கற்பமிவன் கோடிகாலம்
தின்றாலும் நல்லபுத்தி வாராதையா
ஊழான ஊழ்வந்தால் தானே தூக்கும்
உற்றுப்பார் சற்குணத்தோன் மவுனியாமே. 122

ஆமப்பா புருவமையம் சாக்கிரபீடம்
ஆக்கினையாம் ஆகாச தோத்திரமாகும்
தாமப்பா பூரணத்தை உள்ளேயேற்றத்
தாரணையாய்ப் பிரணவத்தின் வசியமென்று
ஓமப்பா ஓம்சிவய நமசியென்று
ஊற்றுப்பா ரிடகலையை மாறிப்பாரு
சோமப்பா லூணிவிக்குந் தில்லையூரிற்
சேர்க்கலாம் பூரணமுஞ் சுத்தலாமே 123

சுத்தலாம் நாமபட்டம் மவுனத்தாலே
சுழல் காற்றின் துரும்பதுபோல் சுற்றியென்றும்
பத்தலாந் தீபவொளி வெளிச்சத்தாலே
பளிங்குபோல் பவளம்போல் விந்துநாதம்
முத்தலாம் விந்துக்குள் ளோடாதப்பா
மூர்க்கமாய்ச் சையோகஞ் செய்யில்மேலாம்
தத்தலாஞ் சச்சிதா னந்தத்தப்பா
தண்டமென்றால் மேருக்கு ளடக்கந்தானே 124

அடுக்கடுக்காய் வரையேறி யாடவென்றால்
ஆதியடி வழலையினால் விந்துநாதம்
குடுக்கவே குருவழலை துரிசைக்கொல்லும்
கூர்ப்பான பரிகற்பம் குருவாய் நிற்கும்
முடுக்காக சூதபற்பம் முறையாய்ச் செய்வாய்
முந்தவே பிரமநிட்டைக் கிதுவேகற்பம்
உடுக்கமாய் மேல்வாச லேறுங்காலை
யூடறுத்து யேற்றுவிக்கும் விந்தைக்கட்டே. 125

விந்துகட்டப் பூரணமும் மேலேயேற்று
மெய்யான புரியட்டம் தொக்கில் நிற்கும்
இந்திரிய விடயத்துள் மனம்பாயாது
யிடைமிஞ்சிப் பாய்ந்தாலும் பிறவியில்லை
அந்தரங்கத் திரிகரண மாண்டதாலே
ஆகாச வெளிமேலாய் வரைமேற்செல்லு
தொந்தமா யேறுதற்குச் சூதகற்பம்
துடியாலே ஒருநாளுஞ் சாகார்பாரே. 126

சாகாம விருந்தாக்கா லவனேசித்தன்
சச்சிதானந்த குரு புத்திரனாகும்
ஆகாமி யஞ்சஞ்சி தத்தோடு
அடங்குமே பிராரத்துவ மப்பாகேளு
போகாத வாசனையு மெங்கேபோச்சு
பொறிபோச்சு புலன்போச்சு பூதம்போச்சு
ஏகாந்த கைலாச சபையிற்சென்று
யிருக்கையிலே ஆறுவரை யேறிச்செல்லே. 127

யோகா தனம்

சொல்லவே நாதாந்த மேலேயேறச்
செப்பினேன் மவுனத்தால் வாசித்தம்பி
மெல்லவே வலக்காலை யிடக்குரங்கிலேற்றி
இதமாக யிடக்காலை வலக்குரங்கிலேற்றி
வல்லவே கரத்தாலே கால் விரலைக்கூட்டி
வாசியெங்கும் பாயாமல் மவுனந்தாக்கி
அல்லவே முதற்சாமத் திருந்து கொண்டு
அசையாமல் பூசித்துக் கும்பிரேசி. 128

கும்பித்து ரேசிக்கப் பன்னிரண்டுங்குபிக்
கொண்டேறும் பூரணமுங் குலுங்கும்பாரு
தம்பித்துத் தலந்தோன்றும் வாசியேற்றத்
தவிடு பொடியாகவே சண்ணுஞ் சண்ணும்
கம்பித்துக் கொல்லாமல் பூரணையைக்
கண்டத்தே யிருத்தியங்கே கருதியூது
தும்பிக்கை போல விழும் அமுர்தந்தானும்
துடியான பித்தத்தை யிருத்துவாறே. 129

ஈசன் குருவாய் வருவது

வாறாக அரூபமே சொரூபமாக
மவுனநந்தி பிரகாச மொளிக்குள்ளாகக்
கூறாகக் குருமவுனங் குருநாதன்தான்
கூத்தான அம்பலத்தில் மாறியாடி
வேறாக உபதேசம் குருபோல் வந்து
வெளிவொளிக்குள் வார்த்தை சொல்வார் வேண சித்தி
ஆறாகப் பெருகுமடா அஷ்ட கர்மம்
அப்பனே வாய்ப்பேச்சா லறையலாமே. 130

ஆமப்பா குருவுக்குத் திரிநேத்திரங்கள்
அப்பனே காளகண்ட மான்மழுவினோடு
தாமப்பா புலித்தோலா லாடைசாத்தி
தந்தியுட தோல்போற்றிக் கண்டந்தன்னில்
வாமப்பா அரவணிந்து விபூதி சாத்தி
மாதுசிவ காமியொரு பாகராகி
ஓமப்பா ரிஷபவாகனத்திலேறி
இச்சைபெறச் சொரூபசித்தி கொடுத்தாள்வாரே. 131

ஆளுவார் கும்பித்துக் கால்மேலேறி
அங்கையிலே கபாலத்தி னோடுமேந்தி
வாழுவார் சத்தியுடன் மாறியாடி
மாய்கைதட்டி மறுவரையி லேறுங்காலை
சூழுவார் தீமூட்டிச் சுடுகாடாக்கிச்
சுத்தவெளி யாக்கியே வரைமூன்றிற்போய்
கோளுமே வாராமல் குளிகையாலே
கொண்டேறி நால்வரையிற் குறியைக்கேளே. 132

தசநாதம்

குறியேது மவுனசிவ குருதானேது
கொண்டேறி மேல்நடந்த அறிவங்கேது
நெறியேது வாசியுட நிலையங்கேது
நேரான நாதமொடு விந்துவேது
வெறியேது லகிரிகொண்ட வீரங்கேது
மேலான காலோடு தீயுங்கூட்டி
பிரியாது ஐவரைக்குள் ளேறும்போதும்
பேச்சேது மூச்சேது பிரியொட்டாதே. 133

ஒட்டாது சுழற்காற்றுத் தீயுங்கூடி
ஒளிகோடி மதிகோடி ரவிதான்கோடி
கொட்டேது யிடிமுழக்க மேகநாதங்
கூறுவலம் புரிநாத மணியினோசை
விட்டேது காதடைக்குங் கண்ணும்புக்கும்
மேலேற்றத் தெரியாது விழியுங்காணோம்
மட்டேது நடனவொலி சிலம்பினோசை
மாட்டியே வாங்குமப்போ மயக்கந்தானே. 134

தானான ஆறுவரைக் குள்ளேசிக்கித்
தானிக்கச் சிலம்பொலிதா னென்னசொல்வேன்
கோனான ரசகுளிகை மேலேவாங்கு
கும்பித்து யிடக்காலை மாறியாடிக்
கானான நடனவொலி கற்பமூன்றிற்
காலரசக் குளிகைகொண்டு வந்துதப்பா
தேனான கொங்கணர்தான் பட்டபாடு
செப்பினா ரதிசயத்தின் திறந்தானன்றே. 135

கொங்கணர் பெருமை

நிறமான கொங்கணர்போ லாருமில்லை
ஜெகத்திலே யிப்படித்தா னுண்டோபிள்ளை
உறமான செய்தியெல்லாம் பார்த்துவந்தார்
ஒவ்வொரு நாலாக பிருக்கமுத்தி
அறமான தவஞ்செய்தான் சட்டமுனி மெய்க்க
அவன்பிதா போகர்மெய்க்கக் காலாங்கிமெய்க்க
நிறமான திருமூலர் தேவர்மெய்க்க
நித்திரைபோல் மூன்றுகற்பஞ் சமாதிகாணே. 136

காலான ருத்திரனும் மயேஸ்பரனுங்கூடிக்
கருவான விந்துவிலே மனஞ்செவ்வாக்கி
மேலான குகைவாசற் கப்பால்சென்று
விந்துக்கு நாதமிட்டு வப்பாலேறி
மாலான பூரணமாஞ் சமாதிமுட்டு
வணங்கினான் சொரூபமணிக் குளிகையாலே
நாலான பூரணமு மவனேயாச்சு
நாட்டிலுள்ள சித்தர்கட்குக் கீர்த்தியாச்சே. 137

சித்தர் பூஜை

ஆச்சிந்த விந்துவிலே போகர் பூஜை
அப்பனே சுழிமுனையிற் காலாங்கி பூஜை
வாச்சிந்த மேல்வாசல் திருமூலர் பூஜை
வளமான லலாடத்தில் யெந்தனுக்குப்பூஜை
பூச்சிந்த நால்வரையிற் சின்மயத்தின் பூஜை
போன ஐவரையிற் கொங்கணர்தன்பூஜை
பேச்சிந்த நவசித்தாள் மூவரையிற்பூஜை
பிரபலமாய்ப் பூசித்தோர் சித்தராமே. 138

சித்தமே ஆதியிலே சேர்ந்தமூலஞ்
சித்தாதி நாமென்ற பேருமாச்சு
பத்தமென்ற பூஜைபண்ண ஓங்அங்உங்கென்னப்
பாசமாய் அங்கங்கென் றோதமூலம்
சத்தாகி யவரவர்தன் மூலபீசஞ்
சாத்தியந்தான் வாராமல் வட்டத்தூணாம்
பெத்த பேரிப்படியே லெபிக்கும்பேரு
பதறாதே பூஜைவிதி பெலக்கச்செய்யே. 139

ரசலிங்க பூஜை

செய்யப்பா ரசகுளிகை யீவார்சொன்னேன்
திறமாகச் சமாதியுட மூட்டுஞ்சொல்வார்
பய்யப்பா ரசலிங்கம் பூஜைபண்ணு
பார்க்கையிலே சத்துருக்க ளசுராள்மாய்கை
செய்யப்பா யெழுதோற்றம் நால்யோனிக்குள்
எழும்பியதோர் சத்துருக்கள் நாலுமாகும்
செய்யப்பா சொல்லவில்லை மானதமாய்ப்பண்ணு
புத்தியிலே விவேகமுறப் பூட்டுபூட்டே. 140

பூட்டியதோர் மேல்வாசல் பூட்டுப்பேரும்
புரியட்டம் பூரணமு மொக்கயேறும்
ஆட்டியதோர் ஆட்டெல்லா மஞ்சுழினையாட்டு
அப்பனே புலத்தியனே மவுனத்தாட்டு
மூட்டியதோர் தீமூட்டுங் காலினாட்டு
முத்தமனே யறிவோடே சேர்ந்தவாட்டு
காட்டியதோர் கண்ணாட்டும் லாடத்தாட்டுங்
கற்பமென்ற ரசகற்பத் தாட்டுத்தானே. 141

சீடனுக்கு உபதேசிக்கும் முறை

தானான சீடனுக்கும் உபதேசிக்கிற்
சடாதார மவுனத்தை முன்னேசொல்லி
கானான சாபத்தினி வர்த்திசொல்லிக்
கண்டுபார் பின்பங்கே அட்டாங்கஞ்சொல்
கோனான சிவயோக மனுட்டானஞ்சொல்
கொடுத்தடுமை யானாக்கால் வாசிசொல்லு
வானான நிராதார மவுனஞ்சொல்லு
மானதமாம் பூஜையிது கருவைச்சொல்லே. 142

சொல்லவே புலத்தியனே வழுவாராமல்
தோணவே சிவதீட்சை பத்துஞ்சொல்லு
வெல்லவே தேவியுட தீட்சைபத்து
விளங்குவா ரதன்பிறகு மவுனமாலை
சொல்லவே மேல்வாசல் மூலஞ்சொல்லு
திடமாக விந்துநிலை நிலைக்கச்சொல்லு
அல்லவே சமாதியைந்து மடைவாய்ச்சொல்லு
அப்பாற்பின் பூரண சமாதிக்கேற்ற. 143

ஏற்றவே சற்புத்திர னானாற்சொல்வேன்
இடையிலே தவறுபுத்தி விவேகங்கெட்டால்
காட்டிலே துரத்திவிட்ட பூனையைப்போற்
கைமுறைகள் காட்டாதே கருச்சொல்லாதே
நீற்றாற்றும் வழலைமுறை தனைக்காட்டாதே
நினைவுகெட்ட மாந்தரைநீ நீங்கத்தள்ளு
பாற்றாற்றுஞ் சூத்திரனாஞ் சாதியானால்
பன்னிரெண்டு வருடம்வரை பார்த்துத்தேறே. 144

மூடர்கள்

தேறவே சாயுட்சியஞ் சூத்திரனேஞானி
சித்தத்தில் களங்கமற்ற புத்தியாவான்
ஆறவே யடிபணிந்து கேட்டதெல்லாமீவான்
அல்லாதான் முதற்சாதி ஆசைகற்பம்
நாறவே உடலெடுத்த நாய்ச்சென்மங்கள்
நன்மைவராதொருநாளும் பேசவேண்டாம்
மாறவே மனங்கொண்டாற் கனங்கொள்ளாது
மவுனத்தி லுரையாது மூடர்பாரே. 145

மூடரென்ற மூதேவி காசுக்கள்ளன்
முழுதுமவன் வஞ்சக னொருசொல்லில்லை
கேடனென்ற சவங்களவன் சண்டிமாடு
கேடுள்ளான் மாபாவி மனோவிகாரி
சூடனென்ற பூச்சூடன் துன்மார்க்கந்தான்
சொற்பெரிய குருபாதந் தொண்டுபண்ணான்
ஏடனென்ற யிருமாப்பன் பாசக்கண்ணன்
யென்குருவே யென்றொருநாள் பணிந்தீயானே. 146

ஈயாத கடுங்கோப னுலுத்தனுண்டு
இவர்களையும் பார்த்துப்பின் தீட்சையேது
வாயாற மனதாற ஒருமையாலே
மவுனத்தை வைத்தவனைக் கைக்கொள்வாய்நீ
தாயான பரைபூஜை பண்ணப்பண்ணச்
சலித்திட்டான் சிதம்பரச்சக் கரத்தின்பூஜை
நேயமாய்ச் செய்கையிலே அங்கநியாசம்
நீதியாய்க் காமகளைத் தியானஞ்செய்யே. 147

நவநியாசம்

செய்யப்பா சத்தியுட நியாசந்தன்னைச்
சிறப்பான கரநியாசஞ் சிவநியாசம்
வையப்பா மாதுருகர நியாசந்தானும்
மகத்தான சோடச நியாசந்தானும்
மெய்யப்பா சடாதார நியாசந்தானும்
மேலான நிராகார நியாசந்தானும்
பொய்யப்பா யெண்ணாதே நவநியாசம்
பூட்டியே சிதம்பரத்தைப் பூஜைபண்ணே. 148

நவமுத்திரை

பண்ணவே பூஜைக்கு முத்திரைகேளு
பண்பான தேனுமுத்திரை யோனிமுத்திரை
யென்னவே சின்மயமுத் திரையினோடு
இலகுசிவ லிங்கமுத்திரை கும்பமுத்திரை
உண்ணவே பிறைமுத்திரை ரவியின்முத்திரை
உறைகின்ற நாதமுத்திரை விந்துமுத்திரை
நண்ணவே நவமுத்திரை செய்துபூஜை
நலமான ஓமங்கள் தற்பனங்கள் செய்யே. 149

தீட்சைவிதி

செய்யடா அங்குட்டம் திக்குப்பந்தம்
திரிகோண விந்துள்ளாய்க் கலசந்தோறும்
கையடா ஐந்துவகைப் பாத்திரத்துக்குக்
கருவான அவரவர்தம் மூலபீசம்
மெய்யடா பாணித்துப் புட்பம்வாங்கி
விளங்கவே யிடக்கரத்தில் வைத்துத்தம்பம்
வையடா அட்டபந்தம் அவரவர்தம்பீசம்
வளமாகத் தியானித்து மவுனந்தாக்கே. 150

தாக்கியே மவுனத்தாற் சத்திபூஜை
சமத்தான மேருவைப்போல் பார்த்துக்கொண;டு
ஆக்கியே மானதமாம் அட்சரங்கள்
ஆதியாஞ் சிவதீட்சை சத்திதீட்சை
நோக்கியே சடாதாரத் தசவைபீசம்
நுனியறிந்து இதழ்தோறும் போடுபோடு
தேக்கியே பரைதீட்சை மவுனதீட்சை
திறமாகச் சமாதியிலுந் தீட்சைநாட்டே. 151

நாட்டியே பெலிபீடம் நந்திபீடம்
நகிளாதே கொடிக்கம்பத் துவாரபாலாள்
பூட்டியே அட்டகெஜ அட்டநாகம்
போடுவாய் பீசங்கள் அட்டசத்தி
சூட்டியே அட்டதுர்க்கி அட்டபாலாள்
துடியான கிரீடியொடு பிருங்கிவெய்யோன்
மூட்டியே வடமுகத்திற் காளிதானும்
முறைவீதம் வயிரவற்குப் பீசம்போடே. 152

போடுவாய் வீரபத்திரன் கணேசன் கந்தன்
புகழான மேல்முகத்திற் பீசந்தானும்
நாடுவாய் சண்டிகேசன் தட்சணாமூர்த்தி
நலமாக விந்திட்டு மூலபீசம்
கூடுவாய் மவுனத்தில் அங்கங்கேதான்
கூராகத் தியானித்துச் சமாதிமுட்டு
தேடுவாய் குருதியானம் நந்திமுன்பே
தேடியே கணபதியைத் தியானம் பண்ணே. 153

தியானமாம் பூரண சமாதி மூட்டித்
திடமான யிடகலையில் வாசியேற்றி
தியானமாம் அவரவற்கே மவுனமூட்டிச்
சிந்தை பல நினைவுவிட்டு மானதத்தில்
தியானமாய்ப் பூஜைசெய்வாய் கருணைகூறத்
தெளிந்தமன தொருமையினால் தம்பம் செய்து
தியானமே புரிவாய்பின் தேவிபூஜை
திறமான பாத்திரங்கள் முன்னேவையே. 154

தேவி பூஜை மார்க்கம்

வைத்திட்ட பாத்திரத்தை முன்னேபூசி
வளமாகச் சத்தியுட பூஜை மார்க்கம்
மெய்த்திட்ட மென்னசொல்வேன் நவநியாசம்
மேலான நவமுத்திரை அபிஷேகங்கள்
கைத்திட்ட மறவாதே நெய்வேத்தியங்கள்
கட்டாகச் சோடசமா முபசாரங்கள்
செய்திட்டு மணியோசை சங்குநாதஞ்
செயகண்டி யோசையுடன் தோத்திரஞ்செய்யே. 155

மடையர் பூஜை

செய்யப்பா யிப்படியே மான தமாம்பூஜை
திறமான மவுனத்தால் முத்தியாச்சு
மெய்யப்பா சிவயோகி சித்தர் பூஜை
மேதினியில் வஸ்துகஞ்சா அபின்சரக்கு
வைய்யப்பா வென்று சொல்லிக் கிரிகை பூஜை
மனம்போன பெண்பூசை மார்க்கஞ் செய்வார்
தையப்பா நித்தமிதாம் பூஜையென்பார்
சையோகம் செய்வார்கள் மடையர்தானே. 156

மடையரைப் போல் பூஜைசெய்து பெண்ணைச்சேர்ந்து
மருவியே சாராய வெறிகள் மிஞ்சி
சடையாமல் வாய்குளறிச் சண்டையிட்டுத்
தாளிப்பாரிப் பூஜை தாய்க்கொவ்வாது
அடையாள மிதைக்கண்டு தேவிபார்த்து
ஆகாகா நரகத்திற்கு போடச் சொல்வாள்
விடையாதே கிரிகையிலே பூஜைபண்ண
வேதாந்தத் தீட்சையிரு நூறும்பாரே. 157

இருநூறிற் சொன்னபடி கொங்கணருஞ் சொன்னார்.
இயல்பறிந்து கிரிகையிலே பூஜைபண்ணு
ஒருநூறில் ஞானவழி உண்மை சொன்னேன்
உற்றுணர்ந்து சிவக்கியானம் நன்றாய்ப்பாரு
அருமையாய்த் திருமூலர் திருமந்திரம்பாரு
அடிப்படையிற் பெலன்போட்டு வந்தத்தேற
ஒருமையாய் மனங்கொண்டு உண்மையாக
உரைத்திட்டார் ஐந்நூறும் ஞானம்பாரே. 158

சட்டைமுனி 200 பார்க்க

பாரப்பா சட்டைமுனி பாடலுக்குள்
பண்பான ஞானமிரு நூறும்பாரு
சேரப்பா சாயுட்சியங் கட்டியேறத்
தெளிவாகும் மனதுக்குள் தெளிவுண்டாகும்
காரப்பா குருபதத்தைக் கார்த்தால்நித்தம்
கருணைசெய்வார் பன்னிரெண்டு வருடங்காரு
ஊரப்பா யிருப்பார்கள் கோடிக்கொன்றாய்
உற்றுப்பார் அவர்களைநீ கண்டு பாரே. 159

பேசையிலே அட்டாங்க மாறுகிறதைக் கேளு
பேரான சிதம்பரத்தின் பூஜை கேளு
ஆசையிலே சத்தியுட தீட்சைகேளு
அப்பனே வாசியுட கருவைக் கேளு
பாஷையிலே பரிபாஷை மெத்தவுண்டு
பாசாங்கு மெத்தவுண்டு ஒருமனதாய்ப்பேசி
பூஜையிலே சிவபூஜை தேவிபூஜை
புகழாகக் கைமுறையாய் நியாசங்கேளே. 160

அங்க நியாசம்

கேளுநீ யங்கத்தி னியாசந்தன்னைக்
கேசரியோ கந்தனிலே குறிகள் சொல்வேன்
ஆளுநீ அங்குட்ட விரலைத்தானே
அனாமிகையின் நடுவரையி லூன்றிமேலாய்
கோளுநீ வாராமல் மவுனத்தப்பா
குறிநாட்டு வாயிருகண் சத்தநேரம்
வாளுநீ புருவமைய முச்சிதானும்
மார்பிடரிச் சுழியினி லூணுவூணே. 161

கர நியாசம்

ஊணவே விரலிரண்டும் உந்திமுட்டு
ஓகோகோ பதமிரண்டு மாறியேற்று
தோணவே கரநியாசம் சொல்லக்கேளு
சொல்லுகிறேன் மவுனத்தா விரண்டுகையும்
பூணவே அங்குட்ட விரலினாலே
பூட்டுவாய் விரலுஞ்சாத் தியங்கொண்டபோது
காணவே காமகளி னியாசங்கேளு
கருவாக மிருவிரலு மொன்றாய்க் கூட்டே. 162

காமகள் நியாசம் 3 சத்தி நியாசம் 4

கூட்டியே புருவமையந் தன்னிலூணு
கூறுதற்கு மவுனதம்பம் அங்கங்கென்றி
நாட்டியே சடாதார மாறுமூணு
நலமாக உச்சியிலே பதித்தபின்பு
சூட்டியே சத்தியுட னியாசஞ் சொல்வேன்
சுத்தமாய் ஓம் அவ்வுங் கிலியுச் சவ்வும்
பூட்டியே சிவயவென்று வாமபாகம்
புகழாக மவுனதம்பம் பூணவோதே. 163

சிவ நியாசம்

ஓதுவாய் தம்பனத்தால் மவுனத்தாலே
உற்றதொரு சிவநியாச முறைக்கக்கேளு
ஓதுவாய் வலப்புரத்தே யொருடக்கஞ்சார்
உச்சிதொட்டு வலக்கண்ணும் வலச்செவியுமூணு
ஓதுவாய் வலதுயும் வலதுமார்பு
உருவாக வலதுவிரல் வலதுமுட்டு
ஓதுவாய் வலதுபதஞ்சிவ நியாசமாச்சு
உத்தமனே சத்திக்கு மிடப்புரத்தேயூணே. 164

சோடச நியாசம்

இடப்புரந்தா னிவ்வண்ணஞ் சத்தியாச்சு
இனிமேற்கேள் சோடச நியாசந்தன்னை
திடப்படவே கனுஷ்டிகைமே லங்குட்டத்தைச்
சிறப்பாக மேலேற்றி மூவிரலுமொன்றாய்
படப்படவே உச்சிதனிலே ரம்மென்றும்
பாங்கான நெற்றியிலே ராம்மென்றும்
கெடப்படுமோ புருவமையந் தனில்ரிம்மென்றும்
கீழாகும் சுழியினையிலே ரீமென்றூணே. 165

ஊணுவா யசபையிலே ரும்மென்றூணு
ஒளிமீறுங் குண்டலியில் ரூம்மென்றூணு
தாணுவாய் நாடியிலே ரெம்மென்றூணு
தருகண்டத் தடிதனிலே ரெம்மென்றூணு
பூணுவாய் நெஞ்சினிலே ரொம்மென்றூணு
போதமா முந்தியிலே ரோம்மென்றூணு
நாணுவாய் உம்மென்றும் லம்மென்றுந்தான்
நாட்டுவாய் விரலிண்டு நாடிக்காட்டே. 166

சடாதார நியாசம் – 7

காட்டுவாய் லம்மென்றும் விம்மென்றுந்தான்
கடியபிற முட்டியிலே கருவாயூணு
ஒட்டுவாய் லும்மென்றும் லூம்மென்றுந்தான்
உண்மையாய்ப் பாதத்தில் ஊணுவூணு
கோட்டுவாய் சோடசத்தின் நியாசமாச்சு
குறியான சடாதார நியாசங்கேளு
தீட்டுவாய் ஓம்நமசிவய மென்று
செப்பியே தர்ச்சனையும் மத்திமையுங்கூட்டே. 167

நிராதார நியாசம்

கூட்டியே யங்குட்ட விரலைச் சேர்த்துக்
கூராக அவரவர்தம் மூலமுணு
சூட்டியே சடாதார நிராதாரத்திற்
சோதிபெற நியாசத்தைச் சொன்னேனையா
மேட்டியாய் நூல்பார்த்து நியாசமெல்லாம்
வீறாக நமக்குவரு மென்றுதானே
நாட்டிலே யிப்படியே நமக்கு வருமென்று
நாட்டாதே குருவறிந்து கேளுதானே. 168

மாதுகர நியாசம் 9

தானான நியாசங்க ளூற்றப்பார்த்துச்
சற்குருவைக் கேளாமல் நீசெய்யாதே
மோனமாய்க் கைமுறையாய்ச் சொல்லச்சொல்லு
மூவாயி ரம்பாட்டில் திருமந்திரத்தில்
தேனான மாதுகர நியாசஞ்சொன்னார்
திடமாக அகாரமுதல் உகாரமட்டும்
கோனான அன்பத்தோ ரட்சரத்தைக்
கூறினார் குறிகாட்டிப் பஞ்சாட்சரங்காணே. 169

காணுவாய் நவநியாசம் முறைதப்பாமற்
கைமுறையாய்ச் சொன்னேனா னோமசாந்தி
பூணுநீ கும்பத்திற் சக்கரத்திற்
பொன்னான விக்கிரகத்தில் மேருதன்னில்
தோணவே பூஜைபண்ண நியாசஞ் சொன்னேன்
சுருதிபெற முத்திரைகள் சொல்வேன்கேளு
நாணுநீ நவமுத்திரை யொன்பதுக்கும்
நன்றாகப் புலத்தியனே சொல்லக்கேளே. 170

நவமுத்திரை

சொல்லுகிறேன் சின்மயத்தின் முத்திரையைக்கேளு
சூட்டுவாய் தர்ச்சனையு மங்குட்டந்தொட்டு
மல்லுகிறேன் வளையமா யிருவிரலுஞ்சேர்த்து
மற்றவிரல் மூன்றையுந்தா னிமிரநாட்டி
வெல்லுகிறேன் சின்மயத்தின் முத்திரையீதாச்சு
விளங்குகிறேன் தேனுமுத்திரைக் கெண்விரலுங்கூட்டி
சொல்லுகிறேன் விரல்மாறிக் காமதேனுத்
தேனுமுத்திரை நால்மூலை யாகப்பூட்டே. 171

பூட்டுவாய் யோனிமுத்திரை சொல்லக்கேளு
பூணவே யிருகரத்தங் குட்டந்தன்னை
கூட்டுவாய் தர்ச்சனையும் மாறிச்சேர்த்துக்
கோர்த்துவிடு மற்றது விரலைப்பூட்டி
நாட்டுவா யிதுதானே யோனிமுத்திரை
நலமான லிங்கமுத்திரை சொல்லக்கேளு
மூட்டுவாய் இடக்கரத்தர்ச் சனையங்குட்டம்
முனைமையஞ் சின்மயமாம் போதத்துள்ளே. 172

போதமுள்ள ஆவுடையாள் வலக்கரத்தங்குட்டம்
புகவிட்டுத் தர்ச்சனையு மிடக்கரத்தின்மையம்
நாதமென்றால் ஆவுடையாள் நடனலிங்கம்
நலமான முத்திரையாம் புலத்தியனே அய்யா
வேதமென்றால் கும்பமுத் திரையைச்சொல்வேன்
விளங்கவே யிருகையுங் குவிப்பதுவே கும்பம்
வாதமென்ற பிறைமுத்திரை சொல்லக்கேளு
வளமான அங்குட்டந் தர்ச்சனியுந்தானே. 173

தானான தனுவளைத்தார் பிறையுமாச்சு
சாதகமா யிருகரத்தங் குட்டங்கூட்டி
வேனான மத்திமையைக் கீழாய்சேர்த்து
விளங்கியதோர் மற்றவிரல் கீழாய்ச்சேர்த்து
தேனான ரவியென்ற முத்திரையீதாச்சு
சிறப்பான நாதமுத்திரை செப்பக்கேளு
கோனான விரல்நான்கும் அங்குட்டந்தொட்டுக்
கூட்டிப்பார் நாதமுத்திரை யிதுதானாச்சே. 174

ஆச்சிந்த விந்துமுத்திரை யறியச்சொல்வேன்
அங்கைரெண்டு விரல்பத்துங் கூட்டிச்சேர்க்க
வாச்சிந்த விரல்மாறி மாறியேற்ற
வளமான விந்தினுட முத்திரையீ தாச்சு
பேச்சிந்த முத்திரையில் தேனுமுத்திரை
பிரதான யோனிமுத்திரை நாதமுத்திரை
மூச்சிந்தப் பிறைமுத்திரை நாலுங்கேளு
முத்தியுண்டாஞ் சிந்தியுண்டாம் மூர்க்கமாமே. 175

மூர்க்கமாஞ் சின்மயத்தின் முத்திரையினோடு
மோகமாம் லிங்கமுத்திரை கும்பமுத்திரை
பார்க்கறான் முத்திரையும் விந்துமுத்திரை
பாங்காக யிதுவைந்துஞ் சிதம்பரபூஜைக்கு

நீர்க்கமாம் முத்திரையுண்டாம் மவுனத்தாலே
தேவிசிவ பூஜையெல்லாம் சித்தியாகும்
மார்க்கமாய் மற்றதொரு பூஜையெல்லாம்
வாசமாம் சின்மயத்தின் முத்திரையைக்காட்டே 176

காட்டுவா யோமயாக சாலைக்கெல்லாம்
கைமுறையாய் அட்டகும்பந் தனக்குப்பூஜை
பூட்டுவாய் பிரதான கும்பத்துக்கும்
புகழான ஓமத்துக்கு சின்மயமுத்திரையும்
நாட்டுவாய் மவுனத்தால் பூஜைசெய்து
நலமான சீடனுக்குத் தீட்சையோது
மூட்டுவாய் மவுனமென்ற வாலைதீட்சை
முனைமையம் கண்பொருக்க மூட்டிடாயே. 177

மூட்டியே நிராகாரப் பூஜையுள்ளே
மோனமாய்த் தம்பனமாய் வாசிதன்னை
நாட்டியே சுழிமுனையில் நாட்டம்நோக்கு
நதிகண்டால் வாசியொடு வாதஞ்சித்தி
பூட்டியே ஆகாமியஞ் சஞ்சிதத்தினோடு
பூணுகின்ற பிரார்த்தவத்தோ யத்தினோடு
சாட்டியமே வாராமல் உச்சாடித்துச்
சாத்திரமென் றாக்கினையிற் சண்ணுசண்ணே. 178

சங்கமாண்டி

சண்ணடா லோகத்திற் சங்கமாண்டி
சாதகமாய்ச் சித்தாதிக் குருநானேயென்பான்
விண்ணடா நந்திஒளி காட்டச்சொல்லு
விளங்கவே வாசியுட கருவைக்கேளு
கண்ணடா பற்றுவது யெங்கென்றுகேளு
கருவான விந்துநிலை சொல்லாவிட்டால்
மண்ணடா வாரியவன் வாயிற்போடு
மானிடவர் பாவமெல்லாம் வாங்குவானே. 179

வாங்குவான் அவன்வயிற்றுப் பிழைப்புக்காக
மக்களுடன் பெண்டாளும் மாபாவந்தான்
தாங்குவா னிப்படியே பாவக்காடாய்த்
தனக்குமோ ரிடமற்றுச் சவங்களாகி

ஓங்குவான் ஒருவயற்றுக் கஞ்சிக்காக
ஒருகோடி நாய்சென்மம் ஓடிஓடி
ஏங்குவா னிப்படியே திங்கள் தோறும்
யிகத்திலே யிவன்பெற்ற பேறுகாணே. 180

ஞானி

பேறாக மவுனத்தே முத்திமுத்தி
பேரண்டஞ் சித்தண்டந் தேகஞ்சித்தி
கூறாகச் சுழிமுனையில் நினைத்தால்பத்தி
கொண்டேறும் நிராகார ஒளிகள்பற்றி
நேராக ரவிமதியை யுற்றுப்பார்த்து
நெய்யோடு கரிசாலை நிமைக்குள்ளாக
ஆறாகும் வரையேறி ஆறுங்கண்டால்
அவனல்லோ ஞானியென்ற நாமந்தானே. 181

தானென்ற யோகமல்லோ ஞானபீடம்
சச்சிதா னந்தவரைக் கப்பாலேறும்
மானென்ற பெண்மயக்கம் ஆகாதப்பா
மயக்குவாள் திரோதாயி மனந்தேறொட்டாள்
கோனென்ற சற்குருவாம் மவுனநாதன்
குறிகாட்டிச் சுழினையிலே யுரைக்கச்சொல்லி
வானென்ற மவுனத்தை வைத்தாராகில்
மாண்டாலும் சொர்க்கவரை மோட்சந்தானே. 182

கன்ம தன்மம்

தானான மோட்சமென்றுஞ் சொர்க்கமென்றுஞ்
சரிகையோடு கிரியைக்குச் சொன்னாரீசன்
தேனான யோகிக்கு ஒன்றுமில்லை
சிவபோதம் சிவயோகஞ் சேர்வாரையா
கோனான விந்துவங்கே செனிக்கும்போது
குருநாதஞ் சேர்ந்தங்கே மூடிக்கொள்ளும்
வானான நினைவோடு கன்மந்தன்மம்
வாழுஞ்சிறு குளவியாய்ப் பிறக்கும்பாரே. 183

மூடர்கள் அமாவாசை

பிறக்குமது வன்றியே யெழுதோற்றத்துள்ளும்
பேராக நாலுவகை யோனிக்குள்ளும்
பிறக்குமது பொறிஐந்தால் கோடாகோடி
பிணமாகிப் பிறக்கமட்டும் மாய்கையாலே

திறக்குமிது மேல்வாசல் சங்குமுச்சு
செல்லயிலே விந்துள்ளாய் ஆத்துமாச்செல்லும்
மறக்குமிது வரைகளிலே செனிப்பதில்லை
மனஞ்சென்ற யிடங்களிலே பிறப்புண்டாமே. 184

உண்டான மாதாவும் பிதாவுமாண்டால்
உத்தமனே தற்பனங்கள் செய்வோமென்பார்
பற்றான கிரியையொடு சரியைக்கெல்லாம்
பரிசுகெட்ட நினைவாலே நீரிறைத்துத்தானும்
கொண்டாடித் தற்பனங்கள் செய்வோமென்பார்
குரும்பரப்பா யெள்ளோடு தண்ணீர்வார்ப்பார்
தெண்டனிடு வார்கோயில் தோறுஞ்சென்று
தெளிவற்றே தெளியார்கள் அலைவார்தானே. 185

அலைவார்கள் அவரவர்கள் தேசவாழ்க்கை
அமாவாசை விரதமென்பார் திதிகள்செய்வார்
உலைவார்கள் வேதியற்கு அன்னமீய்ந்து
உறுதியாய்ப் பிண்டமிட்டு பிதிர்க்குப்பூஜை
மலையாமற் கொடுப்பார்கள் யெள்ளுந்தண்ணீர்
வார்ப்பார்கள் வேதமுறை வளப்பமாக
நிலையான விந்துகெட்டுப் பிணமாய்ப்போனால்
நீயார்க்குத் தற்பனங்கள் செய்யும்வாரே. 186

வாரான பிதுர்கன்மம் யோகிதீர்ப்பான்
மற்றவர்க்கு வாராது லுத்தமாண்பர்
நீறான பிணத்துக்குப் பிண்டமேது
நீதிகெட்ட யெள்ளுநீர் வார்ப்பதேது
தூறான வேதநூல் பார்த்துவாசி
சுழன்றலைவார் உலகமெல்லாம் சுத்தமாடு
தேறாத பசுக்களப்பா மாய்கைக்குள்ளே
சிக்கினாற் பிறப்பிறப்பிற் சிக்கினாரே. 187

அமாவாசை

சிக்காமல் சொல்லுகிறேன் புலத்தியனே கேளு
தேசத்தோ டொத்துணியாய் வாழாதப்பா
சொக்காதே யிருந்தல்லோ சாக்கிரத்திற்
சுருதியந்த ஆக்கினையி லகாரந்தொட்டு

மக்காத கீழ்படியில் மகாரந்தொட்டு
வாசமா மிடகலையில் வகாரந்தொட்டு
புக்காதே பின்கலையிற் சிகாரந்தொட்டு
பூட்டப்பா ரிதுவல்லோ அமாவாசையெண்ணே. 188

அமாவாசை பூரணையிற் பிதிர்மாதா கன்மம்
ஆகாகா விந்துநா தத்துட்பாரு
நமவசி விந்துவிலே நாட்டமூணு
நாலான பூரணத்தை மேலேதாக்கு
சமராகி விந்துவோடு நாதம்ரெண்டுஞ்
சமரசமாம் அமாவாசைக் குள்ளேதாக்கி
யிமையோடு விழியூட்டு சோமசூர்யன்
யிகபரமாய் ஒளிவீசும் திதியிதாச்சே. 189

திதிசடங்குக் கமாவாசைக் குள்ளேசென்று
திருப்தியா மிப்படியே சிவயோகமப்பா
கெதிமோட்ச மிதுவல்லோ சற்புத்திரராதி
கெடியாக அமாவாசை யறிந்தோர்க்கையா
பிதிர்சூட்சம் மாதாவின் சூட்சஞ்சொன்னேன்.
பிதற்றாதே யெழுகோடி பிதிர்க்குமுத்தி
மதிகெட்ட மாணாக்கள் தோற்றமெழில்
வங்கிஷமு முத்திபெறு மாதாந்தத்தே. 190

புத்தி

மாதாந்த ரெத்தமல்லோ சடலமாச்சு
வளமான தந்தையல்லோ உயிருமாச்சு
நாதாந்த விந்துரெண்டுஞ் சமரசத்தில்
நாடிப்பார் விந்துநாதம் நம்முள்ளாச்சு
வேதாந்தம் செல்லாது மவுனவாழ்க்கை
வெளியொளியாய்ப் பிரணவத்தில் மேவுங்காலம்
போதாந்த மேலாச்சு யெமனும் போச்சு
பூரணத்தில் நிலைநிற்பார் புத்திகாணே. 191

புத்தியென்றா லிதுபுத்தி சற்புத்திரர்க்கு
புத்திகெட்ட மாடானாற் கிரியை தள்ளு
சத்தியென்றால் இதுசத்தி குண்டலித்தீ நம்முள்
சாடினார் சற்குருவின் உபதேசத்தால்

முத்தியென்றா லிதுமுத்தி மவுனமூலம்
முனைவிந்து செனிக்குமப்போ அமர்ந்த வாழ்க்கை
மத்தியிலே வாராது வாராதப்பா
மனங்கொண்டு பார்த்தாலும் வாராதாமே. 192

வாராதோ விட்டகுறை சுவாசத்தாலே
மாதாவும் பிதாகூடி யமைந்தவிந்து
சாராதோ விந்துநிலை பற்றவேதான்
தவறாது நாதாந்தத் துள்ளேயேறும்
தீராதோ பிறவியெல்லாம் மவுனந்தாக்கி
சித்தாந்தி யாங்காலந் தீர்க்கமாட்டான்
பேராதோ மனமாய்கை அறிவிலேறிப்
பெலத்ததுவே வருடமொன்றில் மவுனத்தாமே. 193

தாயான சிற்பரையைப் பூஜைசெய்தால்
தவறொன்றும் வாராது சார்ந்துயேறும்
வாயாரத் தோத்திரங்கள் பேசியென்ன
மவுனகுரு உபதேசம் வைத்தாலென்ன
பேயாகப் பிதற்றியே திரிந்தாலென்ன
பெலமான சாஸ்திரங்கள் பார்த்தாலென்ன
மாயாதி வித்தையென்ன மவுனமென்ன
மனக்குரங்கு கொம்பிலெஞ்சி யேறிநோக்கே. 194

ஏறினால் வாசியின்மே வேறவேணும்
யிருந்துரைக்க மேல்வாசல் திறக்கவேணும்
மாறினால் மாய்கைவிட்டுப் பாயவேணும்
மவுனமென்ற குருவந்து வாய்க்க வேணும்
தேறினால் மனமல்லோ தேறவேணும்
செடமானால் தீர்க்கமா யிருக்க வேணும்
ஆறினால் சண்முகத்தைக் காணவேணும்
அவரல்லோ மவுனநந்தி யாட்டம்பாரே. 195

ஆட்டினால் பூரணத்தை யாட்டவேணும்
அதினாலே யம்பலத்திற் செல்லவேணும்
மூட்டினா லிடைபின்னாய் மூட்டவேணும்
முதிர்ந்துநின்ற பேரின்ப முத்திவேணும்
நாட்டினால் விந்துவிலே நாட்டவேணும்
நன்மைபெறச் சுழினையிலே நிற்கவேணும்
காட்டினால் குருநாதன் பூஜை வேணும்
கண்டித்தே ஒளி காணக் கருதிப்பாரே. 196

நூலில் சொன்ன விபரம்

கருவான அட்டகர்ம மாறல் சொன்னேன்
கைமுறையாஞ் சிதம்பரத்தின் பூஜைசொன்னேன்
உருவாக மூலமந் திரங்கள் சொன்னேன்
ஒளிகாண நிராகாரச் சூட்சஞ்சொன்னேன்
திருவாக நாற்பத்து முக்கோண பூஜை
சித்திபெற வகைசொன்னேன் தெளிந்துபாரு
மருவாத பெண்கள் மையல் தள்ளச்சொன்னேன்
வாசமாய்ச் சுழினையிற்கண் பத்தென்றேனே. 197

பத்தவே மனமொன்றாய்ப் பூட்டு தாக்கு
பவந்தீர சாபத்தி னிவர்த்தி சொன்னேன்
சுத்தமாய் சிவயோக அனுட்டானத்தைச்
சொல்முறைகள் தப்பாமல் செய்யச் சொன்னேன்
சித்தமே யாதியிலே சேர்க்கச் சொன்னேன்
சித்தாதி யாகவென்று உண்மைசொன்னேன்
செத்தபிண மானாக்கா லேதுமில்லை
தேசத்து மாய்கையிலே சென்றிடாதே. 198

சென்றிடவே அட்டபெலி பாலரோடு
திறமான அட்டசத்தி கிரிநாகங்கள்
நன்றிபெறக் கைமுறையாய்ப் பூஜை சொன்னேன்
நலமான குகைவாசல் கார்க்கச் சொன்னேன்
முற்றிபெறச் சுழினைவழி மார்க்கஞ் சொன்னேன்
முத்திரை நியாசமொடு மவுனஞ் சொன்னேன்
வெற்றியுடன் சித்தருட பூஜை சொன்னேன்
விளங்கவே காயாச மீய்ந்ததுவு மெய்யே. 199

மெய்யான காயாசம் வாங்கச் சொன்னேன்
வீரான ரசபற்பங் கொள்ளச் சொன்னேன்
கையான சீடருக்குப் புத்தி சொன்னேன்
கள்ளரென்ற சீடரைநான் தள்ளச்சொன்னேன்
பொய்யான பொய்சொன்ன புழுச்சண்டாளர்
பொருளீய்ந்து பிறர்க்குரைப்பார் பாலச்சீடர்
அய்யோவென் றுரைத்தாலுந் தள்ளச்சொன்னேன்
அக்கினியா மிவர்களுடன் பேசொண்ணாதே. 200

ஒண்ணான மனதுரிமை சிடருக்கு
உரைசொல்லிப் பூஜைவிதி மார்க்கஞ் சொல்லி
விண்ணாட்டம் கண்ணாடி மேவச்சொல்லி
மேலான மவுனத்தைப் பற்றச் சொல்லி
சுண்ணாம்பும் மஞ்சளும்போல் குறியுங் காட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக்காட்டி
கண்ணாடிக் குள்ளுறுவின் பதத்தைப் போற்றிக்
கருணைப்பெறப் பூஜைவிதிக் கருவாம் முற்றே. 201

அகத்தியர் பூஜாவிதி 200 முற்றிற்று

உ

பரமபதி துணை

அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சைதன்யம் 51

காப்பு

ஆதியாய் நின்றவிளக் கொளிவைப் போற்றி
அரனருளை யுறுமடியார் பாதம்போற்றி
நீதியாய்ப் பதினெண்பேர் கிருபையாலே
நிரைந்துரைத்த யோகமுடன் ஞானந்தன்னை
பாதிமதி யணிபரமன் எனக்கிசைந்த
பருதிமதி சுழிமூன்றும் நன்றாய்ச் சொல்வேன்
வேதனைவா ராமல் முதற் றீட்சைமார்க்கம்
விளம்புவேன் மகா கணபதிகாப்பாமே. 1

ஆமெனவே யிடகலை யகாரஞ்சந்திரன்
அருளான உகாரபிங் கலையாஞ் சூரியன்
தாமெனவே ஓங்காரக் கம்பநுனியுச்சி
சாதித்தார் சுழிமுனையில் மகாரம் நிற்கும்
நாமெனவே நாதவிந்தால் சுழினைபாரு
நன்றா மிரவிமதியு மென்றாய்க்கூடும்
பாமெனவே அமுர்தங் கபாலத்தேறும்
பருதிநிகர் செந்தீயொளி வீசுந்தானே. 2

தானென்ற அகாரமதே விந்துவாகும்
சாதனை யுகாரமதே நாதமாகும்
வானென்ற சுழினையதே மகாரமாகும்
மைந்தனே யிதைமறைத்தார் சித்தரெல்லாம்

தேனென்ற குருகாட்டத் தெரியுமல்லால்
சிவமறியாப் பாவிகட்குத் தெரியாதப்பா
நானென்ற சிவயோக மார்க்கந்தன்னை
நன்மையுள பிள்ளைகட்குச் சொன்னேன்பாரே. 3

சொன்னபடி யின்னமொரு சேதிசொல்வேன்
சோதிதனி லேதினமுந் துடர்ந்துயேறு
என்னபடித் தாலுங்குரு வில்லாச்சீடன்
என்னபிர யோசனமா மலைந்து சாவான்
பொன்னதனைக் கம்மாளர் உருக்கினார்போல்
புருவநடுத் தமர்திறக்க விருகண்பூட்டு
கொன்றுவிடுங் கருவியெல்லாஞ் சணத்தில் மாளும்
கூத்தன்நின்ற சுழினைதனைத் திறமாய்க்காணே. 4

காணப்பா யிடை மணியே நாதமாகும்
கருவான பின்மணியே விந்துவாகும்
தோணப்பா அம்மணிகள் ரெண்டுக்குந்தான்
துருவயிடை பிங்கலையு மென்றுபேராம்
ஊணப்பா சந்திரசூ ரியனா மென்பார்
உறையான நீரென்றுங் கங்கையென்றும்
பூணப்பா ரவியென்றும் மதிதானென்றும்
பூட்டுவார் சுடர்ச்சோதியெனச் சொல்வாரே. 5

வாரான பெரியோர்கள் பாஷையெல்லாம்
மகாரமதுக் கேயாகும் மனம்வேறில்லை
கூரான யிருவிழியால் அடிமூலம்பார்
குறிதோணும் வெளிதோணும் தோஷந்தீரும்
பேரான அட்டசித்தி வசமேயாகும்
பிரியமுறும் மருந்தெல்லாஞ் சித்தியாகும்
ஏராத வாசியது யேறிற்றானால்
எமனில்லை வினையிருளு மில்லையெண்ணே. 6

இருளில்லை யென்பதுதா னாருக்கென்றால்
இடையென்ற கலையிற்கண் ணிருக்கினோற்கு
வறுமையில்லை யென்னுஞ்சொல் லாருக்கென்றால்
மகத்தான பஞ்சவர்ணங் கண்டோர்க்கப்பா
கெருவமில்லை யென்றசொல் லாருக்கென்றால்
கேசரத்தில் நாசிநுனி பார்த்தோர்க்கப்பா
தருமம்வரு மென்றசொல் லாருக்கென்றால்
சதாபத்தி விளக்கொளியிற் சார்ந்தோர்க்காமே. 7

ஆமப்பா முத்துபச்சை பவழம்வெள்ளை
ஆதியென்ற மஞ்சள் அஞ்சும் பஞ்சகர்த்தாள்
நாமிடை பிங்கலையும் பிரமன்விஷ்ணு
நாடிமூன்றுங் கூடிறின்ற சுழியேருத்திரன்
வாமப்பா புருவமத்தி மயேசனாகும்
வன்மைசிவ னுக்குமனோன் மணியேசத்தி
ஊமப்பா பிரமனுக்குச் சத்திவாணி
உறுதியுள்ள விஷ்ணுவுக்குத் திருவாங்காணே. 8

காணவே ருத்திரற்கு ருத்திரியாகும்
கார்மகேஸ் வரற்குமகேஸ் வரியுமாகும்
வேணென்ற யிவர்சுழினை உச்சிமையம்
வீற்றிருப்பார் மூலகண பதிவாலையும்
பாணென்ற நடுவில்நின்று பார்த்தாயானால்
பாலகனே சிவசத்தி வார்த்தைசொல்வார்
ஊணென்ற தேகங் கைலாசமாகும்
உற்றகுரு வார்த்தைதனை யுரைத்திட்டேனே. 9

சாதனை விபரம்

உரைத்தபடி நின்றுமிகப் பழக்கமாகி
உறுதிகொண்டு மயிர்ப்பால மீதிலேறி
நிறைத்தபடி முடியும்நெருப் பாறுதாண்டு
நேரான பூரணமுங் கலந்துபேசும்
மறைத்தாரே சித்தரெல்லாம் பேசிக்கொண்டு
மகத்தான பூரணத்தைக் காட்டாமற்றான்
விரைத்த விரைசாவி யாகாமற்றான்
விபரமுடன் பூரணத்தை விளம்புவேனே. 10

பூரண விபரம்

விள்ம்புகிறேன் பூரணந்தா னெதுவென்றாக்கால்
வெட்டவெளி சுழினையுச்சி வேறேயில்லை
தளம்பாதே வேறெண்ணாதே நீயும்
சகலசித்துங் கைவசமா யாடும்பீடம்
முளங்காதே பூரணத்தைக் கண்டோமென்று
முச்சுடரின் சேதிதனை மொழிந்தாற்றோஷம்
பழங்காறு மும்மூலந் தன்னைத்தானும்
பார்மகனே சித்தர்கள்தான் பகரார்காணே. 11

காணென்று சொல்வதுதான் யாருக்கென்றால்
        காலறிந்த ஞானிகட்குச் சொல்லலாகும்
வாணென்ற சொல்லதனை யறியவேணும்
        வஞ்சசண் டாளர்நட்பைத் தள்ளவேணும்
ஊணென்று சொன்னவிடங் காணவேணும்
        உன்மனதைப் பூரணத்தி லேற்றவேணும்
சாணென்ற சொல்லகற்ற விதனைச்சொன்னேன்
        சமர்த்திருந்தால் மும்மூலந் தயவாய்ப்பாரே. 12

தயவாகச் சொல்லிவிட்டேன் சுழினைமார்க்கம்
        சாதனையைப் புலையரிடம் சொன்னாற்றோசம்
மயமான சோதியடி மூலம்பாரு
        மகாரமென்ற சுழினைதனைப் பின்புபாரு
நயமான கருவிதொண்ணூற் றாறும்போகும்
        நற்றீபவொளிவீசும் புருவந்தன்னில்
பயமில்லை யாண்டுபன்னி ரெண்டுஞ்சென்றால்
        பராபர முனக்கேவல் செய்வார்பாரே. 13

பாருமென்று வேணதெல்லாஞ் சொல்வார்பின்னும்
        பாரிலதி சயங்கள்தனைத் தெரியச்சொல்வார்
நேருமென்ற மாய்கையோடு கோபந்தள்ளு
        நிலையாங்கா ரப்பைசா சத்தைத்தள்ளு
மேருவென்ற நிட்டைசதா காலம்நில்லு
        மேன்மைதருந் தாயாரைக் கண்டுகொள்ளு
தேரிநின்ற யண்டத்தின் சோதிதன்னை
        தெளிவாக யான்பார்த்தேன் சேதிகேளே. 14

சேதியென்ன அனல்கோடி ரவியோகோடி
        சென்றேதுந் தீக்கொடி மின்னல்கொடி
வேதனையாம் நீபார்க்கும் போதுஅய்யா
        விண்ணடா யிடிகோடி வெளிச்சங்கோடி
பேதிக்குந் தேகமது அருணன் போலாம்
        பிசகில்லை யனல்கோடி சுடரோகோடி
ஏதிடுக்க மொன்றுமில்லை யிதுவரைக்கும்
        இகத்தினிலே யிருக்காதே மலையிலேறே. 15

மலையேறா திருந்தாக்கா லொன்றுமில்லை
        வாராது வாராது அப்பியாசங்கள்
தலையேறாப் பாவிகட்கு நடப்பதெங்கே
        [illegible]ட்டிருந்தவர்க்குக் குறிகளில்லை
தலையறியா மாந்தருக்குத் தவங்களில்லை
        சாதிகுல மென்றவர்க்குச் சாவுதானே. 16

சாவதுதா னெதினாலே வந்துதென்றால்
சண்டாள மனம்நிலைக்காத தோசத்தாலே
ஆவதுவு மழிவதுவும் விந்தாலப்பா
ஆச்சரியம் பாழ்குழியி னாசையாலே
காவலது கட்டழிந்து போனதாலே
காட்சியெல்லாம் பொய்யாச்சு கண்டுபாரு
பாவதுவுஞ் சுண்ணாம்பி லொட்டினாப்போல்
பரமகுரு பீடமதைப் பகுத்திடாயே. 17

பகுத்திடாய் யென்று சொன்னேன் மகனேகேளு
பாரதனிற் றிருமூர்த்தி தேடிக்காணார்
வகுத்திடீ ரென்றுவெகு வாகநீயும்
வாழ்த்தினையே மும்மூர்த்தி யறிந்தாராசொல்
அகத்தினிலே பிரமமதை யறியார் யாரும்
அறிந்தமட்டுஞ் சொல்லுகிறே னடுத்துக்கேளு
செகத்தினிலே யவர்பீடம் யானுங்காணேன்
சார்ந்துபார் நடுநிலையைச் சார்ந்துபாரே. 18

சார்ந்துபா ரென்றபொரு ளறிந்துகொண்டேன்
சச்சிதா னந்தசிவ யோகமூர்த்தி
சூர்ந்துநின்ற மும்மூல மறிந்தேனையா
குருவிருந்த பீடமதை நன்றாய்க்கண்டேன்
வார்த்துநின்ற யிருமணியின் வகையைக்கண்டேன்
வளமான சந்திரசூ ரியனைக்கண்டேன்
சார்ந்துநின்ற முச்சுடருங் கண்டேனையா
சதாசிவமாம் சுழினைதனிற் சார்ந்திட்டேனே. 19

சார்ந்திட்டே னிடகலைபிங் கலையும் பார்த்துச்
சகலமுந்தா னனுக்கிரகத் தாலறிந்தேன்
கூர்ந்திட்டே னடிமூலந் தன்னில் நின்று
கூப்பிட்டேன் தாய்வந்து தீபமீய்ந்தால்
பார்த்திட்டே னதற்குமேல் நடுமூலத்தைப்
பாரென்று தாய்சொன்னா ளிடச்சுழியைக்
கார்த்திட்டேன் கர்மானு பவத்தைவெட்டிக்
காரணமாம் புருவமென்ற தீபந்தானே. 20

தீபத்தில் நின்றுகொண்டே னனேககாலம்
சிவசிவா நினைத்ததெல்லாஞ் சித்தியாச்சு
கோபத்தை யெள்ளளவு மனதில்வையேன்
கூவென்று அழுதிட்டேன் தாயைப்பார்த்து

ஆடத்து என்னவந்து தென்றுசொல்லி
ஆத்தாளு மென்முகத்தைப் பார்த்துநின்று
ஏபத்தா அமுர்தமதை யிந்தாவென்று
எனக்குமவ ளீந்திட்டாள் பார்த்திட்டேனே. 21

பார்த்திட்டேன் மதியமுதந் தன்னைத்தின்று
பாரென்றாள் மேல்மூலம் பார்க்கும்போது
வேர்த்திட்டேன் முகங்ளெல்லாம் களையுமாகி
விழுந்தேனான் போதைதனிற் சிக்கிக்கொண்டு
ஆப்பிட்டே னவள்போதந் தன்னிற்சிக்கி
அலறினேன் வுளறினே னாத்தாள் தன்னைக்
கூப்பிட்டேன் போதைதனைச் சகிக்கமாட்டேன்.
புதுமையிது போதுமென்றே அழுதிட்டேனே. 22

அழுதவெனைப் பார்த்தசிவ காமிஆயி
அம்பரமா மிடகலையி லழுத்துயென்றாள்
பழுதப்போ கலைமாறிப் போதைபோச்சு
பார்மகனே யின்னுமென்ன கவலையென்றாள்
குளிர்ந்திடவே செல்வம்போல் வந்துநின்று
கூப்பிட்டாளே னென்றேன் திரும்பிப்பார்த்து
களரற்ற பால்போல என்னைத்தானும்
கண்மணியென் றேசொல்லி முத்திட்டாளே. 23

முத்திட்டாள் முகத்தோடே முகமணைத்து
மோசமில்லை நீநானும் ஒன்றேயென்றாள்
பெத்திட்டே னவள்நானாய் நானவளாய்ப்
பேதமில்லை யிருபேரு மொன்றேயானோம்
சத்தியமாய்க் குருமொழியைத் தவிராதாலே
தாய்நானு மொன்றானோம் தப்பேயில்லை
நித்தியமா யடிநின்று முடியிலேறு
நிர்ணயமாய்ச் சொல்லிவிட்டேன் நிசமாய்த் தானே. 24

நிசமான தியானத்தி லிருக்கும்போது
நெடுஉயர மலையிலிட்ட தீபம்போலாம்
அசமான மலையிலிட்ட விளக்கைக் கண்டால்
ஆச்சரிய மாச்சரிய மதுவேபோதும்
பிசகான சடம்நிலைத்துப் போச்சுதப்பா
பிசகில்லை விளக்கதனைக் கண்டபோது
வசமாச்சு துரியநடு நிலைத்துப்போச்சு
வம்பான யேமனையும் வெல்லலாச்சே. 25

வெல்லலாம் ஓம்நமசி வாயந்தன்னை
விளக்கமாய்ப் பஞ்சகர்த்த ரெழுத்தைச்சொல்வேன்
சல்லலா மிதனாலே அட்டகன்மம்
க்ஷணத்தில் விளையாடிடலா மென்றுஞ்சொன்னார்
அல்லவடா சித்தர்களைக் காணவென்றால்
அறையுகிறேன் சிவயநம கிலிவோமென்று
சொல்லியே ஜெபித்திடவே சித்தர்வந்து
சூட்சமுடன் தொழில்முறைகள் தருவார் நில்லே. 26

நில்லென்று சொல்வதுதா னெங்கேயென்றால்
னேமமதாய்ப் பொதிகையென்ற பருவந்தன்னில்
கல்லென்று சொன்னவிடங் காணவேணும்
கருத்தறிந்த பிள்ளைகளைச் சேர்க்கவேணும்
இல்லறமும் பொருளேவ விருந்துதானால்
யென்ன சொல்வேன் தவநெறிக்கு ஆகாதப்பா
வல்லதொரு பிள்ளைகளா யில்லாவிட்டால்
வணக்கமுறுந் துறவறமா யிருத்தல் நன்றே. 27

நன்றென்ற நூலுண்மை யறிந்தோனானால்
நன்மையாஞ் சித்தர்வந்து கூட்டிக் கொள்வார்.
ஒன்றென்ற பொருள் தெரிந்தால் நாமும் சொல்வோம்.
உறுதியுள்ள சித்தனென்று சேர்த்துக் கொள்வேன்.
பண்டென்ற கற்பமுறை யெல்லாஞ்சொல்வேன்
பரமகுரு வேடமதைப் பூணவைப்பேன்
கண்டென்ற வல்லபங்க ளிருந்தாலப்பா
காசினியி லிருந்துதவஞ் செய்துவாவே. 28

வாவென்றேன் தவத்தைநிறை வேற்றிக்கொள்ளு
வராவிட்டால் பொதிகைதனிற் சேருசேரு
கூவென்றேன் முன்னேசித் தரையுங்காணக்
குறிப்பறிந்து தியானமதைச் சொல்லுகின்றேன்
ஆவென்ற ஐந்தெழுத்தை லக்ஷமோத
அரியரனும் வந்துனக்கு உபதேசிப்பார்
மாவென்ற கூட்டமதிற் சேர்த்துக் கொள்வார்
மகாசித்த ராவதற்கு வளஞ்சொன்னேனே. 29

சொன்னேனே இப்படித்தான் வெளியதாகச்
சொல்லியுந்தா னறியாட்டா லென்னசெய்வோம்
பொன்னான முருகவேல் கிருபையாலே
பூட்டெல்லாம் வெளித்திறந்து போட்டேனப்பா

நன்னயமாய் இந்நூலை யாருக்குந்தான்
நல்காதே சுழினையுட குறியைப்பாரு
என்னமோ வென்றுசொல்லி இகழ்ச்சியாக
இயம்பினா லெமனுன்னை யிழுப்பான்பாரே. 30

இழுக்குடைய மூடர்களோ டிணங்கிடாது
இயல்புமிகுஞ் சுழிமுனையைக் கண்டுதேறு
பழக்கமில்லாத் தோசிகளைச் சேர்ந்திடாதே
பாழ்குழியிலே தினமும் வீழ்ந்திடாதே
முழக்கமுள்ள மாயைவந் ததட்டினாற்றானாம்
முன்னின்ற ஞானமென்ற வாளால்வெட்டு
வளப்பமுடன் அதனை நீ வெட்டாவிட்டால்
மயக்கமுற்ற பாம்புவந்து சீறுந்தானே. 31

சீறினால் சீறுதென் றிருந்தாயானால்
சிவன்பாதங் காணுமுன்னே தேகம்போகும்
மாறினால் வாசியிரு சுடறிலேற்றி
வைத்தாக்கா ளிந்திரியப் பாம்புசாகும்
கூறினாற் போகாது ஏறொட்டாது
கூசாம லேமௌனத் தடியாற் கொள்ளு
தேறுதற்கு ஞானமென்ற வலையைப் போட்டால்
சீறுகின்ற பாம்பதுவு மடங்கிப் போமே. 32

அடங்காது வலையைநீ போடாவிட்டால்
ஐயையோ வீண்பாடு பட்டதெல்லாம்
துடங்காது மாயையினால் ஞானசோதி
சொரூபமணிகண்டதுவும் பொய்யாய்ப் போகும்
பலவான தொழில்களெல்லாம் பொய்யென்றெண்ணிப்
பார்த்தோர்க்குக் கருவதனைப் பகரக்கேளு
கலையான மௌனத்தார் மாயைதன்னைக்
கரணமென்ற இருகண்ணாற் கட்டிக்காட்டே. 33

காட்டியே யிருகண்ணாற் காலைக்கட்டு
காரணத்தை முக்காலா லேற்றிக் கொள்ளு
சூட்டுவது சுனையிரு பூவைச்சூட்டு
சுகபோக மென்றுசிவன் நன்றாய்ச் சொன்னார்
நீட்டுவது நான் பார்த்தேன் நீயும்பாரு
நிசஞ்சொன்னா ரென்பேறிற் சந்தோஷத்தால்
பூட்டுவது என்குருயிப் படியேயென்றார்
புதுமைதனை யின்னதென் றுரைத்திட்டாரே. 34

உரைத்தபடி பார்த்துநீ வருகும்போது
ஓகோகோ நடனவொலிச் சத்தங்கேட்கும்
மறைத்திட்ட நடுமூலங் கண்டத்தூணி
வர்சித்தனை ஆகாச வட்டஞ்சேரு
குறையில்லை மத்தளத்தி னோசைகாணும்
குற்றமில்லாத் தீபவொளி வீசும்வீசும்
திரையகற்றி நந்திவொளி வீசுங்கண்கள்
திருவான வாசிகண்ட மேறுந்தானே. 35

கண்டமெனும் புருவநுனி மூக்கிலேறும்
கருத்துவைத்து வாசிதனைக் கபாலத்தேற்று
விண்டுநின்ற அடிமூலம் பார்க்கும்போது
வெடிச்சத்தங் கேட்குமன மொடுங்குமட்டும்
பண்டுசொன்ன அடிப்படையில் திறமாய்நின்று
பரிவேகம் ஓடுங்கினாற் சத்தம்போச்சு
தண்டுமுண்டு பண்ணாமல் நிமைமூடாமல்
சாதித்தாற் சோதியுமா மிருளுமாமே. 36

இருளதுவுஞ் சோதியிலே மூடிற்றானால்
ஏதுயிரு கொள்ளியினாற் சுட்டுப்போடு
மருளில்லை யேகமதாய் வெளிச்சமாச்சு
மனமடங்க வாசியது அடங்கும்பாரு
பெருமையென்ற மோனபத மறிவிற்காண
பீடுயரும் வெளியொளியாம் வீட்டைப்பற்றி
அருமையென்ற வாசிசுழி யேறுமட்டும்
அடையிடையி லங்கென்று அழுத்திநில்லே. 37

நில்லடா காற்றேறி நின்றுதானால்
நீபாரு சுழியதனை யிடைகண்ணாலே
எல்லிபக லற்றநடு மூலமாகும்
இங்கிருந்து மேலேற ஆயிசொல்வாள்
வல்லமையாய் மனதையொட்டிச் சமாதிபாரு
வலுவான திரோதாயி மயக்கந்தீரும்
நல்லதொரு மாணவனே யுந்தனுக்காய்
நலமாகச் சொல்லிவிட்டே னூன்றிப்பாரே. 38

ஊணிப்பார்க் கையிற்கண்ணில் வலியுண்டானால்
உருட்டி நீ கசக்கிவிட்டு தேய்த்துக்கொள்ளு
பாணியென்ற கண்ணின்வலி போச்சுபோச்சு
பரஞான திபவொளி காணலாச்சு

மாணிக்கக் கங்கைதனைக் குடிக்கலாச்சு
வளமான வாசியது யேறலாச்சு
காணிக்க மூன்றுசுடர் காணலாச்சு
கருணை தருஞ் சத்திசிவங் காட்டுவேனே. 39

காட்டுகிறேன் சத்திசிவம் ஒளியேயாகும்
கருணை தரும் நாதவிந்து ஒளியேயாகும்
மாட்டுகிறேன் பூரணமு மமுதம்ரெண்டும்
மயமான ரவிமதியு மொளியேயாகும்
பூட்டுகிறேன் சந்திர சூரியனுமாகும்
புலம்பாதே சுழினையேகாச் சரமுந்தோணும்
ஆட்டுகிறேன் சடாச்சரபஞ் சாட்சரந்தான்
அடங்காத யெட்டெழுத்தும் ஒளியுமாமே. 40

ஒளியாச்சு உகாரமுடன் அகாரம்ரெண்டும்
ஒகோகோ அண்டபிண்ட முரைக்கலாச்சு
கலையாச்சு பன்னிரண்டும் பதினாறாச்சு
காலாச்சு ஐம்பூதக் கருவுமாச்சு
தெளிவாச்சு மதியாச்சு வாசியாச்சு
சிறப்பான வங்சிங்மங் மருவலாச்சு
வெளியாச்சு சிறிதாச்சு புனலுமாச்சு
மேலான பஞ்சவர்ண ஒளியுமாச்சே. 41

ஆச்சடா யித்தனைபேர் ஒளிக்கேயாகும்
அப்பனே வேறேது மில்லையில்லை
போச்சடா பெண்ணாசை தன்னாலப்பா
புருவமைய ஒளிமழுங்கிப் போச்சுபோச்சு
வாச்சுதடா உனக்குயித் தனையுமப்பா
வளமாகச் சொல்லிவிட்டேன் மயங்க வேண்டாம்
கூச்சடா படுக்கவென்றா லுபாயங்கேளு
குருவானா லிடக்கையைக் கீழே வையே. 42

வையடா கால் நீட்டிப் படுக்கும்போது
மைந்தனே புருவமதிற் றியானம்வைநீ
செய்யடா உதயத்திற் சரீரசுத்தி
சிவசிவா திருநீறு உத்தளமாய்ப்பூசி
உய்யடா உதயாதி மூன்றுக்குள்ளே
உற்றவிஷந் தனையெடுத்துக் கதிரிற் கொள்ளு
நையடா மும்முக்கால் கடந்தபின்பு
நலமான பத்தியங்கொள் நாட்டம்பாரே. 43

நாட்டம்பார் சூரியனி லவிழ்தங்கொள்ளு
நலமான அமுதுண்ணு உறக்கம்பண்ணு
ஆட்டம்பார் சூடுகொண்டால் நெய்யைத்தேய்த்து
அதன் பிறகு பயர்தேய்த்துக் குளித்துப்போடு
ஊட்டம்பார் அமுதுடனே பாலுங்கொள்ளு
ஒருவாரம் ஓர்முழுக்கு பஞ்சகற்பம்
சீட்டமுட னிப்படியே செய்துவந்தாற்
சிவராஜ யோகமிது தீர்க்கந்தானே. 44

தானென்ற யோகியென்றாற் றாஸ்யக்காண்பான்
சண்டாள வாதியென்றாற் சுட்டுமாய்வான்
பானென்ற அமுர்தமுண்டாற் றேகம்பொன்னாம்
பரைவாலை தனையறிந்தாற் சித்தனாவான்
ஊனென்ற வரைபார்த்தால் ஞானியாவான்
ஒலியான வீண்பேச்சி லொன்றுமில்லை
கோனென்றாற் குறியறிவான் சுழினை காண்பான்
கொடும்பாவி இவ்வழிக்கு வாரான் பாரே. 45

வாரான யோகியென்று சடைவளர்த்து
மகாஞானம் வந்தவர்போல் வேடம்பூண்டு
கூரான அட்சரங்கள் செபித்துக்கொண்டு
குருக்களென்றும் ஞானியென்றும் பேரையிட்டுப்
பேரான சாத்திரங்கள் கற்றுக்கொண்டு
பிசகாகத் தற்கமிட்டுப் பெருமைபேசிச்
சேருவான் மாதர்களை மகிழவைத்துத்
தினந்தினமும் வயிர்பிழைக்க அலைவான்பாரே. 46

அலைவதுவு மல்லாமற் பிள்ளைகட்கு
ஆசைகொடுத் தேயவரை அழைத்துப்போவான்
நிலையில்லா ஊர்தோறுந் திரிந்தலைந்து
நேசம்போற் கூட்டமிட்டு அர்த்தஞ்சொல்லி
வலையிலகப் பட்டதொரு மீனைப்போலே
வம்பர்களை அரைசணத்தில் மயங்கவைப்பான்
துலையாத வாதமுறை செய்வேனென்று
துஷ்டர்களை வாயடக்கிச் சோறுண்பானே. 47

உண்பதுவு மல்லாம லின்னுமொன்று
உறமான பிள்ளைகளைக் கொடுப்பானையா
யின்பமுள்ள நல்லசமு சாரிதன்னை
ஈடேற வொட்டாமற் செய்வான்பாவி

வம்பனடா பொய்சொல்வான் வயிற்றினாலே
மருட்டுவான் நரிக்கொம்பு வைத்துக்கொண்டு
தும்பம்வரு மவன்காற்று உன்மேற்பட்டால்
துட்டனா மவனைநீ துடர்ந்தேகாதே. 48

துடராதே யிந்நூலின் வழியேசென்றால்
சுத்தமதி யம்பலத்தின் சொரூபங்காணும்
படராது செனனமென்ற கொடிதானப்பா
பராமுகமாக யிருந்தாலே மரணமாவாய்
திடமாமிச் சேதியெல்லா மாயிசொல்லச்
செப்பினேன் சூஸ்திரமாய் ஐம்பத்தொன்றில்
மடைமறையா திந்நூல்போ லொருநூலில்லை
மகிழ்சித்தர் பாஷையெல்லா மறைத்திட்டாரே. 49

மறைத்திட்ட சிவயோகம் நன்றாய்ச் சொன்னேன்.
வழிமுறையோ டென்மகனே யறிந்துகொள்ள
மறைத்திட்டார் சித்தரெல்லாம் பேசிக் கொண்டு
மகாமௌன யோகமிதை மறைவாய்வைத்து
நிறைத்தாரே சாத்திரங்கள் தோறுமப்பா
நிலையில்லா அச்சரங்கள் யோகந்தன்னை
விறைத்தாரே அதனைநிச மென்றுழைத்தால்
வீணாக உன்தேகம் வீழ்ந்துபோமே. 50

வீழ்ந்ததுவும் போகாம லிருகண்ணைத்தான்
விறைந்தடியின் நடுமூக்கில் ஊன்றிப்பாரு
தாழ்ந்ததுவும் போகாமற் சுழினைவாசி
தானேறி நின்றுதென்றால் சொல்லக்கேளு
ஆழ்ந்துப்பார் சுழினைதனைஅகாரத்தாலே
அருமையுடன் குறித்துவிட்டேன் நடுமூலத்தை
வாழ்ந்திருக்க ஒரிதழைச்சுழியில் நாட்டி
வைத்தால்மெய்ச் சோதிமயஞ் சொன்னேன் முற்றே. 51

அகத்தியர் ஞானசைதன்யம் 51 முற்றிற்று.

உ

சிவமயம்

அகஸ்திய முனிவர் அருளிச் செய்த

தீட்சாவிதி 200

குருவணக்கம்

ஆறுமுகவனை நாறு மலர்கொடு
கூறுமடியவர் பேரு பெறுவரே.

காப்பு

பார்த்திடவே நந்தீசர் மூலமூர்த்தி
பண்பான வகத்தீசர் சட்டைநாதர்
கோர்த்திடவே பதஞ்சலியுங் கூனர்கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டிகேசர்
கூர்த்திடவே இடைக்காடர் சிவாயசித்தர்
கெங்கணவ ரவர்தந்தை போகநாதர்
கார்த்திடவே மச்சமுனி புண்ணாக்கீசர்
காலாங்கி சுந்தரருங் காப்புதானே.

வேறு

வானைத் தாவிய பொதிகைமகத்தான
ரிஷியுடைய வாக்கு நேர்மை
யானைத்தா வியபூசைப் பரிவான
சிவயோகப் பண்போர் கேளும்
மீனைத்தா வியராசி விளங்கிநின்ற
கன்னி முதல் வில்லுமேடஞ்
சேனைத்தா வியதுலாச் சென்ம ராசிக்
கருவைச் செப்புறேனே.

செப்புகிறேன் துலாத்தோர்க்குத் தேவிமுதல்வாசி
சிவனோடு மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
ஒப்புகிறேன் குளிகைசித்தி வாதசித்தி
யுகந்துநின்ற காயசித்தி யுறுதியாகுந்
தப்புகிறே னென்றாலுந் தவறொட்டாது
சாதகமாய் வாசனையாய்த் தானேதூக்குங்
கொப்புகிறே னுலகத்தில் தசதீட்சைபெற்று
கொடியசிவ யோகியெனக் கூறுவாரே. 2

கூறியதோர் கன்னிமுதல் மீனத்தோர்தான்
கொள்கையவர் வணிகரைப்போல் கூர்ந்துசெய்வார்
ஆறியதோர் மனம்பார்த்துப்பின்பு கொள்வார்
ஆசைகொண்டு வெகுமனதா லாலோசிப்பார்
தேறியதோர் வாசியிலே மூண்டுநிற்பார்
தேவியிட பூசையிலே திறமோகொஞ்சம்
மாறியதோர் மனம்பிடித்தால் வாதஞ்சித்தி
மயக்கமற்றாற் காயசித்தி வருகுந்தானே. 3

தானென்ற அத்தமுதற் றனுசோன்கேளு
சாதகமாய்க் கொண்டேறித் தாயைப்போற்றி
வானென்ற சமாதியிலே நின்றுதேறி
வாதசித்தி வாசிசித்தி வரவே செய்வான்
கோனென்ற குருபதத்தை யடுத்துக்காப்பான்
குறையாமற் சாத்திரந் தேடிவைப்பான்
வேனென்ற மாய்கையிலே மனதுகொள்ளான்
வேதாந்த சாத்திரத்தை விளங்குவானே. 4

விளங்கிநின்ற மற்றேழு ராசியோர்கள்
வெறும்பேச்சாய்த் திரிவார்கள் சித்தியில்லை
புளங்கிநின்ற பூசைக்குள் வருவேனென்பார்
புகுந்தாலு மாயத்தே புணர்ச்சி செய்வார்
தளங்கிநின்ற வாதத்தைச் சுட்டுமாய்வார்
சாத்திரமுங் குருத்தேடார் தானேயென்பார்
அலங்கிநின்று மலைவார்க ளறிந்துகொள்ளு
மவரேழு ராசியோ ரறைந்திட்டேனே. 5

அறைந்திட்ட ராசிக்கு விபரங்கேளு
அப்பனே உத்திரமும் அத்தத்தோடு
நிறைந்திட்ட சித்திரையுஞ் சுவாதியானால்
நிலைக்குமடா காயசித்தி யோகசித்தி

பறைந்திட்ட மூலமுத லுத்திராடம்
பாங்கான அசுபதியும் பரணிதானும்
உறைந்திட்ட நின்றதொரு உத்திரட்டாதி
உத்தமனே ரேவதியு மெத்தநன்றே. 6

நன்றான கோளோடு ராசியானால்
நரசெனன மல்லவடா சித்தன்சித்தன்
கன்றான தேள்நின்ற ராசிதொட்டு
கண்டுகொள்ளு வங்கிசத்தின் பலத்தைச்சொல்வேன்
ஒன்றான கற்கடக அங்கிசத்தி
லுத்தமனே மதிநிற்க வேணும்வேணுந்
தன்றான துலாமான அங்கசத்திற்
சகலசித்தாஞ் சத்திரன்றா னிருக்கப்பாரே. 7

பாரப்பா தனுசான அங்கிசத்திற்
பாங்கான வியாழன்றா னிருக்கநன்று
நேரப்பா விருச்சிக அங்கிசத்தில்
நேரான செவ்வாய் தானிருக்கநன்று
வேரப்பா சிங்கமென்ற அங்கிசத்தில்
வேதாந்த விதிநிற்க மெத்தநன்று
காரப்பா கும்பமென்ற அங்கிசத்தில்
காரிநின்றால் காயசித்தி கைக்குள்ளாச்சே. 8

ஆச்சப்பா கன்னியென்ற அங்கிசத்தில்
ஆச்சரியம் புதனின்றால் ஞானியாவான்
வாச்சப்பா விப்படி அங்கிசங்கள் நின்றால்
மாசித்தன் மாசித்தன் வாதஞானி
ஓச்சப்பா விதைவிட்டு வுரவுவீட்டி
லுயர்ந்து நின்ற அங்கிசத்தின் கிரகம்நின்றால்
மூச்சப்பா வஸ்திடத்தே வாசிசித்தி
மூதண்ட காயசித்தி யாகுந்தானே. 9

தானென்ற வாட்சியொடு வுரவுவீட்டிற்
சத்துருவாம் அங்கிசத்திற் கிரகம் நின்றால்
வானென்ற வுலகத்தே யாசைகொண்டு
மாளுமட்டும் புலம்பியல்லோ மாய்வாரையா
கோனென்ற ராசியிலே கோளைப் பாரு
கூறாள அங்கிசத்தி னேசம்பாரு
பானென்ற கற்பமுண்ண சொன்னேன் மைந்தா
பாருலகி லறிவதற்கு வறைகிறேனே. 10

ற்றைகிறேன் கற்பமுண்ணக் காலங் கேளு
அந்தநாளின் குணங்க ளறியச் சொல்வே
னிறைகிறே னிலக்கினத்திற் சுக்கிரன் நன்று
நேரான வைந்திலே வியாழநன்று
வுரைகிறே னொன்பதினிற் செவ்வாய் நன்று
வுத்தமனே வாக்கிலே புதனு நன்று
பறைகிறேன் பதினொன்றிற் பானுநன்று
பாங்கான சந்திரனு மேழில் நன்றே. 11

நன்றாக அப்படி தானிருந்த நாளில்
நலமாக கற்பமள்ளி உண்ணுஉண்ணு
கன்றாத தசதீட்சை கேட்டாயானால்
கடுஞ்சுருக்குஞ் சித்தியுமா மிகவுமோடும்
பன்றான பத்துவிதங் கிடையாவிட்டால்
பாருலகி லஞ்சுவித தீட்சை கேளு
வென்றான அஞ்சுவித தீட்சையில்லான்
விரைந்துகற்ப முண்டாலும் வீணாய்ப்போமே. 12

போகாமல் தீட்சைபெற்ற பெரியோர்பாதம்
பொற்பூவா லர்ச்சித்துப் பணிந்து போற்றி
வேகாம லேநின்ற காலைக்கேளு
விளங்கியதோர் சாகாத தலையைக்கேளு
வாகான விரண்டையுந்தா னாருஞ் சொல்வார்
மகத்தான தசதீட்சை வந்தோர் சொல்வார்
சாகாம லிருக்கவென்றால் பஞ்சதீட்சை
சாதித்துக் கற்பமுண்டு தள்ளியேறே. 13

ஏறென்று கற்பங்களனேகஞ் சொல்லு
மிதனாலே சித்தியில்லை யென்றாயானா
லாறென்று தீட்சையில்லாப் பாவத்தாலே
யாச்சரியச் சாத்திரங்கள் பொய்யாப்போச்சு
வாறென்ன வாதமெல்லா மண்ணாய்ப்போச்சு
வளமான தசதீட்சை வணங்கிக் கேளு
மாறென்ற வயிரவரோ நிருத்தஞ் செய்வார்
வாயிலிட்ட மருந்தெல்லாஞ் சித்தியாமே. 14

சித்திக்க வேணுமென்றா லிந்த முறைபண்ணு
சிதம்பரமும் தேவியிட பூசை பண்ணு
முத்திக்கு மிதுபாதை மோட்சமாகும்
முப்புரத்தை நகைத்தெரித்தோ ரெனக்குச் சொன்னார்.

பத்திக்கும் பிராணாயம் பண்ணும்போது
பாங்காகப் பூசை பண்ணிக்கற்பமுண்ணு
எத்திக்குந் திரியலா மீசனாவாய்
ஏதுபோ வென்றுவிட்டால் இறப்பாய் நீயே. 15

இறவாமல் இருப்பதற்குப் பிராணாயாமம்
எல்லாருஞ் சொன்னதற்குக் கருவோயில்லை
மறவாமல் நீகேளு புலத்தியனே அய்யா
மகத்தான யோகமடா வாசியோகந்
திறவாதே யாருக்கும் வெளியாய்ச் சொல்வேன்
செகத்திலே யிதையறிந்தால் சித்தனாவான்
பிறவாதே பிறப்பிக்கும் பூரணத்திலுள்ளே
பேரான பிராணாயப் பெருமைகேளே 16

கேளப்பா சித்தரிட சாத்திரமெல்லாம்
கெடியான வாசியிலே பிராணாயமென்பார்
தாளப்பா சிலபேர்கள் சக்கரத்திலென்பார்
தாக்கியல்லோ வைத்ததொரு பிராணாயமென்பார்
நீளப்பா விந்து நூல் நேர்மையெல்லாம்
நேரான சிவயோகி யறிவானப்பா
சூளப்பா இதுலெல்லாம் நாடிசுத்தி
சுகமாகக் காயசித்தி யாகும்வாறே. 17

வாறான பிராணாய வரிசை கேளு
வகையான பூரகமோ முப்பத்திரண்டு
ஆறான கும்பகமோ அறுபத்துநாலு
அடைவான ரேசகமோ பதினாறப்பா
கூறான மாத்திரை தானிவைகளெல்லாங்
குறிப்பாக அறிந்துக்கொள் சொல்வேனப்பா
தாறான தலை சுற்றி நொடிப்பதப்பா
சமுசியங்க ளொன்றுமில்லை மாத்திரை 18
யொன்றாச்சே.

ஒன்றான நாழிகைக்கு மாத்திரைதான் கேளு
வுத்தமனே முந்நூற்று விருபதாச்சு
நன்றான பிராணாய மூன்று செய்தால்
நலமான கடிகையொன்றே யாச்சுதப்பா
கன்றான பிராணாயஞ் சந்திரனில் வாங்கக்
கலக்குமடா நாடியெலா மிறுகுஞ்சித்தி
தன்றான பிராணாயஞ் சித்தியாகச்
சாற்றுகிறேன் தீட்சைவிதி சாற்றுவேனே. 19

சாற்றுவேன் சிவனுடைய தீட்சைமார்க்கஞ்
சதாசிவன் தானெந்தனுக்கு வுபதேசித்தார்
போற்றுவே னுருத்தினி லிரண்டுதீட்சை
பொலிவான மயேஸ்பரனி லிரண்டுதீட்சை
ஆற்றுவேன் சதாசிவத்தி லஞ்சதீட்சை
ஆதியென்ற பராபரமாந் தீட்சையொன்று
மாற்றுவேன் மவுனமென்ற தீட்சையொன்று
மகத்தான பூரணத்தில் நிற்குந்தானே. 20

தானென்ற பதினொன்றுஞ் சிவதீட்சையப்பா
சத்தியிட தீட்சையினி சொல்லக்கேளு
வானென்ற வாலையொன்று திரீபுரைதானொன்று
வந்துநின்ற புவனையொன்றுயாமளை தானொன்று
மானென்ற ஸ்ரீ ராஜ மாய்கையொன்று
மைந்தனே உமாசக்தி மார்க்கமொன்று
வூனென்ற அம்பிகா சத்தியொன்று
வுத்தமனே கணேசனென்ற சத்தியொன்றே. 21

ஒன்றான ஈஸ்வரியாஞ் சத்தியொன்று
உயர்ந்துநின்ற வுன்மனையாஞ் சத்தியொன்று
நன்றான தசதீட்சை மேலேயப்பா
நாதாந்த ஞானசத்தி மவுனதீட்சை
பன்றான பதினொன்றுஞ் சத்திதீட்சை
பாக்கியங்கள் செய்தவர்க்கே யெய்துமெய்தும்
குன்றான சிவசத்தி யிரண்டு தீட்சை
குறிப்பாக இருபத்தி ரண்டுமாச்சே. 22

ஆச்சிந்த தீட்சைவிதி கேட்டோர்க்கைய்யா
ஆச்சரியஞ் சகலநூ லவருக்கெய்தும்
ஓச்சிந்த வாதமது சொன்னபடி கேட்கும்
உத்தமனே வயிரவிதா னேவல் கேட்ரும்
பாச்சிந்தப் பூசையிலே வஸ்துவைத்துப்
பார்க்கையிலே சகலமாகும் பாருபாரு
வாச்சிந்தத் தாதுவெல்லா மிறுகிக் கொண்டு
மைந்தனே தாதுவிர்த்தி யாகும்பாரே. 23

பாரப்பா வவன்செய்யும் பிராணாயாமம்
பரிவாகச் சிவதீட்சைப் பதினொன்றுந்தான்
நேரப்பா லட்சியத்தே நிறுத்தி வாங்கி
நேராகக் காலையிலே செய்வார் செய்வார்

சீரப்பா தசதீட்சை மகிமைமெத்த
செகத்திலுள்ள நின்மூடர் காணமாட்டார்
ஊரப்பா யிருந்தாலென் காட்டில் வாழ்ந்தே
யுத்தமனாஞ் சிவயோகி யுரைத்துத்தேடே. 24

தேடியவர் பதம் போற்றிப் பிராணாயாமஞ்
செப்புமென்று வடிதொழுது செப்பக்கேட்டு
நாடியவர் தசதீட்சை பிராணாயாமம்
நாட்டி வைத்தா லவனுக்குப் பிராணாயசித்தி
நீடியதை விட்டுவிட்டு வுலகத்தோர்கள்
நேராகப் பிராணாயம் பண்ணிச் செத்தார்
கூடியிதை யறிந்தவனே ராசயோகி
குருவறியார் யானைகண்ட குருடர்தாமே. 25

குருடாசுப் போகாமல் தீட்சைக்குள்ளே
கூடியல்லோ பிராணாயம் பண்ணுபண்ணு
அருளான அருள் வந்து வுன்னைத்தூக்கும்
அப்பவல்லோ காயசித்தி யாகுந்தேக
மருளான மருளனைப் போல் தீட்சை விட்டால்
மண்ணாச்சுப் பிராணாய மொன்றுமில்லை
திருடான திருப்பாட்டால் சித்தரெல்லாந்
திருட்டு வித்தைப் பிராணாயஞ் செப்பினாரே. 26

செப்புவேன் பிராணாய சித்திராகச்
சிவன் சொன்ன கற்பமுன்னே தின்றால் சித்தி
யொப்புவேன் கற்பத்தை விட்டுநீயும்
யுகம் வரைக்கும் பிராணாயம் பண்ணினாலுந்
தப்புவே னென்றல்லோ சீவன்தப்பும்
சார்வான சாதமாய்க் கற்பமுண்டால்
முப்புவேன் முந்நூற் றிருப்பத்திரண்டு
மூதண்ட ருத்திரன்போ லிருந்துபாரே. 27

பாரப்பா துலாமென்ற ராசியோர்க்கும்
பரிவாகச் சித்திக்குஞ் சித்தியெல்லாம்
நேரப்பா கன்னியென்ற ராசியோர்க்கு
நிலையாக மனமுரைத்தாற் சித்தியாகுஞ்
சீரபபா மற்றுரைத்த ராசிக்கெல்லாஞ்
சித்தியா மனமுறைக்க மாட்டாமாட்டா
காரப்பா தசதீட்சை வந்தோர்பாதங்
காராட்டா லொன்றுமில்லை கண்டுதேறே. 28

தேறவே பிராணாயக் கருவைச் சொல்வேன்
சிவனார்தா னெந்தனுக்கு வுபதேசித்தார்
ஆறவே முந்தமுந்த வப்பியாசமார்க்கம்
அடிமுதலிற் சொல்லுகிறே னப்பாகேளு
கூறவே மூலத்தில் வாசியிரண்டு
கோழிமுட்டை போலிருந்து முக்கோணத்தில்
மாறவே யிடைபின்னா யிரண்டுமாடு
மற்றொன்று சுழிமுனைதான் மகிழ்ந்துகேளே. 29

கேளிந்த இடைகலையில் வங்கவென்றுவாங்கிக்
கெடியாகச் சிங்கென்று தம்பித்தேநில்
நாளிந்தப் படிநீதான் பழக்கம்பண்ணு
நலமான மூலத்தின் மேலேசாடித்
தாளிந்தத் தாதுவெல்லாஞ் சித்தியாகுஞ் ।
சாதகமா யாண்டொன்றில் தானேகாணும்
ஆளிந்த வாசிக்கு மவ்வளவேசித்தி
யப்பியாச மார்க்கமிது வடிதான்காணே. 30

காணிந்த முறையல்லோ சித்தரெல்லாங்
காயசித்தி யாகுமென்று பாடிப்போட்டார்
தோணிந்தப் படிபார்க்க வுலகத்தோர்தான்
சூழ்ந்துகொண்ட நரையாலுஞ் சுழன்றுசெத்தார்
வீணிந்தப் படிபார்த்தால் கெட்டுப்போவார்
வெகுசுருக்காய் சொல்லுகிறேன் சித்தியெல்லாம்
பூணிந்த தசதீட்சை யாதிக்குள்ளே
கட்டியல்லோ மனதுறைத்துப் புகழாய்ப்பண்ணே. 31

பண்ணையிலே பிராணாயம் பலத்தைக்கேளு
பாங்கான ரோமமெல்லாம் வெயர்வையோடு
மண்ணையிலே தசதீட்சை யிரண்டிலூன்றி
அதற்குள்ளே பிராணாயம் பண்ணும்போது
கண்ணையிலே சடத்திலுள்ள தோஷமெல்லாங்
கக்குமடா நெய்போலே கண்டுபாரு
தண்ணையிலே ஊன்றிநின்று பிராணாயந்தானுஞ்
சதாசிவம்போல் பிராணாயம் பண்ணக்கேளே. 32

கேளப்பா சட்டையொன் றுகழண்டுபோகுங்
கெடியான சிவதீட்சை நாலில்நின்று
நீளப்பா நிலைத்துப்பார் சடத்தினுள்ளே
நிறைந்துநின்ற நோய்களெல்லாம் நீறாய்ப்போகு

மாளப்பா சிவதீட்சை யஞ்சினுள்ளே
யடுத்துநின்று பிராணாயம் பண்ணப்பண்ண
நாளப்பா சட்டையொன்று தள்ளிப்போரும்
நலமான தேகமது சிவப்புமாமே. 33

சிவப்பாகுங் கண்ணிரண்டு மிருகுந்தேகஞ்
சிவசிவா சக்கரங்க ளாறுங்காணு
முவப்பாகும் பஞ்சகர்த்தா ளைவருந்தான்வந்து
வுகந்துளவாய் கேட்பதெல்லா முதவிசெய்வார்
தவப்பாகும் நிருவாணி யேவல்கேட்பார்
சகலமுறை வாதமெல்லாந் தானேசித்தி
உவப்பாகுங் குளிகைவிட்டா லோடும்வேக
மோங்கிநின்ற வஞ்சுவித தீட்சையாட்டே. 34

ஆட்டான சிவதீட்சை யாறில்நின்று
அப்பனே பிராணாயம் பண்ணினோர்க்கு
மூட்டான தூரதிட்டி யெல்லாங்காணு
மூதண்ட சடத்திலொரு சட்டைதள்ளுங்
கூட்டான வினைகளெல்லா மகன்றுபோகுங்
கூர்ந்துபார் சுழிமுனையோ ரவியாய்க்காணும்
பூட்டான பூட்டெல்லாம் தெறித்துப்போகும்
பொற்படிமம் போலவுந்தா னிருக்கும்பாரே. 35

பாரப்பா சிவதீட்சை யேழில்நின்று
பரிவாகப் பிராணாயஞ் செய்யும்போது
நேரப்பா சட்டையொன்று வெளுப்பாய்த் தள்ளும்
நிர்மலமா மதியினிட காந்திகாணுஞ்
சேரப்பா வுன்மனையும் வாவாவென்பாள்
சடமெல்லாம் வண்டுபோற் சேர்ந்துகாணும்
யாரப்பா யிதுவரைக்குந் தீட்சை சொல்வார்
அவரவர்கள் செய்தவத்தா லெய்துங்காணே. 36

எய்துமென்ற சிவதீட்சை யெட்டில்நின்று
இதமாகப் பிராணாயஞ் செய்தோர்க்கையா
நைதுமென்ற சடந்தூக்கும் நினைத்தபடியாகும்
நலமான கூடுவிட்டுக் கூடுபாயுங்
கைதுமென நின்றவர்க்குப் பானமாகும்
கண்திறக்க வொட்டாம லகரியேறுங்
கொய்துமென்ற பூவேது வாமமேது
கூடினார் நாதாந்தக் குறியில்தானே. 37

தானென்ற சிவதீட்சை யொன்பதிலே நின்று
சாதித்துப் பிராணாயஞ் செய்தாலய்யா
கோனென்ற ரவிபோலே தேகமாகுங்
கூப்பிட்டாற் சித்தரெல்லாம் வணங்கி நிற்பார்
ஊனென்ற சடம்போச்சுக் கயிலாசத்தே
யுகந்துனக்கு வாச்சுதடா மைந்தாபாரு
வானென்ற வெளியெல்லாம் நீயாய்க்காணும்
வார்த்தையினா லட்டமா சித்தியாமே. 38

சித்தியாஞ் சிவதீட்சை பத்தில் நின்று
செய்வதற்குப் பிராணாய மென்னசொல்வேன்
பத்தியாய் தீபம்போல் சடமேகாணும்
பாங்கான கத்தியுமோ நடுவேயோடும்
அத்தியா மகண்டசிவ மாகிநிற்பார்
அப்பனே இதுவல்லோ சொரூபசித்தி
முத்தியா மாறுவகை சித்தராட்டு
முழுவதுமே குளிகையென்று ஏச்சிட்டாரே. 39

ஏச்சிட்டார் சிவதீட்சை பத்தையுந்தான்
இதமாக மறைத்தல்லோ வாசியென்றார்
மாச்சிட்ட குளிகையென்றார் காயசித்தியென்றார்
மாயையைப் போலொளித்தல்லோ மாயஞ்செய்தார்
ஓச்சிட்ட தசசீட்சை வந்தோராகில்
உண்மையுள்ள பிராணாயக் கருவுஞ் சொல்வார்
வாச்சிட்ட தீட்சையெல்லாங் கடந்தபின்பு
மவுனமென்ற தீட்சையைத்தான் மருவிக்கேளே. 40

கேளப்பா அகண்டத்தில் மௌனதீட்சை
கெடியான கேசரியில் காணுங்காணும்
நாளப்பா மந்திரங்க ளொன்றுமில்லை
நாவில்லைப் பாவில்லை நானென்பதில்லை
சூளப்பா வகண்டவெளி கோடிபானும்
சுடர்கோடி காந்தியது காணுங்காணும்
வாளப்பா இதுவல்லோ மவுனதீட்சை
மகத்தான குருசொல்லி மாட்டுவாரே. 41

மாட்டினா லகண்டத்தில் இற்றுப்போகும்
மைந்தனே தானதுவா மதுதானாகும்
மூட்டினார் கற்பவரை சமாதியாகும்
மூதண்ட ரிஷிகளுக்கு மடுத்தவாறு

கூட்டினால் மனம்வேறே பிரியவொட்டா
கூட்டிப்போய் பூரணத்தில் கூர்ந்து நிற்கும்
ஊட்டினால் மவுனமென்ற தீட்சையாச்சு
வுத்தமனே பதினொன்று முடிந்தவாறே 42

வாறான வுலகத்தில் விட்டகுறையோர்க்கு
வந்துதென்றால் சிவதீட்சை மைந்தாகேளு
வீறான சிதம்பரமுந் தேவியிடபூசை
மெச்சியல்லோ பூசித்து சித்திசெய்து
கூறான வாதசித்தி பார்த்துக்கண்டு
கூறினால் மோசமென்றுங் கூறார்கூறார்
மாறான பாவங்க ளொன்று செய்யார்
வந்தபே ருலகத்தில் வாய்பேசாரே. 43

பேசாதே இருந்துகொண்டு சமாதிபார்த்துப்
பரிவாக லட்சியத்தைத் தொட்டுத்தொட்டு
ஏசாதே பிராணாய மேற்றியேற்றி
யிழுத்திழுத்து விடுவார்கள் மறவாமற்றான்
ஓசாதே கற்பமுண்டு பிராணாயத்தை
யுணர்ந்திடுவார் பின்புதா னிந்தப்புத்தி
வாசாதே தசதீட்சை வந்திருந்தோ ரூரில்
வாராது வாராது வினைகள்தானே. 44

வினையில்லை யவரைநித்தந் தரிசனமே செய்தால்
வேதாந்த சாரத்தே மனமுந்தேறும்
வினையில்லை யவர்பதத்தை போற்றிநிற்க
வேண்டியவர் மனது வந்து திரும்புமட்டும்
வினையில்லை யுமையடுத்தேன் தீட்சைசொல்லும்
வேதாந்த சிரோமணியே யென்றுகேட்டு
வினையில்லையென் னுடையவுடல் பொருளுமாவி
விளங்கியதோ ரரூபத்தால் தாரையூற்றே. 45

ஊற்றியதோர் பதம்போற்றத் தீட்சைகேட்டு
வுய்ந்துநின்ற லட்சியங்க ளன்றாய்க் கேட்டு
மாற்றியியந்த லட்சியத்தில் பிராணாயம் வைத்து
வாங்கினதோர் தீட்சைவிதி வைத்தேயேறி
யேத்தியந்தப் பிராணாய தீட்சையொன்று
இருத்திப்பா ராண்டொன்றி லிதுதான்சத்தி
போற்றியந்தப் பிராணாயந் தீட்சை பத்தும்
புகழாகச் செய்பவனே சொரூபியாமே. 46

ஆமப்பா தசவருஷ மார்தான் செய்வார்
ஆச்சரியம் ரிஷிகள் செய்வார் சித்தர்செய்வார்
ஓமப்பா வுலகத்தோர் செய்யமாட்டார்
உத்தமனே உலகத்தோர் செய்தாற்கேளு
சோமப்பா லூட்டுவிக்கு முத்திமுத்தி
சுகமாக அட்டமா சித்தியாடுங்
காமப்பால் விடுக்காமல் கட்டிநின்று
காயசித்தி யாவதற்குக் கற்பங்கேளே 47

கற்ப முறை

கேளுநான் சொல்கிறேன் கற்பத்துக்குக்
கெடியாகச் சித்தர் சொன்ன கற்பமெல்லாந்
தாளுமென்றுயான் சொன்னேன் சமுசயமுண்டானால்
சாதிப்பா ருலகத்தில் தங்கமாகும்
வாளுவான் பிராணாயம் பண்ணும்போது
மருவியுன்னு மாண்டிலே கமனஞ்சித்தி
நாளும் யானுண்டபடி யுனக்குச் சொன்னேன்
நற்சீட னானாக்காலவர்க்குச் சொல்லே... 48

சொல்லையிலே தசதீட்சை முன்னே சொல்லிச்
சொற்பெரிய பிராணாயக் கருவுங்காட்டித்
தில்லையிலே நடராசன் சக்கரமுங் காட்டித்
தேவியிட சக்கரத்தின் பூசைகாட்டித்
தொல்லையிலே வீழாமல் சொல்லு நீதான்
சோதிக்கச் சீடனிட மனதைக் கண்டு
எல்லையிலே லட்சத்தி னியல்புங்காட்டி
யிதமாக விவைமுழுதுங் காட்டுநீயே. 49

காந்த செந்தூரம்

நிகேளு புலத்தியனே கற்பமார்க்கம்
நிர்மலமாஞ் சதாசிவனா ரெனக்குச் சொன்னார்
வாகேளு காந்தமது கொண்டு வந்து
மைந்தனே கொள்ளோடே வேகவைத்துப்
பாகேளு ஆட்டிரத்த மதிலே வார்த்து
பண்பாக அதனுடைய தோலால்கட்டி
தாகேளு நெற்குழியிற் கூடவைத்துச்
சாதகமா யாறுதிங்கள் தாண்டி வாங்கே. 50

வாங்கியதோர் காந்தத்தை நறுக்கிக் கொண்டு
மைந்தனே வேப்பங்காய் சாற்றாலாட்டித்
தாங்கியதோ ரெள்ளுமொச்சை குன்றிகாரஞ்
சாதகமா யுளுந்தோடு புறாவினெச்சம்
ஓங்கியதோர் குதிரையிட குளம்புச்சீவ
லுத்தமனே சீனம்பூ நாகந்தானும்
பாங்கியதோர் மூக்கொழுஞ்சி வேரினோடு
பரிவான காட்டாமணக்கின் வித்தே. 51

வித்தோடு வகைவகைப் பலந்தானொன்று
விளங்கியதோ ரிரண்டுபத்துப் பலந்தான்காந்தங்
கொத்தோடு இதுவெல்லா மறைத்துக்கொண்டு
கூசாமல் தாக்குலையிற் கொடுத்துவாநீ
பத்தோடு மணிமணியா யிறங்கிப் போகும்
பாங்கான காந்தத்தின் சத்துத்தானுஞ்
சத்தோடு காந்தமெல்லா மெடுத்துக் கொண்டு
சாங்கமா வுருக்கவுந்தான் துறையைக் கேளே. 52

கேளப்பா வெண்காரம் பலந்தானாலு
கெடியான துரிசியது பலந்தானொன்று
நாளப்பா சவுக்கார மரைப்பலமும் போடு
நலமான சாரமது காற்பலமும் போடு
நீளப்பா வெடியுப்புச் செயநீரோடு
நிறைந்துநின்ற சாரநீர்க் கூடவிட்டுச்
சூளப்பா லரைத்தெல்லா மைந்து பங்கு பண்ணிச்
சுகமான ஒருபங்கிற் பிசிறி வையே. 53

வைத்தல்லோ குகையினுள்ளே தாக்கியூது
மைந்தனே காந்தச்சத்து மணியாய்நிற்கும்
நைத்தல்லோ விதையெடுத்துத் துடைத்துக் கொண்டு
நலமான நாலுபங்கு மிப்படியேயூது
கைத்தல்லோ காந்தசத்து மணியேயாகும்
கைமுறையோ தப்பாது கருதிப்பாரு
வைத்தல்லோ காந்தமது உருவக்கினமாகி
யப்பனே சோதனையு மாச்சுப்பாரே. 54

அயச் செந்தூரம்

பாரப்பா வயமெடுத்து வுருகச் சொல்வேன்
பரிவான வயப் பொடியோ பலந்தான்பத்து
நேரப்பா வெண்காரம் பலமுமஞ்சு
நிலைத்து நின்ற சவுக்காரம் பலமுமொன்று
சாரப்பா பாறையுப்பு செபமாங்கட்டு
சாதமாய் பலமரைதான் கூடக்கூட்டு
போமப்பா சாரமது பலமுங்கால்தான்
பேராக வரைப்பலமுந் துருசுபோடே 55

போட்டல்லோ கல்வத்தில் வெடியுப்புநீரும்
புகழான சாரநீர் விட்டு ஆட்டு
நீட்டல்லோ வஞ்சு பங்கு பண்ணிக்கொண்டு
நேராக அஞ்சுதர முருக்கித்திரு
பூட்டல்லோ வயத்தினிட தோஷமெல்லாம் போக்கி
புகழான வெள்ளியைப்போற் கண்விட்டாடும்
மூட்டல்லோ யிதுமூட்டு அயமுருக்கமைந்தா
மூதண்ட மாட்டுவிக்கு மயத்தினாட்டே. 56

ஆட்டவே அயத்திலொரு பலந்தான் வாங்கு
யந்திடைக்கு முன் வைத்த காந்தச்சத்து
மூட்டிடவே இரண்டு மொன்றா யுருகும்போது
முத்திபெறத் தங்கமிரண்டு பலமேதாக்கு
நாட்டிடவே நாகமொரு பலந்தான்கூட்டு
நடமாடு லிங்கமஞ்சு பலமேகூட்டு
பாட்டிலே சொன்னதென்று எஓ்ண வேண்டாம்
பளபளத்துக் கண்விட்டுக் களங்கதாமே. 57

ஆமப்பா களங்கெடுத்து நூற்றுக்கொன்று
அப்பனே நவலோகந் தன்னிற்பாச்சு
ஏமப்பா மாற்றீயத் திராணியில்லை
யென்னசொல்வேன் காயசித்திக் கெடுத்தகற்பம்
நாமப்பா களங்கதனைச் செந்தூரித்து
நலமாக நித்தமொரு குன்றியுண்ணு
தாமப்பா சரீரத்துக் காணியாகுஞ்
சாதகமா யாதிகற்பம் பாடினேனே. 58

பாடினா ரிப்படியே அங்கமெல்லாம்
பலபலவாய்ப் பிச்செறிந்து பாட்டாய்ச்சொன்னார்
ஊடினார் சித்தரிட நூலைப்பார்த்து
வுலகத்தோர் சுட்டலைந்தார் கோடாகோடி
தேடினார் தசதீட்சை கிடையாதென்று
சகத்திலே யிறந்தார்கள் கோடாகோடி
மூடினார் சித்தரப்பா மெத்தநன்று
முச்சுவைப்போல் சீடன்வந்தால் முயன்றுபாரே. 59

முயன்றுகொண்டு சீடனிட குணத்தைப்பாரு
மூதண்ட குணராசி பாருபாரு
வயன்றுகொண்டு மாயமுற்ற கள்ளருண்டு
வார்த்தையினால் பசப்பியல்லோ மயக்கஞ் செய்வார்
உயன்றுகொண்டு பிரமகுலத் துதித்தோராகி
லுற்றுப்பார் நிக்கியகர்ம கருவையெல்லாந்
தயன்றுகொண்டு ராசகுலத் துதித்தோராகில்
சக்கரத்தைப் போற்றிசெய்வார் சார்ந்துபாரே. 60

பாரப்பா வசியகுலத் துதித்தோராகில்
பரிவாகப் பணங்கேட்கில் லோபஞ்செய்வார்
நேரப்பா சூத்திரச் சாதியாகில்
நிலைத்துநின்ற வேளையிலே குணத்தைப்பாரு
சேரப்பா நற்குணமாய் நந்தானாகில்
தசதீட்சை முந்தவைத்துத் திறத்தைக்காணு
தூரப்பா பாசமறத் தசதீட்சை சொன்னால்
சொக்குவார் நரகத்திற் குருத்தான்காணே. 61

குருவுக்கு நரகம்வர நடந்தசீடன்
குலட்சயமா யாவிகோடி நரகில்வீழ்வான்
குருவுக்கு மனம்வேறா நடந்தாராகில்
குலங்கோடி பாவத்திற் குமுறிப்போவான்
குருவுக்கு மனமுகந்து நடந்தசீடன்
குவலயத்தி லுத்தமனாய் வாழ்வானப்பா
குருவுக்கு மனதுவர நடந்தசீடன்
குலங்கோடி மோட்சமெய்துஞ் சித்தனாமே. 62

நாற்பத்து முக்கோணம்

ஆமப்பா பூசைவிதி சக்கரத்தைச்சொல்வேன்
　　ஆருந்தான் சொல்லார்க ளப்பாகேளு
ஓமப்பா தேவிக்கு மாதிபீடம்
　　உத்தமனே நாற்பத்து முக்கோணந்தான்
காமப்பால் வித்தையிதுக் காதிவித்தை
　　காசினியிற் பூசைசெய்வோர் தசதீட்சை பெற்றோர்
நாமப்பா இவளை முந்தப் பூசை பண்ணி
　　நலமாக சிவயோகத் திருந்திட்டேனே. 63

இருந்திட்ட சக்கரத்தி னியல்புகேளு
　　இதமாக வளையம்போல் கீறிக்கொண்டு
வருந்திட்ட குருக்கையிட ரேகை தானும்
　　ஆதித்த னிரேகையொன்று திங்களொன்று
செரிந்திட்ட செவ்வாயி னிரேகையொன்று
　　செயலான புதனுடைய யிரேகையொன்று
பரிந்திட்ட குருவினிட விரேகையொன்று
　　பாங்கான சுக்கிரன்ற னிரேகைதானே. 64

தானென்ற காரியிட விரேகையொன்று
　　சாதகமா யிராகுவிட விரேகையொன்று
கானென்ற கேதுவிட விரேகையொன்று
　　கைமுறையா யொன்பதையும் குறுக்கேகீறி
பானென்ற தேவியிட பாதரேகை
　　பாடினார் சிவனென்று சகரமெனமைந்தா
வானென்ற செல்வாயி னிரேகைமுனையிரண்டும்
　　வாங்கியல்லோ கீழ்ராகு வளையத்தூட்டே. 65

ஊட்டுவாய் மைந்தனிட விரேகைமுனையிரண்டு
　　முத்தமனே வளையத்தின் மேல்முகத்திலூட்டு
நாட்டுவாய் திங்களிட விரேகைமுனையிரண்டும்
　　நலமான கேதுவிட நடுமையத்தூட்டு
காட்டுவா யிராகுவிட விரேகைமுனையிரண்டுங்
　　கலங்காம னோக்கிரவி மையத்தூட்டு
பூட்டுவாய் கேதுவிட விரேகை முனையிரண்டும்
　　புகழான செவ்வாயின் மையத்தாக்கே. 66

தாக்கடா ஆதிமுனை தானிரண்டு
    தப்பாமல் சுக்கிரனார் மையத்தூட்டு
தேக்கடா சுக்கிரனாரிரேகை முனையிரண்டுந்
    திறமாகத் திங்கள்மையஞ் சேருசேரு
போக்கடா புதனுடைய விரேகைமுனையிரண்டும்
    புகழான விராகுவிட மையத்தூட்டு
நோக்கடா ராசாவி னிரேகைமுனையிரண்டும்
    நுடங்காதே சனிமையத் தூட்டிப்பாரே. 67

பாரப்பா ஆதித்தன் வளையத்துள்ளே
    பரிவான மேல்ரேகை ரவியின்ரேகை
சேரப்பா அதின்கீழே திங்கள்ரேகை
    சிறப்பாக அதின்கீழே செவ்வாய்ரேகை
பூரப்பா அதின்கீழே பொன்னின்ரேகை
    புகழாக அதின்கீழே பொன்னின்ரேகை
வேரப்பா அதின்கீழே வெள்ளிரேகை
    விளங்கியதின் கீழ்ரேகை காரியாமே. 68

காரியின்கீ ழிராகுவடா கண்டுகொள்ளு
    கைமுறையா யிராகுவின்கீழ் கேதுரேகை
பாரிந்தப் படிகீறி முனையின்மையம்
    பகுத்தறிந்து முனையோடு மையங்கூட்டி
தாரிந்தப் படியறிந்து கீறிப்பார்த்தால்
    சக்கரம்போல் திரிகோண முனைகள்தானும்
சாரிந்த நாற்பத்து முக்கோணத்தைச்
    சதாசிவனார் வகுத்தபடி சாற்றினேனே. 69

சாற்றினோர் சக்கரத்தின் மேலேகேளு
    சார்வாக எட்டிதழு மீரெட்டிதழு
மாற்றினதோர் வளையமிட்டு வெவ்வேறப்பா
    வாகா விதின்மேலே யிருபத்தைந்திதழ்தான்
போற்றினதோர் பூரேகைச் சதிரமாகப்
    புகழாக மூன்றுவகை வரைத்து நீயும்
ஆற்றினதோர் நால்வாசல் விட்டுநன்றா
    யப்பனே சக்கரத்தின் மய்யங்கேளே. 70

கேளப்பா மையமென்ற திரிகோணத்துள்
    கெடியான விந்துவிட்டு நடுவேகேளு
நாளப்பா ரீங்காரம் நடுவேயிட்டு
    நலமான பதினாறு மிருபத்தைந்திற்

சூளப்பா அகாரமுதல் க்ஷகாரவரை தானுஞ்
சுகமாக வைம்பதுட னொன்றுங்கீறி
வாளப்பா வாசலிலே தேவதைகளுண்டு
வகையாகச் சொல்லுகிறேன் மருவிக்காணே. 71

காணடா தேவியிட கீழ்முகத்துவாசல்
கலங்காத க்ஷேத்திரத்தில் வடுகனிற்பான்
பூணடா மேல்முகத்திற் கணபதியுங்கந்தன்
புகழான வடமுகத்திற் சூலியொடுதுர்க்கை
தோணடா தென்முகத்தில் வீரபத்திரன்
துடியான காவலுடன் நிற்பார்பாரு
ஊணடா நாலுதிக்கு மட்சரங்கள் தானு
முத்தமனே தேவதைக ளுறையும்பாரே. 72

பாரப்பா நால்வாச லானபின்பு
பரிவான ஒருமூன் றிரண்டுவீதி
நேரப்பா வட்டதுர்க்கி யட்டநாகம்
நிலையான வட்டகச மட்டசித்தி
காரப்பா வீதியொன்றி லிவர்களிடபீசங்
கைமுறையா யிட்டல்லோ பூசைபண்ணு
தூரப்பா மறுவீதி சொல்லக்கேளு
துடியான வயிரவரி னாமந்தானே. 73

தானென்ற வசீகரன் குரூரன் சண்டன்
சமரசமாங் குரோதனொடுன் மத்தனப்பா
கானென்ற கபாலியொடு தட்சணாமூர்த்தி
கைகண்ட சங்கார ரிரண்டுபேரும்
வானென்ற மறுவீதி பீசமிட்டு
வாகாக அர்ச்சித்து மைந்தாகேளு
கோனென்ற சக்கரத்தைச் சூழ்ந்துநின்ற
குறிப்பான தேவதையின் பெயரைக்கேளே. 74

கேளப்பா தென்முகத்தில் தட்சணாமூர்த்தி
கெடியான வடபுறத்திற் சண்டிகேசன்
நாளப்பா யீசான மாதித்தனோடு
நலமான வயிரவனும் நிற்பாரய்யா
சூளப்பா சுரதேவர் பிருங்கியோடு
துடியான வாசலிலே துவாரபாலர்
நீளப்பா விவர்களுக்குப் பீசமிட்டு
நிலையாகச் சக்கரத்தை விதித்திடாயே. 75

விதித்திருந்த சக்கரத்தின் விந்துக்குள்ளே
மேலான ஞானசத்தி யிருந்தாள்பாரு
மதித்திருந்த வவளைநிதம் வாலையென்பார்
மைந்தனே திரிபுரைதான் புவனையென்பார்
கதித்திருந்த சாமளையாஞ் சுத்தியென்பார்
கலியாண ராசகேசரியா மென்பார்
பதித்திருந்த உமாசத்தி அம்பிகாதேவி
பாங்கான கணாசத்தி பரிந்துகாணே. 76

காணப்பா இப்படித்தான் பதிந்துன்மனதில்
கண்டுகொள்ளு ஆதிசத்தி நாமமென்பார்
ஊணப்பா யிவள்பத்து நாமத்துக்கு
முத்தமனே சத்தியிட தீட்சைபத்தும்
பூணப்பா யிதுகடந்து ஞானசத்திப்
பூரணியாந் தீட்சையொன்று புகழ்ந்துகாணுந்
தோணப்பா தசதீட்சை யட்சரங்களெல்லாஞ்
சுகமாக சக்கரத்திற் போடுபோடே 77

போட்டல்லோ விதுகளிலே பூசைசெய்வார்
புகழான சிவயோக தீட்சைபெற்றோர்
மூட்டல்லோ ஞானசத்தி நிருத்தஞ்செய்வாள்
மோசமில்லை வானமொடு ஞானசித்தி
பூட்டல்லோ விதுபூட்டு வாமத்துக்குப்
பூட்டரிய குருபதத்திற் குண்டுபண்ணும்
நாட்டல்லோ வாமிகள்தான் வெறும்பூசைபண்ணி
நலமாக வபானித்து அலைவார்தானே. 78

தானென்ற தசதீட்சை யிதுதானய்யா
சகனென்ற தசதீட்சை யிதுதானய்யா
வானென்ற ஞானமென்ற வெட்டவெளியாகும்
வாயிலிட்ட குளிகையடா கமனமாடுங்
கானென்ற வணிமாவும் லகுமாவோடு
கலந்துநின்ற கிரிமாவுங் குலமாவோடு
போனென்ற பிராப்தியொடு பிரகாமியமோடு
புகழான வயிரசத்தி யீஸ்வரியுமாமே. 79

ஆமப்பா எட்டுப்பே ரேவல்கேட்டு
அட்டாங்க யோகமுத லறுபத்துநான்கும்
ஓமப்பா ஆடலா மிவைகளெட்டு
உத்தமனே யட்ட வித முள்ளேபூசி

காமப்பா லுண்ணுவிப்பாள் விண்ணிலேற்றி
கருணையுட னீன்றெடுத்து ஞானசத்தி
சோமப்பால் கொண்டவர்க்குச் சட்டைபோகுஞ்
சோதியாஞ் சிதம்பரத்தைச் சொல்லக்கேளே. 80

சிதம்பரச் சக்கரம்

சொல்லுகிறேன் சிதம்பர சக்கரத்தின் போக்குச்
சுகமாகப் பானுவைப்போல் விருத்தமொன்றிட்டு
அல்லுகிறே னதுமேலே விருத்தமொன்றிட்டு
அடைவாக அதின்மேலே விருத்தமொன்றிட்டு
மல்லுகிறே னிப்படியே வளையமெட்டிட்டு
மைந்தனே சக்கரம்போல் வளைத்துக்கொண்டு
நல்லுகிறே னடுமய்யும் விந்துக்குள்ளே
நலமான சிவபீச மொன்றுபோடே 81

போட்டிரண்டா வதுவளையத்துள்ளே கேளு
புகழான பஞ்சஇத ழாகநீயும்
போட்டு மூன்றாம் வளையத்துள்ளே யப்பா
பொலிவான எட்டிதழ்தான் போடுபோடு
போட்டுநா லாகுந்தான் வளையத்துள்ளே
பொங்கமாய்ப் பதினொன்று இதழ்தான்போடு
போட்டு அஞ்சாகுந்தான் வளையத்துள்ளே
பூணவே பதினெட்டு இதழுந்தானே. 82

தானென்ற ஆறாகும் வளையத்துள்ளே
சகசமா யிருபத்திரண் டிதழுமிட்டு
வேனென்ற வேழாந்தான் வளையத்துள்ளே
விளங்கவே யிருபஃதிதழும் போட்டு
மோனென்ற எட்டாகும் வளையத்துள்ளே
முப்பதுட் னஞ்சிதழு முசியப்போட்டு
வானென்ற வளையங்க ளெட்டுக்குள்ளே
வகையாய் நூற்றிருபத்தஞ் சிதழுமாச்சே. 83

ஆச்சப்பா வீசான நடுமையந்தான்
அப்பனே யகாரமுதல் மாறிக் கொண்டு
ஒச்சப்பா இருபத்தைஞ் சிதழும்போட்டு
வுத்தமனே தென்முகந்தா னடனராசன்

வீச்சப்பா வடபாகம் வாமதேவன்
விளங்கியதோர் மகாரமுதல் மாறிப்போடு
கூச்சப்பா தென்புறத்தே யகாரந்தானுங்
கூறான சிகாரமுதல் மாறுமாறே. 84

மாறடா மேன்முகத்திற் சத்தியோசாதம்
வளமாக நகாரமுத லிருபத்தைந்து
மாறடா கீழ்முகத்திற் றற்புருடமப்பா
வகாரமுத லெழுத்தைஞ்சு மாறுமாறு
மாறடா வஞ்சுமுக நூற்றிருபத்தஞ்சு
மாறடா யிப்படியே மனமகிட்சியாக
மாறினால் சித்தியெல்லாம் வசியமாகும்
வாகாக இதனைநீ மகிழ்ந்து கேளே. 85

கேளப்பா ககாரமுதல் க்ஷகாரந்தானப்பா
கெடியாக முப்பதுட னஞ்சும்போட்டு
வேளப்பா வதின்கீழே யிருபத்தைந்தின்
விளங்கிநின்ற அம்முதலாய்ப் பதினாறும் போடு
நாளப்பா பிருதிவியிற் பிருதியின்பீசம்
நலமான அப்பிலே அப்புபீசஞ்
சூளப்பா வன்னியிலே வன்னிபீசஞ்
சுகமாக இட்டாக்காற் சுறுக்காம்பாரே. 86

பாரப்பா வாயுவிலே வாயுன்பீசம்
பரிவான விண்ணிலே ஆகாசபீசம்
நேரப்பா யிப்படியே அஞ்சு முகமிட்டு
நிலையான சிவதீட்சை பதினொன்றுமப்பா
சேரப்பா சக்கரங்க ளெல்லாம் போட்டுச்
சிவனுடைய சக்கரத்தின் சூழவேதான்
தாரப்பா சதிரம்போல் மூன்று ரேகை
சாதகமாய் நால்வாய் விட்டுப் போடே. 87

போட்டல்லோ மேல்வாசல் கணபதியுங்கந்தன்
புகழான கீழ்வாசல் கிரிடிபிருங்கி
நீட்டல்லோ வடமுகத்தில் பத்திரகாளி
நிலையான வீரபத்திரர் நிற்பாரய்யா
மூட்டல்லோ தென்முகத்திற் துர்க்கையோடு
மூதண்ட க்ஷேத்திரன் முயன்றுவைத்து
ஆட்டல்லோ நால்வாசல் தேவதையின் பீசம்
அங்கங்கே வரைந்துவைத் தறிந்து போற்றே. 88

போற்றடா உள்வீதி வடபாகத்தில்
புகழான சண்டிகே சுரனைவைத்து
மாற்றடா மேல்பாகம் வீரரோடு
வாங்காமல் தென்பாகஞ் சேத்திரன்றானுங்
கோற்றடா சன்னதியில் நந்திபீசங்
குறையாம லடுக்கவொரு பீசஞ்சாத்திக்
காற்றாடா வீசான மூலைபாகங்
காலதண்ட வயிரவனை வைத்திடாயே. 89

வைத்தடா யடுக்கவல்லோ சூரியனைநீயு
மைந்தனே இரண்டாந்தர வீதிக்குள்ளே
வைத்திடுவா யஷ்டகச மஷ்டநாக
மகத்தான அட்ட சத்தி பரிந்து வைத்து
நைத்திடுவாய் சீதாங்கன் சூரன்சண்டை
ஞலமான குரேதனுன் மத்தாப்பா
லைத்திடுவாய் கபலியொடு தட்சணாமூர்த்தி
கைகண்ட சங்கார ரெட்டுப் பேரே. 90

பேரான ஆவரணத் தேவைகளெல்லாம்
பேறிந்து பீசமிட்டுச் சூழ்ந்துநீயும்
வாரான சக்கரத்தைத் தென்முகமாய் வைத்து
மருவியதோ ரபிஷேக மெல்லாஞ் செய்து
தாரான தேககத்தி பண்ணிநீயுஞ்
சாதகமாய் வடமுகத்தி லிருந்துக் கொண்டு
நேராக மாதுருநரநியாசம் பண்ணி
நிர்மலமா யஞ்செழுத்து நியாசம் பண்ணே. 91

பண்ணடா கரமதனை நியாசந்தானும்
பரிவாகச் சடங்கமென்ற நியாசந் தானுங்
கண்ணடா வெகுசோடச நியாசந்தானுங்
காரணமாய்க் குங்குமமா நியாசம்பண்ணு
விண்ணடா சிவமான தீட்சையோகி
வேதாந்த சின்மயமாய்ச் சிவனைப்பூசி
மண்ணடா தொட்டாலுஞ் சொர்னமாகும்
வாயிலிட்ட மருந்தெல்லாஞ் சித்தியாமே. 92

சித்தியடா காயசித்தி குளிகைசித்தி
சகமறிய வாதசித்தி வாசிசித்தி
பத்தியடா வட்டகர்மஞ் சித்தியாகும்
பாரறிய யோகசித்தி ஞானசித்தி

முத்தியடா குருபதத்தின் சித்திசித்தி
மூதண்ட பரகாய சித்திசித்தி
யத்தியடா பூரணத்தி லாறுவரை தாண்டி
யாத்தாளு மப்பனையும் பூசை பண்ணே. 93

பண்ணடா தென் முகத்தில் சிவனை வைத்து
பாங்கான தேவியிட சக்கரத்திலேதா
னண்ணடா வாமத்தி லவளை வைத்து
நலமான பாத்திரங்கள் முன்னே வைத்து
கண்ணடா கலசமுதல் சங்கம் வைத்துக்
காணடா திசைகளெல்லாம் பந்தம்பண்ணி
விண்ணடா குருபதத்தில் குருவை நோக்கி
வேதாந்த சின்மயமே யென்று சொல்லே. 94

சொல்லியபின் வஸ்துவிட கடத்தை வாங்கி
சுக்கிரனுங் கணேசனிட சாபந்தீர்த்து
வல்லியபின் பஞ்சகர்த்தா சாபந்தீர்த்து
மைந்தனே என்னுடைய சாபந்தீர்த்து
வல்லியபின் சித்தரிட சாபந்தீர்த்து
வன்னியிட னிரவிமதி களையும்பூட்டி
ஒல்லியபின் சோடசமஞ் செழுத்துமோதி
உத்தமனே கடத்தை வைத்து வுயரப்பாரே. 95

பார்த்தல்லோ சந்திரனில் மூர்க்கசத்திப்
பராபரையைக் கடத்ினுள்ளே பாவனை செய்து
கோத்தல்லோ மஞ்சனநீர்க் கொண்டுநீயுங்
குறிப்பாக கலசமெல்லாம் சுத்தி செய்து
போத்தல்லோ வஸ்துமாங்கிஷ விபூதிப்
புலித்தோலின் மேலிருந்து பிராணாயம் பண்ணி
மாத்தல்லோ பாத்திரத்திற் கலைகளூட்டி
மைந்தனே பாத்திரத்தின் வகையைக் கேளே. 96

கேளடா போகமொன்று குருத்தாளொன்று
கொடியான ஸ்திரீயொன்று தாரமொன்று
நாளடா பலியொன்று ஐந்து வைத்து
நலமான கலசத்தை முன்னேபூசு
வாளடா வஸ்துவைத்தா னாதாரமூட்டி
மைந்தனே நாகவல்லி யிலையால் மூட்டித்
தாளடா கந்தமொடு புஷ்பஞ்சாத்திச்
சக்கரத்தை யர்ச்சிக்கச் சாற்றுவேனே. 97

சாற்றவே வலக்கரத்தில் புஷ்பம்வாங்கிச்
சாதகமா யிடக்கரத்தில் சுத்தி வாங்கிப்
போற்றியே குருவோடு கணபதியின்பீசம்
புகழான ஆவரண தேவதைகளெல்லா
மாற்றியே வயிரவன்றான் வடுகன்சித்த
னப்பனே நவநாத வீரரோடு
மேற்றியே யட்டவயி ரவருங்கூட்டி
விதமாகப் பஞ்சகர்த் தாளின்னங் கேளே. 98

கேளடா வம்பிகா சத்தியோடு
கெடியான வுருத்திர கணங்கள்தானு
நாளடா சகலசத்தி சகலருத்திரன்
நண்பாக வர்ச்சிப்பாய் சக்கரங்களிரண்டில்
வேளடா எரித்த சிவன் தேவியோடு
வேதாந்த நடனத்தைக் காட்டுவான்பார்
பாளடா மற்றொரு பூசையெல்லாம்
பரிவான குருசொல்லப் பணிந்து காணே. 99

காணடா வர்ச்சனைகள் தீர்ந்தபின்பு
கைமுறையாய்ப் பாத்திரங்கள் வைத்துப்பூசி
பூணடா அன்னமொடு பலகாரங்கள்
புகழான சத்தியோடு போதவைத்துத்
தோணடா மணியோசை சங்கினோசை
தொடந்துநின்ற செயகண்ட நாதவோசை
பூணடா நிவேதனஞ் செய்துநீதா
னரகரா சிவசிவா வம்மாவென்னே. 100

அம்மானொடு சிவனுக்குத் தூபதீப
மாலாத்திக் கற்பூர தீபங்காட்டி
அம்மனொடு சிவனுக்குச் சுகந்தம் வைத்து
ஆதியே காரணமே யென்றுபோற்றி
அம்மனே சின்மயா மகண்டஞான
ஆனந்த நாதாந்த வனாதியென்று
அம்மனொடு சிவனையுந்தான் பூசைபண்ண
ஆருக்குங் கிடையாது வதிகந்தானே. 101

தாமென்ற குருபதத்தை குருவைநோக்கிச்
சாதகமாய் குருவினிட பாத்திரங் கொண்டு
பாமென்ற லகரியிலே சொக்கிச் சொக்கிப்
பாங்கான வுன்னறிவு திடமே கொண்டு

கானென்ற தத்துவமுந் தேகமூன்றுங்
கைமுறையாய்ச் சோதித்து பானம்பண்ணி
வானென்ற சிவன்சக்தி யிருவரையும் நோக்கி
மகத்தான பாத்திரத்தைப் பானம் பண்ணே. 102

பண்ணியல்லோ லகரியினா லட்சியத்தினுள்ளே
பாடியல்லோ பிராணாய மூட்டி வாங்க
புண்ணியமே செய்வதற்குத் தீட்சைபோதும்
பொல்லாத துரோகிக்குக் கிடையாதப்பா
கண்ணியதோர் தசதீட்சை லட்சியத்திலுள்ளே
காட்டியல்லோ பிராணாய மூட்டி வாங்க
நண்ணியதோர் பூரணந்தான் குருபதத்தின் மேலே
நண்பான ரவிபோலுங் காணும் பாரே. 103

பாரடா அதற்குள்ளே சொக்கி நிற்கும்
பானுவிட காந்தியென்ன கோடியொப்போ
பூரடா வதுக்குள்ளே நினைவு போச்சு
பூசித்த மனம் போச்சு பத்தி போச்சு
வாரடா நானென்ற சொல்லும் போச்சு
ஆத்தாளை யப்பனையும் பூசித்தால் முத்தி
சாரடா இதுமுறைதான் கொடுக்க வேண்டாஞ்
சண்டாள வாமத்தைக் கொடுத்தார் காணே. 104

கெடுத்தென்ன வாமத்தில் சத்தியைத்தான் வைத்து
கெடியாகப் பூசித்துச் சையோகித்து
மடுத்தென்ன மஞ்சமிதான் முத்தியென்று
மாயத்தே யலைந்தார்கள் மருளவாமி
அடுத்தென்ன சித்தரெல்லாம் பெண்பூசிப்பா
ரகண்டவெளி சத்தியைத் தானர்ச்சனையே செய்வார்
படுத்தென்ன இல்லையில்லை சமாதியிலே நிற்பார்
பாங்கான லகரியிலே நின்று ஏறே. 105

ஏறடா பராபரத்திற் பரமுந்தாண்டி
இயல்பாகச் சிவந்தாண்டி யிரசம்பொங்கத்
தேறடா நாதமொடு விந்துதாண்டிச்
சிறந்த இந்த ஆறுதலஞ் சேர்ந்தேயேறி
வாறேதான் மேலேதா னிற்குணத்தின் வீதி
மைந்தனே அண்டத்தில் மருவியூது
கூறடா இதுவறிந்தா லவனேவாமி
கூறினேன் பூசைவிதி குழைந்து கேளே. 106

கேளப்பா இப்படியே பூசை செய்தால்
கெடுமே சஞ்சிதம் பிராரத்துவங்காமியம்
நாளப்பா இதுமூன்றும் போகவென்றால்
நலமான பூரணத்திற் புக்கப்போகும்
பாளப்பா மற்றெல்லா மொன்றுமில்லைப்
பராபரமாங் குருத்தேடிப் பணிந்து கேளு
நீளப்பா விட்டாக்கால் மனம் பேயாகி
நிலையாது மனக்குரங்கு நீதான் பாரே. 107

பாரடா இப்படியே பூசை செய்வோன்
பரிவாகக் கோபம் வந்து பார்த்தானானால்
நேரடா லோகமெல்லாஞ் செந்தீபற்றும்
நிமிடத்தே மன்னர் தளம் நீறாய்க் காணும்
காரடா வென்றாலுங் காக்க மாட்டான்
காலாந்தத் தீயாகு மவர்கள்கோபம்
ஊரடா இருப்பார்கள நேகம் பேர்க
ளுத்தமர்க ளுண்டுண்டு கண்டுபேசே. 108

அட்டகன்ம மாறல்

பேசையிலே அட்டகன்ம மாறல்கேளு
பேரான வாசியைத்தான் வசியஞ் செய்வார்
வாசியிலே மனம் வைத்துத் தேவிபூசை
வளமாக நிதமுமா றாமற்செய்வார்
ஆசையிலே சிவனையல்லோ மோகனமே செய்து
அரகரா திரோபவத்தை யுச்சாடித்துக்
காசையிலே ஆங்காரபந் தனமேசெய்து
கலங்காமல் பூரணத்தில் கலப்பார் காணே. 109

கலக்கவே யாகருஷ்ணம் பூரத்தில்நீயுங்
காணாதே சஞ்சிதத்தே மாரணமே செய்து
நிலைக்கவே யட்டகன்மமிப்படியே செய்வாய்
நேராக மற்றமுறை பாரார்பாரார்
துலக்கவே இதைவிட்டுக் கர்மவாசி
சூழுலகில் பெண்களைத்தா னழைப்பாரையோ
பிறக்கவே யிதுகண்டு சிவனுந்தேவி
பிசகில்லை நரகத்திற் போடுவாரே. 110

போடுகிற நரகத்தில் விழுகைநன்றோ
புகழான ஞானத்தி லேறல்நன்றோ
ஆடுகிற வாதசித்தி வந்ததானால்
ஆசையினா லருந்துகெட் டழிதனன்றோ
ஓடுகிற வாசியெல்லாம் விடுதனன்றோ
உத்தமனே பூரணத்தில் மரிக்கநன்றோ
தேடுகிற தேட்டென்ன ஞானத்தேட்டு
சிவயோகி யானாக்காற் பகருவாரே. 111

பகருவார் வெளியென்பா ரகண்ட மென்பார்
பன்னரிய நிற்குணமாம் போதமென்பார்
பகருவா ராதிவந்த மில்லாதென்பார்
பாங்கான நித்தசுத்த புத்தமென்பார்
பகருவா ராதிக்கு மாதியென்பார்
பராபரமாஞ் சோதியென்பார் பரைதானென்பார்
பகருவார் பலவிதமாய் ஒன்றைத்தானே
பார்த்தவர்க்கு வெகுசுலபம் பரிந்து காணே. 112

காணப்பா நகாரமுத லஞ்செழுத்துமாறிக்
கைகண்ட தம்பனமாங் காணுங் காணும்
பூணப்பா மகாரமுத லஞ்செழுத்து மாறிப்
புகழான மோகனமாம் பூலோகத்தில்
தோணப்பா சிகாரமுத லஞ்செழுத்து மாறில்
சொற்பெரிய மாரணமாஞ் சொல்லக்கேளு
ஊணப்பா வகாரமுத லஞ்செழுத்து மாறில்
உச்சாட ணங்கிரியை யோட்டும் பாரே. 113

பாரப்பா யாகரமுத லஞ்செழுத்துமாறிற்
பரிவான வசியமாம் பாரு பாரு
நேரப்பா மகாரமுதல் நடுவணையை மாறில்
நேரான வளைப்பு வித்தையாகுமாகும்
காரப்பா சிகாரமுதல் நடுவணையை மாறிற்
கடியதொரு பேதனமாங் கண்டு கொள்ளு
வேரப்பா வகாரமுதல் நடுவணையை மாறில்
வெகுசுருக்கு வித்துவே ஷணையுமாமே. 114

ஆமடா திக்கெட்டுங் கர்மமெட்டும்
அப்பனே சொல்லுகிறேன் கேளு கேளு
ஓமடா கீழ்முகந்தான் வசியமாகு
முத்தமனே அக்கினியில் மாரணமே சித்தி

தேமடா தென்திசையில் பேதனமே சித்தி
சகமறியக் கன்னியிலே தம்பனமுமாகும்
வாமடா வருணனிலேவித் துவேஷணந்தான்
வந்திடுமே சித்தியிது மருவிடாயே. 115

மருவியதோர் வாயுவென்ற மூலைக்குள்ளே
வாகாமுச் சாடனமே சித்தியாகும்
தருவியதோர் குபேரனிலே மோகனமே சித்தி
சாந்தவீசானமா கருஷணமே சித்தி
கருவியதோ ரெட்டெட்டும் நினைக்கச் சித்தி
கைகண்ட படிசொன்னேன் கண்டு பாரு
அருவியதே ரெட்டுமெட்டும் பலகையுண்டு
அப்பனே சொல்லுகிறே னறிந்திடாயே. 116

அறிந்திடுவோர் வில்வமடா வசியமாகு
மப்பனே வெண்ணாவ லாக்ருஷ்ணம்
மறிந்திடுவா யாலியென்றால் மோகத்துக்காகு
மகத்தான வாலென்றால் தம்பனத்துக்காகும்
பிறிந்துநின்ற தில்லையென்றால் பேதனத்துக்காகும்
பேராமுச் சாடனமே பீலிப்பலகையப்பா
வெறிந்திடுவார் பாதிவித்து வேஷணத்துக்காகும்
விளங்கிடிந்தப் பலகையெட்டின் விதங்கள்தானே. 117

தானென்ற அத்தியடா மாரணத்துக் காகும்
சாதகமா யெட்டுவகைப் பலகைசீவி
வானென்ற வஞ்செழுத்து மாறியதிலிட்டு
வாகாகச் செபஞ்செய்ய எட்டுமாடுங்
கோனென்ற சிதம்பரத்தின் கருமவித்தைக்
குறிப்பறிந்து பூசைபண்ணச் சித்தியாகும்
ஊனென்ற உடலுக்குள் தியானம்பண்ணி
உத்தமனே சக்கரத்தைப் பூசை பண்ணே. 118

பண்ணவே ஜபத்துக்கத் தாவடத்தைக் கேளு
பாங்காகு மாக்ருஷணம் படிகமாலை
ஒண்ணவே வசியத்துக் குருத்திராட்சம்
உத்தமனே மோகந்தான் மிளகுமாலை
விண்ணவே யுச்சாடனங் குசையேயாகும்
மேலாம்வித்து வேஷனையே வித்திருமப்பா
கண்ணவே பந்தனந்தான் பொன்னின் மணிதானே
நலமான தாவடமாய்க் கோத்துக் கொள்ளே. 119

கொள்ளடா தம்பனைக்குத் தாமரையின் மணிதான்
கொடியதொரு மாரணமே நாவின் மணியாகு
முள்ளடா இதுவெட்டுக் கர்மத்துக்கு
முத்தமனே தாவரங்க ளெட்டுஞ் சொன்னேன்
விள்ளடா இந்த முறை நற்சிடனானால்
வெறும் பசுவாய் நின்றவர்க்குச் சொன்னால்தோஷம்
தள்ளடா சீஷனிட மனதுகண்டு
சற்குணமாஞ் சீவனுக்குச் சார்ந்து சொல்லே. 120

சொல்லுகிறேன் கர்மங்க ளாடும்போது
சுறுக்காக இருக்கவென்றால் கருவைக் கேளு
அல்லுகிறேன் ஓலையிலே சக்கரத்தைக் கீறி
யப்பனே பிராணாய மாகரித்து
மல்லுகிறேன் சக்கரத்தி லஞ்சும்பூசி
மைந்தனே தழல்காட்ட மண்டிச்சாடும்
வெல்லுகிறே னென்றுசொல்லி யார்வந்தாலும்
வெல்லுகிறது சிவனாலும் வேகாபாரே. 121

பாரப்பா சிதம்பரத்தி லட்டகர்மம்
பாடினேன் சூத்திரத்திற் பாகமாக
நேரப்பா தேவியிட சக்கிரத்தின் வேகம்
நிமிடத்தி லண்டமெல்லா நீறாய்ப்பண்ணும்
கூரப்பா இக்கருவைக் கூறொண்ணாது
கூறவென்றால் சீடனிட குணங்கள்கண்டு
சாரப்பா தசதீட்சை பெற்றோராகில்
சாதகமாய் நினைத்தவுட னெட்டுமாமே. 122

ஆமப்பா சிவனுடைய சக்கரத்தின்மையம்
ஆதியென்ற நாற்பத்து முக்கோணமிட்டு
ஓமப்பா சிவசத்தி சம்மேளித்து
உத்தமனே பூசைசெய்யத் தசதீட்சையோடே
வேமப்பா வண்டரண்ட மவர்பார்க்கும்பார்வை
வேதாந்த சிரோமணிதா னவர்க்குநாமம்
நாமப்பா கண்டபடி சூத்திரத்திற்சொன்னோம்
நலமான சிவசத்தி சக்கரங்கேளே. 123

கேளப்பா ஒன்றாகச் சம்மேளித்து
கிருபையுடன் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
தாளப்பா தங்கமென்ற தகட்டிற்கிறிச்
சாதகமா நால்வாசம் தேவதையுமிட்டுச்

சூளப்பா ஆவரண தேவதையுமிட்டுச்
சுகமாகப் பூசிப்பார் சித்தரெல்லாம்
நாளப்பா இதனாலே குளிகைசித்தி
நலமான காயசித்தி யாய்ச்சிதானே. 124

தானென்ற நாற்பத்து முக்கோணத்தைச்
சமர்த்தான மேருவைப்போல் வார்த்துக்கொண்டு
வானென்ற சிதம்பரத்தை மையத்தில்வைத்து
மகத்தான தசதீட்சை பூசைசெய்வார்
கானென்ற வாகாமிய பிரார்த்தமிரண்டுங்
கடுந்தீயில் காஷ்டம்போல் வெந்துபோகும்
கோனென்ற சஞ்சிதந்தான் தொடர்ந்துபின்னே
கொடியதொரு கள்ளனைப்போல் கூடும்பாரே. 125

பாரப்பா உலகத்தில் பிராணாயமறியான்
பரிவான தீட்சை முதல் சிவயோகங்கள்
நேரப்பா செய்வோர்க்கு வந்துதானால்
நேர்சிட வர்க்கமெனுஞ் சனங்களாலுந்
தூரப்பா ராஜவல்லிக் கடுக்கச் செய்து
துரத்துமடா சஞ்சிதந்தான் திரோபவமாய்நின்று
ஊரப்பா யிருக்கையிலே யிடுக்கண்வந்தால்
ஓடாமல் தியானத்தி லூன்றிப்போமே. 126

சாப நிவர்த்தி

போமப்பா சாபமிட்ட பேர்கட்கெல்லாம்
புகழாகச் சாபங்கள் நிவர்த்திபண்ணு
போமப்பா எந்தனிட சாபந்தீரப்
புகலுவேன் பிரணவத்தின் வாலையாலே
போமப்பா கணேசனிட மூலமொன்று
பொய்யல்ல சக்கரத்தின் மூலமொன்று
போமப்பா பிருதுவியில் தேய்வுங்கூட்டிப்
புதுமையுள்ள அகத்தியரா மென்றுகூறே. 127

கூறப்பா எந்தனிட சாபந்தீரக்
கொடிதாக லட்சமுரு நித்தமேற்றிப்
பேறப்பா நவகோடி சித்தர்சாபம்
பேசாம லோடுதற்கு மூலங்கேளே
தேறப்பா தேயுவிட்டுக் கணேசன்மூலம்
சிறப்பான பரவாலை யெழுத்துங்கூட்டிச்
சேரப்பா அசாத்தியத்தே ஆஏயென்னச்
செப்படா என்சாபம் செப்பக்கேளே. 128

கேளப்பா கணேசனிட சாபந்திரக்
கெடியாகச் சொல்லுகிறேன் கணேசன்மூல
மாளப்பா அறிவினிட மூலங்கூட்டி
யன்பாகச் சாத்தியத்தே தேயுவாயுவால்
மூளப்பா பிருதுவியின் மூலத்தாலே
மூண்டுநின்ற சாபத்தா லொழிந்துதப்பா
பாளப்பா சாபங்கள் தீராராகில்
பஞ்சாட்சர முதலாய்ப் பலியாதென்னே. 129

பலியாது சுக்கிரசாபந் தீராவிட்டால்
பதிமூலந் திரமூல மதியின்மூலம்
சலியாதே ரவிமூலத் தேயுங்கூட்டித்
தடையறவே சாத்தியமா மண்ணுங்கூட்டித்
தொலையாதே யிருப்பதென்ன சுக்கிரசாபந்
துடியடங்கி யோடுமப்பா சொல்லக்கேளு
கலிகாலம் பலியாது என்பர்மாண்பார்
கடை கெட்ட நாய்கழுதை காணுங்காணே. 130

காணப்பா பஞ்சகர்த்தாள் சாபந்திரக்
கைமுறையாக் கண்டத்தே நின்றமூலம்
பூணப்பா நடராசன் மூலமாதி
போதமென்ற ஞானசத்தி மூலங்கட்டித்
தோணப்பா நசிசாத்தியங் கொண்டோதத்
துரத்துமடா சாபத்தை துணிந்துகொண்டு
வீணப்பா வில்லாட்டா லொன்றுமில்லை
வேதாந்தக் கருணையினால் விளங்கும்பாரே. 131

பாரப்பா முப்பத்திரண்டு தீட்சை
பரிவாகச் சித்திக்குஞ் சாபந்தீர்ந்தால்
சேரப்பா அட்டகர்மஞ் சித்தியாகுந்
தீராத சாபத்தை தீர்க்கச் சொன்னேன்
காரப்பா குருபதத்திற் காத்தார் சொல்வார்
காராட்டா லென்னூலிற் காணவேணும்
ஆரப்பா மகத்தான சாபந்தீர
அடிமுடியு மறிந்தவர்தா னறிவிப்பாரே. 132

அறிவதற்குச் சாபமிட்டோர் தன்னைச்சொன்னே
னந்தவகை சாபங்கள் தீர்க்கச்சொன்னேன்
விருதாவில் மந்திரங்க ளோதினாக்கால்
வீணாகு மொன்றுமில்லை விளம்பக்கேளு

உறுதியாஞ் சாபங்கள் நிவர்த்திசெய்தால்
ஓம்நம சிவாயமென்றே யோதும்போது
பிரியாமல் சிவனுமே தாயுங்கூடிப்
பேசுவார் காயசித்தி பிலக்குந்தானே. 133

தானென்ற சாபங்கள் நிவர்த்திசெய்தால்
சண்டாள னானாலுந் தாக்கிப்பார்ப்பான்
நானென்ற வாணவத்தை நீக்குங்காலம்
நானவனே யவனானே னென்றகாலந்
தேனென்ற மதியமிர்தஞ் சிந்துஞ்சிந்துஞ்
சிவயோக தீட்சையினால் தேறிப்பாரு
ஊனென்ற தேகமப்பா தங்கமாகு
முத்தமனே சிவதீட்சை யோதக்கேளே. 134

கேளுநீ புலஸ்தியனே அய்யாவேஉன்
கிட்டவந்த சீடருக்குச் சேரச்சொல்ல
வாழுநீ முதல்தீட்சை மண்தானிரண்டு
மாலொன்று மித்தினொடு காலெழுத்துமாச்சு
ஆளுமீ ரண்டாகுந் தீட்சைகேளு
அப்பனே பரவாலை மாலின்மூலம்
மூளுநீ மண்மூலம் நாலுங்கூட்டி
முறையாக மூன்றாகுந் தீட்சையோதே. 135

ஓதவே பிரணவத்தின் வாலையாலே
உள்மூல மறுமூல முறவாமூல
மோதவே நாலாகுந் தீட்சைகேளு
உத்தமனே சிவசத்தி சேர்ந்தமூலம்
ஓதவே அஞ்சாகுந் தீட்சைகேளு
வுன்மனையாஞ் சிவசத்தி சேர்ந்தமூலம்
ஓதவே சிவசத்தி பஞ்சகர்த்தாள்
உண்மூலத் தாலெட்டா லுணருவாயே. 136

உணர்வாகு மாறாகுந் தீட்சைகேளு
உலகத்தைப் படைத்தளித்த மூலத்தாலே
பணரான ஆகாச சத்திமூலம்
பகராத நாதமொடு பஞ்சகர்த்தாள்
நிணரான வேழாகுந் தீட்சைகேளு
நிச்சயந்தான் பிரபஞ்ச மூலத்தாலே
வணரான நாதமொடு பஞ்சகர்த்தாள்
மாட்டலா மெட்டான தீட்சைதானே. 137

தானென்ற சூரியனில் சத்திமூலந்
தயவான பஞ்சகர்த்தாள் சாரச்சேரு
வானென்ற மூலமொடு சத்திமூல
மண்ணடியில் மூலகர்த்தாள் பஞ்சகர்த்தாள்
நானென்ற தசதீட்சை சொல்லக்கேளு
நடனமிட்ட மூலத்தால் விந்துநாதங்
கானென்ற சக்கரத்தி லொன்றுதள்ளிக்
கடியதச தீட்சையட்டாட் சரமுங்காணே. 138

காணப்பா ஏகதச தீட்சைமார்க்கங்
கடினமடா உரைப்பதற்குச் சொல்லப்போகா
தூணப்பா துரும்பாகுந் துரும்பு தூணாஞ்
சொல்லவென்றா லாணாகும் பெண்தானாகும்
வீணாகு மிரண்டுமற்ற பொருளேயாகும்
வெட்டவெளி யொன்றுமில்லை யென்றதாகும்
பூணப்பா சிவதீட்சை யோகதீட்சை
புண்ணியனே புத்தியினால் பிழைக்கச் சொல்லே. 139

சொல்லப்பா புலத்தியனே அய்யாகேளு
துன்மார்க்கப் பிள்ளைகட்குச் சொல்லவேண்டாம்
கல்லொப்பாய் மனங்கொண்ட பேர்க்கேயாகும்
கயிலாசங் கொள்ளையோ வென்றுசொன்னா
லல்லப்பா தசதீட்சை சொல்லமாட்டார்
அரிதப்பா மனமுரைக்க மாட்டாரப்பா
வெல்லப்பா ஷடா தாரத் தீட்சையாறும்
வேரறிந்து தூரறிந்து வித்தைப்பாரே. 140

வித்தாலே மெய்யாச்சுப் பஞ்சகர்த்தாள்
வெளிமூலத் தாலெழுந்த சுடரினாலே
பத்தாலே வைத்தபடி ஆறுமாச்சு
பராசத்தி தீட்சையப்பா பகரார்சொல்வேன்
சித்தாலே யடிமுடியு மிரண்டும்வாலை
சேரவே அஞ்செழுத்தின் திறத்தைக்காணு
அத்தாலே முத்தியுண்டாஞ் சத்திதீட்சை
யாசைவைத்துச் சொல்லுகிறே னறிவுள்ளோர்க்கே. 141

அறிவான வாலையிட தீட்சைகேளு
ஆங்காரி மூலமொடு அப்புமண்ணுந்
திரிகோண நாதமொடு பிரமன்பாரி
சென்றதால் வாலையிதைச் செப்பாரய்யா

புறிவான புவனையிட தீட்சைகேளு
புவிமூலந் தென்றலுடன் மூலநாகங்
குறியான சக்கரத்தின் சத்திமூலங்
கொண்டதொரு சீதரன்சேர் புவனையாச்சே. 142

ஆச்சப்பா திருமுறையின் தீட்சைகேளு
ஆதியென்ற நாதமொடு சத்திமூலம்
வீச்சப்பா சாத்தியத்தால் பிரமவிஷ்ணு
மேலான யாமளையின் தீட்சைகேளு
வாச்சப்பா சத்தியொடு நாதமூலம்
மாரனொடு சாத்தியமா மண்தண்ணீராம்
நீச்சப்பா சாமாளையின் தீட்சைகேளு
நிலையான வாகாச சத்தியிரண்டே. 143

இரண்டோடு பிரணவத்தின் சாத்தியந்தான்
நிலையந்த பிரமாவு மப்புங்கூட்டிக்
கண்டோடு மம்பிகா சத்திதீட்சை
கண்கண்டே னாகாச சிவமுஞ்சத்திப்
பண்டோடும் பிரணவந்தான் சாத்தியத்தைப்
பரப்பிரமன் மாலோடுங் கூட்டுங்காலந்
திண்டோடு மோகனா சத்திதீட்சை
தீமூலங் கணேசனுக்கு விரண்டுங்காணே. 144

காணடா வல்லபைக்குக் காலுங்கூட்டிக்
கண்டதடா பாணியுறக் கலந்ததாலே
தோணடா கேசரியாஞ் சத்திதீட்சை
சொல்லவென்றால் நாவெழும்பா தப்பாகேளு
பூணடா யோகத்தின் மூலத்தாலே
பூட்டுகின்ற குண்டலியே பூமிபாணி
நாணடா சாத்தியத்தில் மேவிப்போச்சு
நலமான வுன்மனையாஞ் சத்திகேளே. 145

சத்திமா லோர்காரி தென்றமூலஞ்
சாரியென்ற சிங்கியடா சாற்றினேன்கேள்
பத்திமால் பிரம்மாவே சேருங்காலம்
பகருவேன் பராசத்தி தீட்சையப்பா
முத்தியா மானந்த சத்திதீட்சை
முனையான குண்டலியின் மூலமாகுஞ்
சித்தானை யீன்றிடுங் கன்றைச்சேரில்
தெளிவான மவுனசத்தி தீட்சையாமே. 146

ஆமப்பா குண்டலியின் மூலமொன்று
ஆகையால் மவுனமென்ற வாலையொன்று
தாமப்பா சாத்தியந்தான் பிரமா மாயோன்
தனையறியச் சத்தியிட தீட்சையாச்சு
நாமப்பா சொன்னபடி கொங்கணர் தான்சொன்னார்
நலமான மச்சமுனி தாமுஞ்சொன்னார்
ஏமப்பா மற்றவர்கள் சொல்லவில்லை
யேகமாய் நின்றநிலை ஞானந்தானே. 147

தானான ஞானமது பத்துநூறு
தனைக்குறுக்கி யொருநூறு தவமாய்ச்சொன்னேன்
தேனான வாதமது லட்சங்காப்பு
செப்பினே னிரண்டுகாண்டந் திரமாயப்பா
பானான விதைக்குறுத்தி யிருநூறுஞ் சொன்னேன்
பாங்கான வயித்தியத்தி லிரண்டுலட்சங்
கோனான இதைக்குறுக்கி லட்சஞ்சொன்னேன்
கூறிலிதிற் பாகுபாடு கூறினேனே. 148

கூறினேன் வயித்திய சூத்திரந்தானப்பா
கொட்டினேன் கருமறைப் பில்லாமற்றான்
ஆறினே னதிலடக்கி மூன்றுநூறு
அழகான சூத்திரமா யடக்கிப்பாடி
தேறினேன் வயித்தியற்கருக் குருவுஞ்சொன்னேன்
செவிடனுக்குங் குருடனுக்குந் தெரியவென்றே
மீறியே வாதஞ்செய்யும் வயித்தியந்தான்
விளக்கினேன் செந்தூரக் காடுதானே. 149

செந்தூர மெல்லாந்தான் சயசெந்தூரம்
செப்பினேன் தேசத்தோர் நோய்தீரத்தான்
செந்தூர வேதையிட்டாற் பழுக்காதப்பா
திடமான வழலையினால் வேதைகாணும்
செந்தூர மேதந்த நோவுக்குத்தான்
தின்றிடவே பத்தியங்க ளில்லைபாரு
செந்தூரங் கொண்டவர்க்குப் புளிதானாகா
திடமான புகையிலையு மாகாதென்னே. 150

ஆகாது உளுந்துமொச்சை கீரையோடு
அப்பனே கடுகுஉள்ளி யெண்ணெய்தானு
மாகாது தின்பவர்க்குச் சொன்னேன்பாவம்
அடைவாகப் பூசணிக்காய் கிழங்குமாகா

ஆகாது ஸ்திரீமூச்சுக் கண்ட தானா
லன்றைக்கேயவன் மாண்டுபோவான் சொன்னே
னாகாது மாமிசங்கள் கூடினாக்கால்
அவன்குறட்டை யலைத்துவிடு மறிந்துபாரே. 151

பாரப்பா தீட்சையிலே சமாதிதீட்சை
பகரார்கள் சித்தரப்பா சொல்லக்கேளு
நேரப்பா அடிமூலத் தாதிமூலம்
நிலையான குண்டலிக்கு ளாதிமூலம்
சாரப்பா நடனத்தே நின்றமூலந்
தான்மவுன மாகவுடற் சாந்தமாகும்
ஊரப்பா இருப்பார்க ளநேகம்பேர்கள்
உத்தமர்க ளுண்டுளுண்டு கண்டுபோற்றே. 152

போற்றியபின் பன்னிரண்டு வருடஞ்சென்றால்
புகழான வாலையைத்தான் முன்னேசொல்வார்
தேற்றியபின் வாலையிட கருவைச்சொல்வார்
திரமான குண்டலியின் திரிகோணத்தில்
சோத்தியமே வாராமல் மேற்கோணத்தில்
துடிகொண்ட நந்தியிட களையைமூட்டி
வாத்தியமே யிடைகலையில் வாசியூத
மன்மதனா லாங்கார வழியைப்போக்கே. 153

போக்கான மேல்முக்கோ ணத்துக்குள்ளே
புகழான குருவைப்பார் நந்திநந்தி
வாக்கான கீழ்முக்கோ ணத்துக்குள்ளே
வாமியென்ற சக்கரத்தின் பூசைபண்ணு
நோக்காத இடகலையி விருமுக்கோணம்
நுகர்ந்துநின்ற மேற்கோணங் கணேசனாகும்
பாக்காத பேருக்கு ஒன்றுமில்லை
பரியாச மேவாசி யோகந்தானே. 154

தானென்ற இடகலைக்கீழ் முக்கோணத்துள்
தடையறவே நிருவாணி சாந்தமாவாள்
பானென்ற பிங்கலைமேல் முக்கோணத்துள்
பாலரைப்போல் சுப்பிரமணியன் பரிவாய் நின்றான்
கோனென்ற பிங்கலைக்கீழ் முக்கோணத்தில்
குறிப்பாகக் கூத்தனின்ற கூறுதானா
மேனென்ற குண்டலிக்குள் சத்தியங்கே
யிருந்தாள் தான் வல்லபை யென்றிருந்தாள்பாரே. 155

இருந்தாளே யொளிபோலே யென்னசொல்வேன்
ஏகமா யிருந்து போய்ப் பன்னிரண்டா
மிருந்தாளே புகைமேலே நந்தி மேற்கொண்
டிடகலையும் பிங்கலையு மாகவேதா
னிருந்தாளே இரண்டுமற்று வொன்றுக்குள்ளே
இலட்சியமாங் கருவுக்குக் கருவுமாக
இருந்தாளே யவளையல்லோ பூசைபண்ண
எவருக்குங் கிடையாது வென்பார்பாரே. 156

பாரப்பா குருவென்ற நந்தியாசான்
பாங்கான மேல்முக்கோணத் துக்குள்ளே
சேரப்பா வங்கென்றுஞ் சிங்கென்றுந்தான்
சிறப்பான ஒளியாகி நின்ற மூர்த்தி
காரப்பா குருபூஜை யென்பதெல்லாங்
காட்டினே நந்தியின் கருவைச் சொன்னே
னாரப்பா புலத்தியனே குருவென்றென்னை
யமைத்திடுவாய் சூட்சுமமாய் நந்தியென்னே. 157

நந்தியென்னைப் போலிருப்பா ரென்னவுன்னி
நலமாக வுன்மனத்தில் தியானம்பண்ணு
நந்தியே யென்குருவே ஞானமூர்த்தி
நாதனே வேதாந்த நடன வாழ்வே
நந்தியென்று தினமுமே தோத்திரஞ் செய்ய
நலமான மவுனத்தின் வாலையாலே
நந்தியே யுபதேச குருவேசாத்தியம்
நாட்டினால் முத்தியடா நல்லோராமே. 158

நல்லவரென் றுடம்பெடுப்ப தேதினாலே
நாதமங்கே பத்தாச்சு நாதங்கேளு
வல்லவனே சத்தியெந்தாய் பூசைபின்பு
வண்மையாய்ச் சொல்லுகிறேன் செயத்தைக்கேளு
அல்லவனே யகண்டமென்ற வதனின் மேலே
யகண்டபரா பரனையல்லோ பூசிப்பாய்கேள்
செல்லவே மனதங்கே பூண்டு தானால்
செப்புகிறேன் சிவபூஜை செப்பக்கேளே. 159

செப்பக்கேள் சிவபூஜை சித்தர்செப்பார்
செப்பினால் கயிலாசங் கொள்ளையென்பார்
தப்பல்ல குருபதந்தா னகண்டமாச்சு
சச்சிதானந்தவொளி யொளியாய் நிற்கும்

அப்பனே புலத்தியனே நாற்பத்து முக்கோணம்
மறையாக வங்கங்கே மேருபோலே
ஒப்பமா யாயிரத்தெண் மலருக்குள்ளே
ஓமென்ற குண்டலிக்கு ஐங்கோணமாச்சே. 160

ஆச்சப்பா பஞ்சகர்த்தா ளைந்துபேரும்
ஐங்கோண மானமுக்கோணத் துக்குள்ளாகப்
பாச்சப்பா பஞ்சவர்கள் மூலபீசம்
பரிவாக நடுவறைநாற் காலாப் நால்வர்
பேச்சப்பா சதாசிவன்தான் பலகையாகிப்
பெரியதொரு வனந்தாண்டி மெத்தைமீதில்
வாச்சப்பா போச்சுதென்றே பராபரந்தான்
மவுனமென்ற சிகாரந்தான் மகாரமாச்சே. 161

மகாரமென்ற மூன்றெழுத்தே மவுனமாச்சே
வாச்சுதடா பரவாலை மவுனவாலை
அகாரமென்ற உகாரமொடு நீங்காதானால்
ஆதித்தன் கோடியொளி மதிதான்கோடி
சிகாரமென்ற சிவனப்பா உன்னைப்பெற்றோர்
தேசிகன் போல் தந்தையுற்ற சூட்சுமஞ் செய்வார்
வாரமென்ற வாசிசித்தி வாதசித்தி
மவுனமென்ற சிவபூஜை மார்க்கஞ் சொன்னேன். 162

மார்க்கமாய் சிவதீட்சை பதினொன்றாறே
வளமாகப் பூசிக்க வாய்ப்பு காணும்
கார்க்கவே சிவபூசை மகிமை சொன்னேன்
கயிலாச மார்க்கமடா அகண்டபூசை
யேர்க்கவே புருவமய்யத் திடையேகூடி
யேகமாய் வாசிகொண்டு பூசிக்கமுத்தி
பார்க்கவே பரவெளியில் சிவமோபூசை
பண்ணாத பூசையென்ன பாழ்தான் காணே. 163

பாழான மனத்தாலே கெட்டுப் போறாய்
பார்த்துப்பிண மாய்ப்போனா லென்னகிட்டுங்
கோளான சீஷனுக்குச் சிவபூசையோடு
கொடியதொரு சிவதீட்சை சொல்லலாகா
நீளான சமுத்திரம் போல் வேதசாத்திரம்
நிட்டையில்லாச் சிந்தாந்த நெறியில் நின்றான்
மாளான சேத்துமந்தி லீப்பூந்தாப்போல்
மாண்டுதப்பாப் போச்சுதந்த வரத்தைத்தானே. 164

வரமென்றால் வருமென்று சித்தாந்தந்தான்
வருகிறதும் போகுறது மறியமாட்டார்
பரமென்றால் கண்டசிவ னிலையோ வென்பார்
பார்த்தறியாக் கிரியையிலே பற்றிமாள்வார்
தரமென்ற சைவநெறித் தானேயென்பார்
சமுசார மாய்கையிலே சரியையானார்
திரமென்ற சிவயோகந் தேர்ந்தாலல்லோ
சிறுபிள்ளை ஞானத்தின் தெப்பமாச்சே. 165

தெப்பமிது ஞானத்துக் கேறுமார்க்கஞ்
சித்தாந்தி பேசுகிறார் திறத்தைக்கேளு
தப்பலாம் பரவெளியில் க்ஷணத்திலென்பார்
சவமென்று பேரெடுக்க முன்னேயெல்லா
மொப்பல்ல வென்பார்கள் வேதாந்தத்தை
யுரைக்கரிது வுலுத்தருக்கு வுண்மையாக
அப்பனே புலத்தியனே தேவிபூசை
அளவற்ற பூசையவை யுண்டாங்கேளே. 166

கேளப்பா மூலத்தில் சத்திபூசை
மெடியான சக்கரத்தில் சத்திபூசை
வாளப்பா பராபரத்தில் சத்திபூசை
வளமான நாற்பத்து முக்கோண பூசை
ஆளப்பா வாமத்தி லடுத்தபூசை
அப்பனே பரித்தகட்டின் சக்கரத்தின்பூசை
கேளப்பா இதுவெல்லாங் கிரியையாகுங்
கூறினேன் மவுனசத்தி பூசைதானே. 167

தானென்ற மவுனசத்தி ஆதிசத்தி
தடையற்ற பராசத்தி சாந்தபூசை
வானென்ற அகண்டத்தில் பராபரத்தில்
மருவிநின்ற ஆயிரத்தெண் மலர்க்குள்ளாக
வேனென்ற நாற்பத்து முக்கோணத்துள்
விளங்கிநின்ற தாயொன்று அறுகோணமப்பா
வானென்ற வதறகுள்ளே விந்துகோணம்
வரையடங்கா முக்கோண மதற்குப்பாரே. 168

பாரப்பா வைங்கோணத்துள் விந்துவட்டம்
பரிவான ரீங்கார மதின்மேல் கேளு
பாரப்பா முக்கோணத்துள்ளே கேளு
பண்பான நாதவொலி மவுனவாலை

பாரப்பா வைங்கோணத்துள்ளே கேளு
பள்ளிகொண்ட பஞ்சவர்கள் தேவியைந்தும்
பாரப்பா நாற்பத்து முக்கோணத்துள்
பாங்கான சக்கரம் பதித்திடாயே. 169

பதித்திருந்த சக்கரந்தான் தேவியிடபீசம்
பாசமாய் முக்கோணத்துள்ளே கேளு
மதித்திருந்த வாலையிட மூன்றெழுத்தை நாட்டு
வகையாக வைங்கோணத் துள்ளேகேளு
துதித்திருந்த பஞ்சவர்கள் தேவிபீசஞ்
சுருக்காக முள்மூல வைந்துஞ்சேரு
கதித்திருந்த அறுகோணந் தன்னிற்கேளு
கைகண்ட ஓம்நமசிவாய மென்னே. 170

என்னவே யிப்படித்தான் சக்கரத்தின் மைய
மிதமாகப் பிரமாவு மாயோன்ருத்திரன்
வன்னமே மயேசுரனார் நாலுபேரும்
வளமாக நாலுவர்னக் காலாய்ப்பூட்டி
உன்னவே சதாசிவனோ பஞ்சவர்ணம்
உற்றதொரு பலகையதா யதின்மேற்கேளு
வன்னவே யனந்தபற்ப நாகமெத்தை
யதுமேலே யரனிருந்தார் கொலுவுபாரே. 171

கொலுவாக அவன்மடியி லிருந்தாளாத்தாள்
குமரியடா சிறுபிள்ளை தேவிவாலை
கொலுவாக நவரத்ன முடிகிரீடங்
கொண்டதொரு கண்டரசம் போட்டுக் கரை
கொலுவாக மகரகுழை யாதித்தன் சந்திரன்
கூர்ந்தவழிக் குமிழ்மூக்கு குறுஞ்சிரிப்பாய்
கொலுவாகச் சிவந்தபட்டு வஸ்திரமேபூண்டு
கொங்கை யிரண்டுந் தமனியக்குடமென்றெண்ணே. 172

யெண்ணியே யாலிலையா முதரமீதி
லெழிந்திடு முரோமக்குறியோ இடைதள்ளாடுங்
கண்ணியே யரவப்படந் தங்கப்பாளங்
கமலமது முளைத்தெழுந்த திரிகோணத்துள்
புண்ணியமே செய்தவரே தியானஞ் செய்வார்
பெண்ணவளைக் குறிப்பாகப் பூசைதானும்
எண்ணவே சத்தியிட தீட்சையாலே
யேகாந்தமாய் மவுனபூசை செய்யே. 173

செய்யடா புலத்தியனே யிந்தபூசை
சகத்தோருக்கு வாய்க்காது சித்தர்க்காகுஞ்
செய்யடா பூசைக்குப் பலகாரங்கள்
தீனியுறும் பால்பழங்கள் தூபதீபஞ்
செய்யடா மாமிசங்கள் தேனெய்யோடு
சிறப்பான சுகந்தபரி மளங்கள் கொண்டு
செய்யவே மூதண்ட லேகியந்தான்
தெவிட்டாமல் செப்புவேன் செப்புவேனே. 174

மூதண்ட லேகியம்

செப்புவேன் அருகன்வேர் பலந்தான்பத்துச்
சிறப்பான மிளகதிலே பலந்தானொன்று
ஒப்புவேன் சலம்படிதா னெட்டுக்குள்ளே
யுறவாகப் போட்டு ஒரு படியாய்க் காச்சு
தப்பாமல் மாலைக்கள்ளொரு படிதான் விட்டுச்
சாதகமாய்ப் பசுவின்பால் படிதான்விட்டு
துப்பாகப் பழச்சாறு ஒருபடி தான் விட்டுச்
சுத்தவூமத்தஞ்சாறு படிதான் வாரே. 175

வார்த்த பின்பு சாராயம் வடிக்கக்கேளு
வாகான வெள்வேலம் பட்டையோடு
சார்த்திடுபின் கருவேலம் பட்டையோடு
சமனாக அஞ்சு பத்துப் பலந்தான்தூக்கு
கூர்த்திடுவா யூமத்தை சமூலத்தோடு
கூறாகப் பலம்பத்து கஞ்சாவோடு
சேர்ந்திடுவாய் பலம்பத்து சேரக்கூட்டித்
திரமான சாதிக்காய்ப் பலந்தானொன்றே. 176

ஒன்றான பத்திரிதான் பலமுமொன்று
உத்தமனே லவங்கப்பத்திரியைக் கேளு
நன்றாகப் பலமொன்று கருவாய்ப்பட்டை
நலமாகப் பலம்பத்து தேவதாரஞ்
சென்றாடப் பலமஞ்சு நறுக்குமூலஞ்
சேரப்பா பலமொன்று முந்திரிகைப் பழந்தான்
கன்றான பலமொன்று லவங்கப்பட்டை
கட்டாகப் பலமொன்று பேரீத்தொன்றே. 177

பேரீத்தம் பழம்பலந்தா னொன்றுபோடு
　　பேசாதே பனைவெல்ல மிரண்டுபத்து
காருத்த சர்க்கரையோ பலந்தான்பத்து
　　காட்டாக வங்காளச் சீனிபலம்பத்து
வாருத்த சாராயமிந்த வீதம்
　　வடித்திடுவாய்த் திராவகமதிக கோரங்
கோரூத்த அஞ்சுபடி யதிலேவாரு
　　குமறவே வங்காளச் சீனிபோடே. 178

போடப்பா பலம்பத்து சர்க்கரை யவ்வீதம்
　　புகழான பனைவெல்லம் பலந்தான்பத்து
ஆடப்பா பாகுசெய்து வரவே தீயை
　　யப்பனே கமலமா யெரிப்பாய் தீயைச்
சூடப்பா இதிலேகேள் மருந்து போடச்
　　சொல்லுகிறேன் மிளகொடுதிப்பிலியுஞ் சுக்குங்
கூடப்பா சீரகமு மதுரமோடு
　　குங்குமப்பூ கஸ்தூரி கசகசாவே 179

கசகசா பருப்போடு அபினிக்காயுங்
　　கடியகோ ரோசனையுங் கறுத்த எள்ளும்
நிசமான சாதிக்கா யேலமோடு
　　நிலையான பத்திரிகிராம்பு ஓமம்
வசமான கடுகு வெந்தயமுஞ்சேரு
　　வாய்விளங்க மதிவிடைய நறுக்கு மூலம்
ரசபற்ப வங்காரங்கொத்த மல்லி
　　நாட்டுவாய் விளங்குமொன்று பலந்தானொன்றே 180

பலமான கால்பலந்தான் வழலை கூட்டுப்
　　பாங்காகச் சூரணமே செய்து கொண்டு
குலமான இஞ்சிபலம் பத்து நெய்யில்
　　குமறவே வறுத்ததனைப் பொடியுஞ் செய்து
பிலமான ஊமத்தவிரைப் பலந்தாளஞ்சு
　　பேசாமல் நெய்வார்த்து வறுத்துக்கொண்டு
கலவாமல் சூரணித்து மூன்றுமொன்றாய்ச்
　　கைமுறைகள் தப்பாமல் கடக்கவையே. 181

வையடா வருடமொரு பன்னிரண்டு
　　வாகான சடைக்கஞ்சா சூரணஞ்செய்
பொய்யடா சொல்லவில்லை முன்னுக் கொக்கப்
　　போட்டிடுவாய் கஞ்சாவின் பொடியைத்தானே

மெய்யடா வண்ட மது நூறுடைத்துவாரு
விளங்கவே ஐங்கோல நெய்படிதான் வாரு
நெய்யடா படியிரண்டு தேன்படி தானிரண்டு
நேராகப் பாகுடனே கலக்கிவாரே. 182

கலக்குவாய் விட்டதனைச் சூரணங்களெல்லாங்
கருத்துறவே மெழுகுபத மானவாறே
விளக்குவாய் தீயதனை மெழுகானாக்கால்
மெய்க்கவே பீங்கானி லெடுத்து வைப்பாய்
துலக்குவாய் கற்பூரம் புழுகிரண்டு
சோம்பாக வகைதான் கழஞ்சியிரண்டு
மலக்கமற்ற வயிரவனோ நிருத்தஞ்செய்வார்
மவுனசத்திப் பூசையிலே வைத்திடாயே. 183

வைத்திடவே சூட்சுமமாய் மவுனசத்தி
வாச்சுதடா வாச்சுதடா மைந்தாவென்று
வைத்திடுவாள் ஞானமொடு வாசிவாதம்
வயங்காதே யென்றுசொல்லிக் குளிகையோடே
வைத்திடுநீ லேகியத்தைப் புசித்துயென்பாள்
மாறாட்ட மில்லாத யோகசித்தி
வைத்திடுவார் லேகியத்தைச் சித்தரெல்லா
மறைத்தார்கள் திட் சையைப்போல் வழலைபோல. 184

வழலை

வழலையென்ற முப்பூவைப் பஞ்சகர்த்தாள்
மகத்தான புரியட்டம் பூரணத்தினோடு
வழலையென்ற நாதவிந்தா லாட்டிக்கொண்டு
மதியமுத மானமுலைப் பாலையூட்டி
வழலையென்ற நாமத்தைக் கண்டோங் கண்டோம்
வளமான சோடசத்தி மார்க்கமெல்லாம்
வழலையென்ற கண்டமிது தேவிபூசை
மாதாவின் கைக்கொடுத்துக் கையில் வாங்கே. 185

வாங்கியல்லோ சித்தரெல்லாம் வாதமிட்டு
மட்டில்லா தாடினார் தாயைப்பூசி
ஓங்கியல்லோ லேகியத்தைப் பதனம்பண்ணு
உத்தமனே யோகத்தில் நினைத்தபடிபூட்டு

தாங்கியல்லோ புலத்தியனே உனக்குச் சொன்னேன்
சாதகமா யுலகத்தோர் பூசையென்று
சாங்கமல்லோ செய்தார்கள் பெண்ணை வைத்துச்
சாராயந் தனைக்குடித்துச் சண்ணினாரே. 186

சண்ணியதோர் மாண்பரப்பா தேவிபூசை
சலத்திலே போட்டார்க ளாதலாலே
யெண்ணில்லா நரகத்தே போட்டாளாத்தாள்
இரக்கமற்றாப் போலிருப்பாள் கல்நெஞ்சப்பா
புண்ணியமே செய்தவர்க ளென்னுல் பாத்துப்
புகழாகத் தேவியிட பூசை செய்வார்
நண்ணியதோர் பூசையிறு பட்சத்தொன்றாம்.
நாதாந்த வேதாந்த மிரண்டுமாமே. 187

ஆமப்பா நிருவாணி பூசை கேளு
ஆதியிலே மவுனத்தின் பூசை முக்கியம்
நாமப்பா மூலத்தே யறுகோணத்தில்
நலியாதே யிடகலையில் கீழ்முக்கோணம்
காமப்பா நிருவாணி தேவியாயி
கடிதான சித்திரபுத்திரன் பூசை செய்வோம்
ஓமப்பா நிருவாணி சூட்சுமமாகி
யுத்தமனே வயிரவனைத் தியானஞ் செய்யே. 188

செய்யடா புலத்தியனே அய்யா கேளு
திடமான வடமாலை சுகந்தஞ்சாத்தி
மெய்யடா ஆபரண வஸ்திரஞ்சாத்தி
விளங்கவே அபிடேக மெல்லாஞ் செய்து
கொய்யடா மலர்கொண்டு அர்ச்சனையே செய்யக்
குறியான தோத்திரமு மூலங்கேளு
தையடா நிருத்தமிட்ட மூலவாலை
சாத்தியத்தால் வங்கென்று தரித்திடாயே. 189

தரித்திரம்போம் வஞ்சனைபோஞ் சண்டாளம்போம்
சகலசித்துங் கைவசமாம் லேகியத்தினாலே
விரித்திடவே பொங்குமனம் பொரிக்கறியை வைத்து
வேதாந்த வயிரவனே யென்றுபூசி
மரித்திடவே யொட்டார்பின் கற்பசித்தி
வாச்சுதடா வென்றுசொல்லி வசனிப்பார்கேள்
தரித்திடவே வாதசித்தி கையிலீவார்
சாதகமாய் மவுனத்தே பூசிப்பாயே. 190

பூசிப்பாய் கணபதியே ஆதிமூலம்
புகழாக நடுவிருந்த முக்கோணத்து
ளாசிப்பாய் சகல அபிடேகஞ் செய்து
அப்பனே வஸ்திரமா பரணம்பூட்டி
நேசிப்பாய் சுகந்தபரி மளங்கள்சாத்தி
நிலையாகப் பரமான்னம் பலகாரங்கள்
பாசிப்பாய் பொரிகடலை அவலும்வைத்துப்
பாங்காகத் தூபமொடு தீபங்காட்டே. 191

காட்டியபின் நைவேத்தியஞ் செய்தபின்பு
கலங்காமல் வாசியினால் லட்சியத்தை மூட்டி
மூட்டியபின் பிரணவத்தின் வாலையாலே
முழுமோசம் வாராமல் சத்தியத்தினோடே
தாட்டிகமாய்த் தோத்திரஞ்செய் தவறிடாமல்
சகலபரி பாஷையொடு ஞானஞ்சித்தி
மாட்டியபின் வாசிசித்தி குளிகைசித்தி
வளமான காயசித்தி யாச்சுதானே. 192

தானென்ற லட்சியத்தின் மார்க்கஞ் சொல்வேன்
தப்பாது புலத்தியனே சார்ந்துகேளு
ஏனென்ற ஞானமது லோகத்திற்பேயா
மென்பார்கள் பேயப்பா வுலுத்தமாண்பர்
வானென்ற லலாடத்தே தூக்கும்போது
மருவியதோ ரருமறதி சம்பத்தினோடே
கானென்ற கரணவிதி காட்சியாலே
கண்டதுவுங் கேட்டதுவுங் காணலாச்சே. 193

ஆச்சப்பா புலத்தியனே யுன்தேகத்தை
யாதார பூசையிலே சூட்சுமமாக்கி
வாச்சப்பா போச்சுதடா லட்சியந்தான்
வாகான கணேசனங்கே யாத்மாவாகும்
பூச்சப்பா ஒன்றுமில்லை மனம்போகாவிட்டால்
பூசையிலே லட்சியத்தைப் பூட்டாவிட்டால்
பேச்சப்பா லோகத்தா ரேதாமென்பார்
பிரபலமாம் ஞானத்துக் காதியாமே. 194

ஆதியென்ற மவுனசத்தி வாமவாலை
யப்பனே யறியார்க ளுலகத்தோர்கள்
சாதியென்ற கிரியையிலே மவுனவாலை
சாற்றுகிறேன் பூசைவிதி தப்பாதப்பா

நீதியென்ற ஆயிரத்தெண் மலரினுள்ளே
நிலையான நாற்பத்து முக்கோணத்தை
வாதியவன் பூசைசெய்யக் கிரியைசொல்வேன்
மகத்தான மவுனமென்ற வாலைதானே. 195

வாலையிலே அஞ்சுவித தீட்சைசோதி
வளமாகப் பூசித்த மகிமைகேளு
வாலையொரு பெண்ணையப்பா பக்குவத்தில்
வாகான பொற்பதும மாதாவென்று
வாலையிலே பூசிக்க நாற்கால்மேலே
வளமான பலகைதனில் மெத்தைபோடு
வாலையென்ற பெண்ணைவைக்க வலகுரோம
மாற்றியே சுத்தியதாம் வழியைக்கேளே. 196

கேளப்பா பெண்தானுந் தீர்த்தமாடிக்
கெடியான விரதமா யிருக்கச்சொல்லி
யாளப்பா சகலவாபரணம் பூட்டி
யப்பனே பட்டுவஸ்திரந் தானுஞ்சாத்தி
சூளப்பா சுகந்தாதி பரிமளங்கள் தானுஞ்
சுத்த சைதன்னியத்தைத் துலங்கப்பூசி
வாளப்பா பலகையின் மேலிருக்கச்சொல்லி
வசனமாய் சிவசூட்சங் காதில்செப்பே. 197

செப்பிடாய் பிரணவத்தின் வாலைவாசி
திறமாக லட்சியமா யிருக்கச்சொல்லி
ஒப்படா கண்மூடிப் புருவமய்யம்
ஒளியாகு மென்றுசொல்லி யுறுதியாக்கி
மெப்படா மெய்த்தனத்தின்மேல் பூசைபண்ணு
விளங்கவே மவுனத்தின் வாலையாலே
வைப்படா இடைவாம வாலைபூசை
வளமாகக் கடிதடத்தில் மவுனம்வையே. 198

மவுனம்வைத்தே கரிகரந்தான் பண்ணுபண்ணு
வளமாக அபிடேக மெல்லாம்பண்ணு
மவுனம்வைத்தே சுத்திசெய்து தட்டமீதில்
வண்ணமய்யா ஆலவட்டம் வாசல்கீழாய்
மவுனம்வைத்தே நாற்பத்து முக்கோணத்தை
மயங்காமல் பாங்குடனே வைத்துப்பூசி
மவுனம்வைத்தே கற்பூரம் புழுகுபூசி
வாசமாய் சுகந்தபரி மளங்கள் சாத்தே. 199

சாத்தியே மவுனத்தில் வாலைதீட்சை
சாதகமா யஞ்சுவித தீட்சையோதி
மாத்தியே யன்னமொடு பலகாரங்கள்
மாமிசங்கள் முட்டையொடு பொரித்துவைத்துப்
போற்றியே லேகியத்தை முன்னேவைத்துப்
புகழாக நைவேத்தியஞ் செய்துகொண்டு
தேற்றியே தூபமொடு தீபங்காட்டித்
திரமான கற்பூரம் பணிமாறுவாயே. 200

பணிமாறுங் காலத்தே மவுனதோத்திரம்
பத்தியுறும் வாலகையி லேகியத்தையீந்து
பணிமாறுங் காலத்தே கொடுக்கவாங்கிப்
பராபரையே அருள்தாவென் றஞ்சலித்துப்
பணிமாறுங் காலத்தே சகலசித்தும்
பரிவாகத் தாவென்று வாங்கிக்கொண்டு
பணிமாறுங் காலத்தே பணிந்துதெண்டன்
பண்ணுவாய் பூசைவிதி தீட்சைமுற்றே. 201

அகஸ்தியர் தீட்சாவிதி 200 முற்றிற்று

உ

பரமபதி துணை

அருள்ஞான சாதனமென்னும்

துறையறி விளக்கம்

சீராய்ந்து பார்த்துரைக்கும் பெரியோர்பாதம்
        சென்னியின்மேல் கொண்டடியேன் திறமதாக
ஆராய்ந்து பார்த்தாறு முகனைப்போற்றி
        அருந்தமிழா லவன்புகழை யன்பாய்ப்பாட
காராரும் குழல்வல்லி பங்கனெங்கோன்
        கலாபமயி லேறிவிளை யாடுஞ்சோலை
சூராதி சூரனென்ற துறையைப் பார்க்கில்
        சூரியனும் சந்திரனும் தோற்றமாமே.

பருதிமதி யனுதினமும் தேடும்நாடு
        பங்கயன்மால் அடிமுடியும் காணாநாடு
கருவிகர ணாதியிதி லொடுங்கும்நாடு
        கலாபமயில் விளையாடிக் களிக்கும்நாடு
அருவியன லாறோடு மமுதநாடு
        ஆனந்தக் கோட்டையெனும் அழியாநாடு
சுருதிமுடி திருவாடு துறையைப் பார்க்கில்
        சூரியனும் சந்திரனும் தோற்றமாமே.

மூலமுத லாறுதலம் கீழேதள்ளி
        முதிர்ந்துநின்ற மேலாறு தலத்தைநோக்கி
கால்நின்ற யிடங்கண்டு காலனையுந்தள்ளி
        கனகக்கோடி முனைமையம் கருத்தைப்பாய்ச்சில்

ஆலமுண்ட கண்டர்பதம் அர்ச்சித்தேதான்
அறுமுகவன் திருவிளையாட் டறிந்துகொண்டு
சூலகரன் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 3

ஐந்துபெறும் பூதங்கள் ஒன்றாய்ச்சேர்ந்து
ஆதாரம் கடந்துநிரா தாரமாறில்
வந்துமயிர்ப் பாலம்நெருப் பாறுதாண்டி
வன்னிமுனை மீதிலே மனதைப்பாய்ச்சில்
கந்தமயில் சேவல்கொடி யங்கேகாணும்
கருத்தினா லறிந்துமனம் கண்டுதேறில்
தொந்தமிடும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 4

மலைவாசல் மதியிரவி யடையும்போது
வன்னிஒளி தீக்காடு மதியோகோடி
தலைகிழாய்க் கால்மேலாய் தமரில்புக்கிச்
சச்சிதா னந்தவெளி சார்ந்துகண்டு
உலைவாயில் மெழுகதுபோ லுருகியுள்ளம்
ஒடுங்கிநிலை பெற்றவர்க்கு ஒளிகள்காணும்
துலைகாணும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 5

மத்திரதந் திரயோகம் வந்ததெங்கே
மறைஞான சாஸ்திரங் களொடுக்கமெங்கே
இந்திராதி தேவர்சபை ரிஷிகளெங்கே
இரவிமதி உதித்ததெங்கே யடைவதெங்கே
நந்திகொலு விருந்ததெங்கே நடனமெங்கே
நடுவன்னி நிலையெங்கே நடுவேசென்று
சுந்தரவேல் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 6

இடுகாடு பின்னதென்று அறியமாட்டார்
இரவிதனை மதியமதி லிருத்தமாட்டார்
நடுவான சுனைகண்டு மூழ்கமாட்டார்
வாசியின்மே லேறிவிளை யாடமாட்டார்
தடுக்காத மனக்குரங்கைத் தடுக்கமாட்டார்
சச்சிதா னந்தவெளி சார்ந்தபேர்க்கு
சுடுகாடாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 7

தீனியிலே ஆசைகொண்டு திரிந்துநீயும்
செத்திறந்து செத்திறந்து ஜெனியாதேகேள்
யோனியெனும் படுகுழியில் பாம்பங்குண்டு
ஒடுங்காது கடித்தவிடம் மீளாதப்பா
சீனியிலு மதிகாசந் தேனுமல்ல
சிகப்புமஞ்சள் கருப்புவெள்ளை நீலமல்ல
சூனியமாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 8

கலையிருந்த விடமெங்கே சுவையாறெங்கே
கருத்தரித்த விடமெங்கே தனலாறெங்கே
நிலையிருந்த மனமெங்கே காமமெங்கே
நிட்டையொடு ஞானமுறை நெறிகளெங்கே
புலையொழிந்த தலமெங்கே பூசையெங்கே
புண்ணியபா வங்கள்மன மற்றதெங்கே
துலையுமென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 9

கடகரியைப் பிடித்ததன்மேல் கால்கொண்டேறி
கடைக்கோடி நடுத்தெருவே கரியைக்கட்டி
வடவையன லாறுமயிர்ப் பாலந்தாண்டி
வனசமலர் ஆயிரத்தெண் வாவிமூழ்கி
நடனமிடும் சபைமேவி குறத்திதெய்வ
நாயகனைக் கண்டுதொழு திறைஞ்சிப்போற்றி
சுடரொளியாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 10

ஆதியந்த நடுவுமல்ல ஆண்பெண்ணல்ல
அலியுமல்ல உருவுமல்ல ரூபமல்ல
ஜாதியென்ற யெழுவகையும் தோற்றமல்ல
தளர்பூமி நீர்க்காலும் வெளியுமல்ல
ஓதியநூல் அறிவுமல்ல உணர்வுமல்ல
ஒளியுமல்ல வெளியுமல்ல ரூபாரூபம்
ஜோதியென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 11

வந்ததையும் போனதையும் காணமாட்டார்
மனமிருந்த யிடம்பரமென் றெண்ணமாட்டார்
சிந்தினதைப் பொருக்கியொன்றாய் சேர்க்கமாட்டார்
திருநடனங் கண்டுதெரி சிக்கமாட்டார்

அந்தரத்தே வாசிமல ரறியமாட்டீர்
ஆறுமுக மொருமுகமாய் அந்தரத்துள்
தொந்தமிடுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 12

மாகமுகில் நிறைந்தெருமை தன்னிலேறி
மறலிவந்தா லவனையும்நீர் மறிக்கமாட்டீர்
தேகமதை ரட்சிக்க வழியும் காணீர்
சித்தாந்தம் வேதாந்தம் தெளியமாட்டீர்
ஆகம்விட்டு உயிர்போகும் போதில்வீழ்ந்து
அழுதபயம் விட்டுமன தாறிப்போவீர்
தோகைமயில் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 13

விழிநடுவே மெய்ஞானம் வெளியதாகும்
வேலவனார் திருக்கூத்தை மேவிப்பாரு
அழிவறியாத் தேனூறும் குலத்தைக்காண்பீர்.
அமுர்தமங்கே பாய்ந்தொழுகு மருவிபோலே
தெளிவதனால் சிந்தைதனில் கண்டுதேறில்
தேகம்விட்டு உயிர்பிரியா திருக்கும்சிந்தை
சுழிமுனைமேல் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 14

பண்டையனு மாலுமடி முடியுந்தேடிப்
பாரும்விண்ணுந் தேடறியாப் பாதந்தன்னை
சுண்டமதி லூடேறி யிடைபின் ஒன்றாய்
கடைக்கோடி மத்தியிலே சுருதிச்சென்றால்
அண்டபிண்டம் ஒன்றாகி யமர்ந்தமூலத்
தடிமுடியுங் காணுமங்கே அறிவார் நல்லோர்
தொண்டைமுனை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 15

அம்பத்தோ ரக்கரத்தால் நவத்துவாரம்
அடைத்துஒரு வழிகூடி யகண்டவாசல்
இன்பமுறப் புகுந்துவறு கோணத்துள்ளே
இருந்துவிளை யாடிவரு மெங்கள்கோமான்
வெம்பாத பலவடிவாய் விளங்குமெய்யன்
மெல்லடியைப் பணிந்தவர்க்கு வினைமூன்றும்போம்
துன்பமறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 16

கலையான ஜீவனீ ராறுமுள்ள
கழியுமொரு நான்குகழி யாமலுள்ளே
நிலையான பரைவாசல் தன்னில்கூட
நீலமயில் வாகனனார் நிர்த்தங்காணும்
தலையான வெளிதனில் ஏறிச்சென்றால்
சச்சிதா னந்தகுரு தாளுங்காணும்
துலையாத திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 17

அழுதுவிழுந் துருண்டுபுரண் டலறியேங்கி
ஆவியெங்கே போச்சுதென்று அலறுவார்கள்
முழுதுயிரை யெமன்கொண்டா ரென்பார்மாந்தர்
முன்புவிட்ட குறைமுடிந்த முறைமைகாணார்.
உழுதுபயி ரிட்டவர்க ளுண்ணலாகும்
ஒருமனதா யறிவில்நின்றோ ருண்பார்ஞானம்
தொழுதுருகித் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 18

அணையேது கரையேது நிலையங்கேது
அமுர்தம்வரு மானந்த வாரிக்கப்பால்
பிணையேது போவதற்குத் துணைதானுண்டோ
பெருங்காடு கரடிபுலி பெருக்கமுண்டு
யணையாம லொருமனதாய் வள்ளிபங்கன்
பதம்நெஞ்சில் மறவாமல் பாதைகூடி
துணையர்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 19

அல்லேது பகலேது இரண்டுமில்லை
ஆசையினால் மாய்கையினால் ஆண்மையேது
உல்லாசக் கெருவங்க ளொன்றுமில்லை
உருவேது அருவேது உண்மைதன்னை
எல்லோருந் தேடி அலைந் திருந்தார்காணார்
எங்கோமான் வள்ளிபங்க னிருந்தவீடு
சொல்லாத திருவாடுதுறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 20

கற்புடைய மனத்தோர்கள் கால்ரெண்டைத்தான்
கடைக்கோடி நடுத்தெருவே கட்டும்போது
உற்பனமு மறிவார்க ளுண்மைகாண்பார்
ஓரெழுத்து மீரெழுத்து முண்மைகாண்பார்

எப்படியும் கடைக்கோடி முனையில் நிற்பார்
இறவார்கள் பிறவார்க ளெமனைவெல்லார்
சொற்பொருளாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 21

முனிவரொடு ரிஷிமுனிவர் சித்தர்தாமும்
முராரி அயன் தேவர்களும் முன்னோர்தாமும்
மனிதர்களும் அசுரர்களும் மாதவத்தோர்
வாசிபிடித் தேறிமயிர்ப் பாலந்தாண்டி
தனிவழியே தமர்வாச லூடேசென்று
தாண்டவம்செய் தில்லைவனம் சார்ந்தபேர்க்கு
தொனிமுழங்கும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 22

பாழ்வெளியுஞ் சுடுகாடு மறியமாட்டார்
பாரிலுள்ள ருயிரனைத்தும் ஒடுங்கக்காணார்
ஊழ்வினையும் உள்வினையும் ஒழிக்கமாட்டார்
ஓங்கார முருகனின்ற உருவங்காணார்
கேள்விமுத லற்றவிடம் தன்னைக்காணார்
கெருவமுடன் ஓங்கார ஒடுக்கங்காணார்
சூழ்வெளியாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 23

ஆதார மாறும்நிரா தாரமாறும்
ஆறிருகால் புரவிதனி லேறிச்சென்றால்
வேதாவி னோலைவீ ணோலையாகும்
விந்துநா தங்கடந்து வெளியூடேறில்
கேதாரம் வடகலை காசிகன்னி
கிட்டாத வைகுண்டம் சொர்க்கலோகம்
சூதான திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 24

அரிதான நால்வேதம் ஆறுசாஸ்திரம்
அளவற்ற சாஸ்திரங்க ளறிந்தாலென்ன
தெரிவான விஞ்சைமுதல் மந்திரங்கள்
தியானமுதல் கற்றதினால் திரேகமாமோ
மரியாத எழுத்தறிந்து வாசியேற்றி
வடிவேலன் பதம்போற்ற மறலியேது
துரியமென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 25

உடலைவிட்டு உயிர்போகும் போது ஜீவன்
உற்பனமாய்க் கண்டவர்களுண்டோ ஜன்மக்
கடலைவிட்டுப் போகவுமே காணமாட்டார்
காலுரெண்டும் கடைநடுவே நிறுத்தும்போது
மடலைவிட்டுத் தேனமுர்த மருவிப்பாயும்
மறலியில்லை வாணாளு மறியலாகும்
சுடலையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 26

தாயாரும் பெண்டுபிள்ளை தந்தையாரும்
சடலம்விட்டு உயிர்போனால் துணைதானுண்டோ
நீயாரு அவராரு நினைவில்காணும்
நினைவுகெட்டோர் சொல்வார்கள் நெறிபாராமல்
பேயாகிப் போனார்கள் பிணமென்பார்கள்
பிண்டம்விட்டு உயிர்போனால் பிறகுண்டாமோ
தோயாத திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 27

பக்கமுனக் குற்றதுணை வேண்டுமென்றால்
பார்வைரெண்டும் நடுநிறுத்திப் பார்க்கப்பார்க்க
திக்கெட்டுப் பாலகரும் வீரபாகும்
சேவல்மயில் வேலுடனே செவ்வேள்தோன்றும்
ஒக்கவுனக் குற்றதுணை உரைப்பாருண்மை
ஓங்கார முருகனோ ரெழுத்துங்காணும்
துக்கமறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 28

தணிவுகொண்ட புத்தியினால் ஞானமாகுஞ்
சசியிரவி ஒன்றானால் யோகமாகும்
மணிபூர கம்கண்டால் மவுனமாகும்
வாசியொடு மவுனம்வந்தால் சாவுபோகும்
அணியணியா யண்டபிண்ட மடுக்காய்த்தோன்றும்
அறுமுகவ னுன்னைவந்துஅடிமைகொள்வார்
துணிவுகொண்டு திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 29

தொக்கிலுயிர் யெண்சாணு மொடுங்கும்போது
சூக்ஷமமாம் ரூபமது தோன்றுமோசொல்
சுக்கிலமும் நாதமொன்றாய்த் தொக்காம்வேளை
தோணவரு மோஉயிர்தான் சொரூபங்காணீர்

பக்குவமே யிதையறிந்து பார்த்தபேர்க்கு
பரிசமதி லோடிநறும் பாடல்காண்பார்
சொர்க்கமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 30

சங்கநிதி பதுமநிதி இரண்டுமங்கே
தருவைந்தும் வாழ்கின்ற தலந்தானங்கே
திங்கள்ரவி சுற்றிவரும் சிகரமங்கே
திருக்கைவே லாயுதனார் சேர்வையங்கே
மன்றிலுள வுயிரனைத்தும் ஒடுக்கமங்கே
மலமறுத்த வாசலங்கே வள்ளியானை
துங்கனுரை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 31

கைலாசம் வைகுண்டம் பிர்மலோகம்
கனகமந்த ரோமபுரங் காணுமங்கே
மயிலாடுஞ் சோலையங்கே சகஸ்திரத்தெட்டு
வசனமலர் விரிந்திருக்கும் வாவியங்கே
அயனரனும் திருநடன மாட்டமங்கே
அறுகோண நடுவணையை யறிவார் நல்லோர்
துயிலான திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 32

கருவிகர ணாதிகளு மொடுக்கமங்கே
கடைவாசல் வெளிவாசல் காண்பதங்கே
திருநெடுமால் பள்ளிகொண்ட தலந்தானங்கே
சிகரகோபுரத் திருநாள் தீர்த்தமங்கே
அருவிவரும் குளமங்கே அமுர்தமங்கே
அண்டர் தாம் நிறைந்தஅம் பலந்தானங்கே
துருவநிலை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 33

வடிவுடைய பெண்ணாசை மண்ணினாசை
மாசற்ற பொன்னாசை மாற்றிநீதான்
டிகமழும் பூங்குழலாள் வள்ளிபங்கன்
கமலமலர் பாதமதை மனதில்வைத்து
இடியனந்தம் ஒளியாகும் நடனஓசை
இருகோடி வீதிநடு வேறிப்பார்த்தால்
துடிமுழங்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 34

விடமான விழிமடலா ராசைதன்னில்
வீழ்ந்துழன்று திரிந்தலைந்து மெய்சோர்ந்தார்கள்
உடலான தழிந்துஉயி ரிழந்துபோனால்
உண்மையென்ற ஞானமுனக் குதவியாமோ
கடலான பிறவிதனைக் கடந்துஞானக்
கடல்மூழ்கி ஆனந்தக் களிப்புங்கண்டால்
துடராது மாய்கைபெருந் துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 35

தீட்சைபல கற்றதினா லாவதென்ன
சிந்தைபல தொன்றானால் தீட்சைசித்தி
பேச்சுரைகள் பலவுரைத்து மாவதென்ன
பேசாத மௌனமல்லோ பேசவேண்டும்
மாச்சல்மெத்த யில்லையடா மனமொன்றானால்
வாசிநடு வீதியிலே வாழலாகும்
சூட்சமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 36

நீரையள்ளி நெற்றியுடல் நிறையப்பூசி
நிஷ்டைபிடித் திருப்பவர்போல் நிலத்தோர்காண
கூரையில்லா நிருவாண மாக்கிஒன்றுங்
குன்றாமல் இருந்ததினால் மௌனியாமோ
ஆறையறிந் தோரெழுத்தை அறிந்தால்ஞானி
அவன்மௌனி யோகிசித்த னவன்ஜென்மத்தைச்
சூறைகொள்ளும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 37

சத்த ஸ்பரிச ரூபரச கெந்தத்தைத்
தானடக்கி ஒருநினைவாய் மூலம்பாரு
தத்துவந்தொண் ணூற்றாறுஞ் சரணம்பண்ணும்
சசியிரவி ஒன்றான தலத்திலேதான்
நித்தியகலி யாணிகொலு நிறைந்தவீடு
நெடுந்தொகை வாகனனார் தீர்த்தம்பாரு
சுத்தவெளி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 38

கொல்கிறதும் பேய்பிணியோ யேமன்தானோ
கூடுகிடக் குயிரேமன் கொண்டானென்பார்
வெல்கிறதும் தோற்கிறதும் விதியேயென்பார்
விதியான நாதவிந்தை விளக்கிப்பாரார்

புல்கிறதோர் வேளைவிந்து நாதங்கூட்டி
போனகுறை விதிபுருவ நடுவேகாலன்
சொல்கிறதாம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 39

இடியனந்தம் கோடியதாம் சிலம்பினோசை
இருகோடி வீதிநடு ஏறிப்பார்த்தால்
வடிவனந்தங் கோடிரவி மதியாங்காந்தி
மாச்சமல்ல மாச்சல்மெத்த மருவிப்பார்க்க
முடியனந்தங் கோடிவிதி மாலைபூண்ட
முருகேச ரென்றவரு முக்கண்ணோனும்
துடிமுழங்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 40

அருபமதோ அனாதியதோ ஆதியானு
மாதியந்தம் நடுவணையோ ஆணோபெண்ணோ
உருவமதோ யிருவர்களோ ஒருவர்தானோ
ஓங்கார பிரணவத்தா லொடுங்குங்காலம்
புருவநடு வேநீதா னேறிப்பார்த்தால்
பொன்றாத விளக்கொளிதான் பொங்குந்தீபம்
சுரூபமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 41

திக்கிலுள்ள பாலர்களும் தேவர்தாமும்
ஜெகமீரே ழாயுள்ள ஜென்மந்தோறும்
ஒக்கவொரு முகமாகி சமையமீறா
றுடலலைந்து சாஸ்திரவே தங்களாய்ந்து
தர்க்கமிடும் கனகசபை தன்னில்வந்து
ஜாதியென்ற வகையெல்லாஞ் சார்ந்துபார்க்கில்
சுக்கிலமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 42

பொய்யடைத்து வைத்திருந்த மலபாண்டத்தைப்
போற்றிவையா துடைத்தார்கள் புவியிலுள்ளோர்
மெய்யடைத்து வைத்திருந்த பாண்டந்தானும்
வீழ்ந்தாலும் உடையாது வெடித்திடாது
கையுமெய்யு மாகவும்நீ காணவென்றால்
கருதிப்பார் ஞானத்தின் கண்ணினாலே
துய்யவெளி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 43

கருவிருந்த தலமங்கே முப்பாழங்கே
　　கால்கள்பனி ரெண்டாக புரவியங்கே
அருவியெழுங் குளமங்கே வசனம் பூத்த
　　வாயிரத்தெட்டிதழங்கே அமுர்தமங்கே
குருவிருந்த தலமங்கே முச்சந்தியங்கே
　　கோலமயில் மீதில்வரும் குமரனங்கே
துருவநிலை திருவாடு துறையைப்பார்க்கில்
　　சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 44

இரவிமதி உதித்ததங்கே அடைவதங்கே
　　ஈரேழு லோகமுதித் தொடுக்கமங்கே
அரவணியும் பாலாழி யானதங்கே
　　ஆலிலைமேல் பள்ளிகொள்ளு மாயனங்கே
துரகதமா மயில்சேவல் கொடியுமங்கே
　　சூராதி சூரகுரு வானதங்கே
சூரர்குருவாந் திருவாடு துறையைப்பார்க்கில்
　　சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 45

காலையிலே மூலத்தில் கருத்தைவைத்துக்
　　காலிரண்டு நடுநிறுத்திக் கருத்தொன்றாக்கி
மாலையிலே வரும்பிறவி மாய்கைதள்ளி
　　மலமறுத்து வாசிதனை நீக்கிச்சோதி
வேலையிலே வேலெறிந்தோன் பாதம்போற்றில்
　　வினையொழிந்து போகுமடா வேதம்பொங்குஞ்
சோலைகிரி திருவாடு துறையைப்பார்க்கில்
　　சூரியனும் சந்திரனும் தோற்றமாமே, 46

உமையாளும் அரனுமொன்றா யிருந்ததங்கே
　　உதயகிரி அஸ்தமன கிரியுமங்கே
இமையோரும் முனிவர் குழாங் கூட்டமங்கே
　　இரண்டுதலை மாணிக்க மிருந்ததங்கே
சமயமொரு பனிரெண்டும் ஒடுக்கமங்கே
　　சண்முகனும் வள்ளிதெய் வானையங்கே
சுமைதாங்குந் திருவாடு துறையைப் பார்க்கில்
　　சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 47

காமனுட வீடதுதான் விந்துதானம்
　　காலனுட வீடதுநா தாந்தமூலம்
பூமம் விதிதப்பினதும் புருவமையம்
　　போகநிலை தட்டுமறு கோணம்புக்கில்

ஈமமிசை கொண்டுதிருப் பதியேயாரும்
எரிஒளிரும் சுடுகாடு யெண்கோணவீடு
சோமநிலை திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 48

வீடுகட்டி ஒன்பதுபாழ் வாசல்விட்டு
மேல்கூரை தோலாலே மேய்ந்துவைத்து
மாடுகொண்டு மும்மலக்கா டுழுதுஞான
மறைவிதைத்து கருணைவெள்ளம் வயலில்பாய்ச்சி
தேடரிய வயல்விளைந்து அறுத்துமேலே
சிதம்பர விலாசமது செருக்கிச்சின்னம்
சூடுகொண்ட திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 49

படுத்துறங்கும் போதிலைந்து பூதமெங்கே
பஞ்சபொறி புலன்காணம் போனதெங்கே
உடுத்து யிதுலாடையெங்கே யறிவுமெங்கே
உறங்கும் போதினிலுயிர்தான் ஒடுக்கமெங்கே
அடுத்துவறு கோணத்தைத் திறந்துபோற்றில்
அப்பவல்லோ பிறவியறுமல்லா லுன்னை
தொடுத்துவரும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 50

அரியெழுத்து மரனெழுத்துங் கண்டபேர்கள்
அறிவார்கள் மௌனமென்ற வக்கரத்தை
கரியெழுத்துங் கடையெழுத்துங் கண்டபேர்கள்
கருமத்தை மாற்றிடுவார் கருத்தினாலே
வரிஉழுவைத் தோடுடுத்தோன் மாதுங்கூடி
வாழ்ந்திருக்கும் வீடதுதான் மௌனவீடு
துரியமென்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 51

பாரேழு விசும்பும் மாதித்தன்வீடு
பருவரையும் சிறுவரையும் மரத்தின்கப்பம்
காரேழும் கடலேழும் மரத்தினந்தான்
கண்கூட முகங்கூட மரத்தின்கொப்பு
வேராக்கும் பரவெளிமெய்ஞ் ஞானமும்
விந்துநாதம் மரத்தின் வித்ததாகும்
தூராகும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 52

கோணாமல் குணங்காமல் கதிப்பதாகக்
கொடிமுடியா யிரத்தெட்டுக் கவரதாக
காணாமற் கீழ்மேலும் முட்டியெட்டி
கனகமாயிரத் தெட்டு மாத்துமாக
ஊணாம லூணிற்கு ஒருவர்கெட்டி
ஓங்காரக் கம்பவெளி அதற்குமப்பால்
தூணான திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 53

கடைச்சிமிட்டி லிருந்தாலும் கடவுள்பாதம்
கருத்துவைத்துக் காலிரண்டு மூலத்தூணில்
அடைத்திருந்த பொருளெல்லாம் வெளியாய்ப்போகும்
அப்பவல்லோ பிறவியெல்லா மகன்றுபோகும்
உடற்சேர்த்து இடையில்சிறு பாதைதன்னில்
உபயவெளி தனில்நின்று வொளியைப்பாரு
தொடர்ச்சியறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 54

ஆரியநாட் டின்சிறப்பு வறியப்போமோ
அனந்தவிழி அரவுக்கு அடங்காதப்பா
சூரியர்சந் திரர்முனிவர் குருக்கள்சித்தர்
சுடர்மூவர் பஞ்சகர்த்தா சூட்சாதிவீரர்கள்
காரிகையா னந்தமிகக் களிப்பாற்கூடும்
கனகசபை தனில்கூட்டங் கண்கொள்ளாது
சுகிர்தமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 55

கயன்பிறகே பன்னிருகால் புரவிகட்டிக்
காலடங்கக் கீழ்துண்ட முனையைப்பாரு
நயம்பெறவே யிடைவெளியே நடந்துசென்றால்
நடனவொலி கேட்குமடா நடுவீடிற்றான்
ஜெயம்படுங்கா ரியங்களெல்லாஞ் சித்தியாகும்
தேசிகுரு வாண்டியைமேல் தெரிசித்தாக்கால்
சுயம்புலிங்கம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 56

புலிப்படையி லரிபுகுந்தால் பொறியைத்தின்னும்
பொல்லாத தத்துவத்தைப் பிடித்துக்கொல்லும்
கலிக்குமெழு பிறவிகளைக் கனலாய்ப்பண்ணும்
கரைகாணா மும்மலத்தின் கருவைத்தின்னும்

பலிக்குமடா நாம்நினைத்த காரியங்கள்
பரவெளியில் திருநடனப் பாதந்தன்னில்
ஜொலிக்குமடா திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 57

பொய்யும்மெய்யும் பொருந்தியதோற் தொப்பைக் குள்ளே
பூதமஞ்சும் பொருந்தாமல் பொன்றிப்போனால்
உய்யும்வகை யறியாம லொன்றுக்கொன்று
உயிரிழந்து போனதினால் உதவியுண்டோ
தையுமா சியுமடங்கி மனமொன்றாகிச்
சற்குருவின் பாதத்தைச் சார்ந்துநின்று
துய்யநிறத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 58

உற்றாரும் உறமுறையா ராசைவிட்டு
உடன்பிறந்த பொண்டுபிள்ளை யுறவும்விட்டு
பெத்தாரும் தந்தையுட ஆசைவிட்டுப்
பிழையான பிறவியெல்லாம் பின்னேதள்ளி
சித்தாந்தம் வேதாந்தம் தெளிந்துபார்த்து
சிவயோக சாதனைகள் செலுத்துவோர்க்கு
சுத்தாங்கத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 59

சோறுகட்டி வைத்திருந்த தோல்கூடப்பா
தோலழிந்தால் ஜீவனங்கே சோறுமெங்கே
நீறையள்ளி நீறிறைத்து நிஷ்டை செய்வாய்
நிலையெங்கே நினைவெங்கே நெறிதானெங்கே
ஆறைஉண்ணித் தொழுதுநின்றி ராகுங்காணீர்
அச்சபைமேல் அம்பலத்தி லாடிநிற்குஞ்
சூரைவென்றோன் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 60

கற்பணியும் கட்டில்மெத்தை மாடுகன்று
காரிழையாள் தந்தைமக்கள் கரிதேர்வீடு
பொற்பணியா பரணம்பால் சர்க்கரை தேனெய்யும்
புகழுடனே பலபலவாய் போற்றிவைப்பார்
கற்பநிலை நிற்பதெங்கே யழிவதெங்கே
கண்ணெட்டித் தானறியார் கண்டதெல்லாஞ்
சொற்பனமாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 61

பகுத்தறிவில் லாமையினால் பிறப்பில்வீழ்ந்து
பஞ்சபா தகமுகதலாய் பலபாவங்கள்
வகுத்துறைக்க முடியாது ஜென்மங்கோடி
வகையனந்தம் பிறந்திறந்து மாய்ந்தோனிந்நாள்
சகிக்கமுடி யாதினிமேல் பிறப்பிறப்பு
சற்குருதே சிகனேஉன் பதந்தாவென்று
தொகுத்துறைத்த திருவாடுதுறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 62

அருக்கன்மதி செருக்குமிடந் தன்னிலேதான்
ஆறிருகால் புரவிதனை யதிலேகட்டி
பரிக்கிறைத்தான் நற்றுவத்தைப் பரிவாயீய்ந்து
பரவெளியா னந்தவெள்ளம் பண்பாய்க்கொண்டு
அருக்கியமாய்ச் சுருக்கிமலக் காடரித்து
அனல்கொளுத்தி மனதாசையெல்லாம்சுட்டு
சுருக்கிநின்ற திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 63

கபமுகவன் மாலையிரு காலையூன்றிக்
கரும்புரலி யேறியிரு கடையிற்சென்றால்
வியனுலகில் தெரியாத அதிசயங்கள்
விதவிதமாய்க் கண்டுமனம் விந்துஞானம்
பயனுதவ வேண்டுமென்றால் பணிந்துநின்று
பதம்பெறலாம் குமரனங்கே பாதமீவார்
துயரகலுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 64

புயமீரா றுடையானைப் போற்றியண்டம்
பொன்மாது புவிமாது புணர்ந்தாய்போற்றி
ஜெயமாக நாம்நினைத்த காரியங்கள்
செய்திடவுங் கடைக்கண்பார் திருக்கைவேலா
தயவாக எனையாண்டு கொள்வாய்நாளும்
சற்குருவே யென்றுஅடி தலைமேல் கொண்டால்
துயர்தீரும் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 65

ஜாதிவகை சமயவகை யிரண்டும்நீக்கு
தத்துவத்தை ஆராய்ந்து பார்த்துக்கொண்டு
ஓதிஉண ராதஉப தேசங்கற்று
உயர்நிலைக ளறிந்துமன மொடுங்கிநின்று

வேதியனு மறியாத கமலபாதம்
விளம்புவரோ பொட்டெனவே விழிப்பார்க் குண்டாம்
ஜோதிமயத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே 66

ஏங்கிரவி யிபமுகவ னிடத்தில் நின்று
இடைவழியே தடுமாறா தேறிச்சென்றால்
நீங்கிவிடுந் தமர்வாச லூடுசென்றால்
நிலையறியா தொருமனதாய் நின்றாலுள்ளே
வாங்கிவிடும் ஒளிக்குள்சிலம் பொலிதானங்கே
மாட்டுவிக்கும் தடுமாறா தேறிநில்லு
தூங்குவதோ திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 67

அளவளவா யவரவர்க்கு நிறைந்தஜோதி
அதன் பெருமை யாராலு மறியப்போமோ
உளராம லொருமனதா யிருந்துநீயும்
யோகசா தனைதினமும் செய்துவாநீ
தளராமல் மனந்தன்னை பெலப்படுத்திச்
சாதகமாய்ப் பிறவியறுந் தாழ்ந்துசிந்தை
சுழலாத திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 68

போக்குவரத் தறிந்துவுயிர் புறம்போகாமல்
புரவாச லொன்பதையும் பூட்டிஒன்றாய்
நாக்குநுனி மேலேற்றி முச்சந்திக்கண்
ஞானவித்தை நடுநிறுத்தி ஞானவாசல்
தாக்குவது மேலேறி வெளியில் சென்றால்
ஷண்முகமுந் தோனும்விட்ட குறைதானுன்னை
தூக்குமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 69

அடர்ந்தமலர்க் காடுவெட்டி வெளியதாக்கி
ஆறெழுத்தின் வாளாலே அறுத்துச்சுட்டு
படர்ந்துவரும் பிறவியெல்லாம் பஞ்சுத்தீயாம்
பாழ்வினையுந் தீவினையும் பாழாய்போகும்
கடந்திடுவார் பிறவியென் கடலைநீக்கிக்
காமவினை ஜென்மமெல்லாங் கருணைவாளால்
துடர்ந்திருக்குந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 70

பாசவினை யாலறிவு பாழதாச்சு
பரவெளியில் சேர்ந்ததனால் பிறவிபோச்சு
நேரமது உரைத்ததினால் ஞானமாச்சு
நிஷ்டையது புரிந்ததினால் யோகமாச்சு
வாசிதனைக் கற்றதினால் மௌனமாச்சு
மனமிறந்த விடந்தனிலே முத்தியாச்சு
தோஷமறுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 71

நில்லாத மனத்தோர்க்குக் காலங்கேது
நிஷ்டையறி வில்லார்க்குத் தலையங்கேது
கல்லாத மூடருக்கு அறிவெங்கேது
கருத்தறியாக் காமியர்க்கு ஞானமேது
எல்லோரும் போகவென்றால் பாதையேது
எழுத்தறியாப் பாவியர்க்கு இடமங்கேது
சொல்லார்கள் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 72

வித்தில்லாப் பிறவியுண்டோ வெளியொளிக்கு
வித்துண்டோ வெளியொளிக்கு வெளிதான்வித்தோ
சித்தில்லா தண்டமுண்டோ குருவில்லாமல்
தேசத்தில் கண்டறிநீ தேகத்துள்ளே
ஒத்துப்பா ரடைப்பெல்லாம் வெளியாய்த்தோணும்
ஓசையிட்ட மணிபூரம் பேச்சுங்காணும்
சுத்தெல்லாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 73

கீழ்வரம்பு மேல்வரம்பு இரண்டுமொன்று
கீழ்சாதி மேல்சாதி யிரண்டுமொன்று
தாழ்வதுவு முயர்வதுவு மிரண்டும்ஒன்று
சந்தோஷம் சந்தோஷ மிரண்டுமொன்று
மாழ்வதும் பிறப்பதுவு மிரண்டுமொன்று
மனமிறந்த இடந்தன்னை மருவிப்பாரு
சூழ்வெளியாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 74

பரிதிமதி யறியாத யிடத்தைப்பாரு
பரவெளியும் சுடுகாடும் பாதம்காணும்
எருதுபசு ஈன்றவிடம் தன்னைக்காணீர்
இரவு பக லற்றவிடம் தன்னைப்பாரு

ஒருத்திபல ரைச்சேர்ந்த யிடத்தைக்காணீர்
ஒருகாலில் நடக்குமிட முற்றுப்பாரு
கருதிமுடி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 75

அப்பொடுநீர் சேர்ந்ததுபோல் உலகமெல்லாம்
உயிர்க்குயிராய் சத்திசிவம் உலாவிநிற்கும்
எப்படிநீ கண்டறிவாய் யிறைவன் தன்னை
இருதயத்தை பத்திபுத்தி யாகச்செய்தால்
செப்பரை சித்தலம்பே ரம்பலத்தில்
திருநடனம் காணுமதை செப்பார்வல்லோர்
சுப்பிரமன் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 76

ஒளியான வெளியெல்லோ மோடிப்பார்த்து
ஒருகுதிரை இருதெருவி லோடும்வீதி
பழிகாணும் தொட்டவுட னிரண்டாயோடிப்
பாயுமடா முனைகூர்மை பன்னிருகானாடி
விழிகாண நடவாது வேகமெத்த
வெட்ட வெளி வீதிவிலா சத்தில்கட்டு
சுழிபேதம் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 77

தானுவுமை திருநடன சபைதானங்கே
சங்கார காலமதில் சத்திசிவமொன்றே
ஆணுருவோ பெண்ணுருவோ அலியோஅந்தோ
ஆமையதோ ஊமையதோ அருபாருபோ
சேணுலவ வரைந்தமகா மேருவங்கே
தேசத்தில் மூலமதில் சிரசுமூட்டி
தோணுமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 78

பூனையது பதுங்கியெலி பிடித்தாற்போல
பொய்யுடலைக் காலனுயிர் கொண்டுபோவான்
நீச்சுநிலை யில்லையடா பிறவிவாதை
நினைவிலே கண்டறிந்தால் நிலைக்கும்ஞானம்
மாச்சல்வரும் போதில்கதிர் வேலாவென்று
மனதிலே தியானிக்க மறவிவாரான்
சூக்ஷுமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 79

உண்டுடுத்தி ஆண்மைசெய்தோ ருதவாருண்மை
உணர்வில்லா மாந்தருக்கு வருமோஞானம்
பெண்டுபிள்ளை யுள்ளவர்க்குப் பிறவிபோமோ
பின்கலையு முன்கலையு மறியார்க்குண்டோ
விண்டுகந்து முனையறிவார் மேவார்ஞானம்
விதியறிந்து வணங்கார்க்கு வெளிச்சமேது
தொண்டுசெய்து திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே.

பேச்சாலே மெய்ஞானம் வருமோசொல்லு
பிறவியற்றால் சஞ்ஞானப் பேருண்டாகும்
நீர்ச்சாவி போனாக்கால் பொலிகாணாது
நிலைத்தமன மானாக்கால் நிலைக்கும்ஞானம்
மூச்சாலே யோகமது முசியவேணும்
முனைகண்டா லடிகாணும் முழங்குநாதம்
சூக்ஷாதி திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 81

அமையாத கோபத்தால் மறலிவந்து
ஆக்கைவிட் டுயிர்கொடும்போ தவசரத்தில்
சமயமது வந்துதடுத் தாண்டுகொள்ளும்
ஷண்முகனார் சற்குருவின் பாதம்போற்றி
இமையகிரி கொடிமுடியில் நடுவிலாகும்
என்கோமான் வள்ளிபங்க னடியைப்போற்றி
சுமைதாங்குத் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 82

பரியிருகால் கயறுபனி ரண்டதாகும்
பாரிலுள்ளோர் பிடிக்கறியார் பருவஃமாக
கரிமுகவ னடிவணங்கிக் கடைமுச்சந்தி
கனலாறும் மயிர்ப்பாலங் கடக்கமேலே
பிரியாமல் குறிநோக்கித் திரைகள்கட்டிப்
பின்னுமுன்னும் பாயாமற் பேணிக்கொண்டு
திருநிலையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 83

மரியாது பிறவாது வளர்ந்திடாது
வடவையண்டம் பொங்கிடினும் வாடிடாது
பிரியாது நிலையாது புரம்போகாது
பெருக்காது சிறுக்காது பிணங்கிடாது

தெரியாது பெரியோர்கள் தெரிந்து பார்ப்பார்
திசைமுகனுக் கிசையருளும் செவ்வேள் பாதம்
துரியபதி திருவாடுதுறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 84

பன்னிருகால் புரவியின்மே லேறிநாதப்
பரியினிதி முச்சந்தி மயிர்ப்பாலந்தாண்டி
வன்னியொழுக் காறுகடந் திருகோடிக்கு
மத்தியிலே வாசிதனை நிறுத்தியப்பால்
உன்னிசை வையாமல் வாசலுக்குள்
ஊடுருவிச் சென்றிடவா னந்தவெள்ளந்
துன்னிவருந் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 85

பெட்டியிலே அடைத்துவைத்த பாம்புதன்னைப்
பிடித்தாட்டத் தெரியாமல் புலம்புவார்கள்
எட்டிலே இரண்டு வைத்து ஆட்டினாக்கால்
இருபுரமு மாடிவர எதிரேயேறுங்
க்ட்டிற்குள் நில்லாது சிரசிலேறுங்
கடைவாசல் சுழிமுனையில் கட்டும்வாசி
சுட்டியின்கீழ் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 86

பெட்டகப்பாம் பைப்பிடித்து வெளியிலேதான்
பிடித்தாட்டத் தெரியாமல் பிணமானார்கள்
வட்டெழுத்து மெட்டெழுத்தும் வகையாய்க்கொண்டு
வாய்திறவா திடம்வலமும் மாறியாடுந்
தொட்டவிட முட்டுமன விடமீளாது
சொல்லாது சுழியெழுத்தில் கட்டுந்தூலஞ்
சுட்டவி ந் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் ச.ந்திரனும் தோற்றமாமே. 87

அந்திப. லற்றவிடந் தன்னில் வேலர்
அம பிளையை ரிஷிமுனிவ ரமரர்சித்தர்
சந்திரர்மா தவருயர் தவத்தோர்மாந்தர்
சப்தரிஷி பஞ்சகர்த்தர் சமையத்தோர்கள்
திந்திமித்தோர் திரிகிடதி தித்தாதித்தி
ஜெககணதோ மென்றாடுந் தேவதாளந்
தொந்தமிடுந் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 88

பிறந்தவர்க்கு மோக்ஷகதி தேட வேணும்
பின்கலையும் முன்கலையும் சேரவேணும்
மறந்தவர்க்கு மறலிவந்தால் வாலுவாருண்டு
வருமுன்னே வலுக்கட்டிக் கொள்ள வேணும்
அறந்தழைக்க மறுமுகவன் பாதம் போற்றி
அர்ச்சனைசெய் தாலுதவி யகண்டவாசல்
துறந்துநின்று திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 89,90

ஆதியு மனாதியுமா யப்பாலப்பால்
ஆசாரம் ஜாதிசம யங்கள்பாரார்
வேதனால் காயசித்தி ரூபாரூபம்
மெய்யணுவா யீருருவாய் யோனிநாலா
யோதியுண ராதவராய் உண்மையாகி
உலகமொரு பதினாலுக் குயிருமாகி
ஜோதிவடி திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 91

ஞாலமதில் பிறந்தவர்க்குத் தபசுவேணும்
சண்டாளர் செய்யார்கள் க்ஷணப்போதேனும்
காலன்வரும் போதுனக்குத் துணையாருண்டு
கருத்தினால் தேடிவைத்தால் கார்க்குமுன்னே
மூலமதில் மனதுபிரி யாமல்நின்று
முனைநாட்டி நடுவிற்கண் மூடிப்பாரு
தூலம்விட்டுத் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 92

பாராதி விண்முதலாய் கடல்களேழும்
பகிரண்ட கூடமதில் பறந்துநின்று
நீராகி நிலமனல்கால் வெளியுமாகி
நிஷ்களமாய் நிராமயமாய் நிரஞ்சனமுமாகி
வேராகித் தூராகிக் கவராய் மேலாய்
வித்தாகிப் பேரண்ட வெளியுமாகிச்
சூராதி சூரனென்ற துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 93

எல்லையில்லா வயதிருந்த இடத்தைக்காணார்
இருவருக்கு மொருவயதா யிருந்தாரங்கே
தில்லைதனில் நடமாடுந் தேகதன்னைச்
சிதம்பர விலாசமது திலதமாகும்

சொல்லவென்றால் நாவுமுண்டோ மௌனவீட்டை
துதித்துவர இருதயசத் தந்தான்வேணும்
தொல்லையறுந் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 94

போக்குவரத் தறிந்தவனே யோகியாகும்
பொறிபுலன் களற்றவனே ஞானியாகும்
வாக்குறையா திருந்ததினால் மௌனியாமே
மனமிறந்த விடத்தில்நின்றால் மௌனியுள்ளம்
தேக்கியிருந்த தவன்மௌனி யோகிஞானி
ஜென்மமில்லை மரணமில்லை சேஷமுன்னை
தூக்குமது திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 95

ஜெகமீதில் பிறந்துவளர்த் தாண்மைகொண்டு
தேகத்தைப் பேணாமல் போகமுற்றி
மகவாசை யாய்ச்சிலபேர் மாய்கையொன்று
மண்ணாசை யாய்ச்சிலபேர் மடிந்து போனார்
அகமானத் தைவிலக்கி உள்ளன்பாலே
ஆனந்த வெள்ளமதி லழுந்தினாக்கால்
சுகமாகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 96

கற்றதினால் வினைமூன்று மறியமாட்டார்
கருத்தடங்கி மூலமுற்றால் கழியுங்காமம்
அந்தமதில் சத்திசிவ மறியமாட்டார்
அறிந்தாலு முரையார்க ளறிவிற்காணுஞ்
சித்தமொன்றா யுருகிநின்று தலத்தைநாடிச்
சேர்ந்தவர்க்கு மோக்ஷகதி சித்தியாகும்
சுத்தமிகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 97

தீக்கிரைகள் கொடுப்பதற்கு உலகத்தோர்கள்
தேகமதை வளர்த்தார்கள் ஜெகமேழ்ரெண்டுள்
பேதிக்க மனமறியா வருமை நீங்கிப்
பெண்டுபிள்ளை தனைநினைத்து பிணமதானார்
தெகிப்பது மனத்தியல்லா லறியமாட்டார்
தீவிட்டில் தேகமதை தெகிக்கமாட்டார்
சுகிக்கலாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 98

பிறந்திறக்குந் தெய்வத்தைப் பெருமையாக்கிப்
பேயாடி பிணமாகிப் போனார் மாந்தர்
மறந்திடுமே நெஞ்சறியா மனதுதானும்
வதிலவனே ஒருவனதி லவன்வேறுண்டோ
பிறந்தநிலை யிறந்தபேர்ச் சடலந்தன்னைப்
புருவதற்கு இடமுண்டோ புருவமையந்
துறந்துநிதி திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 99

சங்கமதில் மூவர்நின்ற இடந்தானேது
சரவணனாங் குமரனென்ற பெயர்தானேது
பொங்கமிகுஞ் சத்திதனைக் கண்டுஆய்ந்து
புவியதனில் அநேகருடன் வாழ்ந்தாரப்பா
சங்கடமாய் மாய்ந்தவர்கள் கணக்கோயில்லை
சத்தியமாய்க் கூறுகிறேன் அறிந்தோர்கூறார்
தூங்கமிகுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 100

சிந்தினதைப் பொருக்கி ஒன்றாய்ச் சேர்க்கமாட்டீர்
திருநடனங் கண்டுதெரி சிக்கமாட்டீர்
அந்தரத்தில் போகும்வழி யறியமாட்டீர்
அறுமுகமு மொருமுகமா யறுகோணத்துள்
உழுதுபயி ரிட்டவர்தா லுண்ணலாகும்
ஒருமனதா லறிவரநின் றுணர்ந்துபாரு
தொழுதுருகித் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 101

பந்தமெனுஞ் சமாதாரந் தன்னில்மூழ்கிப்
படிமீது ஞானமதை மறந்துவீணாய்
இந்தநில மதனிலே யிருக்கொண்ணாது
இருக்கிடிலோ அவர்களுக்கு முத்தியில்லை
சந்ததமு மில்லா ததிலுள்ளபேர்கள்
தண்ணியின்மேல் பாசிநிற்குந் தகமையானோர்
சிந்தனையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 102

பூதத்தில் அண்டர்களும் காணாநாடு
புனிதமுட னிருப்பதனை யாருங் காணார்
காதகராம் அரக்கர்க ளவருண்டு
கருத்துடனே அவர்களையுங் கடந்து மேலோர்

மீதிலத்தில் அரியதொரு நாட்டைக்கண்டு
மிகுபுகழை அடைந்திடுவார் நீதியீதாம்
சோதனையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 103

தற்பரனின் ஐந்துசிர மறைந்ததெங்கே
தலையதனிற் கெங்கைதனைச் சுமந்ததெங்கே
விற்பனர்கள் தம்முடைய மனதில் தோன்றும்
விளக்கதுமே ஞானமல்லால் வேறொன்றில்லை
சற்குருவின் தூயபாதம் பணிந்து போற்றித்
தயவானா லவர்களிட மறியவேண்டும்
சொற்பொருளாந் திருவாடு துறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 104

சண்டநின்ற விடமதனை யறிந்து கொண்டு
தன்மனதி லுள்ளதொரு வாசிதன்னை
உண்மையுட னிருதயத்தி லிருத்திக்காட்டி
ஒன்பதுமா வாசலை யடைத்துப் பார்க்கில்
கண்டணையாய்க் காலன்வந்து பார்த்துருட்டிக்
கனஉயிரு மில்லையென நினைத்துப்போவான்
துண்டணையாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 105

வாசிதனைத் திரிகடிகை நிறுத்தி வைத்து
வலமான மன்மதனை நிலையொன்றாக்கி
பேசியதோர் கண்செவியை யடைத்துவிட்டுப்
பேணியதோர் நிஷ்டைதனி லிருக்கினென்றன்
ஆசிரிய னெனமதித்து வணங்கிப்போற்று
அன்னவனே உனக்குறுதி யாவானப்பா
தேசிதனித் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 106

காலைதனி லெழுந்துகங்கை நீரிலாடிக்
கருத்துடனே கதிரவனை நோக்கிநின்றால்
நாளைப்பா நாட்களின்னு மநேகஞ்செல்லும்
நாம்சொன்ன மொழியதனை நயந்து பார்க்கில்
வேலையென்ற வேலையது ஒன்றுமில்லை
வீணாகத் திரிவதனால் ஞானமுண்டோ
சோலைசூழ் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 107

வாக்கதனில் பொய்சொல்லல் திருடல்குற்றம்
வகையுடனே ஞானமதை யறிந்துகொண்டு
நாக்குநுனி கீழ்பாகந் தள்ளிவிட்டு
நடுமுதலை யறிந்ததற்கு மேலே நோக்கில்
வாக்கியமாய் நடுவெழுத்து முதலேகாணும்
வர்மமுட னதையறிந்து ஆய்ந்து கொண்டால்
சூக்குமமாய்த் திருவாடுதுறையைப் பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே 108

தத்துவந் தொண்ணூற்றாறும் வேதம் நாலும்
சாஸ்திர சமயமபன் னிரண்டினோடு
சித்துயெட்டு கலைக்யான மறுபத்துநாலும்
தெளிந்தவர்க்கு செனனமொடு மரணமில்லை.
உற்றுப்பா ரடைப்பெல்லாம் வெளியாய்த்தோணும்
ஓசையிட்ட மணிபூரகம் பேசலாகும்
சுத்தெல்லாந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 109

விளக்கிருக்கும் வீடறியார் குருக்களோநீர்
மின்னொளிபேல் பின்னொடுங்கும்வீட்டைப்பாரீர்
பழக்கமிடுங் குறம்பைதனை பாழென்றெண்ணிப்
பராபரத்தில் பரந்தோன்றும் பான்மை பாரீர்
களக்குருக்கள் சொன்னதைநீர் பொருளென்றெண்ணிக்
காவடியில் மலர்பறிப்பீர் கருத்தைப் பாரீர்
துளக்கருத்தால் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 110

நற்பிறவி யதிரூப மானசோதி
நாட்டமுடன் நடுவணைமேல் நடனமாடும்
அரவின்மணி பிரகாச மூலமான
அகாரமெனுந் திருவடிமேல் அமர்ந்தசோதி
புரவியெனு மிருபத்தோ ராயிரந்து அறுனூறு
பொருந்தியே வாசியெனும் புரவியேறு
சுரவிதருந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 111

கருவிகர ணாதிகளும் பகுத்துப் பார்க்கில்
கைக்கனிப் போல் ஒளிதோன்றுங் கால்மேல்கீழாய்
மருவி மண்டலத்தினுள்ளே நடனமாடும்
மாவடியைக் கடந்து அப்பால் வாசியேறும்

உருவிகர வெளியூடு தாக்கிப் பார்க்கில்
ஓவென்ற அகாரமே யொடுங்கிநிற்குஞ்
சுருதியெனுந் திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 112

அப்பிறந்து மண்ணிறந்து அழலும் செத்து
அஞ்செழுத்தும் வழியோடு மதனைப்பாரீர்
பொற்பிறந்த மூலவங்கி தன்னை மூட்டிப்
புண்டரீக வாழ்க்கைதன்னைப் போதவுண்டு
முற்பிறந்த பிறப்பறியா துழல்வீரய்யா
மூன்றெழுத்து மோறெழுத்தா முறையைப்பாரீர்
சொற்பிறந்த திருவாடு துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 113

கோவிலுக்கு ஒன்பதுவாம் வாசல்விட்டுக்
குவலையத்தோர் கொண்டாடிக் குடியிருந்த
மூவர்களு மறியார்கள் மூலஸ்தானம்
முதல் வாசல் கடையோர முன்மையந்தான்
தேவரக சியமிது தான் செப்பொண்ணாது
தில்லைநட மாடுகின்ற செவ்வேள்தானும்
தூவிமகா மேர்முடியிர் துறையைப்பார்க்கில்
சூரியனும் சந்திரனும் தோற்றமாமே. 114

அகஸ்தியர் அருளிச் செய்த அருள்ஞான
சாஸ்திரமென்னும் துறையறி விளக்கம்.
முற்றிற்று.

உ

பரமபதி துணை

மகா மகத்துவம் பொருந்திய அகத்திய மகாமுனிவ ரருளிச்செய்த

தத்துவம் - 300

காப்பு

பாரப்பா யெனையாண்ட சூட்ச நந்தி
பதங்காப்பு திருமூலர் பாதங் காப்பு
நேரப்பா ஜனகாதி யடிகள்காப்பு
நிர்மலமாம் பதஞ்சலியின் பாதங்காப்பு
சீரப்பா புலிக்காலர் பாதங் காப்பு
சேர்ந்தசண்டி கேசன்றன் பாதங் காப்பு
சாரப்பா குகன் தமையன் பாதங் காப்பு
தத்துவநூ லென்னாளுந் தழைக்க வென்றே. 1

காணப்பா அளவிலகண் டாரமெல்லாம்
கரைகாண்பே னென்றவன்காலைப் போலும்
ஊணப்பா யேழ்கடலில் மூஞ்சூர் தானும்
உண்பேனா னென்றுசொல்லு முறுதிபோலும்
ஆணப்பா ஓர்கரையான் புவன மெல்லாம்
அடியளப்பே னென்றுசொன்ன ஆண்மை போலும்
வீணப்பா சித்தாந்த வேதாந் தந்தை
விளம்புவேன் தத்துவத்தை விரித்துத்தானே. 2

ஞானத்தின் பெருமை

தானென்ற ஞானத்தின் பெருமை கேளு
தலைகீழாய் பஞ்சாக்கினி யிடையில் நின்று
கோனென்ற கோடிகற்பந் தவஞ்செய்த பலனும்
குறியசுவ மேதயாகம் நூறுகோடி

தேனென்று செய்பலமு மூவருக்குச்
ஜெகந்தனிலே நூறுகற்பம் சித்தம் செய்தால்
கோனென்ற ஞானநிட்டை செய்ததவ பலத்துக்
கொவ்வாது யென்றுமறை யுரைக்குங்கேளே. 3

ஞானி மகத்துவம்

கேளப்பா கெருடன்முன்பு சர்ப்பந் தானும்
கிட்டவுந்தா னில்லாத கெடியைப் போலும்
வாளப்பா யிருள் தானுஞ் சூரியன்முன்
வரிநிற்கா தோடிப்போம் வரிசை போலும்
கோளப்பா புஞ்சதுதான் வடவையனல் முன்பு
கூடியது நில்லாத குறியைப் போலும்
ஆளப்பா வெகுகோடி பாலஞ் செய்தோன்
அருள்ஞானி தனைக்காணில் அகன்றுபோமே. 4

போகாமற் படைத்தவன் தான் ஞானிபதம்
பூசிப்பான் சிரசில் வைத்துப் புவனங் கார்த்தோன்
தாகமாய் ஞானியவ னினைத்ததெல்லாம்
தலையினாற் சுமந்துவந்து தருவான்பாரு
யேகமாய்ப் புவனமெல்லா மெரித்தோன் றானும்
யிவன்பின்னே திரிந்திடுவா னிவனைக் கார்க்கச்
சாகாத வானவர்க்கு மனிதருக்கும்
சரண்பணியக் கிடைக்குமோ செகத்திற் றானே. 5

தானென்ற ஞானிக்கோர் பிடிதான் பிச்சை
தானளித்தோர் தங்களுக்குப் பலத்தைக் கேளு
கோனென்ற அகரமொரு நூறு கோடி
கோபுரந்தான் கோடி செய்த பலத்துக் கொக்கும்
ஊனென்ற நால்வேதம் சாங்கமாக
ஓதியதோர் வேதியர்கள் கோடி பேர்க்கும்
தேனென்ற அன்னமிட்ட பலத்துக்கு மதிகம்
சித்தாந்தம் வேதாந்தம் செப்பும் பாரே. 6

செப்புமப்பா ஞானியவ னிருந்தயிட மெல்லாம்
செம்பொன்மணிக் கைலாச வைகுந்த மென்பார்
ஒப்பிலவன் செய்வதெல்லாம் உலகத்து ரட்சை
ஓங்கியே யவன்பாதம் பட்டவிடமெல்லாம்

தப்பில்லா யாகாதி செய்தவிட மாகுந்
தானவனைக் கண்டாக்கால் சிவதெரி சனமாம்
அப்பாகே ளவன்வார்த்தை மந்திரமுமாகும்
அதைகேட்டால் வேதமென்பா ரறிவுள்ளோரே. 7

ஞானிகள் பொய்யுரையாரெனல்

அறுபத்து நாலுசித்துப் பெற்றினு மேலும்
அகிலமெல்லாந் தானாளப் பெறினும் பின்னும்
உருபுவன முழுவதுந்தான் வணங்கி யேற்றி
ஒளிர்பாதந் தலைமிசையே தாங்கிடினு முலகில்
மருமரம்பை ஊர்வசி திலோர்த்தம்மை யிந்திராணி
மகளிரொடு கூடிடினும் பிறப்பிறப் பரினும்
இருஞானி பொய்யுரையார் மெய்யே சொல்வார்
யிதுஞானிக் குண்மையென்பா ரிறைவன்றானே. 8

இறைஞானி தனைப்பூசித் தெழுந்துபணிந்தேற்றி
இவன்சரணந் தன்சிரசி லணிந்துகொண்டு
அறையவன்றன் பாதத்தை நேத்திரத்தில் வைத்து
அவன்பாத தூளியினைச் சரீரமெல்லா மணிந்து
உறைகெந்த புட்பமொடு தீப தூபம்
உபசாரஞ் செய்துமவன் சேடமுண்ண
மறையிருளுங் கடுவிருளில் பருதிவரு வதுபோல்
மலநீங்கி யவனெஞ்சில் சிவனுதைய மாகும். 9

ஆமப்பா புலிகரடி சிங்கமதம் பொங்கும்
யானையின் மேலேறி நடத்துவது லெகுவாம்
ஓமப்பா பெரியரவைப் பிடித்து வாட்டி
யோரிடத்தி லடைக்கலமா யெந்தநாளும்
சோமப்பா லுண்டினமை யாயிருக்கலாம்பின்
சொர்ணமது செய்யலாஞ் செம்பைத்தானும்
ஆமப்பா குளிகையிட்டு அண்டமெல்லாம் பார்த்து
அறியலா மனமடங்க லறியச்சித்தே. 10

முதலாவது வாத காண்டம்

தத்துவநூல் தன்னையறிந் தெத்தொழிலுஞ் செய்வார்
தத்துசமயங்கள் பல வித்தை யறிவாரே.
சித்திசெய்த சித்தருக்கு சித்தரென்ற நாமம்
செப்புவதேன் சிவதீட்சை பத்தும்சித்தி

முத்திசத்தி தீட்சைபத்துஞ் சித்திமந்திரம்
மோனசித்தி வேதாந்தஞ் சித்தாந்தஞ்சித்தி
சத்திகா யத்திரியெட் டஞ்செழுத்துஞ் சித்தி
நாரசித்தி பிரசரத்சித்தி யத்வாதசித்தி
தத்துவத்தின் சித்தியொடு தத்துவப்பிரசித்தி
சர்வதயா பரசித்தி காயசித்திதானே. 11

தானென்ற சொரூபசித்தி குளிகைசித்தி
தனிவாத சித்தியுடன் யோகசித்தி
கோனென்ற ஞானசித்தி போதசித்தி
கொடியபிர சாதசித்தி சாம்பவத்தின்சித்தி
தேனென்ற பரப்பிரம சாதசித்தி
செப்பாதே யிருபத்தி அஞ்சுசித்தி
வானென்ற சித்தியெல்லாம் வந்தபேர்க்கு
மகத்தான சித்தரென நாமமாச்சே. 12

ஆச்சப்பா யிருபத்தி அஞ்சுசித்தி
ஆச்சென்ற தெட்சணா மூர்த்திதானும்
பேச்சப்பா யென்னுடனே நால்வருக்கும்
பேராகு மாதியிலே யுபதேசித்தார்
நீச்சப்பா நால்வருமொன் பதுபேராச்சு
நிலையான ஒன்பதிலும் நவகோடியாச்சு
வாச்சப்பா சித்தியெல்லா மடைந்தபேர்கள்
மனிதனல்ல தெய்வமா மக்காள்பாரே. 13

பாரப்பா சித்தியெல்லா மிந்தநூலில்
பாடினே னிந்நூல்போல் மற்றநூலில்
நேரப்பா சித்தரெல்லாஞ் சொல்லவில்லை
நேர்ந்தபடி பலநூலிற் கொஞ்சஞ்சொன்னார்
சாரப்பா சுந்தரனே நூலிற்பார்த்துத்
தப்பாமல் வாதமெல்லாஞ் செய்தானப்பா
ஆரப்பா பிள்ளையென்றாற் சுந்தரமேபிள்ளை
யவனுக்கா யின்னூலை யரைந்திட்டேனே. 14

சுந்தரானந்தர் மறைப்பு

அறைந்திட்ட காயசித்தி வாதசித்தி
யசையாத யோகசித்தி ஞானசித்தி கெவுனசித்தி
உரைந்திட்ட சித்தியஞ்சு மவன்சோ தித்தான்
ஒரு நூலா'யிரமுலகோர்க் காகச்சொன்னான்

திறந்திட்டான் வழலையுப்பு சவுக்காரவைப்புச்
ஜெயமான கடுங்காரஞ் செப்பாதே சொன்னான்
பிறந்திட்ட சுந்தரனூ லாயிரத் திருநூறும்பார்த்துப்
பேராக யென்னூலைப் பின்புபாரே. 15

சட்டைமுனிவர் மறைப்பு

பாரப்பா சட்டைமுனி சவர்க்கார வைப்பில்
பாங்கான தீட்சையுப்பு யெண்ணெய்யை மறைத்தார்
நேரப்பா கல்லுப்புக்கேழு தீட்சை
நிலையான பூனீருக் கட்டதீட்சை
சாரப்பா செய்துகொண்டு கண்ணத்தோடு
தனித்தமுரி தனில்கரைத்துக் காய்ச்சும்போது
சேரப்பா பொட்டிலுப்புக் கஞ்சுதீட்சை
செய்துகொண்டு அடிமுடியிற் கட்டிடாயே. 16

கட்டுவது கொங்கணவர் கடைக்காண்ட சூத்திரம்
கைமுறையாய்ப் பானுப்பை யெலும்புபோலக்
கட்டுப்பு ஓரரைப் படியெள்ளெண்ணெய்
கலரவே கலக்கியதி லுண்டைசெய்து
சட்டை முனி நூல்முறையே சுண்ணஞ்செய்யத்
தப்பாது தொழிலெல்லாஞ் சித்தியாகும்
ஒட்டுவது கொங்கணவர் மறைத்த சூத்திரம்
ஓகோகோ குருவண்டோ டுப்புத்தானே. 17

கொங்கணவர் மறைப்பு

உப்புநின்ற கொழுஞ்சிக்காய்க் குள்ளேபார்க்க
உருவான வண்டிருக்குங் குருவண்டப்பா
செப்பாதே யான்சொன்ன தீட்சையுப்புச்
சேர்த்தந்த வண்டோடு வீரம்பூரம்
ஒப்பான ரசஞ்சூட னுரம் வெண்ணாவி
ஒக்கநன்றாய் மத்தித்துத் துருசிற்பூசி
துப்புரவாய் ரவியிலிடச் சுண்ணமாகும்
சுண்ணத்துக் கிடைசாரஞ் சூட்டநீரே. 18

நீரிலே பூரத்தைப் போட்டு வைக்கில்
நிமிடத்தி லுப்பாகிக் கட்டிப்போகும்
சேருப்புக் கெட்டிலொன்று உப்புச்சுண்ணம்
சேர்த்ததிலே கடுங்கார நீர்விட்டாட்டி

பாரிலே சிறுவில்லை செய்துலர்த்தி யூதப்
பச்சைக்கற் பூரஉப்புச் சுண்ணமாகும்
வேறிதனை முன்புசெய்து கொங்கணர் நூல்கண்டு
வித்தையெல்லாம் பின்புசெய்ய விளக்கமாமே. 19

கொங்கணவர் சிரோரத்தினம், 100ன் பெருமை

ஆமப்பா கொங்கணவர் நூலுக்கெல்லாம்
ஆதியாஞ் சிரோரத்தினத் திரட்டுநூறு
ஏமப்பா அந்நூறை முன்னேபார்த்து
உரைத்தபின்பு மூன்றுகாண்ட சூத்திரம்பாரு
காமப்பா பதினெண்பேர் நூலுக்கெல்லாம்
கருவான நூலாகுந் திரட்டுநூறு
வேமப்பா கொங்கணர்க்கு அந்நூலாலே
மேதினியிற் பிரதிட்டை யாச்சுபாரே. 20

கருவூரார் மறைப்பு

ஆச்சப்பா கருவூரார் கடுங்காரநீரும்
ஆதியென்ற வழலையுப்புந் தீட்சையுப்பு மறைத்தார்
வாச்சப்பா யான்சொன்ன தீட்சையுப்புச் செய்து
பாங்கான கொங்கணர் நூற்கடுங்காரம் வைத்து
தோச்சப்பா சட்டைமுனி சொன்னபடி வழலைச்
சுண்ணத்தை முன்புசெய்து கடுங்காரமேற்றி
நீச்சப்பா யிந்தயிடை ஜெயசாரம் போட
நீராகும் வங்கத்தின் சுண்ணம் போடே. 21

போடப்பா வீரமொடு பூரம் ரெண்டும்
பொடித்ததனைப் போட்டுமே கலக்கி வைத்துத்
தோடப்பா யின்னீரில் துருசு தோய்த்தால்
சுக்கான்போற் கட்டியது வெண்மை யாகும்
காடப்பா நொண்டியிலே நாய்ப்பாகற் றயிலம்
கருவூரார் சொன்னபடி துருசில் மாட்டி
நீடப்பா யிக்குருவாற் றொழிலெல்லாம் பார்க்க
நிசமாகுங் கருவூரார் சொன்னபடி தானே. 22

மச்சமுனி மறைப்பு

சொன்ன நூல் மச்சேந்திரன் மறைத்த சூட்சம்
சொல்லாதே யாவருக்குஞ் சொல்லக்கேளு
வன்னமென்ற யெண்ணூற்றில் கருக்கிடையும் வழலை
வைப்புடனே வேணமுறை வழியாய்ச் சொன்னார்

கண்ணமென்ற குருக்கிடையை மறைத்துப் போட்டார்
சிவசிவா எண்ணூற்றைப் போல் நூலில்லை
சுண்ணமென்ற குருக்கிடைதான் தெரிந்த பேர்க்குக்
காணாமல் ரசசுத்தி மறைத்துப் பாரே, 23

மறைபுகழும் ரசசுத்தி யேதென் றாக்கால்
மைந்தனே யேழுசட்டை வாங்கலாகும்
திறைவெண்பா நாலாயிரம் வயித்தியசிந்தா மணியில்
செப்பினே னிதுவறிந்து தீர்க்கம்பாரு
அரைவெண்பா நூற்படிக்கே ஏழுசட்டை வாங்கி
அதையெடுடத்த பின்புகுருக் கிடையைக்கேழு
உரைகோஷ பீஷமதே குருவுக்கு மாதி
ஓங்குமந்தச் சுத்திரசம் கோஷமென அறியே. 24

அறியப்பா முந்நூறு ஓஞ்சாதி தன்னை
அருந்தமிழாய் மூன்றுசூஸ் திரமாய் சொன்னேன்
செறியப்பா முன்சூஸ்தி ரத்தில் தங்கம்
செம்பாகச் ஜெயபீசம் செப்பினோம் பார்
நெறியந்த முன்செம்பே ஜெயரசத்தை யடக்கும்
நீர்பீஷத் திருமூலர் மந்திரத்தால் தெளிந்து
மறைமொழியின் சூஸ்திரத்தின் படிபீஷஞ்செய்து
வைத்துருக்கி யிடைரசத்தை மாட்டிடாயே. 25

(பீஷ விபரம் பின் பாடல் 76)

மாட்டியொரு மணியாக உருக்கி வாங்கி
மைந்தனே முன் வைத்த துருசு நீற்றை
ஊட்டுமிடை வாங்கிவைத்து உமிழ்நீராலே
ஒடுங்கரைத்து மணித்னக்குப் பூசிவாட்டிக்
காட்டியண்டத் தூளில்வைத்து நாலு சாமம்
கடிந்தெரிக்க நிர்மலம்போல் குருவுமாகும்
மூட்டுகுரு ஒன்றுரசம் பத்துக்கூட்டி
முதிர்ந்தரைக்க வாய்நீரா லுண்டையாச்சே. 26

ஆச்சப்பா யிம்மணியைப் புடஞ்செய்யக் கேளு
அடரவே யெரித்திடுவாய் தோளைக்கட்டி
ஓச்சப்பா கற்போலே யிருகிப் போகும்
உத்தமனே ஊமத்தங் காயில் முப்பான்
நீச்சப்பா கூவிளங்காய் தன்னில் வைக்க
நேர்முப்பான் புடங்கோடங் கிழக்கில் வைத்து
போச்சப்பா முப்பதுதான் புடமும்போட்டுப்
போக்கோடே வெந்தோன்றிக் கிழங்கில்வையே. 27

வைப்பான புடமுப்பான் மாட்டிப்போடு
மைந்தனே கெருடனுட கிழங்கில் வைத்து
மெய்ப்பான புடமுப்பான் விரைந்து போடு
மேனூற்றி யைம்பத்தோர் புடமுந் தீர்ந்து
வாய்ப்பான கரண்டிதனி லுருக்கி வாங்கி
வையடா நிகழ்பந்தத்திற் முப்பான் போடு
செப்பான ரசமுருகி மணியாய் நிற்கும்
சேர்ந்தபுடம் நூற்றென்பத் தொன்றுதானே. 28

தானென்ற யிந்திடைக்குப் பீஜஞ் சேர்த்துத்
தட்டிமுன்போற் குருச்செய்து ரசத்திற் போட்டு
வானென்ற யிருபதுக் கொன்று பிடிக்கும்பாரு
வாங்கி முன்போற் புடஞ்செய்து பீஷஞ் சேர்த்து
தானென்ற புடமுன்போல் போட்டுக் கட்டிக்
கடியகுருச் செய்துரசம் நாற்பதுக்கொன் றிட்டு
மானென்று பார்க்குமுன்னே மணியாய்ப் போகும்
வைத்திந்தப் படிக்கேற்ற மேறலாமே. 29

யேறுமப்பா பலதுறையு மிதுமறைப்ப தாகும்
யென்மகனே பலநூலும் யிம்முறைதான்
தேருமப்பா வலிபுடந்தான் குறைந்த சூதம்
ஜெயமாகா நெருப்பில் வைக்கப் பறந்து போகும்
ஆருமப்பா உலகத்தில் பலதிருட்டுண்டு
அடங்காத கள்ளருண்டு அறியாரப்பா
மாறுமப்பா அஞ்சாறு புடத்திற்கட்டி
மணிசெய்தே னென்பார்கள் மாடு தானே. 30

....

....

தேடான அந்நூற்குக் குருக்கிடையுந் தேர்ந்து
திடமாக வேதையிடச் ஜெயம் பொய்யாது
வாடாத போகர்குரு கமலமுனி சூத்திரம்
மறைத்ததுதான் வழலைவைப்பின் மார்க்கங்கேளு
போடாத முப்பூவால் வழலைவைப்புப்
புகலாமல் துறையெல்லாம் புகழ்ந்து பாரே. 31

கமலமுனி மறைப்பு

புகழ்ந்திட்ட வழலைவைப்பின் போக்கைக் கேழு
போற்றுவது கொங்கணர் கடைக்காண்ட சூத்திரம்
நிகழ்ந்திட்ட படியிணங்கள் யெண்ணெ முன்பு
நேரான வீரம்வெள்ளை யெட்டுக் கொன்றிட்டுத்

திகழ்ந்திட்ட யிணங்கணெண்ணெய் விட்டுக் கிண்டி
ஜெயமான உண்டையைப்போ லுருக்கி வாங்கி
நிகழ்ந்திட்ட நீறுசெய்து உப்பி லேற்ற
நிசமாக மணியாகும் வேதையாமே. 32

வேதிக்கக் கொங்கணவ ரேழுசபையென்றார்
விளங்காம லிதுரெண்டை மறைத்துப் போட்டார்
சேதிக்கச் சித்ரெல்லா மிதுரெண்டை மறைத்தார்
செப்பினார் நூல்களெல்லாந் தெரிந்துபாரு
பேதிக்க வீரம் வெள்ளை விட்டாயானால்
பேராது யெண்ணெய்சவுக் காரங் கூழாம்
ஆதிக்க வழலையது வெண்மையாகா
அடங்காத கண்டர் செம்பு மறுத்திடாதே. 33

அறுத்திடா தோர்சரக்குஞ் சலவை யாகா
அம்மம்மா உப்பைமுந்தி அதட்டிக் கட்டா
உறைத்திடா நவலோகக் களிம்பு மாழா
ஊடுருவி லோகத்தில் நுழைந்திடாது
வெறுத்திடா திம்முறையை மனத்திற் கொள்ளு
வேறான திருமூலர்மறைத்த சூஸ்திரம்
ஒருத்திடா வழலைவைப்பி லெண்ணெய் தன்னை
ஓதாமல் மறைத்துவைத்தா ரொளித்துதானே. 34

திருமூலர் மறைப்பு

ஒளித்திட்ட வழலைமுறை யுரைக்கக் கேளு
உறுதியாய்க் கொங்கணர்நூல் படிக்குச் செய்து
அறுத்திட்ட கமலமுனி சூஸ்திரப் படிக்கு
அடர்க்கரிய குருசெய்து உப்பிலிட்டுக் கட்டி
பளித்திட்ட கோஷதங்கக் குருசுவ் வாது
பாய்ச்சியே யுருக்கிடவே மணியுமாகும்
களித்திட்ட மணியெடுத்து உருக்கிப் பார்க்கக்
கரியில் நின்று கண்விட்டு ஆடுந்தானே. 35

ஆடுகின்ற வச்சிரத்தின் மணிதா னென்பார்
அசையாத மணிரெத்தின முத்தேயென்பார்
கூடுகின்ற வயிராசக் குளிகையென்பார்
கொடுங்கவன மோடுகின்ற கமலியென்பார்

பார்டுகின்ற நாதாக்கள் மயங்கிப் போவார்
பரிரசத்தார் கட்டியதோர் மணியைப் பார்த்துத்
தேடுகின்ற கோஷபீஷக் குருவை யப்பா
செப்பிடாதே திடமாய் உப்பைக் கட்டே 36

திருமூலர் 500ன் பெருமை

கட்டுவது மூலரை நூறு பார்த்துக்
கைவிட்ட நூல்களெல்லாங் கருதிப் பார்க்க
விட்ட குருக் கிடை கோஷ பீஷமப்பா
விட்டவர்க்கு உப்புருக்கக் கரிக்குடிக்கும்
தொட்டரசஞ் ஜெயமாகா தொன்றுஞ் சாகா
துப்புரவா யுருகாது உட்புகாது
திட்டமுட னிக்குருவை நூற்றொகைக ளெல்லாம்
செப்பாமற் சித்தரெல்லா மறைத்திட்டாரே. 37

ஆரப்பா லிங்கமுத லொன்ப துக்கும்
அங்கங்கே கட்டுகளை யறைந்தார் நூலில்
நேரப்பா கொங்கணவர் நூல்படிக்குக் கட்டி
நிசமாகக் கோஷபீஷக் குருவா லுருக்கச்
சேரப்பா மணியாக உருகி யாடும்
ஜெயரசமும் பரிகூட்டி ஒன்பதும்வெவ் வேறாய்
சாரப்பா உப்புடனே சேர வாட்டிச்
சாத்திடவே நவலோகம் வேதையாமே. 38

வேதையென்ற நூல்படிக்கு நாகம் வீரம்
விளங்கஅதைக் கட்டியபின் பீஷரசக்குருவால்
ஓதுகவா திரட்டுமணி வாயுருக்கி வாங்கி
யுட்பீஷ மொன்றுஜெய ரசந்தானொன்று
தீதில்லாச் ஜெயநாக ஜெயவீர மொன்று
சேர்த்துருக்கக் குருவாகும் புனுகிலூட்டிச்
சோதியதை வெள்ளி செம்பிற் பத்துக் காணும்
சொல்லாதே மூலர்நூல் தெளிந்து பாரே. 39

கோரக்கர் மறைப்பு

பாரப்பா கோரக்கர் கருக்கிடை மறைத்துப்
பாடினார் கருக்கிடைதா னேதென்றாக்கால்
நேரப்பா துருசுதா நீற்றுமிட மெல்லாம்
நீராகுங் குருவிந்தா லரைத்துப்போட

சாரப்பா விந்துவே கருவென் பார்கள்
தனித்துருசு முறைக்கெல்லா மிந்நீர் விட்டால்
சேரப்பா நீறாது வெண்மை யாகா
சேர்ந்த தங்கக் குருரசத்தைச் செய்திடாயே. 40

செய்யுமிழ்நீர் முலைப்பால் விந்தமுரி யோடு
ஜெயநாத மஞ்சுமொன்றாய்க் கூட்டிக்கொண்டு
பயமின்றி வீரஉறம் வழலை பூரம்
பாங்கான குருவண்டு பாயுங்கூட்டி
நயமாக அரைத்து வங்கச் சுண்ணத்தாலே
நல்லசுத்தி செய்துகண்டர் மேற்றடவிப் போட
மயமாகப் பற்பமாய்ப் பொறுமி வீழும்
மகத்தான சட்டைமுனி நிகண்டைப் பாரே. 41

சட்டைமுனி நிகண்டு 1200 ன் பெருமை

நிகண்டிலே துருசுசுத்தி நிசமாய்ச் சொன்னார்
நிச்சயமா யின்னூலாற் குருவைச் செய்து
புகன்றுநின்ற கோரக்கர் நூற்படிக்குக் குருவை
புகழாக அங்கங்கே தெளிந்து பார்த்து
அகண்டிந்தக் குருவாலே ரசத்தைக் கட்டி
அந்திடைக்குப் பரிபீஷஞ் சேர்த்துருக்கிப்
புகண்டரசம் வீரமது கூடச் சேர்த்துப்
பூசியே புடம்போடக் குருவுமாமே. 42

போகர் மறைப்பு

குருவெடுத்து நவலோகத் தீய்ந்தா யானால்
கூறாதே மாத்தெட்டுக் காணுமப்பா
மருவெடுத்து வீரமுத லறுபத்து நாலும்
மாட்டுமுன்னே மணியாக உருகியாடும்
திருவெடுத்த யிக்குருவே யாதி யாதி
செப்பாதே போகரிஷி மறைத்த சூஸ்திரம்
கருவெடுத்து முப்பூவின் மார்க்கந் தன்னைக்
காட்டாதே களஷ்றுத்துக் காட்டுகிறேனே. 43

காட்டாதே பொட்டிலுப்புக் கெழுதீட்சை
கல்லுப்பு தனக்கேழு தீட்சைசெய்து
மூட்டாதே பூனீருக் கெட்டு தீட்சை
முத்துப்போற் செய்துகொண்டு மூன்றுங்கூட்டி

நாட்டாதே சுண்ணநீர் தன்னிலொரு தீட்சை
நன்றாகச் செய்ததற்குப் பத்துக்கொன்று
மூட்டாதே வீரம்வெள்ளை கூட்டியுமிழ் நீரால்
முதிரவே யரைத்து நன்றாய்ப் புடத்திற்போடே 44

போட்டெடுத்துக் கடுங்கார நீர்விட் டாட்டிப்
புகழாக வில்லைதட்டிப் புடத்திற்போடு
மீட்டெடுக்கச் சுண்ணமாங் கருப்பில் லாமல்
வெள்ளைநிற மாமளவும் புடத்தைப் போடு
காட்டெடுத்த சுண்ணமிது வழலை யப்பா
காட்டாதே யொருவருக்கும் போகர் மறைப்பாகும்
மூட்டுவது போகர் நூல் முறைகள் செய்ய
முறையொன்றும் பொய்யாது துருசுக்காமே. 45

ஆமப்பா யிக்குருவால் துருசுநீற்றி
ஆதியென்ற குருவாலே நாகத்தை முறித்து
ஓமப்பா யின்னீறா லஞ்சுங்கூட்டி
உத்தமனே ஜெயதுருசுக் குருவைச் செய்து
வேமப்பா யிக்கருவும் வீரங்கூட்டி
வேதித்த நாகக்கட்டின் மேலே பூசி
தாமப்பா செம்பினிலே கொடுத்தா யானால்
தங்கமா மிந்தயிடை தங்கஞ்சேரே. 46

பிரமேந்திரர் மறைப்பு

சேர்த்திந்த முறைமுன்னே பார்த்துத் தேறிச்
ஜெயமான காயசித்தி செய்துகொண்டு
கோர்த்தண்ட கடாகமெல்லாங் குளிகையாற் பார்த்துக்
கூடினார் சிலம்பொலியிற் போக நாதர்
ஆர்த்தயிந்தக் குருப்போக்கை மனதிற் கொள்ளு
அம்மம்மா பிரமேந்திரர் மறைத்த சூஸ்திரம்
வார்த்தகுருச் சரக்குக்கட்டு முறைக ளெல்லாம்
மறைத்திட்டார் மறைப்பெல்லா மாணா கேளே. 47

கேளப்பா போகர் சூஸ்திரத்திற் சொன்ன
கெடியான குருவழலை பண்ணிக்கொண்டு
ஆளப்பா ஜெயசார மிந்திடைக்குச் சேர்த்து
ஆதியென்ற ஜெயநீரில் வீரம்வங்கமிட்டு

நீளப்பா கலக்கியதில் துருசு தோய்ந்து
நெடுரவியில் வைத்திடவே சுத்தி யாச்சு
தாளப்பா திறந்துவிட்ட நாத விந்து
சாரிப்பாய் சரக்கைந்தும் துருசிற்பூசே. 48

வெண்காரக் கட்டு

பூசியே ரவியில் வைக்கப் பொருமி விழும்
போக்கோடே யிந்தயிடை வீரஞ்சேர்த்து.
நேசித்த வெங்காரம் பலகைக் கப்பி
நேரான ரவியிலிடக் கட்டிப் போகும்
ஆசிக்கக் காரயுடை துருசு சேர்த்து
அரைத்து விந்தால் சாரத்தி லப்பிப்போடு
பாசித்த யிரண்டுப்பும் படிகி மூன்றும்
பாங்கான நாதத்தா லரைத்துக் கட்டே. 49

சாரக்கட்டு

கட்டியே ஊசரத்தில் வைத்தெரிக்க
கட்டியது தந்ததம்போ லிறுகிநிற்கும்
ஓட்டியது புகைந்துதென்றால் பிற்கவசங்கட்டி
ஊசரத்தில் வைத்தெரிக்க ஒடுங்கிக் கட்டும்
தொட்டயிந்தச் சாரமொன்று துருசு ஒன்று
சுகமான காரமொன்று வீரமொன்று
தட்டியிதைப் பொடிசெய்து கருவை வார்த்துச்
சாங்கமாய்க் கடுரவியிற் பட்சம்வையே. 50

சொர்ண குரு

வைத்தெடுக்கக் குருவாகு மிதற்கு நாமம்
மகத்தான சொர்ணகுரு வென்பார் சித்தர்
யித்திடைக்குச் ஜெயவீரம் சேர்த்து விந்தால்
யிணங்கரைத்துச் சொர்ணகுரு பூசிக் காய்ந்து
சத்யமிது புடம்போடத் தவழ நீராஞ்
சற்குருவிற் சரிவீரஞ் சேர்த்து ஆட்டி
சித்தாடுந் தங்கத்திற் பூசிக் காய்ந்து
ஜெயமாகப் புடம்போடச் ஜெயமாம் நீரே. 51

தங்கச் சுண்ணம்

நீறான தங்கத்தைச் சூதத்தூட்ட
நிமிடத்தில் மணியாகும் புடத்தைத் தீர்க்கக்
கூராகக் குளிகையுமாம் சாரணையுந் தீர்க்கக்
கொடியநவ லோகத்திற் கோடிக்கோடும்
ஆரான மாற்றுக்கோ ரளவில்லையப்பா
ஆயிரமாம் வெள்ளியிலே பொன்னொன்றுகூட்டிச்
சீராக உருக்கிடவே மாற்றுப்பத்து
செம்பொன்னா மிந்தமுறை தெளிந்துபாரே. 52

தெளிந்துபார் சொர்ணகுரு சரக்கிற்பட்டால்
செணத்திலே கட்டியது ஜெயமாந்தீயில்
ஒளிந்துபார் சொர்ணகுரு களிம்பற்ற செம்பில்
ஊட்டிப்பார் பதினாறு மாற்றுக்காணும்
களிந்துபார் சொர்ணகுரு நவலோகத்திற்
காட்டுமுன்னே சரிமாற்றுக் கண்டுதீரும்
தெளிந்துவந்த பாசாண மறுபத்திநாலிற்
தீட்டுமுன்னே யுப்புவகை கட்டிப்போமே. 53

சீனக்கட்டு

கட்டுமப்பா ஜெயகாரங் கண்டரோடு
கடிந்தரைத்துச் சீனத்தி லப்பிப்போடு
வெட்டுமப்பா பக்ஷத்தில் கட்டிப்போகும்
மேலாக யிந்தயிடை வெள்ளைசேர்த்து
ஒட்டுமப்பா ஜெயசூதங் கூட்டியாட்டி
உத்தமனே வெள்ளிச்செம்பில் புடத்தைப்போடத்
தட்டுமப்பா களங்காகும் செம்பிலீயச்
சரிகைவெள்ளி யீராறு மாற்றுமாமே. 54

திரிகோணச் செயநீர்

மாத்தான சீனமுடன் கண்டர்கூட்டி
மகிழ்ந்தரைத்துப் பொட்டிலுப்புக் கம்பிக்கப்பி
ஊத்தான ஊசரத்தில் வைத்தெரிக்க
ஒடுங்கியது யெலும்புபோ லுருவாய்க்கட்டும்
தீத்தான ரசநாகம் சரியாய்வீரம்
சேர்த்தபொடி நீறாகும் யெடுத்துக்கொண்டு
பூத்தான கம்பியின்மேல் மயிரைச் சுற்றிப்
புகல்நீறில் தோய்த்தெரிய வாட்டிடாயே. 55

வாட்டியே மயிர்சுற்றித் தோய்த்துவாட்ட
மகத்தான கம்பியுப்புச் செந்தூரம்போலாம்
மூட்டியே காரீயத் தியந்தாயானால்
மோசமில்லை பதினாறு மாற்றுக்காணும்
காட்டியே வெள்வங்க மிப்படியே வாட்டு
கனவேதை குடவனிலே காணுங்காணும்
மாட்டியிந்த வெண்கண்டர் ஜெயவிணங்கள்
மருவியே யரைத்துக்கல் லுப்பிலப்பே. 56

கல்லுப்புக் கட்டு

அப்பியே ஊசரத்தி லெரித்தாயானால்
அரகர வயிரம்போற் கட்டிப்போகும்
ஒப்பியே தெரித்துதென்றால் வெடிப்படங்கு வரைக்கும்
முட்டுநீ ஜெயசீன மேலேபூசித்
தப்பியே உலர்த்தியதை யெடுத்துக்கொண்டு
தங்கபற்பஞ் சவாதுடனே காரங்கூட்டி
உப்பின்மேல் பூசியே கரியில் வைத்து
ஊதிடவே கண்டுவிட்டு ஆடுந்தானே. 57

ஆடுகின்ற உப்புக்கு நாலிலொன்று
ஆடகத்தில் சுற்றியே நாதநீரிற்
சூடனெறி தீபத்திற் தோய்த்துவிட்டு
சுருக்காகச் சிவந்துமின்னி செந்தூரமாகும்
பாடுகின்ற வெள்ளிசெம்பு யீயம்நாகம்
பதையாம விரும்பதனிற் பாய்ச்சிப்பார்க்க
ஓடுகின்ற மாத்ததுதான் பத்துபத்து
உப்புக்குப் போகாது புடஜெயமுமாமே. 58

துருசு, சூடன், பூரம், வீரம் கட்டு

ஜெயமான உப்பதனிற் கண்டர்சேர்த்துச்
சேர்ந்தகண்டர்க் கப்பியே யெரிக்கக்கட்டும்
பயமான கண்டருட னுப்புக்கூட்டிப்
பார்க்கையிலே சூரியன்முன் சூடன்கட்டும்
மயமான ஜெயசூடன் கண்டர்சேர்த்து
மாட்டையிலே பூரமது மகிழ்ந்துகட்டும்
புயமான கண்டருடன் பூரஞ்சேர்த்துப்
பூட்டப்பா வீரத்திற் தீபம்வாட்டே. 59

வாட்டயிலே கட்டியது வயிரம்போலாம்
மகத்தான கோஷதங்க பற்பங்கார
மீட்டயிலே சவாதோடு மூன்றுங்கூட்டி
வீரத்துக் கப்பியே உருக்கிப்பாரு
ஊட்டயிலே வீரமெட்டு தங்கமொன்று
உருக்கியே மணியாக்கிப் பொடித்துக்கொண்டு
மூட்டுகுரு வாகுமண்டலந் தன்னிலிட்டுவைக்க
முழுரவியில் மெழுகாகும் பணவிடைதானெடுத்தே. 60

துருசுச் செந்தூரம்

யெடுத்தந்தக் கருவதிலே போட்டுநன்றாய்மத்தி
யிதுமெழுகாஞ் சவ்வீரமெழுகென்பார்கள்
தொடுத்தகுட வயிற்பூசி யுருக்கிப்பாரு
சொற்பசும்பொன் னீராறு மாற்றுக்காணும்
தொடுத்தபரி யொன்றுடனே ரசிதந்தானொன்று
சுத்தக்கா ரீயமொன்று ஜெயவீரமொன்று
விடுத்துருக்கக் குருவாகு மொன்றுஜெய கண்டர்
மேலப்பு நாலிடையில் வாட்டிடாயே. 61

இடைரோமஞ் சுற்றியந்த நாதநீரில்
யிதமாக வாட்டயிலே அருணன்போலாம்
குடவன்முத லொன்பதிலும் நூற்றுக்கொன்று
கொடுத்தாக்கால் வெள்ளியிலே மாற்றுப்பத்து
வெடுத்தந்தக் குருவொன்று ஜெயசாரம் நாலு
யென்மக்காள் வீமொன்று நாதநீரில்
மடியரைத்துப் புடம்போடச் செந்தூரமாகும்
மாட்டயிலே நவலோகம் மாற்றுப்பத்தே. 62

பத்துமிரு கற்பூரஞ்செய்து முன்போற்
பாய்ச்சிவிடு சாரத்தைப் போற்செந்தூரம்
உத்துத்தான் நவலோக மாத்துபத்து
உப்புக்கு மீயத்துக்கு மோடாதப்பா
தப்பியந்த மூலருக்கும் போகருக்கும்
சரக்காறு மாதார மண்டலந்தான்மூன்றும்
வித்தகமா மிரண்டுப்பு யிரண்டுகாரம்
மேற்கண்டர் சாரம் ஆதாரமாமே. 63

ஆதார மாறுமப்பா அறிந்துகொள்ளு
அடைவாள நிமிளைவீர முடகன்காரீயமூன்று
மீதான மண்டலமாம் தங்கமொன்று
மேலான சித்தருக்கு மரிதாமப்பா
சூதான மூலருக்கு மிதுவேவித்தை
சொற்பெரிய காலாங்கிக் கிதுவேவித்தை
நாதனென்ற கொங்கணர்க்கு மிதுவேவித்தை
நாடறியப் போகர்மூலம் முறைதான்யாரே. 64

வாசமுனி மறைப்பு

பாரப்பா பிரமேந்திர ரிந்தமுறைமறைத்துப்
பாடினா ரவர்முறையிம் மறைப்பதாகும்
நேரப்பா வாசமுனி மறைத்த சூஸ்திரம்
நிறைவான சுண்ணந்தா னேதென்றாக்கால்
ஓரப்பா குருவழலைச் சுண்ணஞ்சுண்ணம்
ஓகோகோ சொல்லுகிறேன் சவுக்காரமொன்று
நேரப்பா பொட்டிலொன்று கூட்டியண்ட
நீரில்நே ராயரைத்துப் புடத்தைப்போடே. 65

போட்டெடுக்கச் சுண்ணமதாஞ் சீனம் நீற்றில்
பூட்டியே யெரித்திடு கடுங்காரமேற்றி
தாட்டெடுத்த சவுக்காரத் திடைக்குச்சீனம்
தான்சேர்த்து நீறுசெய்து காரமேற்றி
மூட்டியெடு முன்போலே நூறுதொந்தம்
முனையான சவுக்கார்ரங் கொடியசுண்ணம்
ஆட்டியந்த உப்புக்குச் சாரங்கூட்டி
அசையாத புடம்போடக் கட்டிப்போமே. 66

கட்டியதோ ருப்பெட்டு சவுக்காரமொன்று
கடுவீர மொன்று அண்ட நீராலாட்டி
ஒட்டியதோர் வில்லைசெய்து ஊதச்சுண்ணம்
ஒருவருக்குஞ் சொல்லாதே உயர்த்திவேதை
அட்டவுப்புச் சுண்ணமுடன் வீரஞ்சேர்த்து
அண்டநீ ராலரைத்துக் கிளிஞ்சிநீற்றில்
யிட்டமு னெரித்தெடுக்கச் சுண்ணமாகும்
பிட்டமுமே நூறுதொந்த மேற்றிடாயே. 67

யேற்றிநின்ற பூரமொன்று மால்தேவியொன்று
யெரித்தெடுக்க அண்ட நீரால் சுண்ணமாகும்
ஆற்றியிந்தப் படிதார நூறுதொந்தம்
அண்ட நீ ராலரைத்து யெரிக்கச்சுண்ணம்
நூற்றுமால் தேவியொன்று வீரமொன்று
நுடங்கும்வங்கத் தப்பியொரு புடத்தைப்போட
காற்றுபோல் நீறாகும் வீரஞ்சேர்த்துக்
கலந்தப்பு நிமிளையின்மேற் காய்ச்சிடாயே. 68

காச்சப்பா புட மொன்றில் நீறிப்போகும்
கலந்தப்பு நவச்சாரக் கட்டிமேலே
மூச்சப்பா மண்மறைவிற் புடத்தைப்போடு
மூதண்ட நவச்சாரங் கட்டிப்போகும்
வீச்சப்பா வழலையொன்று வீரமொன்று
மேலான பூரமொன்று சாரம்பத்து
கூச்சப்பா அரைத்தூதச் சுண்ணமாகும்
கொடுநிமிளை வங்கத்தை யிப்படித்தானீற்றே. 69

நீற்றிநின்ற சாரத்தில் வீரஞ்சேர்த்து
நேராக அரைதுருசிற் கட்டிப்போட
கூற்றுகின்ற சுக்கானால் நேர்பாயூது
கொடியரவி மூன்றுநா ளுணர்ந்தபின்பு
நீட்டிநின்ற துருசொன்று வீரமொன்று
நிலையான ரசமொன்று தங்கமொன்று
மாட்டுகின்ற நாவினையு மண்டநீரால்
மாட்டியரைத் தெரியண்ட நீரிற்றானே. 70

தானான குருவாகு மிந்திடைக்குவீரம்
சாற்றியரைத் தெரிந்திடவே நூறுதொந்தம்
கோனான வீரமது குருவேயாகும்
குருவிடைக்கு யேழுசட்டை கழன்றசூதம்
தேனேகேள் சேர்த்தரைத்து யெரிமுச்சாமம்
சேர்ந்தரசம் மல்லிகைப்பூப் போலேநிற்கும்
மானேயிப் படிசூதம் நூறுதொந்தம்
மாளுமடா அண்டவிந்து நீரிற்றானே. 71

நீர்விந்தால் ரசம்நீறும் வீரம்நீறும்
நேர்ந்தரைத்து பரித்தகட்டிற் பூசிக்காய்ச்சி
பாரண்டத் தூளில்வைத்து யெரிநேர்பாகப்
பற்பமது மல்லிகைப்பூப் போலேயாகும்

சாரநீ ரசத்திலிட வெண்ணெய்யாகும்
தப்பாத புடந்தீர்ந்து நாகரசஞ் சேர்த்துக்
நாரசெம்பிற் கொடுத்திடவே களிம்பு நீங்கிக்
கனகமது தசைமாத்துக் காணுங்காணே. 72

இடைக்காட்டார் மறைப்பு

காணப்பா யிச்சுண்ணந் தொந்தங்கோடி
கவர்கோடிதுறைகோடி கணக்கோயில்லை
பூணப்பா வாசமுனி நூல்முறையே பார்க்கப்
பொய்யாது யிம்முறைகள் நூலுக்காதி
தோணப்பா யிடைக்காட்டார் மறைத்தசூஸ்திரம்
சொல்லாது சொல்லுகிறேன் குருக்கிடையின் மறைப்பு
வீணப்பா ஜெயரசத்திற் தங்கந்தன்னை
மேற்பீஷஞ் செய்யாமல் விளம்பினாரே. 73

விளம்பாத பீஷம்விட்டால் ரசமாளாது
மேலான குருவாகா வயங்கூடாது
தளம்பாத வீரலிங்க முள்வாங்காது
தனிநிமிளை சேர்த்துருகி மணியாகாது
களிம்பான் செம்பீய முருவடங்கிக்
கட்டாது கல்லுப்பு யிணங்கன்கண்டர்
உளம்பான தகடுதட்டி வாட்டும்போது
உட்புகுந்து சிவக்காது உண்மைகேளே. 74

கேளப்பா சுத்த ஆடகத்தைப்போடக்
கெட்டுப்போந் துறைக்கெல்லாம் சகலநூலும்
பாளப்பா சொல்லவில்லை பீஷமிட்டுப்
பார்க்கவந்த முறைகளது பலிக்கும்பாரு
கோளப்பா யான்சொன்ன சாஸ்திரமின்னூலில்
கொட்டினேன் பீஷத்தின் குருவைக்கேளு
நீளப்பா தங்கயிடை ரவியிற்சேர்த்து
நிலைத்தகெந்தி ரசலிங்கஞ் சிலையுங்கூட்டே. 75

பீஷ விபரம் (முன் பாடல் 29)

கூட்டியே பொடித்துப்பின் வாட்டிக்காரங்
கொடிய தங்க மேல்வைத்துப் பொடியைப்போட்டு
நாட்டியே அளிஞ்சிவிரைத் தயிலங்குத்து
நலமான செம்பற்றுப் பரிதானிற்கும்

மாட்டுபத்துத் தரஞ்செம்புப் பொடியும்போட்டு
மகத்தான் அளிஞ்சிநெய்யைப் பத்துவிசைகுத்த
நிட்டி யந்தத் தங்கமது வருணன்போல
நிர்மலம்போல் பீஷமுமாம் எடுத்துக்கொள்ளே. 76

கொள்ளப்பா பதினெண்பேர் நூல்முறைக்கும்
கூட்டப்பா யிப்பீஷம் துறைகட்கெல்லாம்
விள்ளப்பா பீஷம்விட்டால் வேதையில்லை
மேலான குருக்கிடையை விள்ளக்கேளு
தள்ளப்பா யேழுசட்டை கழன்றசூதம்
தனித்துருசு நீற்றாலே மணியாய்ச் செய்து
யெள்ளப்பா யிந்தயிடை பீஷஞ்சேர்த்து
யெழில்வீரம் வெண்கண்டர் சேர்த்துஅப்பே. 77

அப்பியே அண்டநீர் தன்னில்வைத்து
அசையாம லெரித்தெடுக்கக் குருவுமாகும்
ஒப்பிந்தக் குருவல்லோ உப்புமுதற்சரக்கு
ஓடாமற் கட்டிமணி யாயிருக்கச் செய்யும்
செப்பாதே வெண்கண்டர் ஜெயசாரகாரம்
சேர்த்துருக்க நாகத்தா விரும்பைத்தானும்
இப்பான செம்பாகுஞ் செம்பிரண்டு
எழில்தங்க பீஷமொன்று உருக்கிடாயே. 78

உருக்கியே வீரம்லிங்கம் சிலைகாரம் நிமிளை
உத்தரைத்துப் புடம்போட நொறுங்கிப்போகும்
நறுக்கியே வெள்ளிதனிற் கொடுத்திடாய்நீ
நல்மாத்து ஒன்பதரை நாடிப்பாரு
சுருக்கமிந்தத் தொழில்தானு முன்னேபார்த்து
சோதித்து யிடைக்காட்டார் சொன்ன நூல்கள்
தருக்கமில்லை பீஷரசங் குருவாய்ச்செய்து
தாக்கிடவே துறைகளெல்லாந் தவறிடாதே. 79

நந்தீசர் மறைப்பு

தவறிடா நந்தீசர் சொன்னசூஸ்திரம்
தன்மறைப்பு சாரங்கட் டாமற்சொன்னார்
துவறியந்தத் துறைதோறும் பச்சைச்சாரம்
சுண்ணமதிற் கூட்டிடவே புகைநீறாகும்.

கவறாது ஓர் சரக்கும் கட்டிடாது
கடியமூ வங்கத்தை யறுத்துப்போடும்
சிவனென்று கட்டியதோர் சாரந்தன்னைச்
சேர்த்துவந்த ஜெயநீரில் சரக்குச்சாமே. 80

சாமப்பா அண்டம்போல் சாரஞ்சிவி
தனித்துருசு நேரிணங்கன் கல்லுப்போடு
வேமப்பா வரைத்தப்பி ஊசரத்திலெரிக்க
விள்ளாதே நவச்சார மடங்கமட்டு மெரித்து
போமப்பா ரசந்துத்தம் வீரம்கண்டர்
போக்கான சவுக்கார மஞ்சுங்கூட்டி
ஆமப்பா யெருக்கம்பால் விட்டரைத்து
அப்பியண்டங் கிளிஞ்சியினா லரைத்துலர்த்தே, 81

உலர்த்தியே புடம்போடச் சுண்ணமாகும்
உற்றபச்சைச் சாரமிட நீறதாகும்
பிலத்தநவச் சாரத்தைக் கிளிஞ்சியண்டநீரால்
பேசாமற் சேர்த்தரைக்க மெழுகுமாகும்
ஜெலத்தில்பச்சைச் சாரமிட மெழுகாகாதொன்றும்
செப்பிய நூ லெல்லாம் பொய் யென்றெண்ணாதே
உலர்த்தியது புடம்போட நீறிப்போகும்
உயரமுரி துளிசேர்த்துப் பனியில்வையே. 82

பனியில்வரும் நீர்தனிலே நாகஞ்சாய்க்கப்
பளிச்சென்று யேழுசட்டை கழன்றுபோகும்
யினியதக டடித்ததனுக் கெட்டுக்கொன்று
யேற்றமாங் கோஷபீ ஷந்தான்சேர்த்துத்
தனியாக வெண்கண்டர் வீரத்தோடு
தாக்கியொரு புடம்போடக் குருவாய்நிற்கும்
புனிதகுரு தங்கத்திற் பூசிப்போடப்
பொற்குருவாம் முதற்குருவா மெட்டுக்கொன்றே. 83

ஒன்றாகச் சேர்த்துநவ லோகத்தூட்ட
ஒளிதங்க மீரெட்டு மாத்துக்காணும்
பொன்றாத சாரத்தின் ஜெயநீ ரெல்லாம்
போக்கான புட்கரணி நீர்க்கொப்பாகும்
நன்றான சீடனுக்கு யிம்முறையைக்காட்டி
நாகனென நந்தீசர் நூலுமீய்ந்து
தூன்றான துறைகளெல்லாம் பார்க்கச்சொல்லு
சொன்னதொன்றும் பொய்யாது வேறுகேளே. 84

உரோமரிஷி மறைப்பு

கேளப்பா உரோமரிஷி மறைத்தசூஸ்திரம்
கெடியான வீரவைப்பை மறைத்துச்சொன்னார்
வாளப்பா வீரவைப்பு வகையைக்கேளு
வளர்சீன மூவைந்து வெடிமுன்னான்கு
கோளப்பா கண்டர்ரெண்டு காரம்ரெண்டு
கொடுஞ்சார மறைகூட்டித் தீனீர்வாங்கி
மீளப்பா லிங்கத்தில் ரசத்தைவாங்கி
விட்டெரிக்கில் தவளம்போல் விரியும்பாரே. 85

விரிந்தரசம் பலமெட்டு கல்லுப்புகண்டர்
மேல்வறுத்து முக்காற்சேர் பேதிவெடிசீனம்
பரிந்தரைச்சேர் பூனீரு வெள்ளையுமோ அரைக்கால்
பாங்கான நவச்சாரஞ் சேர்மாகாணி
சொரிந்தெட்டுங் குப்பிக்குப் பாதியிட்டுச்
சோராம லெரித்திடவே மூன்றுநாட்தான்
பரிந்தெடுக்க வீரமது மேலேயேறிப்
பலகைபோ லிருக்குமதை யெடுத்துக்கொள்ளே. 86

கொச்சி வீரம்

யெடுத்திந்த வீரத்தை முன்போற்சேர்த்து
யெரித்திடவே கொச்சியதாம் யிப்படியீராறு
விடுத்ததொந்த மேற்றிடவே கோடாசூரி
வீரமென்பா ரிவ்வீரம் விரும்பிச்செய்து
தொடுத்தஜலம் விட்டவுடன் உருகிப்போகும்
துறைதோரு மிவ்வீரங் கூட்டுகூட்டு
அடுத்திந்த வீரம்விட்டால் விழலாய்ப்போகும்
அம்பரமாம் வீரம்வீட்டால் நூல்பொய்யாமே. 87

நூலான வீரத்திற் பூரங்கண்டர்
நுட்பமாய்க் கூட்டியதை யரைத்துக்கட்டி
பாலான சூடனுட தீயில்வாட்டிப்
படர்கோஷ பீஷபற்பம் பரிந்துபூசி
மாலாக உருக்கிடவே மணியாய்நிற்கும்
மணிநாலு பரிரேக்கு ஒன்றுசுத்தி
கோலாக உருக்கிலங்கே குருவாய்ப்போகும்
குருவெட்டுக் கொன்றுகுரு வண்டுகூட்டே. 88

கூட்டுஉரம் பூரமுடன் பொடித்துரவி தன்னில்
கொட்டிடவே ஜெயகுருவாம் பணவிடையண்டத்தில்
நீட்டுமுன்னே தயிலமுமாம் பலந்தானொன்று
நீரான குருவொன்று ரசத்திற்கூட்டி
ஆட்டுமுன்னே மணியாகும் தயிலத்தாலே
அம்மம்மா நெகிழத்தில் உருகிப்போகும்
மாட்டுமுன்னே செம்பினிலே மாற்றுப்பத்து
மகத்தான ஒன்பதுக்குங் குருத்தயிலம் பூசே. 89

பூசியே உருக்கவது நாகமாகும்
போக்கோடே நவலோகம் வேதையாகும்
காசியே போய்த்திரிந்தால் வருமோமக்காள்
கனமான வீரத்தை முன்னேபண்ணு
நேசமாய்ப் பலநூலும் பார்த்து உரோம
ரிசிநூலும் பார்க்கஅங்கே முறைபொய்யாது
ஆசையாய் வீரமுன்னே வைத்தேதான் முத்தன்
அறியாதான் சுட்டலைந்து பேயாவானே. 90

பிரமமுனி மறைப்பு

பேய்மக்காள் பிரமமுனி மறைத்த சூத்திரம்
பிசகாமற் செம்புசுத்தி மறைத்துப்போட்டார்
தாயான துருசுனுட செம்பதொன்று
தனித்தரவி யொன்றிரண்டின் சுத்திபோனால்
மாயாது களிம்பொன்று பாஷாணமெல்லாம்
மடிந்தாலும் லோகத்திற் கொடுத்துருக்கில்
வாயாது உலைசிவந்து கருத்துமின்னும்
வாதிகளே யிதையறியாதார் மாடுதானே. 91

தானென்ற சாரநீர் தன்னைவாங்கித்
தனித்தபடி யொன்றளந்து வைத்துக்கொண்டு
கோனென்ற வங்கபற்பம் வீரம்பூரம்
கொடியபலங் காலரைத்து செம்புருக்கிவார்க்க
மானேகே ளெழுதரத்தில் ஊறல்போகும்
வங்கமுடன் வீரமப்பி வழலைப்பூசித்
தேனென்ற சீலைசுற்றி வங்கந்தன்னிற் றோய்க்கச்
ஜெயசுத்தி யாகும்நல்ல துருசுதானே. 92

துருசுச் செம்பு சுத்தி

துருசினுள்ளே நின்றசெம்பு சுத்தியாகச்
சொல்லாதே வழலைவங்க மாதி யாதி
வரிசையஞ்சு மித்திரத்தின் பூத மஞ்சு
மரைத்துருட்டி ரவியில்வைக்க மகத்தாஞ் சுண்ணம்
தெரிசிக்க நிமிளைவங்க நாகஞ் சூதம்
ஜெயமாகும் செம்பிலிட வேதையாகும்
பரிசிக்கச் சுத்தித்த செம்புருக்கிப்
பாச்சப்பா நாகமுடன் வீரந்தானே.

அழுகண்ணிச் சித்தர் மறைப்பு

வீரமுடன் மாத்தெட்டு விரைந்துகாணும்
மேலான நூல்முறைக்கு யிதுவே யாதி
சீரான பிரமமுனி நூலுக் குள்ளே
செப்பாத கருவிதுதான் தெளிந்துபார்த்து
வாரமுடன் செய்துநன்றாய்ப் பலிக்கும் பாரு
வருந்திப்பார் மறைப்பில்லை கண்ணிச் சித்தர்
சாரமுடன் பூவழலை மறைத்துச் சொன்னார்
சாற்றுகிறே னிக்குருவைத் தனித்துச் செய்யே. 94

தனியஉவர்ப் பூவைந்து தரஞ்சுத்தி செய்து
சாங்கமாய்க் கல்லுப்பை யேழுதரங் காய்ச்சி
இனியவெடி யுப்பஞ்சு தரமுங் காய்ச்சி
ஏகமாய்ப் படியமுரி யீரொட்டாகும்
பினியசுண்ண மிரண்டுபடிதான் கரைத்துப்
பின்னிறுத்துக் கல்லுப்புப் படியொன்றில்சாரம்
கனியெட்டுப் படிகரைத்துக் கயிற்றி னாலே
கடைந்திடவே நுரைவரும்போ தெடுத்துக் கொண்டே

கொண்டநுரை கடி[illegible]ன்றிற் ஜலமு மாகும்
கூறாதே படி[illegible] அளந்துவிட்டுக்
கண்டரிரு காரியுப்பு ரெண்டுபண்ணை
கடுவீரம் யெழுவகைக் கரைப்பலந்தான் போட்டுக்
கிண்டியந்த நுரைநீரைக் காய்ச்ச உப்பாம்
கெடியான கடுங்காரம் பூவழலை யாகும்
விண்டபுளி யெட்டுவெடி யுப்புப் பத்து
மேலான கல்லுப்புக் கண்டரோடே. 96

ஓடச்சா ரம்மிணங்கள் பண்ணை யஞ்சு
ஒவ்வொன்றும் பலமரைதான் புளியுப்புக் கூட்டி
தேடாதே'யேழுநா ளிடித்து வாங்கச்
ஜெயமாகக் கட்டிப்போம் வில்லைசெய்து
சாடாதே ஓட்டிலிட்டு உலையி லூதத்
தவளம்போல் நீறாகும் பனியில்வைக்கக்
காடாத ஜெயநீராம் சீனத் தூட்டக்
கடியசுண்ண மாகுமிது யிட்டிடாயே.

இட்டஉப்புநீர் தனிலே பூவழலை யரைத்து
இதமாகப் புடம்போட நீறும்பாரு
தொட்டஅண்ட நீரதனில் தோய்த்தரைத்துப் பூசச்
சுருக்கான சுண்ணமதா முப்பைக் கட்டும்
முட்டஅந்தச் சீனத்தில் சுண்ணங் கூட்டி
முசியாம லெரித்திடுவாய் துறைகள் தோறும்
பட்டறிந்தக் குருவாலே சரக்கைக் கட்டிப்
பாய்ச்சிடவே நிசவேதை பலிக்கும்பாரே. 98

புண்ணாக்கீசர் மறைப்பு

பலித்திடவே யிக்குருவைக் கண்ணிச் சித்தர்
பாடாமல் மறைத்துவைத்தார் பார்த்துச் செய்ய
ஒலித்திடவே யிக்குருவைச் செய்துகொண்டு
ஊட்டப்பா அவருரைத்த முறைபொய்யாது
கெலித்திடவே புண்ணாக்கர் மறைத்த சூஸ்திரம்
கெடியான குருவீரப் போக்கு மைந்தா
நலிந்திடவே குருவீரஞ் சொல்லக் கேளு
நாதாந்தப் பூவழலை நீறு நாலே. 99

கடுங்காரச் செயநீர்

நாலாகுஞ் செயசாரங் கூட்டி யாட்ட
நல்லநீ ராகுமது பனியில் வைப்பாய்
காலான நீர்பூரப் பலகை தோய்த்துக்
கடுரவியில் போடுபக்ஷங் கட்டிப் போகும்
கோலான கடுங்காரச் ஜெயநீர் கேளு
கூடாதே யண்டமுது ஐம்பத் தொன்று
மேலான வெண்கருவைப் பீங்கானிலிட்டு
வெடியோடு சுன்ணமிரு பலந்தான் தூக்கே. 100

தூக்கியே சுண்ணநீர் தனிற் கரைத்துச்
சுத்தநீர் சிரங்கையெருக் கலம்பா லிருசிரங்கை
தாக்குபொடி நீர்சிரங்கை கருவில் விட்டுக் கலக்கித்
தனிப்புனுகு உரம்பூரஞ் சூடனாவி
தேக்குரசங் குருவண்டு சீனங் காரம்
செய்வழலை லிங்கம்வெள்ளை சிலைகோழிக் காரம்
நீக்கரிய வீரமன்ன பேதியீ ரெட்டும்
நிறைவகைக்குக் காசிடைதான் பொடித்துப் போ[illegible] 101

போடப்பா கயற்றாலே கடைய வெண்ணெய்
பொங்குமப்பா பீங்கானில் வேறே வாங்கித்
தேடப்பா மூன்றுநாள் தெளிய வைக்கத்
தென்னீராஞ் சகலகுருச் ஜெயநீராகும்
ஆடப்பா யின்னீரால் ஜெயபூரத்தை
அரைத்தப்பி வாட்டையிலே வீரங் கட்டும்
தேடப்பா யிவ்வீரந் துறைகட் கெல்லாம்
சேர்க்கமுறை பொய்யாது சுத்தியாமே. 102

சுத்திசெய்யு முறைக்கெல்லாம் வீரஞ் சேர்க்கச்
செப்புகின்ற துறைக்கெல்லாம் வீரங் கட்டும்
பத்தியின்றிக் கட்டாத வீரம் போட்டால்
பலியாது ஒருதுறையும் புகைந்து போகும்
சத்தியமாய் நூலெல்லாம் பொய்யென் றெண்ணுஞ்
சண்டாள வாதிகளே யிதுவே மூலம்
கத்துகின்ற பேய்களுமே ஜெயவீர மறியார்
தாணாமற் சுட்டலைந்து கதறுவாரே. 103

சுதற[illegible]மற் புண்[illegible]க்குச் சித்தர் சொன்ன
கைத[illegible] நூல்முறையின் குருவே வீரம்
பதறாதே மூடருக்கு முறை சொல்லாதே
பதினெட்டுச் சித்தர் சொன்ன நூலும்பாரு
உதறாமற் பலநூலுங் கலந்து பார்த்து
உரைத்தபின்பு யின்னூலை யுற்றுப் பாரு
சிதறாதே யான்மறைத்த குருவின் மார்க்கம்
செப்புகிறேன் வழலைவைப்பு நீறுதானே. 104

குருமுனி மறைப்பு

நீறான கற்சுண்ணம் படிதான் ரெண்டு
நிலையமுரி யீரெட்டுப் படியிற் றாக்கு
கூறாகக் கலக்கியே யிருத்துக் கொண்டு
கொட்டப்பா தீட்சைசெய்து பூனீ ரெட்டு
வேறாகக் கலக்கியே யிருத்துக் கொண்டு
மேலான தீட்சையுப்புப் படிதா னொன்று
ஆறாகக் கலக்கியே வைத்துக் கொண்டு
அடியில்நடு வெடியுப்பு முடிமேல் வையே. 105

வேகா வழலை

முடியதுவும் பலமஞ்சு அடிபலந்தா னெட்டு
முனையான நடுவிணங்கன் பலந்தா னொன்று
திடமான கலையத்தி விட்டு ஆட்டி
சீலைசெய்து நூறெருவிற் புடமுந் தீர்த்து
வடிவுடைய அண்டநீர் விட்டு ஆட்டி
மகத்தான வில்லைசெய்து புடத்தைப் போட்டு
கடிதான மூத்திரத்திற் கரைத் திருத்துக்
காய்ச்சிடவே கம்பியதாய்க் கட்டிப் போமே. 106

சவுக்கார வைப்பு

போகாத உப்புஅரைப் படிதான் தூக்கிப்
பொடித்துயெள் ளெண்ணெய்யரைப் படியிற்கலக்கி
வேகாத முன்வழலை நீரைக் காய்ச்சி
விட்டிடுவா யெண்ணெய்யுப்பு விளக்கக் காய்ச்சி
வாகான அண்டம்போ லுண்டை செய்து
வழலையைத்தான் கடுாவியில் வைத்துலர்த்தி
சாகாத பாண்டத்திற் சுண்ண மிட்டுத்
தனிமேலு முண்டைவைத்து மேற்சுண்ணம் போடே 107

சுண்ணத்திற் ஜலம்விட்டு நீற்றி வாங்கித்
தூக்கியே கிளிகட்டி வைத்துக் கொண்டு
பின்னுமந்தச் சுண்ணத்தின் நீர் திரும்பப்
பிசகாமல் நூறுதரம் நீற்ற நீற்ற
வண்ணமென்ற சவுக்கார மெலும்பு போலாம்
மைந்தனே கடுங்கார நீரிற் தோய்த்து
கண்ணமென்ற ரவியில் வைத்துப் பக்ஷந்தானும்
கடும்வழலை அஞ்சுசுண்ணக் குகையில் வையே: 108

வைந்நெரிக்கச் சாமமொன்று மல்லிகைப்பூப் போலாம்
 மைந்தனே சவுக்காரஞ் சுண்ணம் சுண்ணம்
பித்தையல்லோ நூல்களிலோ மறைத்துச் சித்தர்
 யான்மறைத்தே னென்றார்கள் நூல்கள் தோறும்
சத்தியமாய் மெய்யாகப் பதினெண் பேரும்
 தான்மறைத்த கருவையெல்லாம் தத்துவத்திற்
வித்தையெந்தன் மறைப்புடனே சொல்லிப் போட்டன்
 விரும்பியிந்த நூலைவிட்டால்வாதம் போச்சே 109

இந்நூல் பெருமை

போச்சப்பா பதினெண்பேர் நூல்களெல்லாம்
 பொய்யாகப் போகாமற் தத்துவத்திற் சொன்னேன்
நீச்சனப்பா தத்துவநூ லுலகிற் கிட்டில்
 நிச்சயமாய் சிவயோகச் சித்தராவார்
ஆச்சப்பா தத்துத்தை யுணர்ந்தோர் சித்தர்
 அறியாதான் சுட்டலைந்து திரிவான் பாரு
நீச்சப்பா தத்துவத்தின் நிலைகளெல்லாம்
 நிறைநிறையாய்ச் சொல்லுகிறேன் வாதமுற்றே. 110

வாத கண்டம் முற்றிற்று

இரண்டாவது தத்துவ காண்டம்

அத்துவித ஞானமெனுந் தத்துவஞா னத்தைச்
சித்திபெரு வாரறிவார் பித்தரறி யாரே.

சமையம் 12

முத்தான ஆகமத்தி னெறியில் நிற்கும்
 முறைசைவம் பாசுபதம் மகாவிரதத் தோடு
சித்திசேர் காளாமுகம் வாமம் வைரமும்
 சித்தாந்தத் துடன்சமைய மீதாறு பேர்க்கும்
தத்துவந்தான் முப்பத்தி ஆறதாகும்
 தனித்தமுறை நெறிநிற்கும் நியாயவை சேடிகமும்
சத்தான பாட்டமுடன் வைணவமீ மாம்சம்
 சாங்கியம்பிர பாகரமும் புறச்சமைய மாறே. 111

ஆறான சமையங்கள் வைதீகமாகும்
 ஆங்கவர்க்குத் தத்துவந்தான் மூவெட் டென்பார்
கூறான சமண்மாயா வாதி புத்தன்
 கூடுமட்ட வாதிகட்குத் தத்துவமு வைந்தாம்

வேறான வேதாந்தி தனக்குஉப நிடதம்
விளங்கியதோர் தத்துவந்தா னிருபத்தெட்டென்பார்
மாறாத தத்துவந்தான் தொண்ணூற்றாறும்
மக்களே யெல்லோர்க்கும் பொதுவாங்காணே. 112

சித்தர் தத்துவம்

காணப்பா சித்தருக்குத் தத்துவந்தான் கேளு
கைகண்ட வேதாந்தஞ் சித்தாந்த மாகும்
தோணப்பா சமரசத்தின் தத்து வந்தான்
சொல்லக்கேள் பூதமைந்து வசனாதி யைந்து
வீணப்பா தோத்ராதி யஞ்சே யாகும்
வேறான சத்தாதி யஞ்ச தாகும்
ஊணப்பா கரணமது நான்குங் கூடி
உத்தமனே சிவதத்துவ மூவெட் டாமே. 113

ஆமப்பா காரியதத் துவமிருப தாகும்
அடர்காலங் கலைநியதி யிராகம்வித்தை மாயை
ஓமப்பா புருடனுடன் தத்துவமே யேழு
ஒடுங்காத வித்தியா தத்துவமு மாகும்
காமப்பா காரணகா ரியம தாகும்
கட்டந்தச் சுத்தவித்தை யீசுரஞ் சதாக்கியம்
தர்மப்பா சத்திசிவ தத்துவ மஞ்சும்
சாங்கமாய்க் காரணதத் துவமென்றாரே. 114

என்றதொரு ஆத்துமதத்துவ மிருபத்தி னாலும்
என்மக்காள் தூலதத்துவ மென்பார் சித்தர்
பொன்றாத் வித்தியா தத்துவங்க ளேழும்
போகாத சூச்சும தேகந்தா னென்பார்
நன்றான சுத்ததத்துவ மஞ்சு தன்னை
நலமான காரண தேகந்தா னென்பார்
குன்றாத தத்துவந்தான் முப்பத்தாறும்
கூரறிய உட்கருவி யென்பார்தானே.. 115

தானென்ற கோசமைந்து வாயு பத்து
தனித்துநின்ற அவத்தையஞ்சு குணந்தான் மூன்று
கோனென்ற ராகமெட்டுத் தாதுயேழு
குறித்தநோய் மூன்று ஆதார மாறு
தேனென்ற நாடிபத்து மண்டலந்தான் மூன்று
சிறப்பான அறுபதுந்தான் புறக்கருவி யென்றும்
வானென்ற சித்தருக்குத் தொண்ணூற்றாறு
வகையாக மூலகநூல் வழிவே றாமே. 116

வேறான உலகத்தோர் பலநூல் பார்த்து
வெவ்வேறாய்த் தத்துவத்தை வினோதஞ் சொல்வார்
கூறாதே யவர்களிடங் கூடிடாதே
குறியாத பூதத்தின் குறிப்பைக் கேளு
வாறான பிரிதிவியு மப்பு தேய்வு
அடர்வாய்வு ஆகாசம் பூத மஞ்சில்
சேறாதே சித்தர்நூல் வேத நூலும்
சேர்ந்துபல விதஞ் சொல்லும் தெளிவாய்த்தானே 117

தத்துவ விபரம் (ஆத்ம தத்துவம் 24)

தானென்ற பிரிதிவியு மப்பு தேய்வு
தனிவாயு வாகாசம் பூத மஞ்சாம்
வானென்ற பொரிதோத்திரம் தொக்கு சட்சு
வளர்ந்திகளும் சிங்குவையாக் கிராண மைந்தாம்
கோனென்ற சத்தமுடன் பரிசம் ரூபம்
குளிர்ந்தரச கெந்தமுடன் புலனைந்தாகும்
ஊனென்ற வாக்குபாதம் பாணிபா யுருவோடு
உபஸ்தமுடன் கர்மேந்திரிய மைந்து சேர்ந்தே. 118

சேர்ந்தமனம் புத்தியுட னாங்காரஞ் சித்தம்
சேர்ந்தாலு மாமந்தக் கரண மென்பார்
ஓர்காலங் கலைநியதி வித்தை ராக
முடன்புருடன் மாயையோ ரேழும் பின்பு
சார்ந்தசுத்த வித்தையொடு யீசுர சதாக்கியம்
சத்திசிவ மைந்தாந் தத்துவ மூவகையில்
ஏர்ந்தபிரு திவிமுதலாய்ச் சித்த முடிவாக
வெண்மூன்று மாத்துமதத்துவ மென்பார்தானே 119

தானென்ற காலமுதல் மாயைமுடி வாகத்
தனிவித்தியா தத்துவ மேழென் பார்கள்
கோனென்ற சுத்தவித்தை முதற்சிவ மீறாகக்
கொள்கிநின்ற சிவதத்துவ மைந்து தானும்
வானென்ற ஆத்மதத்துவஞ் சுத்தமாகும்
வளர்வித்தி யாதத்தவஞ் சுத்தா சுத்தம்
கானென்ற சிவதத்துவ மைந்து தானுங்
கண்டகண்ட சுத்தமென்பார் கலைவல் லோரே. 120

ஏடணை 3

வல்லோர்க ளுட்கருவி முப்பத் தாறும்
மகிழ்ந்துதுரைத்தேன் வைகரிமத் திமை பைசந்தி
சொல்லாத சூக்குமையும் வாக்கு நாலுந்
தோன்றுவது குடிலைவிந்து யென்பார் நல்லோர்
இல்லாத யேடணையு மூன்ற தாகும்
ஏதென்றால் அர்த்தேடணை சித்திரே டணையுங்
கல்லாத உலகயே டணைமூன் றாகும்
கடியகுண மொன்பதுமெய் யிருக்குங் கேளே. 121

குணம் 9

கேளப்பா சாத்வீகம் ராசத தாமதமும்
சேள்மூன்றி லொன்றில்ரெண்டா யாறோடொன்பான்
தாளப்பா சாத்வீகத்தி லிராசதஞ்சாத் வீகந்
தன்னில் தாமத மிராசத்தில் சாத்வீகமும்
வாளப்பா ராசத்தில் தாமதந்தா மதத்தில்
வளர்சாத்வீ கம்தாம தத்திலிரா சதமும்
கோளப்பா யிவையாறு மும்மூன்று மொன்பான்
குணமாக ராகமெட்டின் குறிசொல் வேனே. 122

ராகம் 8

குறியான காமமுடன் குரோத லோபங்
கொடுமோக மாச்சரிய மிடும்பாங் காரம்
வெறிமதமா மிச்சையறி வித்தல் விருப்பு
வெருப்பினின்ப துன்பமுயிர் செயலோ ரெட்டாம்
அறியும்வாக் காதியினில் விடையுமாகும்
அதுவசனங் கெவனந்தா னம்விசர்கா னந்தம்
நெறிசொல்வச னாதியுமோ ரைந்த தாகும்
நேருமிடை பிங்கலைநற் சுழினை யோடே 123

பஞ்சபூதக் கூறு

ஓடாத அத்திசிங்குவை யலம்புடை காந்தாரி
ஓரைந்து வழியோதும் அலம்புடையி னுடனே
நீடியசங் கினியோடு வாய்வு பத்தாம்
நிகரறிய பிராணனுட னபான னுதானன்

தேடாத சமானன்வியான னிவையோ ரைந்தும்
தெய்வவாய் வாகுமென்பர் நாகனுடன் கூர்மன்
ஓடுகிரி கரன்தேவ தத்தன்தனஞ் செயனா
ருடனைந்தும் பூதத்தின் வாயுவாமே. 124

ஆமப்பா தோலெலும்பு சதைநரம்பு மயிரு
ஆகஐந்தும் பிருதிவியின் கூறாமென்பார்
ஓமப்பா உதிரமச்சை மூளை விந்து
உவர் நீரா மப்புட ட கூறைந்தாகும்
சோமப்பா நித்திரைபய மைதுனமாங் காரம்
சோம்பலைந்தும் தேயுவுட கூறென்பார்கள்
தாமப்பா ஓடல் நடத்தல் கிடத்த லிருத்தல்
தத்தலுடன் வாயுவின் கூறைந்தாம் பாரே. 125

பாரப்பா குரோதமுடன் லோபட மோகம்
படருமத மாச்சரியம் தான்கூ றைந்தாம்
நேரப்பா அக்கினியா தித்தன் சோமன்
நிலையான மண்டலமூன் றாகுமென்பார்
சேரப்பா மூலாதாரஞ் சுவாதிட் டானந்
தெளிந்தமணி பூரகம னாகதம் விசுத்தி
பேரப்பா ஆக்கினையோ டாதார மாறும்
பெண்ணுடனா ணலிமூன்று முடற்கூறாமே. 126

கூறான பூதபுரி யட்ட மோடு
குணமான தத்துவங்கள் குறியாய்ப் பாரு
ஆறான சூரவாசயங் கெற்பாசயம் பருவாசயம்
அவர்மூத்தி ராவசய அமாவாசயமோ டைந்தாம்
வேறான வாதமொடு பித்த சேத்மம்
வியாதியது மூன்றாகு மாணவகா மியமும்
வாறான மாயைகர்மந் திரோதைமல மைந்தாம்
வளரன்ன மயம்பிரா ணமயமனோ மயமே. 127

மயமான விஞ்ஞான மானந்த மயமும்
வளர்கோச மைந்தாகும் தோலுதிர மெலும்பு
ஜெயமான தசைமேதை சுக்கிலமு மூளை
செரிதாது யேழாகும் திரோதாய் சத்தி
சுயமான ஞானசத்தி பராசத்தி யிச்சாசத்தி
சொல்கிரியா சத்தியினோ டருட்சத்தி யைந்தாம்
நியமான சிருட்டியுடன் திதிசங்காரம்
நிரைதிரோபவ மனுக்கிரகந் தொழிலைந்தாமே. 128

ஐந்தாகுந் தொழிலதிபர் பிரமன் மாயன்
அரன்மகேசன் சதாசிவ னைந்தாந் தெய்வம்
சிந்தையவ்வு முவ்வுமவ்வும் விந்து நாதம்
திருவெழுத்தஞ் சாந்தீட்சை நெறிசமயம் விசேடம்
வந்தநிரு வாணமுடன் அபிஷேகத் தோடு
வளர்தீட்சை நான்காகும் சரிதையொடு கிரியை
சுந்தரயோ கம்ஞானம் பதம்நான் காகுஞ்
சொல்லக்கேள் பதமுத்தி நால தாமே. 129

மாயை அவத்தை

தாலான சாலோக சாமீபத்தோடு
நலம்பெரிய சாரூப சாயுச்சி யந்தான்
மேலான கேட்டல்சிந் தித்தல்தெளி தல்நிட்டை
விளங்கியதோர் ஞானம்நான் காகு மென்பார்
மாலான விஞ்ஞான கலர் பிரளாயகலர் சகலாகலரும்
அறிவித்த ஆன்மபேத மூன்றாகும்
சீலான தனுகரண புவன போகஞ்
சிறப்பான மாயையொடு நான்கதாமே. 130

ஆமப்பா ஆகாமியம் பிராரத்வஞ் சஞ்சிதம்
அடர்கர்ம மூன்றாகும் தெய்வீக முடனே
ஓமப்பா பவுதீக முடனார்க் கதீகம்
உண்டான பிராரத்வம் மூன்ற தாகும்
தாமப்பா புவியந்தரம் சுவர்க்கமுட நாகந்
தனியுலக மூன்றாகும் கேவல சகலசுத்தம்
நாமப்பா காரணமா மவத்தை மூன்றாம்
நன்றான கேவலகா ரியஅவத்தை யைந்தே. 131

அவத்தையில்லாச் சுத்தகாரிய வவத்தை யைந்தாம்
அருளசகல காரியத்தி னவத்தை யைந்தாம்
நவத்திசையு மவத்தைபதி னெட்டதாகும்
நாம்கீழா லவத்தைமத்தி யவத்தைமே லவத்தை
தத்துவமே யென்பர்சித்தர் சாக்கிரஞ்சொற் பனஞ்சுழுத்தி
தனித்துரிய மவத்திநிலை தான்துரியா தீதம்
அவத்தையே வலகாரிய வவத்தையென் றுரைப்பார்
அவைகளைந்து மாகுமென்பர்காண் நல்லோரே. 132

யென்றுசாக் கரத்தியல்பு சொற்பனசாக் கரத்தி
னியல்சுழுத்தி யென்றசாக் கரத்தில்துரியம்
அன்று அது சாக்கரத்தின் மேலதாக
அதீதமுடன் சகலா அவத்தை யாகுமத்திற்
துன்றுகா ரியமைந்தா நின்மலசாக் கரந்தான்
சுத்தவித்தை யைந்தாகும் நிர்மலசொற்பனந்தான்
பண்டுயீசு ரன்முதல் நால தாகும்நிற் மலத்தின்
பகர்சுழுத்தி சகலதத்துவம் மூன்றாம்பாரே. 133

பாரப்பா சத்திசிவம் நிற்மலத்தின் துரியம்
பகர்சிவம் நிர்மலா மதீதமாகும்
ஆரப்பா சுத்தகாரிய அவத்தை யைந்தாம்
ஆகமூ வைந்துடனே முதலவத்தை மூன்றும்
நேரப்பா பதினெட்டு அவத்தை யென்றார்
நிறைமாயை யொருநாளுங் கூடாதன்னிலையே
ஆரப்பா யிருளேகே வலமதாகும்
அவைமாயை விண்ணுலகாதல் சகலமாமே. 134

சகலகே வலமிரண்டும் பலவித்தென்றே
தனியிருக்க அன்னியமென் றவத்தைநீக்கி
ஜெகனருளால் பகவனடியுயிர் பொருந்தல்
சேர்சுத்த அவத்தையென்று சித்தர்சொல்வார்
வகையாகுஞ் சகலகே வலசுத்த மூன்றுமித்தை
வகையான வுயிர்களுக்குக் கண்டமைந்தேதென்னில்
மிகையாகுங் கேவலம் ஆணவத்தைநீக்கும்
மேற்சகல மாயையினை நீக்குந்தானே. 135

நீக்கிய சுத்தமிரு வினையைநீக்கும்
நிலைமூன்று முயிர்மலத்தை நீக்கவந்ததாகும்
நோக்கிய யிந்திரியம் பத்துமாத்திரைதான்
நுண்மையீ ரைந்துமந்தக் கரணம் நான்கு
தாக்கரிய வாய்வுபத்து உயிருங்கூடித்
தானறிதல் சாக்கரமா மிந்திரியம் பத்துந்தள்ளி
ஊக்கமிம் மூன்றுடனே சொற்பனமாம்பிராண
னோடறியச் சித்தமுடன் சுழுத்தியாமே. 136

ஆமப்பா பிராணனுயிர் துரியமாகும்
அபானனுமே தானாத லதீதமாகும்
ஓமப்பா தூலவுடல் சாகரமாகும்
உடல்சூக்ம சொற்பனமாம் பிரகிருதியுடல்தான்

நாமப்பா சுழுத்தியமா மோகினியேதுரியம்
தனியான மலவுடலே ஆக்ஞை யைந்தாம்
நாமப்பா சிவதத்துவ மைந்துதானும்
நல்லமே லாமவத்தை பொருந்துமுயிர்க்குடலே. 137

உயிரான ஐவகையாம் அவத்தைகள்சாக் கிரத்தில்
உணர்ந்தான் முன்னறிந்தவனைக் கண்டறியா திருத்தல்
மயலறுமதீதநிலை யெழுதலேசுழுத்தி
மயல்புரியட் டகம்பொருந்திப் பகுத்தறியா அறிவால்
அயர்வுடனே ஐயமுற லுறைத்தேன் சொற்பனமாம்
ஆனந்தத் தூலவுட லடைந்துவருமறிவால்
தயவுடனின் னேனிவென்றா னென்றறிதல்தானுஞ்
சாக்கிரத்தில் சாக்கிரமென் றுரைப்பார் பெரியோரே.138

பெரியபொறி யினிலொன்று பூதமொன்று
பெரியகர ணம் நான்கு காலதியேழு
அரியசிவ தத்துவமைந் தாகக்கூடி
அனுபவனோர் புலனுகர்தல் சாக்கிரமென்பார்
தெரியாது கருவியொன்று தன்னைக்கண்டால்
தேர்வதுசொற் பனபரையாந் தனைக்காணாதல்
உரியபரம் பரைநிறைவே சுழுத்தியாகும்
உண்மைஞா னானந்தந் துரியமாமே. 139

ஆனந்தமானதொரு சுகிர்தநிலை யிதுவே
ஆகமங்கள் நாலேழு மறையுநான் மறையே
தானந்தப் பூதமுத லாமவத்தையிதற்குத்
தத்துவத்தின் சகலதுறை கேட்கிலப்பா
ஊனந்த யிருநூற்றி யிருபத்திஆறு
உயிர்க்கிதுதான் தனுகரண புவனபோகம்
ஆனந்தத் தத்துவத்தை நானென்றெண்ணி
அழுந்தியிடும் பெற்றமிது வாகுங்கேளே. 140

கேளப்பா யெனையாண்ட தெட்சணேஷன்
கிருபையுடன் தவத்தாலே குருவாய்வந்து
தாளப்பா நாமறிய விப்போம்நீதான்
தன்னறிவு தத்துவங்க ளுள்ளதெல்லாம்
நீளப்பா தத்துவத்தை விட்டுநீயும்
நேராக யென்னிடத்திற் சேர்வாயென்று
தாளப்பா திறந்துமுத்தி நெறியைக்காட்டி
சரணடையும் வீட்டின்பந் தருவார்பாரே. 141

தத்துவ தெரிசனம் பஞ்சபூதக் குணம்

பாரப்பா தத்வரூபங் கருவியெல்லாம்
பாங்கான தெரிசனமுஞ் சுத்திசொல்வேன்
காரப்பா பிருதிவிசுக்கென்ற அப்புத்தானே
கடைசியந் தரந்தேய்வு சுடரென்னலாகும்
தீரப்பா பொருளதனைத் திருடுதல்காலென்பார்
தேய்வரவே நித்தவா காசத்தின்குணமாம்
சேரப்பா தோத்திரத்துக் கிடங்கொடுத்தல்
செவிக்குணம்விண் ணிடைநின்று தத்துவமறிவதுவே. 142

அறிவதுவே தோத்திரத்துக் கருவிவாக்காம்
அடர்வசனம் வாக்கினுக்கு விடையமென்பார்
உருகோலம் குணந்தொக்கு யிடங்கொடுத்தல்
உற்றகுணங் காலிடமாய்ப் பரிசமறிந்திடலாம்
செரிவதுக்குக் கருவியது பாதமாகும்
சேர்கெமன மென்பதற்கு விடையமாகும்
நரிமண்டுங் குணஞ்சட்சுக் கிடங்கொடுத்தல்
நற்குணந்தீ யிடைநின்று வுருவமறிந்திடவே. 143

இடம்விழிக்கு நாக்கருவி பாணியாகும்
யிதன்விடைய மிடலேற்ற லாகுமென்பார்
அடலரிக்கக் குணம்சிங்கு வைக்கொடுத்தல்
அதற்கான குணமீதில் நின்றுரசமறிதல்
கொடுநாக்குக் கருவியா யுருவாமதற்குச்
சொல்விடையஞ் சரவிடைய்ம் அளிப்பதுவா மென்பார்
கருநிலத்துக் குணம்நாசி யிடங்கொடுத்தல்
காங்குணமண் ணிடைநின்று மனமறிதல்காணே. 144

காணுமாக் கிராணத்துக் காங்கன்னி யுபஸ்தங்
கனவானந் தமதற்கு விடையமென்பா ரறிவோர்
தோணு பிருதிவியுரத்துத் தரித்திடுத லுருவஞ்
சொரூபமுதல் நாற்கோணங் கிடைத்தால்சுபா கந்தாள்
வேணுசிறப் புவிசேடம் வானினளவாகும்
வியாகிர்தியது சதகோடி யோசனை வியாபகமாம்
ஊணுநல்ல மணிபஞ்ச லோகநிறமாகி
உடலுண்மை வகையாகி விரிதலுயிர்க்குணமே. 145

பூதக்கூறு

குணமாகும் போததை நீரளித்திக்
கூடியே பாய்ந்துமே சொரூபஞ்செய்ய
இனமாகும் கலந்துமே சுபாவமாக
ஏகமாய்த் தன்சொரூபஞ் செய்யும்போது
அணிநிர் விசேடமாய் மண்ணளவியர்த்தி
அதுமண்ணிற் பதின்மடங்கு வியாபகமாய் விரிந்தே
தனியேழு சாகரமாய் பிரளயங்களாகித்
தனுவினிற்கா ரியமைந்தாய் தனிநிறம் வெண்மையதே. 146

வெண்மைகுணங் கண்டுடலி லவையறிதல்காட்சி
விளங்குபுனல் சடமாமென் றகன்றிடுதல் சுத்தி
தொண்மைஅன லுருவம்சுட ரென்று திரிகோணம்
சொரூபமெழு தங்கவாவம் பொருமைவிசேடமதாம்
உண்மைதன விகாரக் கினியளவதாகும்
உற்றதுபஞ் சாக்கினியாந் தேசிசத்திகோடி
வன்மை யோசனைவிரிந்தே சடத்திலுண்மைவகையாய்
வளர்வது வியாபகமாம் குணம் அனலின்ஒளியே. 147

ஒளியந்த விளக்காக வொளிருநிறஞ்செம்மை
உற்றுயிவை யெறிதல்தெரி சனம்சடமென்றறிந்து
தளல்வினைவிட் டகல்சுத்தி சமீரணன்றன் னுருவம்
சவித்துமிகத் திரட்டல் சட்கோணமாஞ் சொரூபம்
வளிதெரிய நிற்றல்விசே டம்சுபாவும்நேரில்
வளிவியாத்திரி வியாபக மளவுவியாபகமாம்
வெளிநூறா யிரங்கோடி யோசனையாய்விரிந்தே
விரிந்துஅது வாகியிந்த மெய்யிலறி வகையே. 148

வகையாக வியாபித்த வளிநிறமே கருமை
வளர்ந்தகுணம் பிரித்தலிவை யறிதல்தெரிசனமாம்
துகைசடமென் றறிந்துவிட லசுத்திவானுருவந்
தொனியாகி நிறந்தரமா யிடங்கொடுத்தல் சொரூபம்
பகைவட்ட மசையாது நித்தலாஞ்சுபாவம்
பகருவிசேட முமுண்மை சத்திதத்துவத்தளவாம்
மகவையதில் வியாபகங்கொள் கும்பகத்தின்
மடங்கலாய் விரிந்தடங்கி யைம்பூதமாமே. 149

பூதமெல்லா முள்ளடக்கச் சடத்திலுண்மைவகையாம்
புகழ்நிறங் குணந்துகையிர் சுடர்கோசங்காசம்
பேதகமாம் புகைநிறமாங் காண்டல் தெரிசனமாம்
பிரித்திதனைச் சடமாமென் றறிந்துவிடல்சுத்தி
சோதிமறை மொழியிதுவாம் பத்திடுதல்மனமாம்
துரியமதி நிச்சயத்தால் புத்தியெழுந்திடலால்
போதமளிந் திடில்சித்தங் கரணம்நான்கும்
புகழ்கருவி மூவேட்டின் பொருளைக்காணே. 150

காணப்பா பூதமைந்திலொன்று நான்காய்க்
கடியவைந் தாகுமதைக் சுருவாய்க்கேளு
தோணப்பா ஆகாசம் நாலுகூறாய்த்
துரியத்தி லொருகூறில் வாய்வூரிலான்மா
மாணப்பா உருகூரு மங்கியினை மருவில்
மருவியது புத்தியொரு கூறாகிப்புவனை
வீணப்பா சித்தமா மொருகூறு மண்ணில்
விரைவுடனாங் காரமாம் வெளியுடனைந்தாமே. 151

ஆமப்பா வாய்வுநான்காம் விண்ணிலது வோடி
அதுகலக்கிற் சமானனா மனலொருகூ றுதானன்
தாமப்பா செலமொருகூ றதுவூறி லபானன்
தரணியொரு கூறூரிர்ப் பிராணனாகும்
தேமப்பா முதல்வாய்வு வியான னாகும்
தேயுவாய் வென்பார்கள் அதையும்பாரு
போமப்பா அக்கினியும் நான்குமொரு கூறு
புகல்வானில் செவியாகும் காலொருகூ றுடலே. 152

ஒருகூறு நீரிலுறில் நாவுமென உரைப்பார்
ஒருகூறு வளியூறி லுருநாசி யாகும்
ஒருமுதல்சச் சுடனைந்தாம் நீரில் நான்காம்
ஒருகூறு அண்டமுறிற் சுரோத்தமதா மென்பர்
தெரிவளியி லொருகூறு செவிபரிச மாகும்
தீயிலொரு கூறுவிர விடிலுருவ மாகும்
நெறியொருகூ றவனியதிற் கெந்தமதா மென்பார்
நீரில்முத லாகாசம் நிமலமறை மொழியே. 153

மறைமண் நால் வகையாக ஒருகூறு வானில்
வரிவாக்காம் வாயுவினி லொருகூறு வாயில்
உறைபாத மாமளவி லொருகூறால் பாணி
உள்ளபாணி யாமனலி லொருகூ றபானன்

மறைவதுமண் முதலுபஸ்த மைந்தா மைந்தில்
அளிவலிட மாகிமனஞ் சஞ்சலமாய் நிறையும்
பறைதீயி னிடம்புத்தி பண்ணிநிச் சயங்கள்
பாணியிடஞ் சித்தமது சஞ்சலிக்கும்பாரே. 154

சலியாம லாங்கார மண்ணிடமாய் நின்று
தனியபிமா னம்புரியும் வேதாந்த முறைக்கு
நலியாமல் வேதாந்தஞ் சித்தாந் தத்தை
நாதனரு ளாலுரைத்தோம் நால்வர் கேட்கக்
கெலியாத பொருளேது யெழுத்தஞ் சென்றான்
கெடியான பொருளாவி மாய்கைமல மென்றான்
ஒலியாத வேதாந்த சித்தாந்த வேதம்
உன்னிலது உரைப்ப தெல்லா மெழுத்தோ ரஞ்சே. 155

அஞ்செழுத்தே யருமறையா கமாங்கவிய மந்திரம்
அளவில்பதி னெண்பாஷை கோடியண்ட பிண்டம்
அஞ்செழுத்தே யகிலநரர்மிருகம்பட்சி
அசைவுளமற் றுயிர்தோறு மெவ்வுயிர்க்கு மசைவு
அஞ்செழுத்தை யன்றிவே றொன்று மில்லை
அஞ்செழுத்தி லுதித்தொடுங்கி அஞ்செழுத்தில்
தோன்றும்
அஞ்செழுத்தே சிவசத்தி யாவியது மூன்றும்
அதுகாணா மல்மறைத்து விடுந்திரோதா யிருளே 156

இருட்கீரி லவாயிரவி யம்மனைக்கு வாளாம்
இருவினைக்கு மருந்துவிலை யில்லாத கனகம்
மருட்பொசிந்து பசிதீர்க்கு மானந்தக் கனியாம்
மருட்பிறவிக் கரியுமருட் பாரு லாவும்
....
....
குருட்டகன்று பார்த்தறியாக் குறைவிலா நிறைவாம்
கூறியவே தாகமஞ் செழுத்தாமு டிவினையே. 157

மூவினைசெய் விப்பவனொன் றவ்வினையைச் செய்து
முடிப்பதரு ளொத்திருந்த திரோதா யொன்று
ஆவியென்றவ் வினைச்சுகமா (யிருவகையு) மறைப்பாய்
அறியவொட்டா தேமறைத்த திரோதாயியொன்று
ஓவியென்ற யிருவினைவித் தாகுமல மொன்றில்
உருவமா மஞ்செழுத்தின் பயனிதனை யுணர்ந்து
கோவினரு ளால்மாயை நீக்கியவ னடியில்
கூடியு யிரணைந்தவன்றே கொடியமல மருமே. 158

பதிபசு பாசம்

மலமிலா னுடனருளு மாயையுமே பதியா
மதில்மூன்று வகையாகும் பசுவாகு மென்பார்
நலமிலா மலமதுசான் பாசவுரு வென்பார்
நாடரிய யிம்மூன்றும் நித்யமென் நூல்கள்
குலமிலாப் பதியாவ தெனி னிவர்கள் நினைத்த
குறியுருவ மாகி அப்பாற் குறியுமாகி
நிலையுணரும் சத்தமன்றி யணர்வதே மின்றி
நின்றவனா லசையாத நின்மலசூ னியனே. 159

சிவ லட்சணம்

சூனியனா யுருவமன்றி யரூப மின்றிச்
சொற்குணங்கள் மூன்றுமின்றி நடுவிற் தோன்றி
ஆனியா மலனான்கு மென்றுமலமின்றி
ஆவியது காயத்துடன் அடங்கிருப் பதுபோல்
மோனமே யெவ்வுயிர்க்கு முயிராய் நிற்பன்
முதுமையின்றி யிளமையின்றிப் போக்குவர வின்றி
ஞானஉரு வாயெங்கு நிறைந்து நின்ற
நாதனுரு யின்னதென்று விளம்புதற்கு மரிதே. 160

அரியவுரு வாகியின்ப மளவில் லாத
ஆனந்த வடிவாகி நிற்ப தாலும்
பெரியவனை யுண்மையென நம்பினோர்க்கும்
பேதமுற்று மருத்துவர்க்கு மோட்ச மீய்ந்து
யிருவினையின் பயன்களையும் கொடுத்து நிற்பவன்
யெவ்வுயிர்க்கும் பெரியவனெல் லாவுயிர்க்கு மாகி
கரியகர்வத் தையுமறியவன் றொழிதலெல்லாம்செய்
காரணகா ரியங்கடந்த காரணகா ரணனே 161

காரணமா யரியமரர் சித்தரெல்லாம்
கருணையுடன் கொடுக்கிறவன் கண்டறியா னெவர்க்கும்
பூரணனா முயிர்கண்டு பூசிக்கும் படிக்குப்
புகலரிய பலவுருவ மெடுத்துக் கொண்டு
ஆரணமு மருளியெல்லாப் பணிவிடை பூஜையுங்கொண்
டருளியே பணிகுடித்தக்க பலனதையுங் கொடுப்பன்
நாரணனு நான்முகனுங் கீழ்மேல் தேடி
நாடறியா னெவ்வுயிர்க்கு முளவாம்நா யகனே. 162

அடி நாரணன் நடு ருத்திரன் முடி பிரமன்

நாயகன் அகண்டிதன் அசலன் அநித்தியன்
நாட்டினிலே கேள்வியன்றி தேவர்களு மறியாத்
தூயகன் துயரறுத்த உண்மை நாமன்
துரியாதீத னனந்தன் சொருபா னந்தன்
காயகமா நாதாந்த யெழுத்தெல்லாத் துக்கும்
காரணனா முயிர்போ லறிவாகி யெங்கும்
தாயகமாய் நிறைந்துநின்ற ஆதிநடு வந்தந்
தானன்றிக் குறியுருவா மன்றிநின்பன் தனியே. 163

தனியான பிரமன்மா வீசன்றா னந்தத்
தனியுருவா மீசுரனா யருயுருவா மென்றார்
அணிவிந்து நாதமுடன் சத்திசிவ னாலும்
அருவுருவ மாகுமென்பா ரொன்பான்றானும்
அணிவிமலன் மெய்வடிவ முன்னுருவ நான்கும்
அருவுருவ மென்றசூக்கும தேக மென்பார்
கனியவரு நான்குமவன் காரண தேகமதாம்
கண்மனவாக்குக் கெட்டாக் கண்ணினுட் கண்ணுதலே164

கண்ணுதலை யனுட்டித்துச் செபித்துத்தியா னித்துக்
கசிந்துருகி நிற்பார்க்கு நாலுருவங் காட்டி
நண்ணரிய வங்குசத்தி யுடன்பூ சித்து
நாடிநிற்பாற் கருவுருவ மொன்று காட்டி
மண்ணதிலே யட்டாங்க யோகத் தாலே
மவுனமுத்தர்க் குருவமொரு நாலுங் காட்டி
விண்ணறியு மூன்றறிந்தார்க் கிந்த மூன்று
மேலாமா னந்தவெள்ளங் காட்டு வானே 165

பஞ்ச மூர்த்தி பஞ்சசத்தி சக்திகள் 12

நாட்டியெங்குந் தானாகி யப்பா லாகிக்
கரைகாணாப் பேரொளியில் கலந்து நிற்பான்
மூட்டியவன் திருவுருவே திசவிதமா மென்று
முயன்றசத்தி யீரானுடனே முயல்வார் கேளு
ஊட்டியவிச் சாசத்தி ஞான சத்தி
உயர்ந்தகிரி யாசத்தி யாதி சத்தி
நாட்டியதோர் பராசத்தி யைந்துங் கூடி
நாதாந்தங் கடந்தயிறை யுருவம்பாரே. 166

பாரப்பா சிவத்துக்குச் சுத்த சத்தி
படர்நாதந் தனக்கரிய விந்து சத்தி
நேரப்பா சதாசிவர்க்கு மனோ மணியாஞ்சத்தி
நேரான யீசுரர்க்கு மயேசுபரியாஞ் சத்தி
சாரப்பா ருத்திரர்க்கு ருத்திரியாஞ் சத்தி
சார்வரிய விஷ்ணுவுக்கு லக்குமியே சத்தி
பேரப்பா நான்முகற்கு வாணி சத்தி
பேசரிய வினாயகர்க்கு வல்லபை யுமாமே. 167

ஆமப்பா பரைதானே ஆதி சத்தி
ஆகவே யீராறு சத்தியாலே
ஓமப்பா தூலபஞ்ச கிருத்தியத்தி னோடே
ஓதரிய யோகசூச்ச கிருத்திய மென்பார்
தாமப்பா அனுக்கிரக பஞ்சகிருத் தியமுஞ்
சார்வரிய மூவைந்து கிருத்தியமென் பார்கள்
நாமப்பா மூவைந்து கிருத்தியமுஞ் செய்து
நாதனுமந் தரமாகநடஞ் செய்வாளே. 168

ஆத்மாவின் லட்சணம்

வானென்ற ஆத்மாவின் லட்சணத்தைக் கேளு
வளர்ந்தஉயி ரளியாதாய் பிறப்பிறப்பில் லாதாய்
கோனென்ற யிறைபோலே யளியாத வடிவாங்
கூடியவஞ் ஞானத்தோ டிடைவிடா திருக்கும்
தானிருப்ப தெப்படி அரிசியுந் தவிடுபோலத்
தண்ணீருக் குப்புப்போ லும்செம்பி னுக்கு
ஊனமாங் களிம்புபோற் கலந்துநிற்கு மலமும்
உயிருவமை யொருகோடி யுண்டுரத்துக் கேளே. 169

உயிர் மல மயக்க உவமை

கேளப்பா உயிரைமல மயக்கிறதைச் சொல்வேன்
கிளர்குழந்தைப் பருவத்தில் மயக்கியதைப்போலும்
நாளப்பா நோய்உயிரை மயக்கிறதுபோலே
நரகமது உண்டவனை மயக்கியது போலே
கோளப்பா ஆணவந்தான் மயக்கிறது போலும்
கொடிஉயிர்க் காசையுண்டாம் நல்வினைதீவினையில்
வாளப்பா பசிசோற்றி லாசைசெய் வதுபோல்
வருக்கும்நோய் மருந்தாசை வைப்பதுபோற் றானே. 170

பொற்குறடு காலிலே யாசையுண்டாக்கிறது
போலவுமிப் படியளந்த சாமீப மூண்டு
ஏற்கைமலங் கொடுத்தாசையை ஈசரவ ரறிந்து
பியல்பான தனுகரண புவனமின்போ கங்கள்
மார்க்கமிடை விடாமலே மாற்றி மாற்றி
வரிசையாய்க் கொடுத்துப்பின் னேயிருப்பான்
பார்க்கப்பிணி யாள்மருந்தி லாசைப்பட்ட வனுக்கே
பண்டிதன்றா னும்மருந்து கொடுக்கிறது போலே. 171

போலிதுயிர்க் கனாதியுள்ள செய்தியாகும்
புவனத்தி லெவ்வுயிர்க்கு மிச்சையுந் தொழிலும்
கோலியெந்தக் காலமுந்தா னிடைவிடா திருக்கும்
குறிமூல மலங்கூடி யிருக்கிறதோ ருயிர்க்கு
ஆலத்தில் விஞ்ஞான வாக்குக் கன்மம்
ஆணுவமுங் கூடியிருக் கிறவுயிர்க்கு நாமம்
மூலபிர ளாயகல ராமாயை கன்மமுடன்
மூலமதத் தார்நாமஞ் சகலமென்பார் முறையே. 172

முறையான கேவலவிஞ் ஞானகல ரென்பார்
முனையட்ட வித்திமயே சுரசதா சிவனார்
அரையாத நால்வேதத் திரத்தா ரோடு
ஆணவத்தை விட்டதுவே சுத்த ஆத்மா
மறையுதவு மெழுகோடி மகாமந்திர முதலாய்
மாயகர்மம் விட்டகன்ற மகாத்மாவா மிவர்கள்
அரையாத எத்தொழிலும் செய்தது நின்ற
ஆணவத்தா ரென்றுமறை யாகமஞ் சொல்வதுவே. 173

சொல்வர்கிரு மலத்தாறதா னனேக பேதஞ்
சோதி ருத்திர ராசிகண்ட மண்டலேசர்
வெல்வர்குரு உபதேசம் பெற்றமுத்த சித்தும்
வேறான முத்தசித்த பெத்ததத்தி னுடனே
கல்விதரு பரமாத்மா வந்தார் மாறு
கலையாத்மா பூதாத்மா திரவாத்மா சீவாத்மா
வெல்வதுமுத் தாத்மாசித் தாத்மாவோடு
வேறான ஜீவாத்மா வோரெட் டெண்ணே. 174

பாரப்பா சிவத்துக்குச் சுத்த சத்தி
படர்நாதந் தனக்கரிய விந்து சத்தி
நேரப்பா சதாசிவர்க்கு மனோ மணியாஞ்சத்தி
நேரான யீசுரர்க்ரு மயேசுபரியாஞ் சத்தி
சாரப்பா ருத்திரர்க்கு ருத்திரியாஞ் சத்தி
சார்வரிய விஷ்ணுவுக்கு லக்குமியே சத்தி
பேரப்பா நான்முகற்கு வாணி சத்தி
பேசரிய வினாயகர்க்கு வல்லபை யுமாமே. 167

ஆமப்பா பரைதானே ஆதி சத்தி
ஆகவே யீராறு சத்தியாலே
ஓமப்பா தூலபஞ்ச கிருத்தியத்தி னோடே
ஓதரிய யோகசூச்ச கிருத்திய மென்பார்
தாமப்பா அனுக்கிரக பஞ்சகிருத் தியமுஞ்
சார்வரிய மூவைந்து கிருத்தியமென் பார்கள்
நாமப்பா மூவைந்து கிருத்தியமுஞ் செய்து
நாதனுமந் தரமாகநடஞ் செய்வாளே. 168

ஆத்மாவின் லட்சணம்

வானென்ற ஆத்மாவின் லட்சணத்தைக் கேளு
வளர்ந்தஉயி ரளியாதாய் பிறப்பிறப்பில் லாதாய்
கோனென்ற யிறைபோலே யளியாத வடிவாங்
கூடியவஞ் ஞானத்தோ டிடைவிடா திருக்கும்
தானிருப்ப தெப்படி அரிசியுந் தவிடுபோலத்
தண்ணீருக் குப்புப்போ லும்செம்பி னுக்கு
ஊனமாங் களிம்புபோற் கலந்துநிற்கு மலமும்
உயிருவமை யொருகோடி யுண்டுரத்துக் கேளே. 169

உயிர் மல மயக்க உவமை

கேளப்பா உயிரைமல மயக்கிறதைச் சொல்வேன்
கிளர்குழந்தைப் பருவத்தில் மயக்கியதைப்போலும்
நாளப்பா நோய்உயிரை மயக்கிறதுபோலே
நரகமது உண்டவனை மயக்கியது போலே
கோளப்பா ஆணவந்தான் மயக்கிறது போலும்
கொடிஉயிர்க் காசையுண்டாம் நல்வினைதீவினையில்
வாளப்பா பசிசோற்றி லாசைசெய் வதுபோல்
வருக்கும்நோய் மருந்தாசை வைப்பதுபோற் றானே. 170

பொற்குறடு காலிலே யாசையுண்டாக்கிறது
போலவுமிப் படியளந்த சாமீப மூண்டு
ஏற்கைமலங் கொடுத்தாசையை ஈசரவ ரறிந்து
யியல்பான தனுகரண புவனமின்போ கங்கள்
மார்க்கமிடை விடாமலே மாற்றி மாற்றி
வரிசையாய்க் கொடுத்துப்பின் னேயிருப்பான்
பார்க்கப்பிணி யாள்மருந்தி லாசைப்பட்ட வனுக்கே
பண்டிதன்றா னும்மருந்து கொடுக்கிறது போலே. 171

போலிதுயிர்க் கனாதியுள்ள செய்தியாகும்
புவனத்தி லெவ்வுயிர்க்கு மிச்சையுந் தொழிலும்
கோலியெந்தக் காலமுந்தா னிடைவிடா திருக்கும்
குறிமூல மலங்கூடி யிருக்கிறதோ ருயிர்க்கு
ஆலத்தில் விஞ்ஞான வாக்குக் கன்மம்
ஆணுவமுங் கூடியிருக் கிறவுயிர்க்கு நாமம்
மூலபிர ளாயகல ராமாயை கன்மமுடன்
மூலமதத் தார்நாமஞ் சகலமென்பார் முறையே. 172

முறையான கேவலவிஞ் ஞானகல ரென்பார்
முனையட்ட வித்திமயே சுரசதா சிவனார்
அரையாத நால்வேதத் திரத்தா ரோடு
ஆணவத்தை விட்டதுவே சுத்த ஆத்மா
மறையுதவு மெழுகோடி மகாமந்திர முதலாய்
மாயகர்மம் விட்டகன்ற மகாத்மாவா மிவர்கள்
அரையாத எத்தொழிலும் செய்தது நின்ற
ஆணவத்தா ரென்றுமறை யாகமஞ் சொல்வதுவே. 173

சொல்வர்கிரு மலத்தாறதா னனேக பேதஞ்
சோதி ருத்திர ராசிகண்ட மண்டலேசர்
வெல்வர்குரு உபதேசம் பெற்றமுத்த சித்தும்
வேறான முத்தசித்த பெத்ததத்தி னுடனே
கல்விதரு பரமாத்மா வந்தார் மாறு
கலையாத்மா பூதாத்மா திரவாத்மா சீவாத்மா
வெல்வதுமுத் தாத்மாசித் தாத்மாவோடு
வேறான ஜீவாத்மா வோரெட் டெண்ணே. 174

சகல ரென்றதற்கு விபரம்

யென்னப்பா சித்தாத்மா பிரளையாகல ரென்பார்
யியல்பான முத்தாத்மா யாரென் றாக்கால்
முன்னப்பா வளவிலாப் பிரமரோடு
முகில்நிறமா மெழுகோடி விஷ்ணுவோடு
மண்ணப்பா முன்சொன்ன உயிர்வர்க்கம் விஷ்ணு
மற்றுமுள்ள அளவில்லா உயிர்கட் கெல்லாம்
பின்னப்பா சகலரென்று சொல்வார்
பெரியசிவா கமங்களால் பிரமாண மாமே. 175

ஆமப்பா யிருவரையுஞ் சகலரென்று
வரைந்ததென்னா வென்றுசொல்லி மற்றோர் கேட்கில்
ஓமப்பா அஞ்செழுத்தின் பரமாத்மா வாலே
ஒடுங்காத பிரமாவு மொடுங்கினா ரப்பா
தாமப்பா சகலருக்குத் தாதுவென்றே
தானிருவர் தாதுவெங்கே யென்றாயானால்
காமப்பா பிரமனுட முடியறுத்துக்
கரத்தில் வைத்தான் மேருஒற்றக் கையாங்காணே. 176

கையில்வைத்தாக் காப்பிரளையகா லாக்கினியாலே
கரிந்துசுட்டா ரரியயனை யுகாந்தந் தோறும்
மெய்யில் வைத்த திரிபுரையா ளவர்களையுண்டாக்கி
மேதினியெல்லாம் படைத்தான் காத்தான் பின்னும்
பொய்யில் வைத்த புவனமதி லிருவர் முதலுயிர்கள்
பொடியாக்கி யவருடலை நீராய்ச் சுட்டு
செய்துமே னியிலணிந்தான் எலும்பையெல்லாம் மாலை
செய்துசிர மார்பில் வைத்தான் சிவனாம்காணே. 177

கபால பிச்சை

காணப்பா சிவன்றானும் வைகுண்டத்தில்
கபாலபிச்சைக் கெளுந்தருளிக் காளவேகர்
பூணரிய மகாபூதப் படைகளோடு
போகிலவர் வாசலி லிருந்தவிஷ்ணு சேயன்
தூண்பெரிய சிவனையங்கே தடுத்தபோது
துட்டபூ தம்விஷ்ணு சேயரைத்தான் கொன்று
காண்பரிய ரத்தமுண்டு களித்தாடும்போது
கடுந்தார பாரத்தி லரியெழுந்தார் பாரே. 178

எழுந்துவந்து யீசுரனை நமஸ்கரித்து
இங்குநீர் வந்ததென்ன வென்று கேட்க
கழிந்துநின்ற பிச்சைக்கி வந்தோமென்ன
கபாலந்திற வென்றுசொல்லி மாயோன்றன் மேனி
பிழிந்துரெத்தம் அவரிடத்தில் துறந்துவிட்டான்
பேரான பாத்திரந்தான் காணியாச்சு
மொழிந்தரந்த மெல்லாம்போய் மாயன்றானும்
மூர்ச்சித்து வீழ்ந்தான்பின் மொழியக் கேளே. 179

கேளப்பா பிரமன்முதற் தேவரெல்லாம்
கிரீசன்றன் பாதத்தில் விழுந்து போற்ற
வாளப்பா மாயவனை யெழுப்பி விட்டார்
வந்தரெத்தம் என்புதலை தாதுவல்லோ பாரு
தாளப்பா தாதுவைத்தா னறிந்து பார்க்கத்
தனுவென்னுந் தாதுவினால் சிவனுக்கென்னில்
வாளப்பா தேகமெல்லாம் நெருப்பென்று பெரியோர்
மறைதானுஞ் சொல்வதினால் தாதுவில்லை பாரே. 180

தாதுகளக் கினிசேர்த்து நில்லாதப்பா
தழல்தரித்தோன் கையிலே தாதுவென்றார்
சூதுபா ரேதுகரு நாகமுண்டு தாது
உடநின்றா ரைவருக்கும் நாசமில்லை
பேதிக்கி லிவர்தாது வேறெடுத்துத் தரித்தார்
பெய்யாத யிருவருட மாச்சரிய மென்றார்
சாதிக்குஞ் சம்மார மூர்த்திக்கேகல்
லாருண்டு சித்தரெல்லா மறியார் பாரே. 181

அமிர்தங் கடைதல்

பாரப்பா அயனரியுந் தேவரெல்லாம்
பாலாழி யமுர்தத்தைக் கடைந்தபோது
சாரப்பா மயேந்திரத்தை் மத்தாய்ப் பூட்டி
தனியான சேடனைத்தான் கயறாய் மாட்டி
நேரப்பா சிவனைவிட்டுக் கடைந்தாரப்பா
நெருப்பான மேனியன்றா னினைத்தபோது
தாரப்பா சேடனுட விடந்தான் பொங்கி
தனியாத பாலாழி யுலகுதானே. 182

உலகுகொல்லாப் பாலாழி பொன்றுர் நத் கோடி
உண்டாக்கிக் கனலுருவா போடிச் சென்று
வலகுகொல்லா வயனரியை ரிஷிதேவர் முனியை
வாட்டிடவே யெல்லோரு மலரி விழ்ந்தார்
கலகமிலா ஈசுரனை நினைத்தபோது
கடாட்சிப்பே னென்றுசொல்லி முன்னே வந்து
உலகுகொல்லா விடக்கடலை ஒரு துளியாய் வாங்கி
உண்டான்கா ணெவ்வுருவுங் கொண்டான் காணே. 183

திரிபுர மெரித்தல்

கொண்டதிரி புரத்தாரைப் பிரமன் மாலும்
கோடிகற்பஞ் சண்டைபண்ணி ஜெயமில்லாமல்
கண்டனுமால் மீனுருவாய்ச் சாகரத்திற் சென்றான்
கமலனன்ன மாகியண்டங் கடந்து போனான்
விண்டசிவன் தனையங்கே தியானித் தப்பால்
வேண்டியதே தென்னவென்ற முன்னே வந்தார்
பண்டிருந்த புரத்தாரை யெரிப்பாயென்று
பங்கயன்மா லுரைத்தபின்பு பதிசொல்வாளே 184

வானவர் முனிவர்சித்த ரீஷாயீஷர்
மகாருத்ரர் மகாவிஷ்ணு நான்முகத்தானோடு
தானவர்சூ ரியர்கிரகர் சந்திரரெல்லாம்
தான்கூடியே தேர்கள் சமைத்துக் கொண்டு
பானான மேருவை வில்லாய் வளைத்துப்
பாம்பாதி சேடனைத்தான் கயிறாய்க் கட்டி
ஆனான புவியளந்தோன் பாணமாக
அம்புயத்திற் கொண்டவரை வெல்வேனென்றார். 185

யென்றுசிவ னருளியதை விஷ்ணு கேட்டு
இப்படியோ தன்சமத்து பத்திவைத்துச் சிவனை
குன்றுபிர மன்றானு மாலுங் கூடிக்
கோடிநகர் திரிபுரந் தன்னைப் பார்த்து
நன்றுநமக் கிவரெதிரி யென்றிறங்கி நிற்க
நான்முகனும் வானிலுள்ள வானவரும் பார்த்து
யின்றிவர்தான் செயிப்பாரோ நாமில்லா விட்டால்
யெனநினைத்தார் சாம்பவரும் நகைத்திட்டாரே. 186

விஷ்ணு ரிஷபமானது

தகைத்திடவே புரமெரிந்து நீறாய்ப் போச்சு
நாதனங்கே ரதத்தைவிட்டுக் குதித்தாரப்பா
திகைத்துடலம் நடுங்கியே ரிஷபமாக்த்
திருமால்தான் தாங்கினார் சித்தர் சொல்வார்
நகைத்திடவே சலந்தரன் தான் பிரமன் மாலோடு
சண்டையிட்டுத் துரத்திடவே யிவர்கள் சென்று
திகைத்திடவே சலந்திரனைக் கொல்லுமென்று
சிவனடியில் வீழ்ந்தார்மால் தேவர்தானே. 187

சலந்திரனைக் கொன்றது

தேவாதி தேவனந்தச் சலந்தரனைப் பார்த்துத்
திறமாகச் சண்டையிட்டான் வெகுகாலமாக
ஆதியென்ற சிவன் ஜெயிக்க மாட்டாமற்றான்
அடிநெகத்தாற் கீறினான் ஆழி போல்
கோவியென்ற சலந்தரனையுந் தூக்கச் சொன்னார்
கூசாமல் நினைத்தவரந் தருவேனென்று
பாவியென்ற சலந்தரன்தான் தூக்கும்போது
பாரெல்லாம் சக்கரமொன்றாகத் தானே. 188

சிவன் விஷ்ணுக்கு சக்கரம் கொடுத்தது

சக்கரமாய் மேலெழுந்து, சலந்தரனைக் கடிந்து
தலையறுத்து யிரத்தமுண்டு நமஸ்கரித்த அப்பால்
அக்கணமே அறிந்து அரி சிவனைப் பூஜித்தான்
அம்புயக்கண் ணோடேஅர்ச் சித்தானப்பா
மிக்கசிவன் வெளிப்பட்டு வேண்டியதே தென்ன
மெய்யான சக்கரந்தான் வேணு மென்றான்
முக்கியமாய்ச் சக்கரத்தை யீய்ந்தாரப்பா
முன்னடந்த சிவன்பெருமை மொழியக்கேளே. 189

தக்கனை வதைத்தது

மொழியாத யாகபலன் தக்கன்றானும்
முகுந்தனுக்குக் கொடுக்க அவன் செய்யும்போது
விழியான சிவனைவிட்டெல் லோருங் கூடி
விரைந்தங்கே செய்குவதைச் சிவனறிந்து
அழியாத வீரனையுண்டாக்கி யாகம்
வளர்த்தவரை யழித்துவா வென்று விட்டான்
கழியான வேள்வியிலே சென்று வீரன்
கடகத்தா லரிமுடியைக் கடிந்தான் பாரே. 190

கடிமலரோன் கன்னத்தி லடித்துமுடி திருகி
கதறியவ னடிபட்டு விழுந்தபோது
முடிவாணி நாவுள்ளே யிருந்தாள் கண்டு
மூடிமயிரைப் பிடித்திழுத்து மூக்கறுத்தான்
அடியான குண்டத்திற் சமித்தை வாங்கி
அக்கினியின் கையிலோரரை யறைந்தான்
வடிவுடைய சூரியனைப் பல்லுடைத்து
மதியினைக் காலால்தேய்த்தான் மயக்கத்தானே. 191

மயங்கிவிழத் தக்கன்முடி யறுந்தான்பின்பு
வானவரைக் கடகத்தா லடிக்கும்போது
தியங்கியே பட்சியாய்ப் பறந்துபோனான்
சிவனைவிட்டுச் செய்ததவம் விழலாய்ப்போச்சு
நயங்கொள்ளசு ரனையெல்லாப் புவனத்திற்கும்
நாதனால் அரியய னவருந்தன்னைச்
ஜெயங்கொள்மா மிசஞ்சுமக்கச் செய்துஈசர்
திருவடி பணிந்துநிஷ்டை செய்தாரென்னே. 192

மன்மத தகனம்

செய்திருக்கி லரியயனுஞ் சூரனுக்குப்பணிந்தார்
செய்வதுக்காற் றாமலவர் தேவியிடஞ்சென்று
வையகமும் பாழாக்கி அரிஅயனும்பின்னும்
வானவரும் நீசர்மயமாகிப் போனார்
மையரும் விழியாளே சிவன் றன்னையெழுப்ப
மன்மதனா லாகுமென்று அரிதான் சொல்ல
துய்யபச்சை நிறத்தானு மாரனையுண்டாக்கி
துரிதமாய்ப் பாணம்விடச் சொன்னார்காணே. 193

சூரனைக் கொன்றது

சொன்னபடி மதன்கேட்டுச் சிவன்முன் சென்று
கரும்புனா ணேற்றிவிட்டுத் துளைக்கக்காமன்
மன்னரனு மேதென்று விரித்துப்பார்க்க
மன்மதன்றான் பொடியாக யெரிந்துபோனான்
கன்னியுட னயன்மாலும் பதத்தில்வீழக்
காட்சிபெற்று மலையரசன் மகளைமுன்னால்
முன்னாகக் கலியாணஞ் செய்தபின்பு
முருகனாற் சூரன்மாள முடித்தான்பாரே. 194

மாபலி விபரம்

பாரந்தச் சூரனைத்தான் கொல்லாவிட்டால்
பங்கயன்மா லேதிந்தப் பாரினுள்ளே
தேரிந்த மரைக்காட்டில் வந்ததீபம்
திரிமயங்கி யெரியும்போ தெலிதான்சென்று
சேர்ந்தபசி யாலெண்ணெய் யுண்ணமூக்காற்
துடைத்தங்கே திரிதூண்டி விளக்குநன்றாயெரிய
வேரந்தச் சிவன்றானு மெலியைப்பார்த்து
வேண்டியது யேதுனக்கு விளம்புவாயே. 195

தாயான தயாநிதியே யடியேனுக்குச்
சாகாத வரமுடனெல் லாவுலகும்வேணும்
நேயமாய் வானவர்கள் பணிதான்செய்து
நிர்க்கவுந்தான் வரம்வேணு மென்றுகேட்க
தாயவனே யெளியவன்றான் கேட்ட தெல்லாம்
தந்திடவே சுக்கிரன்மந் திரியுமானான்
நாயகனாய் மாபெலியாய்ப் பூமியெல்லாம்
நாடான மணவடிவாய் மால்வந்தானே. 196

விஷ்ணு சுக்கிரன்

வந்துமே மாபலியை மூன்றடிமண் கேட்டான்
மகிழ்ந்தளித்து மூன்றடிமண் கொடுக்கும்போது
சுந்தரசுக் கிரனறிந்து கெண்டிமூக்கைச்
சுருக்காகப் போயடைத்தான் துரும்பினாலே
மந்திரமால் சுக்கிரன்றன் கண்ணிற்குத்த
மறைந்தவன்றான் பறந்துவிட்டான் ரெத்தம்வாங்கி
அந்தமது வாங்கிவிசுவ ரூபமாகிநின்று
அகிலாண்ட மிரண்டடியி லளந்தான்மாலே. 197

அளந்து ஓரடிக்கிடந்தான் கேட்கும்போது
அடியேன் முடியென்றா னெலியாமன்னன்
அளந்தவடி யவன்முடிமேல் வைத்துக்கீழே
அமுத்திவிட்டான் பாதாளத் தழுந்திப்போக
பிளந்துதீ பந்தூண்டு மெலிக்குத்தானும்
பேருலக மீய்ந்தவனே கர்த்தாவாகும்
அளந்துதா னங்கொடுத்தார் தமக்குக்கேடு
அளிப்பாரோ சகலாத்மா வாகுந்தானே. 198

ஆகின்ற பிறைவனுக்கு யெதுவிஷயமாகும்
அகிலபோ கங்களிலாத மாக்களுக்குவிஷயம்
போகியென்ற அரியயனும் பட்ட பாடு
பொய்யாக சிவனவர்க்கு வருத்தந்தீர்ந்து
சாகாம லவற்குலக மளித்தவாரும்
ஜனகாதி நால்வருடன் புசுண்டர் முதலறிவார்
ஆகாத யுகந்தோறும் அரியயன்றான் பிலமும்
அரன்செயலும் பார்த்தறிந்தே னய்யாகேளே. 199

பாசலட்சணம்

அப்பனே பாசத்தின் லட்சணத்கைக்கேளு
ஆணவமு மாய்கையது காமியகன்மத்தினொடு
செப்பரிய திரோதையொடு மலமைந்தாகும்
திருநாமம் பாசமென்றே செப்பும் நூல்கள்
ஒப்பில்லா ஆணவந்தா னொன்றாய்நின்று
உயிரையெல் லாமயக்கில் மயங்கிநிற்கும்
அப்பனே அருளுயிரைத் தெரியாதுமறைத்து
அறியாமை யேவடிவா யாட்டும்பாரே. 200

மலவிபரம்

பாரில்நல்ல நினைவுகளை மறைத்துப் பொல்லாப்
பாவநினை வாகுமது நினைப்பிக்கும்பார்
பூரிநல்ல சொற்களைத்தான் சொல்லொட்டாமல்
பொல்லாத சொற்களைத்தான் சொல்லிவிக்கும்
கோரிநல்ல தொழில்களைத்தான் செய்யொட்டாமல்
கொடுபொல்லா துருபவந்தான் செய்விக்கும்பார்
ஊரிலுயிர்க் கூதியமாய் காரியங்கள்
ஓர்காலத் தினுமலந்தான் செய்யொட்டாதே. 201

செய்யுயிர்க்குக் கேடுவரும் கர்மகாரியங்கள்
தினமுமிடை விடாமலே செய்து கொண்டேயிருக்கும்
மெய்யுயிரி னில் அறிவை யெந்தக்கா லமுந்தான்
இடைவிடா மற்கெடுத்துக் கொண்டிருக்குமிருளாய்
கொய்பொல்லா லறிவையெந்தக் காலமிடைவிடாது
கொடுத்துக்கொண் டேயிருக்கும் ஆகமவேதத்தைப்
பொய்யாகத் தோற்றுவிக்கும் புரிசடை யோனருளும்
பொய்யாக்கிப் பொய்யுலகை மெய்யாக்குமலமே. 202

நல்வினை தீவினை 14ன் விபரம்

மலமான கர்மத்தின் வகையைக்கேளு
வளர்ந்தநல் வினை தீ வினையுடனிரண்டாம்
குலமான மனவாக்குக் காயத்தாலுங்
கொடியபசுத் தீவினையாங் கர்மம் நான்காந்
தலமான மனம்புத்தி சித்தமாங்காரம்
தன்னிலிரு வினைநான்காம் ஆகவினையிரண்டில்
பெலமான யீரேழா மிவைபின்றி வினைகள்
பேராகப் பலவினைக ளுண்டாக்குங்காணே. 203

காணாத நல்வினைக்குப் பசுபுண்ணியமென்றும்
கடந்தசிவ புண்ணியமென் றிரண்டுதான்வருகும்
தோணாத தீவினைகள் சிவத்துரோக மாத்மம்
துரோகமென்ற யிருபவமுந் துடர்ந்துவரும்பாரு
பூணாத புண்ணியத்தால் பலயின்பம் வரும்பார்
பொல்லாத பாவத்தால் துன்பம்பலமாகும்
வீணான வினைகளுக்கே தூலகர்ம
மென்றுரைத்தார் நாமமல்லோ நிர்மலமாம்பாரே 204

மலர்ந்திந்த யிருவினைக்கும் பின்பலனதாக
வருகிறதோ ரின்பதுன்பப் பலன்களுக்குப்
புலர்ந்தவத சூக்கும கர்மமென்றுரைப்பார்
பூட்டுமிரு வினைகள்கா மியமென்றே நாமம்
....
....
கலந்தயிரு வினைப்பயனாய்ப் புண்ணியம்பாவங்
களுக்கும்பேர் சஞ்சிதமென் றுரைத்திடு மாகமமே. 205

நல்வினை தீவினை உபமானம்

இடுபுண்ய பலன்களுக்குப் பலனாவதுதுன்பம்
யின்பதுன் பங்களுக்குப் பிராரத்துவ மென்றுபேரு
படியில்பயி ரிடுவதுபோல யிருவினைகள்பிறப்பு
பலனதனைக் கழஞ்சியத்தில் கட்டிவைப்பதுபோல்
திடபாவ புண்ணியங்கள் கட்டிவைத்திடுதல்
சிறுகவெடுத் துண்பதுபோ லின்பதுன்பம்
கடிலின்ப துன்பங்கள் தெய்வீகத்தாலும்
களர்பஞ்ச பூதங்க ளாலுந்தான் வருமே. 206

தானான மறையுதிர்க ளாலேயும் வரும்பார்
தனியாக மூன்றாகும் புண்ணியபாவங்கள்
ஊனான தானிச்சை பட்டுவருகிறது
உண்டிச்சைப் படாமலே வருகிறதுமுண்டு
வேனான தன்னிச்சைப் படிக்குவாராமல்
வேறொன்று வருகிறது உண்டாகும் மூன்றாம்
கோனான தனுகரண புவனபோகங்கள்
கொடுத்துநிற்குங் கரணத்தின் குணந்தான்முற்றே. 207

இரண்டாவது தத்துவ காண்டம் முற்றிற்று.

மூன்றாவது ஞானகாண்டம்

ஆதி யகத்திய ரோதிய தத்துவம்
மேதினி கற்றவர் தீதிலாச் சித்தரே.

மாயையி னுற்பவம்

முற்றுமே தெரிந்துரைத்த யெந்தன் வாக்கு
முன்னுரைத்தபிரணவமு வெழுத்தன் பத்தொன்றும்
பத்துமெழு கோடிமகா மந்திரங்களுடன்
பதமெண்பத் தொன்றும்வே தங்கள் நான்கும்
மித்திரமூ லாதாரம் நாலேழு யிருநூற்
றேழாகு மிருபத்தெ ட்டாகமசாஸ் திரங்கள்
பத்துகலைக் ஞானங்க ளறுபத்து நாலும்
பதினெண்பு ராணமொடு பகரக்கேளே. 208

பகர்சத்தி பேதங்கள் சிவபேதத் துடனே
பகர்நாத பேதங்கள் வித்துபே தங்கள்
உகந்தசதா சிவபேத மகேசுபர பேதம்
உருத்திரபே தங்களுட னுண்டின்னங் கேளு
சகலவிஞ் ஞானகலர் பிரளாய கலர்க்கும்
சரிகைகிரிகை யோகம் சாதகமூ வருக்கும்
நிகரில்லாத் தனுகரண புவனபோ கங்கள்
நிவர்த்தாதி கலைகளஞ்சும் மாயையினுற்பவமே. 209

உற்பத்தி யனந்தகா ரியம்சுத்த மாயை
உள்ளிருந்து பிறக்குமது யெப்படிப்போ லென்றால்
பொற்பலகைக் கட்டியிலே பலபலவா பரணம்
பிறக்கிறது போலவுமோ ரயக்கட்டி தனிலே

கற்பனையாய்ப் பலபலஆ யுதம்பிறப் பதுபோல்
கருமணலில் பலபாண்டம் பிறக்கிறது போலும்
சொற்பலவாம் பலபேத புவனபோ கங்கள்
சுத்தமா மாய்கையிலே தோன்றிடுமென் னுலகமே. 210

அசுத்த மாயை

உலகினி லசுத்தமாயை யுரைக்கக் கேளு
ஒடுங்காத வித்தியா தத்துவமோ ரேழும்
நலமான பிரமனொடு விஷ்ணுயிந் திரர்கள்
நவக்கிரகம் நானிலத்தில் மற்று முள்ள
தலமான தனுகரன புவன போகம்
தன்னுடனே பிரகிருதி மாயையோ டிருந்த
இலமான மூவெட்டுத் தத்துவங்க ளுடனே
யின்னமனந் தம்பிறக்கும் சுத்தமா யையிலே. 211

பிறப்பதொரு வித்ததிலே பலதோப்புப் போலே
பலபூவுங் காய்கனிகள் பிறக்கிறது போலும்
உறப்பதோர் நெல்லிற்பல நெல்லுண்டா வதுபோல்
ஒருமேகந் தனிற்பிரிவு பலவிதங்களுடனே
பறப்பதோர் பலச்சத்த மிடிகள் மின்னல்
பலபலயிந் திரதனுசு பிறக்கிறதுபோல
கரைகண்டன் திருவருளால் சுத்தமா யையிலே
காண் பரிய பலபுவன மிருகமுண்டாங் காணே. 212

நால்யோனி எழுவகை தோற்றம்

காணப்பா அண்டசமா முட்டையாலும்
காண்பரிய சுவேதசமாம் வேர்வை யாலும்
தாணப்பா உற்பீசம் விறையி னாலும்
சராயுசமாந் தோற்பையினால் தேகந் தோணும்
தோணப்பா யெழுவிதமாந் தோற்றங் கேளு
துரிசான நரர்பிறப்பு ஒன்பான லெச்சம்
பூணப்பா தாபரம்பத் தொன்பது லெச்சம்
புகழ்ந்தபதி னைந்துலெச்சம் ஊர்வனத்தின்பிறப்பே. 213

பிறந்தபதி னொருலெட்சம் தேவர்நீர் வாழும்
பிறப்பான உடற்பேதம் பத்துலெட்ச மென்பார்;
பிறந்ததொரு பறவைபத்து லெட்சமாகும்
பிறந்துதே நாற்காலின் பிறப்பின் பேதம்

துறந்தயெழு தோற்றத்தின் துகையைக்கேளு
சொல்வார்க ளெண்பத்து நாலுலட்ச மென்று
கறந்ததொரு தேகத்தி லனந்தவுட லுண்டாம்
கரையில்லை கணக்கில்லை கருத்துடன்பார்த்தறியே. 214

உட்கருவி 36

அறிந்துபார் காரணத்தைச் சொல்லக் கேளு
அளப்பரிய பூதமைந்து ஞானேந்திரிய மைந்து
பிரிந்துபார் கர்மேந்திரிய மைந்தி னோடே
பேரான சத்தாதி விஷய மைந்து
விரிந்துபா ரந்தக்கர ணத்தி னோடே
மேலான ஆத்மதத்வ மாகுமென்பார்
அரிந்தவித்தியா தத்துவமோ, ரேழுசிவ தத்துவம்
ஐந்துடனே யாறாறு தத்துவமுள் ளாமே. 215

புறக்கருவி அறுபது

உள்ளான மண்ணினுட கூறைந்தும் செலக்
கூரைந்து தேயுவின்கூ றைந்தி னோடு
தள்ளாத வாயுவின்கூ றைந்துவான் கூறு
தானைந்து பூதத்தி லிருப்பதி யைந்தும்
விள்ளாத நாடிபத்து வாய்வு பத்து
மேலான வசனாதி ஐந்த தாகும்
வள்ளலே குணமூன்று ஆங்கார மூன்று
வாக்கது நான்குடனோ டறுப தாமே. 216

புவன விபரம்

அறுபதுதான் புறக்கருவி யென்பார் சித்தர்
ஆகமொத்தந் தொண்ணூற்றா றாகு மென்பார்
உருவதியை நான்கென்பா ரிதனுக் குள்ளே
உண்டான கருவிசொல்லத் துகையோ யில்லை
குறியான புவனத்தைச் சொல்லக் கேளு
கூடுபல முளங்கொண்டா லொருவீடாகும்
செறிவான பலவீடு கூடினதோர் தெருவாம்
தெருக்கள் பல கூடினதோ ரூரென் பாரே. 217

ஊர்கள் பல கூடினதோர் நாட தாகும்
உறுநாடு பலசேர்ந்தோர் தேச மாகும்
பார்தேசம் பலகூடில் கண்டமொன்று
பலகண்டங் கூடிலது உலக மாகும்
சீருலகம் பலகூடில் அண்டமொன்று
சிறந்த அண்டம் பலகூடில் புவன மொன்றாகும்
சார்வறிய பெரும்புவன மெண்ணிக்கை சொல்லச்
சதாசிவனா லாகாது யாரறிவார் காணே. 218

போக விபரம்

காணப்பா போகத்தைச் சொல்லக் கேளு
காண்பரிய சொர்ணமா மாட கூடம்
பூணப்பா நல்லாடை நல்ல பூமி
புகழ்ான நல்லமனை நல்ல உண்டி
தோணப்பா நற்பெண்க ளிவைகள் முதலாக
தூயபதார்த் தங்களிலே உயிருக்கு விருப்பம்
பேணப்பா புலிகரடி பாம்புதேள் நாயும்
பெரியதுற் கெந்தமுதற் றரித்திரத்தி னோடே. 219

திறமான மெய்வருந்தச் செய்யுகிற கருமம்
சேர்ந்தவண்ண மாகாத பொசிப்புத் தூக்கம்
கறமான விஷம் நெருப்புப் பாஷாணத்தோடே
கண்டதுபின் புள்ளதெல்லாம் வெறுப்பாகு முயிர்க்கு
சொரிவிருப்பு வெறுப்பிரண்டு பதார்த்தத் துக்குச்
சொல்லவொண்ணா தளவில்லை கண்டுபாரு
விரிவான சத்தாகி ஐந்தி னுள்ளே
விருப்போடு வெறுப்பெல்லா மொடுங்கும்பாரே. 220

அடங்காத சத்தாதி ஐந்தி னிலொவ் வொன்றில்
அளவிறந் தாகவரு மறிந்து பாரு
மடங்குகின்ற இன்பதுன்ப மிரண்டு மேது
வாகமே வருபோகம் வருவ தெல்லாம்
அடங்காது யின்பதுன்ப மிரண்டேற்றுக் கொண்டு
அனுபவித்தா லல்லாமல் ஆசை மூன்றால்
அடங்குவதோ சொன்னததற் கில்லை யென்றே
ஆதிமறை யாகமந்தா னறைந்த தன்றே. 221

அன்றுபுத்தி யுத்திபூரு வத்தி லய்யா
　　ஆகாகா சரிதையினிற் பாயுங்கிரி கையுமே
சென்றிட்ட பரயோக மெய்ஞான முடனே
　　சிவபுண்ணி யம்வரவே செய்து பின்பு
நன்றிறைவன் ஞானாசா ரியராக வந்து
　　நல்லசிவ புண்யபல முண்மை ஞானம்
அன்றுகொடுப் பானந்த ஞானமே தென்னில்
　　ஆகமங்க ளுரைத்ததச காரியமென் றறியே. 222

அறிந்துதத்துவ சரிதை முதல் சிவயோகம் வரைக்கும்
　　ஆகவொன்பா னுயிர்கண்டு களிப்ப னவாம்
அறிந்துசிவ யோகமென்று மிடைவிடா தென்றும்
　　ஆவிகண்டு கொண்டேதா னிருப்பதொருக் காலும்
பிரிந்துதள்ள மாட்டாது யிதற்குமே லுயிர்க்கும்
　　பேரான ஊதியந்தா னொன்றுமில்லை யிதன்மேற்
பிரிந்துயிதின் மேல்விரிந்த நூல்க ளில்லை
　　பிரித்துரைப்பேன் தத்துவத்தின் பெருமைகேளே. 223

தத்துவத்தின் பெருமை

கேளப்பா ஐவருட னெழுவகைத்தோற் றத்தின்
　　கேடில்லா உயிர்களே வானமுடன் மலையாம்
வாளப்பா பதம்பூமி மந்திரங்க ளுடனே
　　மகத்தான சதாவண்ட முடலுமகா வண்டம்
மேலப்பா பார்சகல உருவ மெல்லாம்
　　மேலான தத்துவந்தா னென்பார் சித்தர்
தாளப்பா வெல்வதுவுந் தத்துவமே யல்லால்
　　தாரணியில் வேறுருவ மில்லை தானே. 224

உருப அருபம்

உருவமென அறிதல்சொரூ பந்தனைக் கண்டால்
　　உனதுதெரி சனமிதுபொய் யென்றறிதல் சுத்தி
கருவிகளி லவனதிலே யெனவைந்தி லொருவன்
　　கலத்ததல முருவதனைக் காணல்தெரி சனமாம்
மருவியதோர் செயலையன்றிச் சுத்தி யாலும்
　　மன்னரரு ளென்பதுள மன்பாங் கண்டால்
திருயோக மாகுமர னோடொன்ற லொன்றிச்
　　சிவயோக மாமிதுவாஞ் சோதியா தியதே. 225

ஐந்து முகம்

ஆதியான முகமைந்தா மீசான்யம் புருடம்
அகோரமது வாமமுடன் சத்தியோ சாதம்
வீதியிலீ சானகலை யைந்த தாகும்
விளங்கியதற் புருடகலை யொருநான் காகும்
சோதியா மகோரகலை யெட்ட தாகும்
சுத்தமாய்ப் பதிமூன்று வாமகலை யாகும்
போதுசத்தியோ சாதகலை யெட்டென் பார்கள்
முப்பத்தெண் சுலையெனவே மொழிந்திடுமா கமமே.226

ஆகமமு மண்ணீறோ டேபிர் மாண்டம்
அடங்குமது நிவர்த்தியோடு பிறப்பு மாச்சு
சுகமாக மூன்றடங்கும் பிரதிஷ்டையோடு
சோகமாய்க் கலாதிகளேழ் தீட்சை மூன்று
தேகவாயு விலடங்கும் சாந்தியதாஞ் சத்தி
சிவம் விசும்பி லுருவதுவே சாந்தியா தீதம்
போகாத பூதமைந்திற் கருவிக ளாலும்
பொருந்திநிற்கு மெனஉரைத்தார் அருந்தவ
மேலோரே.227

மேலான பறைசாந்தி யதீதகலை தன்னால்
மேற்சதா சிவன்தொழில் நடத்துவனா மாதி
நாலான சாந்திகலை யாலீசன் தொழிலும்
நடத்துமிச்சை வித்தைகலைா யாமுருத்திரன் தொழிலும்
சூலான ஞானசத்திகலை யாயிரத்தெட் டைமால்
தொழில்நடத்தும் கிரியாசத்தி கலைகள் தன்னால்
பாலான தாமரையோன் நடத்துந் தொழில்கள்
பரசிவனா ரானந்தம் பஞ்சசத்தி யாலே. 228

சத்தியொடு சிவகிரியை நிவர்த்திகலை ரெண்டும்
தனியான மந்திரத்தால்புறமொருநூற் றெட்டாம்
உற்றபதம் நாலெழுந்து ஒன்றாகும் பிரமம்
உளவதுமுன் னிலையாகப் பல்லுயிற்கு மினிதாய்
உற்றபுவி யிடமாக மருவுமிரு நாசி
உபஸ்தமதால் வருமயனை யின்னிலையே யருந்தி
அற்றமுன் போலென்ற யிருவினையை நிவர்த்தியில்
அடைத்திடுமெய்ப் பரனென்றே யாகமத் 229
தினுரையே.

உரைஞான சத்திபிர திஷ்டைகலை யினிலே
ஒளியிரண்டு மந்திரத்தா லிருபத்து மூன்று
யிறைதத்து வந்தாலே மூவெட்டு மெழுத்தார்
பதமாறே யெழுமூன்றும் பிரமன்பத் தாறால்
அரிதன்னால் முன்னிலைதான் நீரினிட மாக
அனைத்துயிர்க்கும் விளங்குமா சிங்வை யாலும்
தெரிவினைக ளணுகாத வழியடைந்த வினைமுற்
செரிபயன்போல் வைத்திடு மாகமத்தியெனு நூலே. 230

எனுமிச்சை வித்தைகலை யினில் ருத்திர
இறையால்மந் திரமிரண்டால் பதமெழுமூன் றதானால்
வின்னேழு தத்துவத்தால் பரமேயொன் பதனால்
வினைவித்தால் யிந்திரியம் நேத்திரங்கை யதனால்
வினையடர்ந்த பயனையெல்லாம் ருத்திரன்பின்னென்ற
வினையனைத்தும் முன்போல வித்தையில்வைத்
திடுமால்
நினையாதி சாந்திகலையின் மயேசுரன்முன் னிலையால்
நிலையாமந் திரமிரண்டாய் பதம்பதினொன்றாமே. 231

ஒன்றாய்த்தத் துவமூன்றா யன்னமது மூன்றா
யுகமதுவும் பதினெட்டா யுயிர்கட் கன்பாய்
யின்றுகா லிடந்தொக்காம் பாதந் தன்னால்
யிருவினையின் பயனிருத்தி முன்போல் துண்டு
துன்றுவினைப்பயனையறுத் தவன்சாந் தியினிற்
சொற்பரைய தீதகலை யால்மந்திர மூன்றால்
பன்னுபத மொன்றால்தத் துவத்தால் புவனம்
பதினைந்தார் சதாசிவ்ன்மன் னிலையாலும் பரிந்தே. 232

பரிவானில் செவிவாக்கால் சேருங் கன்மம்
பரிந்தருந்தி முன்போன்றவ் வீதிபடைப்பான்
தெரிகலையில் பரிசமென வடிவெய்திவரலாம்
சேர்ந்தமுடி கலைகளைந்தாம் சாதியது நான்கும்
உரியவர்ண வித்தைமுதல் மூன்றுமே புரமாய்
ஒளிபிறத்திட் டந்தெரிந்து முந்திபத நிவர்த்தி
விரிதொக்கு வக்கரங்கள் புவனசா கரங்கள்
மேலான வித்தாம் போகங்க ளாமே. 233

ஆமப்பா சுக்கிலமோர் டத்தி நிணமூளை
ஆறாறு தத்துவமா யணுகு மப்பா
ஓமப்பா சந்திரன்றா னாக்கை யாக
உலகவுயி ரனைத்தினையு மறியன் கண்டாய்
தாமப்பா சத்திவிதி திரோபவத் துக்குத்
தரும்பினிய யிச்சாஞானக் கிரிகை யாக
நாமப்பா உள்ளொளியா யாவுங் காண்பான்
நன்மாயை பலவுயிர்க்குங் கண்ணென் பாரே. 234

கண்ணான ஓங்கார பீடமாகும்
கலந்தநடுக் கண்டமதா லவ்வென் பார்கள்
மின்னான மேற்பீட முகார மாகும்
மீதிலதற் குளவட்ட மகார மாகும்
நன்றான வட்டமே விந்து நாதம்
நாதாந்தச் சோதிலிங்க மாகு மென்பார்
மன்றான கரண நிலை லிங்கந்தா மென்பார்
மகத்தான பரமநிலை லிங்கந் தானே. 235

லிங்கத்துக் கடிப்பிடியாங் கிரியா சத்தி
லீலைகளோ மாஞான சத்தி யாகும்
அங்கத்தின் மேற்பீட மிச்சா சத்தி
அதனிலே உள்வட்ட மாதி சத்தி
சங்கத்தின் லிங்கநிலை பறையாம் சத்தி
தனிப்பீட மேற்சிவமாம் சாம்ப லிங்கம்
யெங்குமெங்கும் பிரமமொன்றாய் பூஜை செய்யும்
யிறைவருக்கு மிவ்வுருவந் தெரியும் பாரே. 236

தெரிநாதத் தாலுளத்தி லனுக்கிரக மாகும்
செய்வன்விந்து வாலீசன் சிந்தைதனில் மறைப்பன்
அரிமனத்தி லுருத்திரன் மகாரத்தா லழிப்பன்
அரியவன் புத்திநின்று உகாரத்தா லழிப்பன்
பரிமலரோன் நகாரத்தா லாங்காரம் பொருந்திப்
படைத்திடுவே னோங்காரப் படிவ மாதல்
விரிவுள நற் புவனமண்டம் பலவுயிர்க ளெல்லாம்
விளங்கிநின்ற லிங்கமது ஐந்தொழிலுஞ் செயுமே. 237

செய்யுகின்ற நாதத்திற் சிகாரந் தோன்றும்
சிகாரம்விந் திற்சேர்ந்து யகாரந் தோன்றும்
மய்யுகின்ற யகாரத்தில் மகாரந் தோன்றும்
மகாரமென்ற உகாரத்தில் அகாரந் தோன்றும்

துய்யதொரு அகாரமாம் அவ்வில்நின்று மகாரம்
தோன்றுமவ் வைந்தெழுத்தில் மாயைமலமிரண்டும்
செய்யருளு மிறையாகி அஞ்செழுத்துஞ் சுழியிற்
ஜெனியாமற் செவிப்பதுவே முத்திநெறி திறமே. 238

திறமான அஞ்செழுத்தே அரியயனு மரனும்
சிவனீச னாகிநிற்கு மும்முதலு மாகும்
மரியினிலே திரோதைசத்தி சிவமுந்தற் பதமாம்
மயக்குமுயிர் தொம்பதம் பசுவாகு மென்பார்
பிடியுமஞ் ஞானவிருள் மலவித் தாகும்
பெத்தமுத்தி யிரண்டினுக்கும் அஞ்செழுத்
தைந்தொழிலும்
நெரியான பொற்பொதுவி லெந்தைபிரா னடமும்
நேயமா யீதுண்மை நினைக்கரிதென் றுணரே. 239

உணர்ந்தஅந்த யகாரபதி நாத மைந்தும்
ஒளியாத யாகமந்த மகார மாகும்
புணர்ந்தசிகா ரமதுவே துடியதாகும்
புகழாக வீசியகை லகார மாகும்
வணர்ந்தயகா ரம்நகராம் புருவமைய மாக
வாழுந்தா மாகமுய லகனின்மேலே
புணர்ந்த மகாரநிலை யனாந்தா னந்தம்
பொற்பொதுவில் நிர்த்தமிடும் பொருளிதான் பாரே. 240

பாருணரு பதமாசுவ காரியுல குயிர்க்குப்
பகரின்ப முறுவித்த சிவனுடைய சிருஷ்டி
தோருணர்ந்து அபயங்காத்தல் வினையிரண் டுக்குந்
தோலையொப்பாந் துத்தியாஞ் சோதிமுகத்தாலே
சாரிசுழல் கரணமறுத்தே பாவமழிப் பதுவே
சம்மாரம தாம்வெளி யுருவால்த் திரோதை
சார்வகற்றுத லெடுத்தபதத் தார்க்கே வலமுஞ்
சகலத்தி லெடுத்தருளால் முத்தியளிப் பதுவே. 241

அழிப்பதுவே யனுக்கிரக மிவைபொதுவில் நடனம்
ஆடுவதா மரன்சிவா னந்தநடஞ் சிகாரம்
கழிப்பதுவம் பலம்பரையே வகாரமதா மாவி
கரிசிவ போகமருத்தல் யகாரம் தானம்

பிழிப்பதுஞா துருஞேயம் தெரிந்து பகுத் தறியும்
மெய்யறிவை யழித்தொன்றாக் குந்திரோதை யுலகு
ஒழித்துமறந் திடுங்கர்ம மலவுருவை யழித்து
ஓதறிய வின்பம்விளைக்கும் அகாரம் வேறே. 242

வேறான அகாரத்தில் மகாரமுதிப் பதுவாம்
வேற்றுமையா லுகாரத்தில் நகாரமுதிப் பதுவாம்
சூரான மகாரத்தில் யகாரமது வுளவாம்
கூடரிய விந்துவிலே வகாரமது வுளவாம்
பேரான நாதத்திற் சிகாரமுண்டாம்
பிரணவத்தி லைந்தெழுத்தும் பெருகித் தோன்றும்
ஊரான நாதமொன்றே விந்துவதா யவ்வாய்
உகாரம தாகியுதித் தொடுங்குந் தானே. 243

தானென்ற பிரணவத்தில் தத்து வங்கள்
தான்தோன்றி யொடுங்குமெனத் தானேசொல்லும்
மூனென்ற பிரணவமே சித்த ருக்கு
ஒடுங்காத மவுனவித்தை யென்பார் சித்தர்
கோனென்ற கடிகைமுதல் வாயு வுள்ள
கூரறிய தத்துவத்தின் குறிப்பு ரூபம்
வேனென்ற தத்துவநூ லாயிரத்தில்
விரித்துரைத்தேன் துகையதினில் விளம்பி நேரே. 244

வேதாந்த தத்துவம்

நேராக வேதாந்த தத்துவத்தைக் கேழு
நிலையான தத்துவந்தான் சிவன்றன் னாலும்
சூரான தூலசூட்ச காரணதேக மூன்று
குறிஞான போககிரிகை சரிதை யோடு
பார்பத நாலுமீசுர சிவப் பிரமம்
படர்மூன்றுந் தொந்தத்தில் முப்பதமு மாகும்
சேர்வகை பத்துடனே யபிமான மாகும்
சிவேசுரர்க்கு உபாதிக ளீரே ழாமே. 245

ஆமப்பா முப்பதத்தின் சுத்தியிலே யெட்டு
ஆதியாம் லட்சனைகள் மூன்றி னோடு
ஓமப்பா யிதுவல்லோ உபநிடதத்தின் சுத்தி
உணர்ந்தவனே வேதாந்த முணர்ந்தசித்தன்
தாமப்பா யிதுவறிந்தால் பிரமநிஷ்டைசுத்தி
தனிஞான முத்திக்கு உகந்த தப்பா
நாமப்பா யிதின்விரிவு காவி யத்தில்
கைமுறையாய்ச்சொல்லிவைத்தேன் கண்டு பாரே. 246

குரு பதேசம்

கண்டந்த வேதாந்த சித்தாந்தத் தோடு
காரணமாஞ் சமரசமுங் கண்டு தேறி
கொண்டறிந்த அறிவல்லோ வாக்கியந்தா னென்பார்
குறியான லட்சியத்தின் குறிப்பைக் கேளு
விண்டந்த மவுனவித்தை யென்பார் சித்தர்
வேதாந்த சித்தாந்த நிலையென் பார்கள்
பண்டுஅரன் குருவுருவாய் யால்நிழலி னின்று
பகார்ந்தானென் னுடனால்வர் பணியத் தானே. 247

மவுனம்

பணியான மவுனத்தைப் பாங்காய்க்கேளு
பாங்கான அவ்வுமுவ்வு மவ்வுங்கூடி
கனியாத விந்துநாதத் தொனியினோடு
கைமுறையாய்ப் பிரணவமே யெழுத்தஞ்சுந்தான்
மணியான மூலத்தி லறிந்துமூட்டு
மகத்தான சுழிமுனையாம் வழியிற்கூடி
அணியான மவுனவா னந்தம்நிற்கில்
அடங்காத தசநாத மெழும்பும்பாரே. 248

பாரந்த நாதத்தில் மவுனங்கூட்டப்
பளிச்சென்று கோடிரவி யொளிதான் தோன்றும்
நேரந்த மவுனவே தாந்தபிர்மம்
நிச்சயமாய்ச் சிவனென்று சித்தாந்தங்கள்
....
....
கூரந்தச் சமரசமே யானந்தமென்று
கூறுமது மவுனத்தின் குறியைக்கேளே. 249

குறியான மவுனத்திற் கூடும்போது
குறிப்பான மேதகலை முன்னேதோன்றும்
அரியாதி யரன்பீசம் வீசகலையின்விந்து
அதன்பின்னே தோன்றுமது ஆத்மவடிவென்பார்
பிரியாத தொம்பதமாம் யிறைவர் தூல வடிவாம்
பேசாத சிவதுரிய மிதுவாமென்பார்
நெறியான விந்துவிலே மவுனமூட்டில்
நிரோதையர்த்த சந்திரனுந் தோற்றும்பாரே. 250

தோன்றுமந்த நாதாந்த முடனேநாளும்
சொல்லுவா ரிதைச்சூக்ம தேகந்தானென்று
ஊன்றுபர துரியந்தற் பதமருளாமென்று
உரை நாதங் கடந்தந்த மவுனமுட்ட
ஏனென்ற சத்தியாமளை சாமளையுன்மனையும்
யிதன்பின்னொன் றுமிறைவன் காரணதேகமதாம்
ஊன்றுசிவ துரியபத மிவைதானென்பார்
உன்மணானந் தம்மிறைவ னுருவென்பாரே. 251

வாதசித்தி, காயசித்தி

பாரப்பா சித்தரெல்லாங் காயசித்தி
பாடினார் முறையாகப் பண்ணியேதான்
நேரப்பா வாதவித்தை பண்ணச்சொல்லி
நிலைத்தபின்பு காயசித்தி பண்ணவேணும்
வாரப்பா வாதம்விட்டுக் காயசித்தி செய்தால்
மத்தியிலே யவதிவரும் பொருளேபோகும்
சேரப்பா வாதம்விட்டுக் காயசித்திதானும்
செய்வதுதா னரிதரிது ஜெகத்திற்றானே. 252

வாதமுறை

ஜெகத்திலே வாதநூல் பார்த்துத்தேறிச்
சித்திசெய்ய வேணுமென்றால் செப்பக்கேளு
யிகத்திலே நூல்தோறு முறையோசங்கம்
யெதைப் பார்ப்போ மெதைவிடுவோ மென்றே ஏங்கி
பவத்திலே விழுந்துழன்று நிலையில்லாமல்
பண்பான திரோதாயி வலையிற்சிக்கி
யுகத்திலே மாளாமல் பலதுறையுமன்றி
ஒரு மொழியாய் வாதமுறை யுரைக்கக்கேளே. 253

பூனீருப்பு துருசு சுத்தி

கேளப்பா பூனீருசேர்தான் ஒன்று
கெடியான கல்லுப்பு அரைக்காற்சேரு
வாளப்பா வீரம்வெள்ளை யரைக்காற்சேரு
மாட்டியே பொடிபண்ணி வைத்துக்கொண்டு
தாளப்பா அமுரியது மூன்றுசேரில்
தனிச்சுண்ணம் நீற்றியே யிருத்துக்கொண்டு
கேளப்பா பூனீரைக் கலக்கிக்கொண்டு
குறியாகக் கயறினால் கடைந்திடாயே. 254

கடைந்து நுரை பீங்கானில் வாங்கிக்காயக்
கடியவுப்பா மண்டநீ ராலரைத்து
குடந்தவில்லை யாய்பிடித்துப் புடத்தைப்போடு
குறிப்பான கடுஞ்சுண்ணம் வழலைச்சுண்ணம்
முடைந்தயிந்தச் சுண்ணமுடன் மித்துருவைத்தானும்
ஒக்கவே பதிநாலும் உமிழ் நீராலரைத்து
விடைந்தகண்டர் பலமொன்று சுத்திகேளு
வெள்வங்க நீர்வீரம் மேலேபூசே. 255

பூசியே முன்வழலை மேலேபூசிப்
புகழாக உலர்த்தியே சீலைசுத்தி
மாசற்ற வங்கத்திற்றோய்த் தெரிக்க
வளமான சுத்தியாம் வாங்கிக்கொண்டு
ஓசைபதி னைந்துமித்திரம் நாதவிந்தா லாட்டி
ஒடுங்காத கண்டர்க்கப்பி ரவியில் வைக்கக்
காசியே போயலைந்து திரியவேண்டாம்
கடுரவியில் நீராக வீழ்கும் பாரே. 256

வீழ்ந்தநீர் பரணிதனி லடைத்துக்கொண்டு
வீரமொன்று சூதமொன்று யேமமொன்று
சூழ்ந்தகுரு வொன்றிந்த நாலுங்கூட்டிச்
சுத்தலகு புடந்தனிலே குருவாய்நிற்கும்
தாழ்ந்தகுரு வல்லவிது சூதத்துக்குத்
தாக்குமுன்னே மணியாகும் புடத்தைத்தீர்க்க
ஆழ்ந்தமணி பீஷத்திற் சரியாய்சேர்த்து
அடர்கண்டர் வீரமுட னரைத்துச்சேரே. 257

அரைத்ததின்மேல் வழலையுட சுண்ணம்பூசி
அண்டோட்டுப் பொடியில்வைத்து நாற்சாமமெரிக்க
வரைத்தகுரு வாய்நிற்கும் சூதத்திலூட்ட
மணியாகும் புடந்தீர்ந்து வாங்கிக்கொண்டு
கரைந்தநா கந்தனிலே துருசுவீரம்
கட்டியே புடம்போட்டுப் பரிசவ்வாது
நிரைத்தகா ரத்துடனே பூசிவாட்ட
நிட்சயமா யுருக்கவது மணியுமாமே. 258

நாகரசம்

மணியாக நாகரச முருக்கிவாங்கி
மைந்தனே கெந்தகத்தை யரைத்துப்பூசி
அணியான பதினெட்டுப் புடமுந்தீர்ந்தால்
அருணனைப்போல் நிறமாகும் லோகத்தீய்ந்தால்
தனியான மாத்தெட்டுத் தப்பாதப்பா
தப்பாத யீயத்துக் கசையாதப்பா
தினியாநா லாயிரத்தி நானூற்றிநாற்பத்தெட்டுந்
தீர்ந்துவிடுஞ் சிறப்பாகப் பாலிற்கொள்ளே. 259

கொள்ளப்பா தேகமது அருணன்போலக்
குழந்தைமுகம் போல்வதனஞ் சிவந்துமின்னும்
விள்ளப்பா நாடியெல்லா முருகுக்குமேறும்
விரைந்துதிரை சடமிறுகி நரையுதிர்ந்து முளைக்கும்
தள்ளப்பா கண்ணிரண்டுஞ் சிவந்துயேறும்
தந்தமெல்லாம் வச்சிரம்போ விறுகிப்போகும்
கள்ளப்பா மதியமுர்த தாரையோடும்
காமப்பால் வெகுவிர்த்தி யாகும்பாரே. 260

ஆனயிந்த முறையல்லோ ஆதிவித்தை
அசுரகுல காலனன்று அருளும்வித்தை
மோனமெழுஞ் சகலசாத் திரங்கள்தோறும்
முதிர்ந்துவிட மாய்ரசத்தை ஜெபிக்கச்சொல்லும்
தானரசக் குருசுண்ணம் மெழுகுசெம்பு
சகலரசஞ் சத்துருக்கிச் ஜெயசூதமிட்டால்
கானகமாம் வங்கத்துக் கோடிப்போகும்
கண்டாலும் நாலுக்குக் கடைக்கேறாதே. 261

யேறாது உறைக்கவுந்தா னூறிப்போகும்
யிரும்புமுதல் சகலதுறைக் கட்டுக்கெல்லாம்
ஊறாது ஜெயசூதம் போட்டாயானால்
ஒருதொழிலும் பொய்யாது சகலவேதை
மாறாது உப்புவங்க மடிக்கமாட்டா
மகத்தான சூதமது ஜெயமாய் வாய்த்தால்
சீராது திரிவங்கங் கட்டிப்போகும்
செணத்திலே செம்பிலுள்ள ஊறல்போமே. 262

போமப்பா சூதமல்லோ ஆதியாதி
போக்கறியான் வாதியல்ல மாடுமாடு
ஆமப்பா விந்துஜெயம் யோகத்துக்காதி
அறியாதான் யோகியல்ல அலைச்சல்நாயாம்
ஓமப்பா மனோலயமே ஞானிக்காதி
ஒடுங்கவகை யறியாத லுத்தமாடு
தாமப்பா அறிந்தவர்க்குப் பொருமையாதி
தனிக்கோபி யானாக்கற் சண்டிநாயே. 263

நாய்போலே யலையாதே யெந்தமுறை யாலும்
நாதாக்கள் முறையாலும் சூதத்தைக்கட்டு
பேய்போலே சூதமுந்திக் கட்டாவிட்டால்
பின்பெடுத்த நூல்முறைகள் பொய்யேயாகும்
சேய்போலே நாதாக்கள் பின்னேசென்று
சேர்ந்தபின்பு தத்துவநூல் முறையைக்கேட்டு
தாய்போலே பார்த்தவர்க்குச் சூதங்கட்டும்
சத்தியந்தா னிந்தமுறை தப்பாவாறே. 264

வாறான யிந்தமுறை முன்னேபண்ணி
மகத்தான காயசித்தி பின்னேசெய்து
வேறான திருடருக்கென முறைசொல்லாதே
வேண்டியதெல் லாந்தருவே னென்பார்மாந்தர்
தேறாத மூடருக்கு யிந்தநூலின்
செய்தியைத்தான் சொல்லாதே திறமாய்ப்பார்த்து
வாறாத கண்ணீரால் ஞானிபார்த்து
வணங்கினற்கு யிந்தநூ லளித்திடாயே. 265

அளித்திட்டுச் ஜெயரசமே சீவனென்று
அறைந்திட்டுப் பலமுறையு மடுக்காய்க்கட்டு
ஒளித்திட்டுக் காயசித்தி பண்ணச்சொல்லி
உரைத்தபின்பு யோகசித்தி செய்யச்சொல்லு
களித்திட்டுத் தத்துவமும் அவத்தையெல்லாம்
கண்ட கண்ணிற் சடங்குகளுக்கு வேறாய்க்கண்டு
ஒளித்திட்டு வுன்னுள்ளே நின்றதெல்லாங்காட்டி
ஒளியாகி நின்றதது உபநிடதத்தால் காட்டே. 266

காட்டியந்த யிருவகையும் ஐக்கியமொன்றாய்க்
கரையத்த அனந்தவா னந்தமோன
மூட்டியமெஞ் ஞானத்தில் முடிவுங்காட்டி
மூதண்டக் குளிகைசித்தி முறையாய்க்காட்டு

நீட்டியவே தாகமத்தின் நிலையுங்காட்டி
நினைக்கரிய வேதாந்த நிலையுங்காட்டி
ஆட்டியசித் தாந்தமெல்லா மறியக்காட்டி
அருமைபெற்ற தத்துவநூல் அழகாய்க்காட்டே. 267

நூலெல்லாந் தத்துவநூல் போலேநூலோ
நுட்பமெல்லாஞ் சித்தருட நூலிலுண்டோ
காலெல்லாஞ் சித்தரிலே அகத்திய நூல்கோப்புக்
கடல்விழுங்கக் கண்டதுண்டோ வெண்பார்போலப்
பாலெல்லாம் பார்த்தபின் இனியமுர்தத் தொப்போ
பருவத்தை அளைப்பவற்கு தெய்வ மெப்போ
நூலெல்லா முணர்ந்தசிவ சித்தருக்குத்தெரியும்
நுட்பமெல்லா மின்னூற்குள் தெரியுந்தானே. 268

தானென்ற தத்துவநூல் விட்டோன்கெட்டான்
தன்னிலையை யறியாத ஞானிகெட்டான்
ஊனென்ற சமாதிவிட்ட யோகிகெட்டான்
ஓடுகிற குளிகைவிட்ட சித்தன்கெட்டான்
வானென்ற யேமுசட்டை வாங்கிரசங் கட்டா
வாதிகெட்டான் வழலைவிட்டோன் மதியுங் கெட்டான்
கோனென்ற காயசித்தி செய்தோன்பெண்ணைக்
கூடியதா லவன்கெட்டான் குறியைப்பாரே. 269

குறியான மலதேகம் பெண்ணேயென்று
கூடாமற் பரிசத்தால் சிவத்திற்கூடு
அறிவான வேதாந்த சுத்தமென்று
அறியாத உலகத்துச் சத்தமெல்லாம்விட்டு
நெறியான சிலம்பொலியை நினைவாய்க்கேளு
நிட்சயமாய்ச் சட்டரச மெல்லாம்விட்டு
மறியான மதியமுர்த ரசத்திலாசை
வைத்துநன்றா யிடைவிடா மகிழ்ந்துவுண்ணே. 270

உண்ணப்பா பலபுவனத் துருவமெல்லாம்
ஒடுங்காத பிறப்பிறப்பு ஒன்றும் நில்லா
எண்ணப்பா யிவ்வுருவத் தாசை மாற்றி
எங்குநிறைந் தென்றைக்கு மழிவில்லாத
கண்ணப்பா சகலதுக்க மானந் தங்கள்
கரைகாணாப் பேரொளியாம் ரூபத்தைப்பார்
சண்ணப்பா பலகெந்தத் தாசை விட்டுச்
சச்சுதா னந்தவொளி வாசியினில் நில்லே. 271

நில்லப்பா தத்துவமல மவத்தை விட்டு
நீங்கிநின்ற உயிர்நீயென் றறிந்து கொண்டு
நல்லப்பா தன்னையறி யாததாலே
நலமான யிரண்டுவினை தனக்கீடாக
வல்லப்பா மாயையெல்லா மாலுக்கீய்ந்து
மருந்துடைக்கு மறைப்பித்து வைத்துப் பின்னும்
சொல்லப்பா யெவ்வுயிர்க்கும் பஞ்சகிருத் தியம்
ஜெகமெங்குஞ் செய்ததொரு சிவத்தைக் கண்டே. 272

கண்டதுவாய் நிற்குமப்போ நால்கரண வலையார்
கடிந்திழுப்பார் கள்வரஞ்சு பேரும் பாரு
விண்டவ ரிழுக்கவே மெஞ்ஞான மாத்மா
வினையேறி யேபிறப்பில் வீழு வார்கள்
கொண்டதொரு வேதாக மங்கள் பலநூலே
கூறுவதி லஞ்சையுமே ஜெயிக்கச் சொல்லும்
பண்டவினை தீர்க்கவென்றா லிந்திரிய மஞ்சில்
பாயாமல் மனஞ்சிவத்தி லடங்கி டாயே. 273

அடங்கிப்பார் சத்தத்தில் மனந்தா னோடி
ஆடிநிற்குஞ் சிலம்பொலியைக் கேளு கேளு
ஒடுங்கியே பெண்முதலாய்ப் பூசணத்திற் பரிசம்
உற்றெலும்பிற் மனமோடி மரித்துக் கொண்டு
துடங்குசிவ னுருவிருந்த உருவ மெல்லாம்
துயருவா யொன்றிரண்டு மன்றி நில்லு
சுடங்கள் பல புவனமுருக் கண்ட ஆசை
கண்வழியே மனஞ்செல்லிற் கருவாய்க் கேளே. 274

கேளப்பா யெவ்வுருவம் பொய்யென் றெண்ணிக்
கிட்டியொன்றைப் பாராம லிறையுருவைப் பாரு
நாளப்பா சட்டரக்ஷம் நினைத்துக் கொண்டு
ரக்ஷத்தின்வழி மனமோடி வந்தரக்ஷத் தாலே
கோளப்பா சாப்பிட்டால் மனமாய்ப் போகும்
கொள்ளைகொண்டாய் மதியமுர்த முண்டாயானால்
சாளப்பா ஞானமுண்டாந் தேகசித்தி யாகும்
சாந்தத்தில் மனம்வைத்துச் சமத்தாய்க் கொள்ளே. 275

கொள்ளப்பா பலகெந்தத் தாசை யாகி
கூடியங்கே மனதோடிக் கெந்தத் தாலே
நல்லப்பா வாக்ராண மாவதின்றி வேறு
நல்லபிர யோசனந்தா னொன்று மில்லை

துள்ளப்பா கெந்தத்தில் மனமோ டாமல்
சுருக்காகச் சிவகெந்தத் துள்ளே கூடு
விள்ளப்பா யிந்திரிய மிவ்வழியல் லாமல்
வேறொன்றா லடங்காது விரைந்து பாரே. 276

விரைந்தவை ராக்கியந்தா லுபாதி யாலும்
மேலான வாயுவயத் தாலாலு மேலாம்
வரைந்த சடாமாமிதற்கு வன்னியமென் றறியும்
அஞ்ஞானத் தாலொடுங்கி மனம்பற் றாமல்
புரைந்தனந் தானந்த நடம்பொதுவி லாடும்
பூங்கழலே மனம்வைத்துப் பொதுவாய் நில்லு
கரைந்தபல தத்துவமு மவத்தையெல்லாம் நீங்கி
கண்டுகண்ணிற் காட்டுமொழி யாகிநிற்கக் கருதே. 277

கருதிநிற்கும் பெண்ணாசை கடைய தாகும்
கடிதான தானான ஆணவத்தி னாசை யாலும்
கருதியினாற் சந்தேக மெல்லா நீங்கும்
சுத்தசிவ சித்தருக்குக் காயசித்தி சொல்வேன்
பரையெழுத்து மூவஞ்சு குருவைக் கேளு
பகர்ந்தாக்கால் கோடியுரு ஜெபித்த பின்பு
நிரவிப்பா ரச்சரத்தால் அகார மூலத்திற்
நிட்சயமாய் வாங்கியந்தப் பரையி லோங்கே 278

ஓங்கிநிற்க ரேசித்துப் பூரித்துக் கும்பி
நோக்கிவிடு சேத்துமமு மற்றுப் போகும்
தாங்கிநின்ற சுழிமுனையுந் திறந்துமதி யமுர்தம்
தாரையது ஓடுமடா சமதாய்க் கொள்ளப்
பாங்கான தேகசித்தி யாகு மாகும்
பளிச்சென்று கோடிமதி பாங்காய்த் தோன்றும்
தேங்கியந்தப் பேரொளியைக் கண்டால் சித்தி
சித்தனவன் தெரியாட்டால் சித்தியில்லான் கேளு 279

கேளப்பா காயசித்தி யாகமிது வாகும்
கெட்டியனு மாதியோக சித்தியிது வென்பார்
வாளப்பா தேவிபிர காச யோகம்
மகத்தான குண்டலியின் மூல யோகம்
வேளப்பா விந்தாகு மிந்த யோகம்
விட்டவர்க்குக் காயசித்தி விழலாய்ப் போகும்
தாளப்பா திறந்துவிட்டேன் சித்த ரெல்லாம்
தாமொழித்தார் சம்பிரதாயம் நூலிற் சாற்றினேனே 280

சாற்றியிந்த யோகமது சித்தி யாகச்
சமத்தாக நூற்றெட்டுக் கற்பங் கொள்ளு
யேற்றியிந்த கற்பம்விட்டு யோகம் பார்த்தால்
யெழும்பாது பேரொளியை மனம் பாராது
மாற்றியிந்த மயக்கமொடு தியக்கஞ் சோம்பல்
மடங்காத நித்திரையு மடங்கு மப்பா
பார்த்திந்தக் கற்பமுண்டால் நோயவத்தை மாளும்
பார்ப்பதற்கு யோகத்தால் காயசித்தி யாமே. 281

சித்தியிந்த யோகந்தா னாண்டு வொன்று
செய்துகற்ப முண்ட வற்குத் திறக்குஞ் ஜோதி
பத்தியா மிரண்டாண்டில் நினைத்தநரர் தேவர்
பாதத்தில் வந்துநின்று பணிவார் பாரு
சுத்திமூன் றாண்டினிலே சகல வேதம்
சொல்லாமற் சொல்லவரும் வாசா சித்தி
சத்தியமாய் நாலாண்டிற் சாபாஃனுக் கிரகம்
தானுண்டா மாண்டஞ்சு தான்செய் தோர்க்கே. 282

வருடாந்திர பலன்கள்

ஓராமற் கோடியோ சனைதூ ரத்தில்
உத்தரங்கள் செவிதனிலே கேட்கும் பாரு
சேராம லாறாண்டில் நூறு கோடி
சேர்ந்தயோ சனைதூர திருஷ்டி காணும்
யேராம லேழாண்டில் யோசனைதா னெட்டு
யெழும்பிப்போய்த் திரும்பும்பூ சரியாய்த் தானும்
சாராம லெட்டாண்டில் நரைதிரைக ளற்றுத்
தங்கவொளி யருணனைப்போற் சடமாம்பாரே. 283

சடமதுகே சரத்தெழும்பு யாயிரயோ சனைதான்
சஞ்சரித்து மீழுமொன்பா னாண்டில் பாரு
யிடமான பத்தாண்டிற் தேகந் தானும்
யெழும்பியே நினைத்தவிடம் போய்த் திரும்பும்
கடனாகப் பதினோறா மாண்டிற் றானும்
கலந்தளவில் சண்டபா னுப்பிர.காசம்
அடிமூல முதற்றுவாத சாந்த மீறா
யடங்காமற் தோற்றுமந்த வொளியிற் கூடே. 284

கூடுவது பனிரெண்டா மாண்டில் பாரு
        கூடெழும்பிக் கேசரம்போய்த் திரிந்து மீளும்
ஆடுவது சகலகலை சித்தி யெல்லாம்
        ஆடலா மிதுயோக மறிந்தோன் சித்தன்
தேடுவது சித்தருக்கு அனுமாதி சித்து
        ஜெயயோக மேதேடல் குளிகை தேடல்
ஓடுவது கேசரத்தி லுலகமெல்லாம் பார்த்து
        ஒடுங்குவது சிவஞானத் தொளியிற் றானே. 285

காயசித்தி வரிசை

தானென்ற காயசித்தி சொல்லக் கேளு
        தனிக்கடுக்கா யிருபதுநா ளமுரியிலே கொள்ளு
கோனென்ற கற்றாழை மண்டலந்தான் மூலம்
        கொள்ளையிலே கடுக்காயு மமுரி கூட்டு
வேனென்ற கள்ளிக்காய்ப் பொடியுங்கூட்டி
        வீறாத மண்டலங்களால் கொண்டு தீர்ந்து
சானென்ற உடம்பிலுள்ள யெண்ணெய் சுண்ணங்களிம்பு
        சட்டரகஷம் போய்த்தேகந் தங்க மாமே. 286

வல்லாரை மிளகுக் கற்பம்

தங்கமென்ற வல்லாரை கொண்டு வந்து
        தனியுலர்த்திக் காடியிலே களஞ்சி கொள்ளு
ப[illegible]கமென்ன சடத்திலுள்ள தோஷம் போகும்
        பாரப்பா யிருகாலங் கொண்டு தேரு
சிங்கம்போல் பெலமாகு மண்டலந்தான் கொண்டு
        தீர்ந்தபின்பு அஞ்சஞ்சாய் மிளகை யேந்திப்
பொங்கமென்ற அமுரியிலே மண்டலந்தான் கொள்ளு
        புகழான யிருநூறு மிளக தாச்சே. 287

ஆச்சப்பா ஐயைந்தா யமுரிதனி லிறக்கி
        அழகாக மிளகுண்டு வருகும்போது
போச்சப்பா வெட்டைசற்றே மீறிற் றானால்
        புளித்தபசு வின்தயிரை யொருநாள் கொள்ளு
நீச்சப்பா நீர்க்கடுப்புப் புகைச்சல் கண்டால்
        நீருடனே மிளகருகு யெட்டொன்றாய்ச் [illegible]ய்ச்சி
வாச்சப்பா பாக்[illegible]ள[illegible] வெ[illegible]ணய் போட்டு
        மாலையிலே மூன்றுநாள் கொண்டு தீரே. 288

கரந்தை சீந்திக் கற்பம்

கொண்டபின்பு கரந்தைதனைச் சூரணித்துக்
கூர்ந்துபொடி யொன்றுக்குக் காற்படிநற் சீனி
பண்டதுவைக் கலந்துவைத்து வெருகடிதேன் குழைத்து
பாங்கான யிருவேளை மண்டலந்தான் கொள்ளு
மண்டுநல்ல சீந்திஅடித் துண்டாய்க் கொண்டு
வந்துமேற் றோல்சீவி நறுக்கியதை யுலர்த்தி
கண்டுபொடி செய்துநா லதனுக் கொன்று
கற்கண்டு கலந்துநெய் தேனி லுண்ணே. 289

உண்ணப்பா மிளகினுக்கு வாதகபஞ் சூலை
ஒடுங்காத மேகம்சில் விடங்குட்ட மீறல்
விண்ணப்பா சோகைசுர மஸ்திசுர மாறல்
மேல்வாய்வு தாகமந்த நித்திரையுந் தீரும்
கண்ணப்பா சீந்திக்கு மூலவெட்டை மேகம்
கபாலவெட்டை காந்தலேரி லோடிப் போகும்
பெண்ணப்பா கரந்தைக்கு பித்தவெறி கபால
பித்தமா மலபித்தம் பிரமை போமே. 290

பஞ்ச மூலிகைக் கற்பம்

போமப்பா யிதுகடந்து கரிய நீலி
புகழான கருங்காக்கை பொற்றலைவல் லாரை
வேமப்பா வெண்காக்கை யஞ்சும் நேராய்
மேலுலர்த்தித் தான்பொடித்து வைத்துக் கொண்டு
பாமப்பா பாலைவிட்டு அரைத்துருட்டிப்
பாக்களவு பாலதனிற் குழைத்துக் கொள்ளு
தாமப்பா மண்டலந்தா னிருபோதுங் கொள்ள
சரீரத்தி லுள்ளவிஷந் தானே போமே. 291

போகாத விஷபாண்டு வீக்கம்நீர்க் கட்டு
புகழான காமாலை சோகைசுர சுவாசம்
யேகாத மூலவலி கைகால் வீக்கம்
யெழும்பாத பாண்டுபித்தம் பிடரிச் சூலை
வாகான நோய்களெல்லா மாறிப் போகும்
வண்டோடு போலுமயிர் நரைதிரையு மாறி
சாகாத தங்கம்போ லுடலு மாகும்
சுமத்தாகப் பின்புகொள்ளுங் கற்பங் கேளே. 292

கோங்கின்பூ கற்பம்

கேளப்பா கோங்கின்பூ கொண்டு வந்து
கெடியாக நிழலுலர்த்திப் பொடித்துக் கொண்டு
வாளப்பா நாலுக்கு ஒன்றே சீனி
மாட்டியே கலந்து கொண்டு நெய்யிற் கொள்ளு
மீளப்பா மண்டலந்தான் கொண்டா யானால்
மேனியது பொன்னிறமாம் பொற்கலையாமுகங்கள்
நாளப்பா உதரவலி யாமை சூலை
நரம்பெரிவு யனல்வாத மோடிப் போமே. 293

மூன்று மூலிகை கற்பம்

போனபின்பு யின்னமொரு கற்பங் கேளு
புகழான திருமேனி சிறியசெருப் படையும்
மானகருங் கரிசாலை மூன்றும் வேறாய்
அடைவாகச் சூரணித்துச் சமனாகக் கலந்து
கானில்வாழ் கற்கண்டு நாலத் தொன்று
கலந்துவெரு கடிதேனில் நெய்யிற் கொள்ளு
மானமுட னிருகாலு மண்டலந்தான் கொள்ள
மந்தமதி மந்தபுத்தி மயக்கம் போமே. 294

மயக்கம்போம் லோகமெல்லாம் வசிய மாகும்
மனமுண்டாங் குணமுண்டா மயக்கம் போகும்
மயக்கபித்தம் சோகையெரி பித்தநீர்க் கட்டு
மலபந்தம் யாவற்றும் நீங்கிப் போகும்
முயக்குபித்த வெறிமூர்ச்சை மாறு மாறும்
மூதறிவா மேனிக்கண்கள் சிவப்பு மாகும்
தியக்கம்போம் காமப்பால் மிகவுண் டாகும்
ஸ்திரீகளுட வாசனையிற் சேராமல் நில்லே. 295

பொற் கொன்றைப்பூ கற்பம்

நில்லப்பா யின்னமொரு கற்பங்கேளு
நிலையான பொற்கொன்றைப் பூப் பொடித்து
வல்லப்பா ஒன்றுக்கு யெட்டுச் சீனி
மாட்டியே வெருகடிதான் தேனிற் கொள்ளு
நல்லப்பா யிருகால்மண் டலந்தான் கொள்ளு
நாடாது குமரகண்டன் முயல்வலிப்புப் போகும்
நல்லப்பா [illegible]திறெனட்டு வலிப்பும் மாறிக்
கனகா[illegible] [illegible]ம் கா[illegible]ணாமே. 296

காமன்போல் வீரியமும் வெகுவா யுண்டாம்
கண்டபெண்கள் தான்மயங்கிக் காலில் வீழ்வாள்
சேமம்போ லவர்கள்முகம் பார்த்தி டாதே
செல்லாது மோகித்து மேலே வீழ்வாள்
யேமம்போல் மனதைநன்றா யிருக்கிக் கட்டி
யிதுதுச்ச மென்றறிந்து யிகழ்ந்து தள்ளி
வாமம்போற் சோதியினி லாசை வைத்து
மயங்காமல் பேரின்ப மருவி யுண்ணே. 297

உண்ணப்பா ஞானநிஷ்டை யில்லா மூடர்
ஓகோகோ காயசித்தி யானாலென்ன
பெண்ணப்பா காண்கையிலே மனந்தான் பற்றும்
பிரியமாமற் சையோகஞ் செய்வான் பாவி
கண்ணப்பா மழுங்கிப்போம் சடம்விரிந்து போகும்
காலனிது வென்றறியார் கழுதை மாண்பர்
விண்ணப்பா காயசித்தி யோக சித்தி
விழலாய்ப்போ யுலகத்திற் கடையா வானே. 298

தேவதைகள் சித்தி கூறல்

கடையான பெண்ணாசை காலனென்று விட்டுக்
கலந்தசிவ யோகிக்குக் காயசித்தி யாகும்
உடையாளைப் பூசித்துச் ஜெயசூதம் வைத்த
உத்தமற்கு வாதசித்தி யுறுதி யாகும்
படையான சூலினியை யுபாசித்த பேர்க்கு
பரப்பிர்ம ஞானசித்தி பலிக்கும் பாரு
அடையான வாய்வுமன மடக்கிக் கட்டி
ஆசானைப் பெற்றவற்கு யோகசித்தி யாமே. 299

சித்திசெய்ய ரஷம்விட்டுப் பலதுறையும் பார்க்கும்
திருடனென்ற வாதிக்குப் பொன்கா ணாது
யுத்தியதாய்க் குருவன்றி வாய்வுதனை யடக்கும்
யோகியற்குக் கோடிரவியொளிகா ணாது
சத்தியென்ற தேவியுட பூஜைவிட்டுப் பார்க்கும்
சண்டாள வாதிக்கு ரஷமா ளாது
முத்தனென்ற சோதியெழுத் தஞ்சும் விட்ட
மூடருக்கு ஞானத்தின் முதல்கா ணாதே. 300

காணாத அஞ்செழுத்தாற் பிரணவத்தினாலும்
காணுமன மடக்கினர்க்கு ஞானசித்தியாகும்
தோணாத தேவிமுன் றெழுத்தாம் மூலம்
சோடசையாற் காலடக்கம் காயசித்தி யாகும்
பூணாத வழலையினாற் துருசுவெள்ளை வைத்துப்
போட்டாக்கால் தீயில்ரஷம் புகையாமல் நிற்கும்
தோணாத ஜெயரஷத்தா லிரும்புமுறை பழுக்கும்
சுந்திரற்கு வாதசித்தி சுருக்கி லாமே. 301

ஆமப்பா வழலைவிட்டோன் துருசுவெள்ளை யறியான்
அத்துருசு வெள்ளைவிட்டால் பொன்னீ றாது
போமப்பா தங்கபற்பம்விட்டா யானால்
புகைந்துபோம் சூதமுதற் பாசா ணங்கள்
சாமப்பா ஜெயசூதம் விட்டதுறை யெல்லாம்
சாதகமா யொன்றுமுத லைந்து காணும்
காமப்பா புடத்தில் வைக்கப் புகையாய்ப் போகும்
காரீயம் போட்டுதக் கழன்றுபோமே. 302

வேம்புக் கற்பம்

கழன்றஉட விருகவொரு கற்பங்கேளு
கனவருட மோராயிரந்தான் சென்றவேம்பு
உழன்றயிலை தின்றாக்கா லினிக்கு மந்த
உட்பட்டை யைத்தின்றால் துவர்க்கு மப்பா
கழங்கமர யிரண்டுதிங்க விலையைத் தின்று
கைமுறையா யிரண்டுதிங்கள் கொழுந்து உண்ணு
வழங்கவந்தப் பூவிரண்டு திங்க ளுண்ணு
மக்களே வேரிரண்டு திங்கள் கொள்ளே. 303

கொள்ளவே திங்களொன்று பிஞ்சு கொள்ளு
கொடுவேம்பின் காயையொரு திங்கள் கொள்ளு
வள்ளவே பழரசத்தை மண்டலமே கொள்ளு
மகத்தான வேரதனிற் திரிதி வாங்கி
உள்ளவிரை மண்டலந்தான் கொண்டு வந்தாற்
ஓராண்டிற் றேகமது வுறுதி யாகும்
கள்ளவிஷ கடிவாத சூலை சன்னி
கடுத்தசொரி யிருமல்குட்ட முடக்கல் போமே. 304

முடங்களண்ட வாதமுதற் சீதஜன்னி
முனையான தனுர்வாதம் பச்சை வாதம்
ஒடுங்கியே சூலையட்ட விப்புருத்தி கட்டி
ஒடுங்காத மேகமுடன் வெள்ளை யூறல்
சங்கடங்கள் வலி தந்தமுடன் கபால குட்டம்
சண்டெனன்ற வாதகுன்மங் கைகால் வெள்ளை
படங்கமென்ற முரணவடி பட்டு நொந்தல்
பாரிசநோய் மேதினியிற் பதறிப் போமே. 305

போகாத திரையற்றுத் தேகந் தானும்
பொற்சிலைபோ லிறுகிப்போம் வண்டு போலாம்
சாகாத நாடியெல்லா முறுக்கு மேறும்
தங்கத்தின் தந்தியைப்போல் முறுக்கு மேறி
வாகான சரீரமது கரித்தோல் போல
வரிசைபரி முதுகதுபோல் அழகுண் டாகும்
வேகாத வச்சிரமாந் தேகந் தானும்
வெங்கலம்போல் தொனியாகும் சிரசுதானே. 306

சிரசான நூற்றெட்டு மூலி கைக்குச்
சிரோரட்னம் வேம்புக்கு மேலே யில்லை
பரிசுரும்பு யிலைரசத்தைப் பானம் பண்ணிப்
பரையோகஞ் செய்துஅன்ன பானம் விட்டு
உரிசை கொண்ட மூலபதாதி வித்துக்கொன்று
உள்ளேகொள் ளாமலுகாந்த காலந் தேறி
வரிசையாய் சமாதிசெய்தா ரெந்தை யய்யா
வாராது விஷங்களெல்லாஞ் செப்பி னாரே. 307

செப்பினார் வேம்பினுட பெருமை யெல்லாம்
தேவிசொல்லக் கேட்டேனென்றார் ஜெகத்தோர்
காணார்
ஒப்பிலே வேம்புக்கு மேலே கற்பம்
உலகத்தி லில்லையென்று உரைத்தார் பாரு
தப்பில்லா வேம்புண்ணக் கசக்கும் பாரு
சர்க்கரைபோ லினிக்கமட்டுஞ் சாதிக்கலாம் பார்
அப்பிரேன் தேகமெல்லா மமுர்த மாகும்
அழகான மன்மதன்போ லாகும் பாரே. 308

வேம்பின் பெருமை

பாரப்பா வேம்பினுட பிறப்பைக் கேளு
பணியணையன் பாலாழி யமுர்தந் தன்னை
நேரப்பா பெண்ணுருவாய்த் தேவருக்குப் படைத்தார்
நிகரில்லா ராட்சதர்கள் பெண்ணைப் பார்த்து
சாரப்பா மயங்கி நின்றா ரசுரர்களி லொருவன்
தானவர்கள் பந்தியில்வந் திருந்தா னப்பா
சேரப்பா தேவருடன் கலந்திருந்த தாலே
திருமாலு மூன்றகப்பை படைத்தான் கேளே. 309

படைத்திட்ட திருமாலாம் பெண்ணி னோடு
பருதிமதி யசுரனவ னென்ற போது
உடைத்திட்ட அசுரனவ னமுர்த முண்ண
ஓரடியா யகப்பையினால் வெட்டினார் மால்
படைத்திட்ட யிரண்டாகி ரவி மதிக்குப்
பகையாக ராகுகே துக்களென்றே சர்ப்பமானார்
அடைத்திட்ட அகப்பையினால் வெட்டும்போது
அவன்வாயா லமுர் தமதைக் கக்கினானே. 310

கக்கும்போ தமுர் தமது லிங்கம் போலக்
காசினியில் விழுந்ததுவே வேம்பு மாச்சு
முக்கியமாய்க் கசப்புவந்த தேனென் றாக்கால்
முனையசுரன் வாயில்நின்று வீழ்ந்த தாலே
சக்கியமாய் வேம்புதின்றால் சாவோ யில்லை
சனகாதி நால்வருடன் யானுந் தின்று
அக்கணமே சித்திபெற வேம்பு நேர்மை
ஆரறிவா ருலகத்தோ ரறியார் காணே. 311

சிவனார் வேம்பு

காணப்பா யின்னுமொரு கற்பங் கேளு
கறுப்பான சிவனார்தன் வேம்பினோடு
தோணப்பா வாலுளுவை சமனாய்க் கூட்டி
சுவறயிடித்துப் பூப்புடத்தில் தயிலம்வாங்கி
வீணப்பா சீரகமுஞ் சர்க்கரையுங் கூட்டி
மீறாம லேகலந்து காற்களஞ்சி கொள்ளு
ஆணப்பா யிருவேளை மண்டலந்தான் கொள்ள
அய்யமுடன் வாதபித்த மகன்று போமே. 312

போகாத குட்டமொடு சுரப்பு தேமல்
புகழான கடிவிஷங்கள் பதினெட்டு வண்டு
யேகாத யெலிகடி திமிர்வாத சூலை
யெழும்பாத பாம்புகடி யெல்லாம் போகும்
ஆகாத மேனியுள்ளே யழுக நாற்றம்
அடங்கிப் போய்த் திரையற்று அமுர்த தேகம்
வாகான சிரங்குகுட்டம் தீர்ந்து சென்னி
வச்சிரம்போ லிருக்குமடா மக்காள் தானே. 313

தூதுவளைக் கற்பம்

தானான தூதுவளை யிலையி னோடு
தக்கோலம் சாதிக்காய் வாலுளுவை வித்து
மானான பொற்கொன்றைப் பூவி னோடு
வைங்கோல விரையினொடு நிலப்பனைக் கிழங்கு
தேனான கொடுவேலி வேரின் பட்டை
சேர்த்திதனைப் பொடி செய்து வைத்துக்கொண்டு
ஆனான வெருகடிதூள் முள்பன்றி நெய்யில்
அடைவாக மண்டலந்தா னுண்டிடாயே 314

உண்ணவே வாதமெண்பதுவுஞ் சூலை
ஒடுங்காத வியாதியெல்லா மொழிந்து போகும்
கண்ணொளியு மேனியொளி யருணன் போலாம்
கதிரொளிபோல் முகமாகும் காயசித்தி
உண்ணுநிலச் சோதியுடன் கெந்தி கூட்டி
ஒடுங்காத ரஷமெல்லாங் கால்கால் கூட்டி
அண்ணவே நீலியிலை நீரிற் கொள்ளு
அடங்காத நோயெல்லா மகன்று போமே. 315

போமப்பா முன்னூறு சூஸ்திரத்தினுள்ளே
புகழ்ந்தநூற் றென்கற்பம் பின்பு கொள்ளு
ஆமப்பா யெண்ணூறு சூஸ்தி ரத்தில்
அரைந்திட்ட திராவகத்தை முறையாய் வாங்கி
யேமப்பா யிரும்புமுத லுபரசங்க ளெல்லாம்
ஈயம்போ லுருக்கிநன்றாய்த் தங்கஞ் சேர்த்து
காமப்பா கெந்தியிட்டுச் செந்தூ ரித்துக்
கைமுறையாய்க் கொண்டுரஷம் பின்பு கொள்ளே. 316

கொண்டபின்பு கணைவிருட்சப் பாலை யுண்டு
குளிகைகட்டிச் சாரணைக ளெல்லாந் தீர்த்து
விண்டபின்பு ஆயிரத்தெட் டண்டம் பார்த்து
விளையாடிப் பெரியோரைத் தெரிசித் தேத்தி
கண்டபின்பு பொதிகைக்கென் னிடத்தே வந்து
காயாச மென்னிடத்தே வாங்கித் கட்டி
தொண்டருடன் கூடியே சுகமாய் வாழ்வீர்
சுகமான காயசித்தி சுருக்க முற்றே. 317

அகத்தியர் தத்துவம் 300 முற்றிற்று

உ

பசுபதி துணை

சித்தர்கள் பரிபாஷை விளக்கமென்னும் அகஸ்தியர் புலஸ்தியருக் குபதேசித்த

தற்க சாஸ்திரம்

காப்பு

தேனென்ற மொழியுடையாள் பாதம்போற்றி
தெளிவான மூலகுரு பாதம்போற்றி
தானென்று சொன்னதொரு குருவைப்போற்றி
தரணிமுத வீராறு சமையம்போற்றி
பானென்ற பஞ்சகர்த்தாள் பாதம்போற்றி
பண்பான பதினெண்பேர் பாதம் போற்றி
மானென்ற வல்லபையாள் பாதம்போற்றி
மயங்காமற் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளே. 1

மகிழுதற்கு யிந்நூலை மகிழவேணும்
மற்றொன்றைப் போலல்ல யிந்தநூல்தான்
மகிழ்ந்தவற்குத் தாய்பதத்தைப் போற்றிசெய்து
மகாதற்கம் முன்னூறும் மூவெட்டுந்தான்
மகிழ்வதற்கு ஆராய்ந்து சொன்னேன் யானும்
அம்பலத்தி லாடுகிற அய்யர்தாமும்
மகிழ்வதற்காய் யெந்தனுக்குச் சொன்னாரப்பா
மக்களுக்காய்ச் சொல்லுகிறேன் தற்கம்பாரே. 2

பார்க்கையிலே பழம்பொருளைப் பார்க்கவேணும்
பதியிருந்து மூலத்தைக் காணவேணும்
ஆர்க்குமே அடிதொழுது வணங்கவேணும்
ஐந்தெழுத்தின் குறிப்புகளை யறியவேணும்

ஏற்கவே யிந்நூலைப் புகழவேணும்
யெதிர்த்தொன்று மெண்ணாம லிருக்கவேண்டும்
மார்க்கமுட னின்னூல்லைத் திருந்தோர்பாதம்
மைந்தனே தொழுதிறைஞ்சி வாங்குவாங்கே. 3

வாங்கவே யின்னமொன்று சொல்லக்கேளு
வழிமறித்துப் பொருள்பறிக்கும் சண்டாளர்க்கும்
பாங்காள வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்
பழிபாவம் வந்துவிடுஞ் சொன்னே னப்பா
நீங்காமல் பெருவழியே நடக்கவேணும்
நிலையில்லாக் காரியத்தை மறக்கவேணும்
ஆங்காரந் தனைமறந்து யெந்நூல்பார்த்தால்
அப்பவல்லோ அறிவுகுரு வாகுந்தானே. 4

தானவனாய் நின்றகுரு தன்னைப்போற்றித்
தற்கமிட்டுச் சாமிபதம் பணிந்துகொண்டு
கோனவனாய் நின்றபரா பரத்தின்பேரும்
கொடுமுடிமுப் பத்திமூன்றாந் தேவர்பேரும்
நானவனாய் நின்றகுரு நாதன்பேரும்
நன்மைசெயுஞ் சீஷருட பேருஞ்சொல்லும்
தேனான மொழியுடையாள் பூஜைசொல்லும்
தேசத்தோர் செய்தர்மஞ் செப்புவீரே. 5

செப்புதற்கு யின்னமொன்று சொல்லக்கேளு
ஜெகஜாலக் கூத்தான வாழ்க்கைபேரும்
அப்புதற்கு உரைசொல்லும் மார்க்கஞ்சொல்லும்
அந்தந்தச் சாதிகுலம் வகுத்துச் சொல்லும்
மப்பொருதி நின்றதொரு தனுவின்பேரும்
மரங்கள் மலை நதிகள் பல சீவன்பேரும்
அப்புரத்துக் கப்பால்நின்ற ததுவுஞ்சொல்லும்
ஆதியா டந்தவரை சொல்லுவீரே. 6

சொல்வதற்கு யென்குருவே சாமிநாதா
தொல்புவியில் ஜோசியங்கள் பார்ப்பதென்னா
வெல்வதற்கு வேதமென்று சொல்வதென்னா
வேதனங்கே குடியிருந்த விபரஞ்செயலும்
அல்லுதற்கு அச்சுதனும் பிறந்ததெங்கே
ஆயிரத்தெட் டண்டமுத லானதெங்கே
கல்லுதற்குக் கார்மேக மானதெங்கே
கண்களிக்க யெந்தனுக்குக் காட்டுவீரே 7

காட்டுதற்கு யின்னமொன்று சொல்லக்கேளும்
கதிர்மதியும் ராகுமுத லானபேரும்
பூட்டுதற்குத் திறவுகோல் தந்தாப்போல
பூமலர்கள் பூத்தவகை புகலவேணும்
நாட்டுதற்ச யென்குருவே நடக்கைசொல்லும்
ந' புருடன் பெண்டீரின் வாழ்க்கைச்சொல்லும்
கூட்டுதற்குக் குருமொழியின் பெயரைச் சொல்லும்
கூசாமல் நானடியேன் தொழுதேனய்யா 8

தொழுவதற்கு யின்னுமொன்று சொல்லவேணும்
தோகைமயி லானதொரு விபரஞ் சொல்லும்
புகலுதற்குப் பூமியைந்து மானவாறும்
பூதலத்தில் மலரைந்து மானவாறும்
நவிலுதற்குக் கனிவர்க்க மானவாறும்
நால்சாதி ஆண்பெண்பதி னெட்டின்பேரும்
பழுதறவே யெந்தனுக்குச் சொல்லவேணும்
பராபரத்தி னடிதொழுது பணிந்தேனையா. 9

அய்யனே யென்குருவே சாமிநாதா
அந்தரத்தில் மச்சங்கள் வந்ததேது
கையாறு ரெண்டு-சிர மாறோனுக்குக்
கலியாண மானவகை விபரஞ் சொல்லும்
பய்யரவந் தனையுணர்ந்த யீசனாரும்
பதியிழந்த மார்க்கமதைப் பகரவேணும்
மெய்யாக யெந்தனுக்குச் சொல்லவேணும்
யென்குருவே தேசிகனே ஐயாஐயா. 10

குருவிருந்த ஆசனத்தின் பெயரைச் சொல்லும்
கூசாமல் நாற்காலின் விபரஞ் சொல்லும்
மருவுயர்ந்த புலித்தோலின் பெயரைச் சொல்லும்
மானான ஆசனத்தின் பெயரைச் சொல்லும்
பருவமுடன் பதினெண்ஜாதி தொழிலைச் சொல்லும்
பாருலகின் நடத்தையெலாம் பகுந்து சொல்லும்
அறிவில்லா நானடியேன் கேட்க வந்தேன்
அருள்செய்ய வேணுமையா சாமிநாதா. 11

வேணுமென்று கேட்க வந்த சுந்தரமே அய்யா
வேலவனா ரேந்தனுக்கு விளம்பினார் காண்
வேணுமென்று சாயங்காலம் தனையறிந்து
வேதாந்தப் பெருவெளியைக் காணவேணும்

காணுதற்கு யென்குருவைக் காணவேணும்
கலந்துநின்ற கோனவனே தேவனப்பா
பூணுதற்குக் குருவினுட பெயரைக் கேளு
புகழ்சொன்ன தெய்வமடா புகழ்ந்துபாரே. 12

பாரேநீ உலகத்திற் சீஷர்தானும்
பரத்தினுட பிள்ளையடா பகர்ந்துபாரு
காரேநீ குருபதத்தைச் சுந்தரமேஜயா
கருத்திலே தோணுமடா கண்டுபாரு
பேரேநீ மறந்தாக்கால் பூஜையில்லை
பேச்சென்ற மார்க்கமடா பூஜையாச்சு
சேரேநீ ஒருவருடன் சொல்லவேண்டாம்
ஜெகஜால மர்மமென்று சொல்லுவாரே. 13

சொல்லுதற்குப் பலவிதங்கள் சொல்லுவார்கள்
தோகையரைச் சேர்வதெல்லாங் கருமமப்பா
வெல்வதற்கு வேதாந்தம் விள்ளவேணும்
வேதனுட வாழ்க்கையடா விரும்பிப்பாரு
நல்லுதற்கு நின்றதொரு மார்க்கங் கேளு
நலம்பெற்ற மார்க்கமடா நயந்து பாரு
கல்லுதற்குக் கபடம்வைத் தவனேகள்ளன்
கசுமாலம் மட்டையடா மடையன் தானே. 14

கடையனப்பா கசுமால மட்டிமாண்பர்
கண்கெட்ட மூதேவி கழுதையாகும்
மடையனவன் பொருள்கேட்டுத் தற்கஞ் செய்வான்
மாண்பரவர் தன்குணத்தால் நரகில் வீழ்வார்
இடையனென்றால் குணங்குறியி லிடையனப்பா
யில்லாட்ட லிடையனென்ற நாமமேது
தடையில்லா வார்த்தையினால் பசப்புகின்ற
சகசண்டி மாண்பர்களைத் தள்ளு தள்ளே. 15

தள்ளுதற்கு விபரமினிச் சொல்லக் கேளு
தருதலையோ டிணங்காதே தாயைப் போற்று
நில்லுதற்கு நிலைச்சார்பு கண்டாலப்பா
நிச்சயமாஞ் சாதிகுலங் காணலாகும்
சொல்லுதற்குத் தூலமடா அஞ்சுமாச்சு
சொற்பெரிய சீவஜெந்து யிதுக்குள்ளாச்சு
கல்லுதற்கு பரபாலநின் றொடுந்துமாச்சு
காரிலியேர் தான் பிழைக்கப் பிழைப்பு மாச்சே. 16

பிழைப்பதற்கு வேதமடா நாலெழுத்து
பேசுதற்கு விபரமப்பா பேணிப்பாரு
கலப்பதற்குப் பெண்ணாகப் பிறந்தமால்தான்
கன்னியிடம் பிறந்தான் காண் கண்டுபாரு
மலப்பதற்கு மாலாகப் பிறந்தாளாத்தாள்
மங்கையடா பேரிளம்பெண் பருவமானாள்
தலைப்பொரியே ஆயிரத்தெட் டண்டமாச்சு
தலைவனென்ற நவக்கிரகம் விபரங்கேளே. 17

விபரமென்ன அஞ்சுடனே மூன்றுங்கூடி
விதமான ரெண்டதுவு மதனிற்கூடில்
அகரமென்ற அஞ்செழுத்து அஞ்சுங்கூடி
ஆதியாய் நின்றுதடா அறிவுள்ளோனே
மகரமென்ற ராசிமுதற் பன்னிரெண்டும்
மார்க்கமடா அவரிருக்கும் வீடதப்பா
சிகரமென்ற கோபுரத்தில் வைத்தாப்போலே
சீஷருக்காய்ச் சொல்லிவிட்டே னிந்தநூலே. 18

இந்தநூல் வைத்திருந்தோர் பாதந்தன்னை
யியல்பாகத் தொழுதிறைஞ்சி வாங்கவேணும்
கந்தனுட பூஜையிலே கலக்கவேணும்
கருத்திலே தியானம் வைத்துக் கருதவேணும்
யெந்தனுட நூலதனைப் படிக்கவேணும்
யேதேது கேட்டாலுங் கொடுக்கவேணும்
சொந்தமுடன் பூஜித்த சுந்தரமே அய்யா
சொல்லுவதற் கின்னமுண்டோ சொல்லுசொல்லே. 19

சொல்லுதற்கு யின்னமுண்டு சொல்லக்கேளு
தொல்புவியில் ஞானமென்றால் மார்க்கமாச்சு
வெல்வதற்கு வசியமடா கலைமானாகும்
வேதாந்த மென்பதுவுங் கலைகளாகும்
கல்வதற்குக் கல்வியடா ஞானமார்க்கம்
கலந்தேற வழிசொல்வேன் கேளுகேளு
பல்லுறவாய் நின்றதொரு பயல்கள் தன்னைப்
பலநாளும் நம்பாதே பாழில் வீழ்வாய் 20

பாழான மாய்கைதனைத் தள்ளவேணும்
படுகுழியில் வீழாம லிருக்கவேணும்
கோளான ஐம்புலனைக் காணவேணும்
கொடியசிவ யோகியென்று திரியவேணும்

நாளான நாளறிந்து நடக்கவேணும்
நல்லசிவ பூஜையிலே நிற்க வேணும்
காலான காலறிந்தா லவனேசித்தன்
கசுமாலர்க் கென்னூலைக் காட்டொண்ணாதே. 21

காட்டாதே யென்றுரைத்த குருவே அய்யா
காசினியிற் கம்மாளற் கருத்தைச் சொல்லும்
வெட்டாத மேழியதன் பெயரைச் சொல்லும்
வேளாளர் வந்தவகை விபரஞ்சொல்லும்
நாட்டாத சாலியன்றன் நடக்கை சொல்லும்
நலமான பாவுடைய பேரைச்சொல்லும்
தேட்டாத தேட்டெல்லா மிதுக்குள் சொல்லும்
ஜெகத்குரு வானவகை செப்புவீரே. 22

செப்புதற்கு வேளாளன் பூமிபாலன்
ஜெகதலத்தோர் போற்றுகின்ற தெய்வமாசான்
ஒப்புதற்குக் காராள னவனேயாச்சு
ஒண்டொடிக்குப் பிள்ளையவன் உகந்துபாரு
மெப்புதற்கு அவன்பிள்ளை கம்மியனேயாகும்
மேதினியி லைந்தெழுத்தும் கலப்பையாச்சு
தப்புதற்குச் சாலியரே வண்ணாராச்சு
தையலர்க ளெல்லோரும் பரத்தைமாரே. 23

பாருவென்று சொல்லிவந்த குருவே அய்யா
பார்தனிலே தேவஸ்தல மானவாரும்
பேருடனே பிரபலமா யெனக்குச் சொல்லும்
பேச்சறிந்த பரத்தையர்கள் வந்தவாறும்
காருடனே காளையுமே வந்தவாரும்
கைக்கோள ரவர்கள்கலை நெய்தவாறும்
சீருடனே யெந்தனுக்குச் செப்ப வேணும்
சிவதவமே யென்குருவே சாமிநாதா. 24

தானென்ற தெய்வதலஞ் சொல்லக்கேளு
தக்கனுட யாகத்திற் பிறந்தாளாத்தாள்
மானென்ற விழியுடைய சிறுபெண்ணாத்தாள்
மாரியென்றே அவனிடத்தில் வந்தாளய்யா
ஆணென்றும் பெண்ணென்றும் பிறந்தாளாத்தாள்
அஞ்சுபஞ்ச பூதமடா ஆலையமேயாச்சு
தேனென்ற மொழிபரத்தை பரத்தில் நின்று
திருஷ்டிப்பி லேபிறந்த புலச்சியாகும்.
கோனென்ற கோபாலன் ரிஷபமாச்சு
கொம்பிலெழுங் கணுவல்லோ ருத்திரனாச்சே. 25

காருநீ குருபதத்தைக் கருணையாகக்
கைக்கோள னென்றாக்கால் கார்மேகமாச்சு
பாருநீ யின்னமொன்று பகரக் கேளு
பரமசிவ மெந்தனக்குப் பகர்ந்தவார்த்தை
பேருநீ ஆசனத்தின் பேரைக்கேளு
பிறந்தமகா மேருவென்று பேருமாச்சு
மாமேரு குருவிருந்த பீடமப்பா
மாசற்ற சுந்தரமே மகிழ்ந்துகாணே. 26

சுந்தரமே யென்குருவே சாமிநாதா
சூதான பஞ்சகர்த்தா ளிருந்த வீட்டில்
அந்திரத்தே மணியசைக்கும் ஸ்தம்பப்பேரும்
அரிகாலி லசைவுபூ பாலர்பேரும்
மந்திரத்தாற் சலந்திரட்டுங் கலசப்பேரும்
மணிச்சங்கு நிரையோசை யெனக்குச் சொல்லும்
தந்திரத்தால் நீரையள்ளி யிறைப்பதென்ன
தற்கமிட்டு நானடியேன் கேட்கவந்தேன். 27

வந்தென்னைக் கேட்கவந்த சுந்தரமே அய்யா
வாசல்முன்னே நின்றதுவு மாயனாகும்
அந்தமுடன் வேதமடா அறிவதாச்சு
ஆத்துநின்ற கணேசனப்பா யிளையோனாச்சு
மைந்தரவ ரிருவருமே கார்த்தபின்பு
மார்க்கமுடன் சலமெடுக்குங் குடத்தைக்கேளு
அந்தரத்தே அமுதம்வைத்த கலசமாச்சு
அம்மையெனும் பார்பதியா ளதுவுமாச்சே. 28

அதுவென்ன ஆறணிந்தோ ரெனக்குச் சொன்னார்
அங்கேநீ ரிறைத்ததுவுஞ் சக்கரமேயாச்சு
மதுவென்ற தேனையுண்டு மயங்கிடாதே
மசடென்ற பாதமதை மனதில்வைத்து
யிதுவென்ன யெதுஉலகில் நினைத்தாலுந்தான்
யிகபரமுங் கிடையாது நரகில்வீழ்வாய்
பதியென்ன பதிகிடைக்கச் சொல்லக்கேளு
பாருலகில் பாதகர்க்குக் காட்டிடாதே. 29

காட்டவே கானமயில் பேரைக் கேளு
கற்பத்தோ னென்றுமதைக் கூறலாகும்
பூட்டவே பூமியஞ்சு பஞ்சபூதம்
பூவைந்து புலனைந்துஞ் சரிதானப்பா

நாட்டவே நால்ஜாதி விபரங் கேளு
நற்பிரம ணரசவசிய சூத்திரனாகும்
ஆட்டவே நால்ஜாதி நால்வேதமாச்சு
அரி அரப் பிரமாதி யவரேயாச்சு. 30

ஆச்சென்று சொல்லவந்த குருவேசாமி
அவனிதனிற் தேவர்களை யறிந்துசொல்லும்
பேச்சென்ற மந்திரங்கள் பிறந்ததெங்கே
பேயனென்று பேருலகில் வந்ததேது
காச்சென்ற தேங்கனியின் பேரைச் சொல்லும்
கதலியுட பழப்பேரு கனிந்து சொல்லும்
மூச்சென்று மருள்பிடித்துத் திரிவதென்னா
மூதாக்கா ளென்பதுக்கு வகைசொல்வீரே. 31

முறையென்ன தேவருக்கும் முனிவருக்கும்
மூச்சென்ற மந்திரமே அதர்வணமாகும்
கரையென்ன அவர்களிடம் பிறந்ததப்பா
கலந்தேக வழிகாணா மடையரப்பா
திறையென்ன நவக்கிரகம் மருளதாச்சு
தீர்க்கமுட னிதையறிந்தோ னவனேசித்தன்
பறையென்ற பராபரையா ளவர்க்குத் தெய்வம்
பரிவாகக் கண்டறிந்து பாருபாரே. 32

பாரேநீ முனிவரென்றால் முனிவரல்ல
பாருலகிற் தாட்சியடா யிறந்துபோனால்
தேரேநீ தேவரென்று தொழுதாயானால்
ஜெகதலத்தி லெல்லோருந் தொழுவாரப்பா
ஆரேநீ உண்டென்று நினைத்தபோது
அவர்கள் செய்யுந் தொழிலெல்லாம் நடக்கும்பாரு
வாரேறும் பூமுலையாள் சத்திதானும்
வந்தவர்க்கு வரங்கொடுக்குஞ் சத்தியாச்சே. 33

சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சுந்தரமே அய்யா
சராசரங்கள் செய்வதெல்லா மரணமேயாச்சு
பத்தியாய்த் தேன்கனியின் பெயரைக் கேளு
பாருலகிற் தென்னவனே தேங்காயாகும்
முத்திபெற்ற பெண்ணல்லோ கதலியாச்சு
மூதுலகில் மதுவல்லோ தேனுமாச்சு
வெத்திகொண்டு யெழுதுதற்கு விபரங்கேளு
வேதாந்தத் துறையல்லோ வேதமாச்சு. 34

ஆச்சென்று சொல்லவந்த குருவேசுவாமி
அவனிதனிற் சாதியீ ரெட்டெறேதான்
ஆச்சரிய மெந்தனுக்கு விளங்கவேணும்
மணியுஞ்சே கண்டியுடன் கைமல்லாரி
பேச்சென்ற தொடுசரத்தின் பேரைச் சொல்லும்
தீபமென்ற கற்பூர தீபஞ்சொல்லும்
மூச்சென்ற முணுமுணுப்பு யெனக்குச் சொல்லும்
மேன்மைகுரு தேசிகரே அய்யே அய்யே 35

தேசிகனே யென்மகனே சுந்தரமே அய்யா
தேசத்தி லாண்சாதி பெண்பிறந்ததப்பா
காசினியிற் கர்மமெல்லாம் பெற்றபிர்மன்
கலைநான்கைச் ஜாதியாய் வகுத்தவாறும்
தபசியென்ற வியாசரல்லோ பதினாலாக்கி
தாரணியிற் பதினெட்டும் பகர்ந்தார்பாரு
பேசியதோர் மணியினுட விபரங்கேளு
பேருலகில் மாதவனே மணியுமாச்சு. 36

மணியோடு சேகண்டி ருத்ரபீடம்
மானிலத்தி வடக்கைமல் லாரிகேளு
பணிவதற்கு வேதனங்கே விதித்ததப்பா
பலராகந் தேவதுந்துமி யிதுவேயப்பா
கனிவதற் குடக்கையப்பா குறிஞ்சியாச்சு
களரிதனிற் பலராகம் சூதமாச்சு
அணிவதற்குப் பூஷணமா யணிந்தாளாத்தாள்
அவளுடைய கோலமதை யறிந்துபாரே. 37

அறிந்துபா ரென்று சொன்ன குருவே அய்யா
அவனிதனில் பலவிருதின் பெயரைச் சொல்லும்
தெரிந்துமே னானடியேன் கேட்பதற்குத்
தெளிவாக யெந்தனுக்குச் சொல்லவேணும்
பரிந்துமே பலபல ஆயுதத்தின் பேரும்
பாரளந்த அரிகைச்சக் கரத்தின்பேரும்
அறிந்துமே யெந்தனுக்குச் சொல்லவேணும்
மாசில்லா மணியேயென் குருவேசாமி. 38

குருவென்று கேட்கவந்த சுந்தரமே அய்யா
கூறுகிறேன் பலவிருது பெயரைக் கேளு
மருவொன்று மில்லாதா ரெனக்குச் சொன்னார்
மானிலத்தில் திவசமென்றா லாதியாச்சு

பருவமென்ற செங்கோலு மிதுவேயாச்சு
பார்தனிலே பிர்மமடா சுதந்தரமேகேளு
கருமமென்ற மோகனமே சத்தியாச்சு
தனுவதுமே கண்ணனுட உடலுமாச்சு
அருவென்ற ஆயுதத்தின் விபரமய்யா
அப்பனே பூவுலகில் அலகையாச்சே. 39

அலகையென்ற காளியுட பலகோடாலி
அமர்ந்துநின்ற தோமாமே உன்னியாச்சு
பலகையென்ற கேடையமே சிவாயமாச்சு
மதித்துநின்ற கட்டாரி சத்தியாச்சு
சலகையென்ற வாங்கல்லோ ஒருவனாச்சு
ஜெகச்சாலக் கூத்தல்லோ சிவிகையாச்சு
அலகையென்ற சூலமப்பா மூவராச்சு
அவனியீ ரேழுமடா தானேவேணும். 40

வேணுமடா பதினெட்டு விருதுகேளு
மேலான சாமரமே கன்னியாச்சு
தோணுமடா சலவிருது கம்பளியேயாச்சு
தொல்புவியிற் பலவிருது பெயரைக்கேளு
காணுமடா சிலையினொடு அம்புதானும்
கண்ணில்லான் பாசமடா கண்டுபாரு
நானுமடா சொல்லிவிட்டே னுனக்காயப்பா
நன்மையுடன் பீசமெல்லா மறிந்து கொள்ளே. 41

பரிந்துநீ கேட்கவந்த சுந்தரமே அய்யா
பார்தனிலே வெண்டையமோ சிவமுமாச்சு
தெரிந்து கொள்ளு சத்தமடா வாயுவாச்சு
தேசத்தில் விஷ்ணுமய மெல்லாமாச்சு
அறிந்தவனே ஜெகசால மாடவேணும்
அம்பலவ ரெந்தனுக்கு அருளிச் செய்தார்
அறிந்தவனே சிவயோகி யறியவேணும்
அல்லாட்டால் நிர்மூட ரறிந்திலானே. 42

தானென்ற பாதகர்க்குச் சொல்லவேண்டாம்
தருதலைப் பயல்களைச் சேர்க்கவேண்டாம்
ஊனென்ற மாய்கையிலே சிக்கிமாய்வாய்
உற்றநூ லிதைக்காட்ட வேண்டாமப்பா
மானென்ற விழியுடைய சிறு பெண்ணாத்தாள்
மானிலத்தி லிடர்தவிர்க்க வந்தாளப்பா
நானவளைப் பூஜைபண்ணி நினைத்தபோது
நல்விருது பதினெட்டும் பூண்டாளப்பா 43

பாரப்பா யிவளுடைய ரூபமென்ன
பாதகர்க்குச் சொல்லாதே பண்பாய்க்கேளு
ஆரப்பா யெனைப்போலே சொல்லப்போறார்
ஆச்சரியஞ் சுந்தரமே அறிந்துபாரு
ஏரப்பா யிந்தநூல் சிவனூலாகும்
யேசாதே வாய்மதத்தாற் பேசினேன்யான்
தேரப்பா கண்டுமனந் தேறவேணும்
தெளிவதற்கு அறிவுகுரு அரகராவே. 44

அரகரா வென்றதற்குப் பெயர் தானென்ன
அவ்வெழுத்தும் உவ்வெழுத்து மானதெங்கே
பரமான பூஜையெங்கே முப்பாழெங்கே
பராபரமாம் பரகெதியும் பரனுமெங்கே
திரமான சைவமெங்கே யோகமெங்கே
சேர்ந்தமதி குறைந்ததெங்கே வளர்ந்ததெங்கே
சரமான சரமங்கே ஞானமெங்கே
சகலசித்து மறிந்துணர்ந்து சாற்றுவீரே. 45

சரமான சரமதுவே ஆண்பெண்ணாகும்
சைவமென்றால் மார்க்கமடா சார்ந்துபாரு
அரமான தர்மமே அரகராவாகும்
அவ்வெழுத்தும் உவ்வெழுத்தும் விண்மண்ணாகும்
பரமான பூஜையடா சொல்லக்கேளு
பாருலகில் நேமமென்ற மார்க்கமப்பா
புரமான முப்பாழுஞ் சொல்லக்கேளு
புரிசிவனார் சொன்னபடி நான்சொல்வேனே. 46

சொன்னபடி சொல்லுகிறே னின்னங்கேளு
சோதிமணி பூரகமே பரகெதியுமாகும்
இன்னபடி யெந்தனுக்கு அரனார் சொன்னார்
யினிக்கேளு சுந்தரமே அய்யாநீயும்
கன்னமிகுங் கள்ளருக்குச் சொல்ல வேண்டாம்
காசினியில் நிறைந்தமதி குறைந்தவகை கேளு
வன்னமடா யிடகலையும் பின்கலையுமாச்சு
விபரிதமாய்ச் சொல்வதற்குக் குருவைக்காரே. 47

காருமென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
காரணமாங் குருவேனான் கண்டுபோற்றி
பூரணமாய் நின்றதுவு மெனக்குச்சொல்லும்
புண்யபவ மென்றதுக்கு நிறந்தானென்ன

பார்தனிலே கவியுரைத்த கவியின்பேரும்
பக்கம்நின்ற சூலகபா லத்தின்பேரும்
ஆறணிந்தோன் கையணிந்த உடுகைப்பேரும்
அடைவாக யெந்தனக்கு அருள்செய்வீரே. 48

வீரான உலகத்திற் கோடாகோடி
விதமான மானிடர்க ளனேகம்சொல்வார்
கூரான அஞ்செழுத்தைப் படைத்தயீசன்
கூத்தனல்லால் வேறுமுண்டோ கூர்ந்துபாரு
தாரான அண்டமெல்லாம் நிறைந்தமூர்த்தி
தயாபரனார் திருக்கூத்து ஆடும்போது
பேரான பிரமனுட சிரசிலொன்று
பொலியிறந்த கபாலமடா பேணிப்பாரே. 49

பாரப்பா பூரணத்தின் விபரங்கேளு
பரிவாகச் சுடரெழுத்து துடரெழுத்துமாச்சு
சேரப்பா புண்ணியமே செய்தவமுமாச்சு
செய்குறியில் தவறிவிட்டால் பாவமாச்சு
ஆரப்பா அறிவார்கள் கவியின்பேரும்
ஐந்தெழுத்தில் மூன்றெழுத்தைச் சேர்த்துப்பாரு
காரப்பா சூலமதை மூலமென்றும்
கைப்பிடியே வேதமென்றும் பாருபாரே. 50

வேதமதைப் படைத்தவனே உடுக்கையாகும்
விதமான தமர்க்கையரை விளம்பக்கேளு
பாதமதைச் சுமந்தவர்க ளெட்டுப்பேரும்
பருத்ததுணை யானார்க ளப்பாபாரு
பேதமதை விசமெட்டும் கயதரசாச்சு
பேச்சரிய வாணியடா நாவதாச்சு
மாதமதைப் பூட்டுகின்ற வளையஞ்சக்கரம்
மக்கதான யிடவாரே லிங்கபீடங்காணே. 51

காணவே யின்னமொன்று சொல்லக்கேளு
காசினியிற் கருமவினை போக்கவேணும்
பூணவே வேதாந்தம் பூணவேணும்
புகழ்பெரியோர் தன்பத்தைப் புகழவேணும்
நாணமில்லாப் பாவிகள்தன் னுறவுவேண்டாம்
நாற்றிசையும் புகழவே பூஜைவேணும்
தோணவே குருபதத்தைப் பூஜைசெய்து
தொல்புவியில் வினைகள்தனை வெல்லலாமே. 52

அரன்கையில் பிடித்ததொரு உடுக்கைதானும்
அம்மனிடம் வந்ததொரு வகையைச்சொல்லும்
பிரமனுட சிரசதொன்று சொன்னேனப்பா
பித்தன்கை தனில்வந்த வகையைச்சொல்லும்
கரமதிலே யிடித்ததொரு சூலந்தானுங்
காலகண்டன் கையில்வந்த விபரஞ்சொல்லும்
மரமான மரப்பாவை விபரஞ்சொல்லும்
மணிச்சிலம்பும் சிலங்கையின்பேர் சொல்லுவீரே. 53

சொன்னமொழி தவறாத சுந்தரமேகேளு
சோதித்துப் பார்த்தாக்கா லெல்லாந்தோணும்
கன்னமிடுங் கள்ளருடன் சேரவேண்டாம்
கசுமால மட்டியுட னெதிர்க்கவேண்டாம்
அன்னமிடு வார்தனக்கு வின்னம்பண்ணும்
அறிவுகெட்ட மூடருக்குச் சொல்லவேண்டாம்
இன்னமடா மெத்தவுண்டு சொல்லவென்றால்
இறையவனு மீஸ்பரியு மொன்றுதானே. 54

தானென்ற குருபதத்தைக் கார்க்கவேணும்
தானபூஜை செய்துமனந் தேறவேணும்
தேனென்ற பரவெளியிற் சேரவேணும்
தெளிவான தெய்வத்தைக் காணவேணும்
ஆனென்ற அட்சரத்தை யறியவேணும்
அம்பலவர் பதந்தன்னைக் காணவேணும்
மானென்ற மாய்கைதனை ஒழிக்கவேணும்
மாசில்லாக் குருபதத்தை மகிழ்ந்துகூறே. 55

கூறவே யின்னமொன்று சொல்லக்கேளு
குறமகளைக் கைப்பிடித்தோ னெனக்குச்சொன்னார்
மாறவே மணிச்சிலம்பின் பெயரைக்கேளு
மாயனுட மாயமடா மகிழ்ந்துகாணு
தேறவே வைத்ததொரு மரப்பாவைதானும்
தெளிவாகச் சொல்லுகிறேன் சுந்தரமேஅய்யா
ஆறவே நாணுதற்கு உருவேயாச்சு
ஐவருமே குடியிருந்த பாவைகாணே. 56

காணவே ஐவருமே யிருந்தவீட்டில்
கமலமலர் சாத்துவது மெனக்குச்சொல்லும்
தோணவே தூபமொடு தீபங்காட்டித்
தொழுதிறைஞ்சும் வகையதனைச் சொல்லவேணும்

போனபேர் திரும்பிவந்த விபரஞ்சொல்லும்
பொன்மலர்க ளைந்தான விபரஞ்சொல்லும்
காணவே யெந்தனுக்குக் காட்ட வேணும்
கருத்தறிய யெந்தனுக்குக் கருதுவீரே.

வீராதி வீரனென்றாற் சொல்லக்கேளு
விதவிதமா யுலகத்தில் நடக்கையுண்டு
பாராத மூடரிடம் பேசவேண்டாம்
பதியிருந்து குருவினுட பாதங்காணும்
சேராதே ஒருவருக்குஞ் செப்பொண்ணாது
செய்தவத்தாற் கிட்டுமடா யிந்தநூலு
காராத சீஷனுக்குக் காட்டினாக்கால்
கழுதையெனப் பேர்படைத்துத் திரிவாய்தானே. 58

திரியவே பூவினுட பெயரைக்கேளு
திரிந்திடும் வசியமடா தெரிவையாச்சு
அறியவே தீபமடா அம்மையாச்சு
அறிந்துநின்ற தூபமடா அரியுமாச்சு
பிரியமுட னெழுத்ததுவே பஞ்சபூதம்
பிரபலமாய் நவக்கிரகச் சித்துமாச்சு
தெரியவே ஐந்துமலர் பெயரைக்கேளு
தெளிவான சதாசிவத்தின் செயலதாச்சே. 59

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
ஆதியென்ற சத்குருவே அய்யா அய்யா
பேச்சென்ற மணிபிறந்த மார்க்கஞ்சொல்லும்
பேருலகி லெட்டுதிக்குப் பேர்தான்சொல்லும்
காச்சென்று பந்தலிட்ட கைகளாரு
கன்னிமணஞ் செய்தவகை கருதவேணும்
தாச்சென்ற தரணிதனில் தாழ்த்திச்சொல்லும்
சதாசிவனாய் நின்றபேர் சொல்லுவீரே. 60

சொல்வதற்கு யின்னமொன்று சொல்லக்கேளு
சொற்பெரிய சதாசிவனு மீசனுமேகூடி
வெல்லுதற்கு வேதனையுங் கூடச்சேர்த்து
வேதமென்ற மணியாச்சு விளங்கக்கேளு
அல்லுதற்கு ஆதியடா ஆட்டம்மாலால்
அகாரமுத லஞ்சோடு மூன்றுமாச்சு
கல்லுதற்குக் கால்நிறுத்தும் விபரங்கேளு
காசினியில் முன்சொன்ன கருத்துமாச்சே. 61

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லிவந்த
அய்யர்தனை யடிதொழுது வணங்கிப்பின்னும்
பேச்சென்ற மூலமது யெனக்குச்சொல்லும்
பேருலகில் மாலைகட்டு மார்க்கமென்ன
காச்சென்று கோலமிட்ட விபரஞ்சொல்லும்
காசினியில் நாடுசுற்றும் விபரஞ்சொல்லும்
வாச்சென்ற வசனமெல்லா மெனக்குச்சொல்லும்
வரிசையுட னிதையறிந்து சொல்லுவீரே. 62

சொல்லென்று கேட்கவந்த சுந்தரமே அய்யா
சொற்பெரிய மூலத்தைச் சொல்லக்கேளு
கல்லென்று பேசுமடா மூலவாசி
கலந்துநின்ற மூலத்தைக் கண்டுபாரு
சில்லென்று மாலையடா சிவமைந்தாச்சு
சிறப்பாக மாலையிட்ட மார்க்கங்கேளு
அல்லென்று வீணைதிரி யிட்டசத்தம்
அறிந்துகொள்ளு உன்னுள்ளே அறிவினாலே. 63

அறிவுள்ளோ ரிதையறிந்து பேசவேணும்
ஆதியிலே பதினெட்டு மெனக்குச்சொல்லும்
பரிவுகொண்ட கேடையமுங் கத்திபாரு
பலசமய மானவகை பகரவேணும்
தெரிவதற்கு யின்னமொன்று செப்பக்கேளும்
செப்படியின் வித்தைகளே செப்பவேணும்
யெரிவதற்குக் கல்லெறிந்த மார்க்கம்போலே
யெழுத்தறிய வேணுமய்யா யேகநாதா. 64

யேகமாய் நின்றபரந் தன்னைப் போற்றி
யேகவெளி யானநில மைந்துங்கேளு
பாகமாய் நிலையைந்தும் பகடியைந்தும்
பரனாறு மொன்றைந்தும் பகரக்கேளு
மோகமாம் பூவைந்து மோகினியேயாச்சு
முருகனா ருபதேச மதையேகேளு
தாகமாய்க் கேட்கவந்த பிள்ளாய்நீயும்
தருதலையோ டிணங்காதே தாயைப்போற்றே. 65

போற்றுதற்கு யென்குருவே சாமிநாதா
பொருதிநின்ற ஜாதிபதி னெட்டுஞ்சொல்லும்
யேற்றுதற்கு நிலமைந்து மெனக்குச்சொல்லும்
யேகவெளி யானதொரு விபரஞ்சொல்லும்

வாற்றுதற்கு யென்குருவை வாழ்த்தவேணும்
வழிபாடு யேதெனக்குச் சாற்றவேணும்
பாற்றுதற்கு வேறாகத் தோணும் வண்ணம்
பகருமையா யென்குருவே பரமநாதா. 66

பாடுகிறேன் பதினெட்டு ஜாதிமார்க்கம்
பரமனார் சொன்னபடி பகரக்கேளு
ஆடுகிற கெங்கையடா ஆத்தாள்தானும்
அறிவுள்ள பேரைந்து தன்னைப்பெற்றாள்
தேடுகிற சம்மந்த னுரவேயாச்சு
தெளிவான பத்தருமே சம்மந்தராச்சு
நாடுகிற பிரம்மமடா பிராமணருமாச்சு
நன்மைசெய்யுஞ் சத்திரியர் முனிவராமே. 67

முனியான வசியருக்குள் நாலுஜாதி
முதல்சொன்ன பிராமணர்க்குள் நாலுஜாதி
கனியான ராஜருக்குள் நாலுஜாதி
கலந்துதடா குருகுலத்தார் கண்டுபாரு
மணியான நால்ஜாதி வர்க்கந்தன்னில்
மதிப்பான சூத்திரனென் றறிந்துபின்னும்
தனியான சூத்திரனில் நாலுஜாதி
தனித்தனியே யிதுநாலும் பாருபாரே. 68

பாரப்பா பார்தனிலே வசிஷ்டர் தானும்
பாராண்டார் குருவானார் பண்பாய்க்கேளு
வேரப்பா வேதனடா பிராமணர்க்கு
வேதாவே வியாசனார் விளம்பக்கேளு
சாரப்பா வைசியனுக்குச் சொல்லக்கேளு
சதாசிவனா ரெந்தனுக்குச் சொன்னமார்க்கம்
காரப்பா கண்ணனுட கலையேயாச்சு
கலந்துநின்ற நால்ஜாதி யிவ்வாறாச்சு. 69

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
அய்யரே யின்னமொன்று அறையவேணும்
பேச்சொன்றும் பேசாமற் பேசவேணும்
பேதமாம் நிலமைந்தும் சொல்லவேணும்
காச்சென்று கதிர்விளைந்த கனியைச் சொல்லும்
கதிர்தரித்த மன்னருட பெயரைச் சொல்லும்
வாச்சென்று தேவர்கள் தான் வந்தாரென்ற
வரம்பதனைத் தப்பாமல் நடந்தவாரே. 70

வாரான நிலமைந்தும் பூத்தபூவும்
வன்னியென்ற நிலமதிலே அரசர்பேரும்
தாரான அண்டமதிற் பூத்தபூவும்
தருமதே வதையுரைத்த மரத்தின் பேரும்
கூறான சுடுகாடு வந்தவாரும்
கூடிநின்ற தேவதைக ளானவாரும்
பாரான பார்வதியாள் பார்த்தவீடு
பாருலகில் வந்ததென்ன வகைசொல்வீரே. 71

வகையென்ன சுந்தரமே மகனே அய்யா
வாயத்தமல ரைந்தையுமே சொல்லக்கேளு
தகையென்ன கோடியிலே பூவதொன்று
தரியநீ ராலொன்று நெருப்பூவொன்று
பகையில்லா யிலைப்பூவும் நீர்ப்பூவுங் கூட்டிப்
பஞ்சவர்ண மென்றபூ வைத்துமாச்சு
நகைபுரிந்த சோதியடா யெனக்குச் சொன்னார்
நல்லோர்கள் தான்காண்பார் கருமிகாணார். 72

காணாத பொருள்களெல்லா மிதற்குள்ளாச்சு
கலந்துநின்ற பேரின்ப மிதற்குள்ளாச்சு
தோணாதோ ரொருவரிடஞ் சொல்ல வேண்டாம்
தொழுதிறைஞ்சிப் பணிந்தாலும் பொருளீய்ந்தாலும்
வாணாளுக் கேற்றவன்போ லிருப்பானப்பா
வழிவசத்தா லவன்குணத்தை கண்டுநீயும்
நாணாம லவன்குணமும் நடத்தை பார்த்து
நற்குறியு மிகப்பார்த்து நவிலுவாயே. 73

பார்த்துமே பரகெதியைக் காட்டுதற்குப்
பலகரையை யாராய்ந்து குருவேசாமி
கார்த்துமே யேழான வகையைச் சொல்லும்
காசினியில் வேடமிட்ட கருத்துஞ்சொல்வீர்
வேத்துருவாய் மரம்நீண்ட வகையைச் சொல்லும்
வேலென்ற மார்க்கமது யெனக்குச் சொல்லும்
மாத்துருவாய் நின்றதொரு மதனைக்காட்டும்
மங்கைரதி யானதொரு விபரங்காட்டே. 74

காட்டுமென்று யெந்தனையுங் கேட்கவந்த
கருத்துள்ள யென்மகனே கருத்தைக்கேளு
மாட்டுமே லேறிவரு மீசனாரும்
மன்மதனுக் கேதெண்டல் தானுமானார்

பாட்டிலே உள்ளபடி சத்தமேகம்
பாரளந்த மாயவனார் பதியுமானார்
யேட்டிலே எழுதியதோர் வசந்தனப்பா
யேழிலே ஒருவனடா யியம்புவேனே. 75

யியம்புகிறேன் மாயவனு மேழிலொன்று
யெளிதான வசந்தனடா யீசனாரும்
பாம்புமேல் பள்ளிகொண்டோன் தனக்குப்பாரு
பக்தராம் பதியிலுள்ளோர் தனக்குச் சொல்லும்
காம்பனைய தோளாலு மெனக்குச் சொல்லும்
கயிலையென்ற மேருவடா மதன்கிரியுமாச்சு
வீம்புகளைப் பேசாதே சொல்லக்கேளு
விதமான மாய்கையடா வேடந்தானே. 76

வேடனென்ற சிவன்தானு மெனக்குச் சொன்னார்
வேதனாம் பிரமன்வே தியனுமானான்
ஆடனென நின்றவனே அரசனானான்
அன்பான ருத்திரனே சூத்திரனென்பார்
காடனென ஆதவனே வசியனப்பா
கனம்பெற்ற பரமதுவு மெங்குமே நிறைந்து
கோடனென தாபரமுஞ் சங்கமங்கள்
கொடிதான ஜீவஜெந்து உதித்தவாரே. 77

வாரான ஜனங்களுக்கு மைந்துபூதம்
மருவியதோர் தேவதைக்கு மைந்துபூதம்
மருவியதோர் அண்ட மெல்லா மைந்துபூதம்
சதாசிவமாய் நின்றதுவு மைந்துபூதம்
பேரான ஒளிவெல்லா மைந்துபூதம்
பேசரிய மந்திரமு மைந்துபூதம்
கூறான வெளியெல்லா மைந்துபூதம்
குரும்பரே ஐந்ததினா லெல்லாமாச்சே. 78

ஆச்சென்ற மூலமடா சுந்தரமே அய்யா
அம்பலத்தி லாடுகின்ற அய்யர் தானும்
பேச்சென்ற பிரமனுட ஜாதிதன்னில்
பேராக நால்ஜாதி வகுத்தாரப்பா
மூச்சென்ற வைசியனில் நாலுஜாதி
முன்பாகச் செய்தார்காண் முதல்வன் தானும்
காச்சென்ற கனிவுக்குள் கலந்தயீசன்
கலைநான்காய் நின்றவனே கருணைநாதன். 79

நாதனென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
நாயகமே யென்குருவே சொல்லக்கேளீர்
வேதமதைப் படைத்தானும் விஷ்ணுருத்ரன்
மேலான மயேஸ்பரனுஞ் சதாசிவனுங்கூட
பாதமதா லுலகளந்த வாருஞ்சொல்லும்
பண்பான உமைதேவி விபரஞ்சொல்லும்
மாதம்வரு ஷம்படைத்த விபரம் சொல்வீர்
மானிலத்தில் திவசமென்ற பேர்சொல்வீரே. 80

பேர்சொல்திதி மூவஞ்சு மெனக்குச் சொல்லும்
பெலமான நாளதுவு மெனக்குச் சொல்லும்
பார்தனிலே பதங்கள் திங்கள் சாய்கைசொல்லும்
பரசமைய மாறுக்கும் விபரஞ்சொல்லும்
மார்தனிலே பூண்டரவு பெயரைச் சொல்லும்
மகாதேவர் தரித்தமணி பெயரைச் சொல்லும்
கார்மேக மேனியனா ருலகந்தன்னில்
கருதுமவ தாரம்பத் ததுஞ்சொல்வீரே. 81

கூத்தான தொன்றுமடா மெத்தமெத்த
கூறுதற்கு நாவசையாச் சூட்சமப்பா
பார்த்தாலே சொற்பமடா பகர்ந்துபாரு
பாருலகைப் படைத்தசதா சிவத்தின்கூறு
யேத்தபடி மனம்போனாற் புத்திபோச்சு
யெளிதென்று யெண்ணாம லிருந்துநீயும்
காத்தல்லோ குருபதத்தைக் கருணையாக
கருத்தல்லோ வெளியாகக் காணுங்காணே. 82

காணவே சதுர்யுகத்தைப் படைத்தாரீசன்
களங்கமற்ற தேவரிஷி சித்தரோடு
தோணவே தொல்புவியை யுண்டுபண்ணி
தொழுவதற்குத் தெய்வமா யிருந்தாரீசன்
தாணுவே யல்லாது வேறுமுண்டோ
தற்கமிட்ட சுந்தரமே கேளுகேளு
நாணவே அல்லியது பூத்தாப்போலே
நல்லகெதி படைத்தவர்கள் வானமீனே. 83

மீனான நட்சேத்திர மிருபத்தேழு
மேதினியில் வந்ததொரு வகையைக் கேளு
தேனான பூஜையிலே தெளிந்தபேரும்
தேகத்தைச் சித்திசெய்து தெரிசித்தோரும்

மானான பெண்மாய்கை கடந்தபேரும்
மாசில்லான் தன்பதத்தைக் கண்டபேரும்
ஊனான தேகசித்தி செய்துபின்னும்
உலகத்தில் திதிவார மானார்பாரே. 84

வாரமென்ற நாளேழுஞ் சொல்லக்கேளு
வளமான யிரவுபகல் ரெண்டுமப்பா
பாரமென்ற ராக்ஷதற்குக் குருவாய்நின்று
பரலோக தேவருக்கு ஒருவனப்பா
சாரமென்ற கடலேழிற் துவண்டமாயன்
சக்கரத்தால் ஆடுகின்ற கூத்திதப்பா
பூரமென்ற திதிவாரம் புதுமையாச்சு
புத்தியுடன் தெரிசனத்தில் துவண்டுபாரே. 85

துவண்டுபா ரென்று சொன்ன குருவே அய்யா
தொல்புவியிற் தொழிலாளி பெயரைச் சொல்லும்
கன்னெரிந்த கல்லினுட பெயரைச் சொல்லும்
காராளன் றன்மனையில் கன்னிவந்ததோதும்
அவண்டுபோன அரவைத் தரித்ததேது
ஆயிரத்தெட் டிதழாக விரிந்ததேது
கரவுகண்டு கலையுண்டு கர்த்தாவென்று
காசினியிற் கன்னியென்று கலந்துசொல்லே. 86

கலந்திருந்த பிரணவமே சொல்லக்கேளு
கல்லெறிந்த வகையல்லோ கர்த்தன்கூரு
அலைந்துவந்து சேருகிற இடந்தானப்பா
ஆயிரத்தெட் டிதழல்லோ பராபரமுமாச்சு
பலன்தேடும் பெரியோரைப் பணிந்து போற்றிப்
பராபரமாய் நின்றதொரு பரனைப் போற்றி
தலந்தனிலே உள்ளதொரு கஞ்சம்போலத்
தாமல்லோ அடிமூல மானாள்பாரே. 87

அடிமூல மானதொரு குறட்டின்பேரும்
அடிமிதிக்கு மேற்பலகைக் குமிளின்பேரும்
யிடியான யிருவிரலி னிடுக்குப்பேரும்
பேரான வெள்ளியிரு குமிளின்பேரும்
படியான நாவுக்குப் பாதமங்கே தூக்கிப்
பதமாக நின்றதுக்குப் பெயர் தானேது
தடியான மாத்திரைக்கோல் பெயரைச்சொன்னால்
தஞ்சமென்று உன்பாதம் வணங்குவேனே. 88

அடிமூல மானதொரு குறடுதானும்
அப்பனே சொல்லுகிறேன் ரிஷபமாச்சு
முடியான பலகையப்பா அண்டமாச்சு
மூவுலக மரிகுமுளி லிங்கமாச்சு
பிடியான யிடவயர்தான் சத்தியாச்சு
பிடித்திருக்கும் விரல்ரெண்டும் குபேரனாச்சு
தடியான பொன்னோடு வெள்ளிரெண்டும்
சந்திரனுஞ் சூரியனுந் தான்வணங்கே. 89

வணங்குதற்கு யின்னமொன்று சொல்லக்கேளு
வகையான ஒட்டியாணம் யோகவேட்டி
குணந்தருகும் ருத்திராட்சம் தமர்கயர்க்கும்
கூறியதோர் திரிச்சடைக்கும் பூணூல்பேரும்
மணந்தருகு முயிரெழுத்து நூலின்பேரும்
மனமான உடல்நரம் பதுவின்பேரும்
பெணங்கிடவே உந்திக்கம லத்தின்பேரும்
பேராக யிருக்கும்வகை சொல்லுவீரே. 90

யெடுத்துவைத்த அடியதுதா னப்புவாச்சு
யீஊஓஆ வென்ற எழுத்துங்கண்டால்
தடுக்கவே முடியாத மாத்திரைக்கோல்
தற்கமிட்ட சுந்தரமே லிஷ்ணுவாச்சு
அடுத்துநின்ற ஒட்டியாணம் யோகவேட்டி
அப்பனே ருத்திரனுட அம்சமாச்சு
படுத்திடுவா யுடல்நரம்பு வயருதானும்
பார்த்தறிந்து சொல்கிறேன் பகுந்துமேலே. 91

மேலான கோவினுட யாளிக்கும்பேர்
மெய்விளங்குங் குருவினுடன் சீஷன்பேரும்
காலான தாம்பூரக் கமண்டலத்தின்பேரும்
கருதிநின்று மனமுரைத்த சிரசின்பேரும்
மாலான மகாவிஷ்ணு மனிதர்க்கும்பேர்
வகையான தத்துவந்தொண் ணூற்றாறின்பேர்
நாலாகப் பகுத்தறிந்து சொல்லவேண்டும்
நமஸ்கரித்து அடிபணிந்து நின்றேன்பாரே. 92

பார்த்தறிந்து சொல்லுகிறே னின்னங்கேளு
பாங்கான ருத்திராட்சம் வடிவுகண்டம்
யேத்தறிந்த தமரதுவே வேதமாச்சு
யியலான கயரதுவா கமமேயாச்சு

மாத்தறிந்த திருநீறு கடைபூணூலு
மயேசுரனும் ருத்திரனும் பிர்மாவாச்சு
சேத்தறிந்த உந்தியெனுங் கமலம் நாவு
செயமான பிருதிவியின் மயமாம்பாரே. 93

பாருநீ சொல்லுகிறேன் கேளுமப்பா
பாதமென்றுஞ் சிரசென்றும் ரெண்டுக்கும்பேர்
கூறுநீ உடலுக்கு முயிர்க்கும்பேர்
கூட்டிலே வாழுகின்ற குருவின்பேரும்
வாருமிரு மென்றுரைத்த வசனப்பேரும்
வாசியென்ற யெழுத்தினுட வசனப்பேரும்
பார்புகழ யிதையறிந்து சொல்லவேணும்
பராபரமே யென்குருவே சாமிநாதா. 94

பாரப்பா யிவர்கள் நிற்கும் நிலையதுவேயறிவு
பாதமடா அண்டமடா சிரசேயாகும்
கூரப்பா ஆஈஊ உருவுடன்கருவும்
கூட்டிலே வாழுகின்ற சிவனுமாச்சு
சிரசப்பா வுள்வாழ்வே பிரமமாச்சு
சீரான குருவார்த்தை கயிலாசமாச்சு
ஆரப்பா வாசியென்ற குதிரையாச்சு
அப்பனே அதனைத்தா னறிந்துபாரே. 95

சாரான அண்டமதில் நிறைந்தயீசன்
சகலகலை வல்லவனா யிருந்தமூர்த்தி
பேரான ஐம்பூத மானமூர்த்தி
பேருலக மேலுலகம் படைத்தனாதன்
கூரான சுடுகாடு குடியிருந்தமூர்த்தி
கூறுகிற வாசனத்தி லிருந்தமூர்த்தி
ஆரான ஆறுமுக மானமூர்த்தி
அம்பலத்தி லாடுகிற ஐயர்தானே. 96

தானென்ற ஆணுவத்தைப் போக்காய்நீயும்
தரணிதனில் விருதுபல பெயரைக்கேளு
போமென்ற புலி தண்டைப் பெயரைக்கேளு
பொல்லாத கசடர்மனங் கலங்கவேதான்
நாமென்றே ஆடுகிற நகாரமாச்சு
நல்வினையுந் தீவினையுங் கண்டதப்பா
பாமென்ற பரசமைய மாறுங்கேளு
பதினெட்டு நல்விருதும் பிறந்தவாரே. 97

பிறந்தவகை யேதென்றால் பிறப்புக்கேளு
        பேசரிய அகாரமடா கலிக்கியாச்சு
சேர்ந்தவகை யேதென்றால் மகாரம்ஒண்டித்
        தேசத்தி லகாரமிட்டால் தளுக்குமாச்சு
பரந்தமயி லிறகுவடா சிகாரமாச்சு
        பரதேசி சடையல்லோ உகாரமாச்சு
இறவாம லிதையறிந்து யெழுத்தைச்சேர்த்து
        யெட்டெழுத்தும் பத்தெழுத்துங் கண்டுபாரே. 98

கண்டுசொல்லா ரண்டமதி லோகத்துள்ளே
        காட்டுவா யப்படியாய்க் கொற்றபேரை
தெண்டுடனே கமண்டலஞ் சங்கத்தூணி
        தெளிவான கப்பரையேந் துங்கைக்கும்பேர்
வண்டருடன் சொல்லாதே புவியின்பேரும்
        வாலையுட பக்கம்நின்ற வடிவின்பேரும்
கண்டறிந்து சொன்னாக்கால் விடுவேன்யானும்
        கமலம்போற் சீர்பாதங் காணவேணும். 99

காணப்பா யின்னமொன்று சொல்லக்கேளு
        கருதலிலாக் கடவுளென்ற சோதிதானும்
ஆணப்பா தெண்டென்று அறிந்துகொள்ளு
        அன்பாகக் கமண்டலமே ராகுவாச்சே
தோணிப்பா சங்குத்தொனி அங்கங்கேது
        தோற்றவகை கப்பரையுந் தியானமாச்சு
ஊணப்பா யேந்துகைக்கப் பரையைக்கேளு
        உற்றதொரு சிரசைந்தும் சர்ப்பந்தானே. 100

சர்ப்பமென்ற ஆபரண மணிந்தாரீசன்
        சாஸ்பதமாய் அஞ்சுபஞ்ச பூதமாச்சு
பொற்பரமாய் நின்றதொரு ஐந்துருத்தான்
        போக்காகப் புலியென்ற பேருமாச்சு
கற்பகம்போல் உந்தனக்குச் சொன்னேனப்பா
        கனிந்துபார் வாலையென்ற பேருமாச்சு
அற்பமென்று மனதுழன்று தவிக்குங்காலம்
        அணுகாது யென்றுசொன்னே னய்யாகேளே. 101

அய்யாகேள் வாலையுட பாகம்நின்ற
        அய்யனாம் அரனென்ற பேருமாச்சு
மெய்யாகச் சொன்னதெல்லாம் மனதிற்கொண்டு
        மெய்மையைக் கண்டுகொண்டால் தவமுமாச்சு

மெய்யாநீ யானதினால் உனக்காய்ச்சொன்னேன்
மேவியிந்தச் சூட்சமதை விரும்பிப்பாரு
அய்யாகேள் புலத்தியனே அறிந்துகொண்டு
அறிவாக நீநினைந்து தெரிந்துகொள்ளே. 102

அறிந்துகொள் ளென்றுசொன்ன குருவேஅய்யா
அடியேற்குத் தெளிவாகச் சொல்லவேணும்
பிரிந்துநின்ற பாவமென்ன புண்யமென்ன
பேரான பெருமையென்ன பிதற்றலென்ன
தெரிந்துநின்று செய்வதென்ன செய்யாதென்ன
தேசத்தில் பலபலவாய்ச் சொல்வதென்ன
சொரிந்துநின்ற வாத்தியத்தை யய்யாநீயும்
தெரிவிப்பீர் யெனக்கருள்வீர் போற்றினேனே. 103

போற்றிநின்ற யென்னுடைய மாணாகேளு
புகலுகிறே னுந்தனுக்கு விபரமாக
யேற்றிநின்ற பேர்கள்தா னறிந்தோரப்பா
யிதைவிட்டுப் பலபலவாய் நினைவுகொண்டு
மாற்றிநின்ற மாண்பரெல்லாம் பிதற்றியேதான்
மனமலைந்து திரிந்திடுவார் மானிலத்தில்
போற்றிநின்ற புண்ணியத்தால் தவத்தோனாகி
புவிதனிலே வாழ்ந்திருப்பார் ஜெகஜாலத்தே. 104

ஜாலமென்ன உண்மைகண்டா லதுவேயாசான்
சண்டாளர் காணாம லலைவதாச்சு
கோலமென்ன ஆண்டியுட வேடமாச்சு
கூடுவிட்டுப் பாய்கிறதே ஜாலமாச்சு
பாவமென்ன பகடைகளே விஷ்ணுவாச்சு
பதிவான வண்ணானப் படியேயாச்சு
கோலமென்ன கோலமடா சொல்லக்கேளு
கோபால வமிசத்திற் பிறந்தார்வேதா 105

வேதாந்த வேதியனே குருவேசாமி
வேணமுழு தாளியற்கு வேணுயர்ந்தவாறும்
நாதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டுஞ்சொல்லும்
நன்மைகண்ட நாதாக்கள் நடத்தையென்ன
வேதாந்த மென்பதற்கு ரூபமென்ன
வேதாவும் நெடுமாலும் பிறந்ததெங்கே
நாதாந்தத் துள்ளிருந்த நாதாசாமி
நன்மைதரு மென்குருவே நடத்துவீரே. 106

கூறுவே னென்மகனே புலத்தியாகேள்
குருவான வேளான னிந்திரனப்பா
மாறுகிறேன் மண்டலத்திற் தவத்தைச் செய்தோன்
மனிதர்க்குந் தேவர்க்கும் தேவனார்க்கும்
கூறுகிறேன் வேதாந்த மிகுதியப்பா
குவலையத்திற் சித்தாந்தஞ் சொல்லக்கேளு
மாறுகிற கலையல்லோ சித்தாந்தமாச்சு
மானிலத்தி லயன்மாலும் பிர்மாவாச்சே. 107

பிரமமென்ற பிரமனுக்குத் தொழிலைச் சொல்லும்
பிரபலமா மாயனுக்குத் தொழிலைச்சொல்லும்
கருமமென்ற சாதிபல தொழிலைச் சொல்லும்
கருவறிந்து யெந்தனுக்குச் சொல்லவேணும்
தருமமென்ற சாதிபல பெயரைச் சொல்லும்
தளைத்தமனு வாருதனை வகுத்துச் சொல்லும்
மருமமென்ற மயக்கத்தை யெனக்குக்காட்டும்
மார்க்கமென்ற வழிபாடு வகுத்துமூலம். 108

மூலத்தி வறிவுதனைக் காட்டவேணும்
மொழிதனிலெட் டாகநின்ற பேரைச்சொல்லும்
தொகுத்திடவே தொல்புவியில் தொந்திப்போடு
துயரடைந்த மனுக்களுட தொழிலைச் சொல்லும்
விதித்திட்ட விதிவசத்தை யெனக்குச் சொல்லும்
விமலனென்ற வேளாளன் தனக்குமூலம்
கதித்திடவே யெந்தனுக்குச் சொல்லவேணும்
கலைநான்த்ர யோடுகின்ற கடவுள்தானே. 109

தானென்ற கருமஸ்றப்பாய்ச் சொல்லவேண்டாம்
தாதருட வம்சத்தில் தொழிலும்பேரும்
ஊனென்ற ஊர்மகனார் மார்க்கஞ் சொல்லும்
உத்தவர்க ளுறவான விபரஞ்சொல்லும்
மீனென்ற மன்னுடையான் திருக்கைப் பேரும்
மங்கலவன் கத்தியொடு கிண்ணப்பேரும்
தேனென்ற சிரசுக்கு முனைக்குஞ் சொல்லும்
தெளிவான யென்குருவே சாமிநாதா. 110

நாதனென்ற நாதனுட நாமமாச்சு
நல்லகெதி யானவளே நடுவுமாச்சு
போதனென்ற போதமடா தியானமாச்சு
போக்கரியா ருலகத்தில் பொய்கள் பேசி

வாதமென்ற வாதமதிற் சிக்கிமாய
வைத்தார்காண் மானிலத்தில் வரிசையாக
பேதகமாய் முழக்கமிட்ட பொருள்தானப்பா
பேருலகிற் சிவனுமையாள் தானுமாச்சே. 111

ஆச்சடா அருவுருவோர் தொழிலைக்கேளு
அனுதினமு மறவாமற் பூஜைசெய்வோன்
பேச்சடா பேசுவார்கள் பெருமையாளர்
பெருமையென்ற வாலையைப்பூ சித்தபேர்கள்
வாச்சுதடா பலஜாதி பொருளைக்கேளு
வையகமாம் பூமியது தெய்வமாச்சு
காச்சுதடா முகிலேழும் யேழுஜாதி
கலந்துநின்ற ஒருஜாதி விண்ணுங்காணே. 112

ஜாதியென்ற சதுர்குலத்திற் பிறந்தமார்க்கம்
சதுர்மறையோன் றன்னுக்குள் நாலுமாச்சு
ஒதிவைத்த பஞ்சகர்த்தா ளைந்துபேரும்
உறவானா ராகையினாற் பதினெட்டாச்சு
பாதிமதி தனையணிந்தா ரெனக்குச் சொன்னார்
பராபரையா ளப்படியே சொன்னாளாத்தாள்
ஆதியிலே வேளாளன் பிறந்தானப்பா
அவனிடத்திற் சிவசத்தி பிறந்தாள்பாரே. 113

ஆத்தாளைக் கண்டாலே யெல்லாங்காணும்
ஆதிவஸ்து அனாதிவஸ்து அவளேயாச்சு
பார்த்தாலே பரிகாரி கிண்ணிசத்தி
பரிந்தசத்தி பிரமமடா பரிந்துசேளு
தோற்றுதற்கு யெதிரிருந்தோன் தெய்வமாச்சு
தொழிலாளி கைவிரலோ சொல்லக்கேளு
பார்த்தவற்கு அஞ்சுதலை நாகமாச்சு
பரிவாக அவர்களுட தெய்வந்தானே. 114

தெய்வமென்ற பாவைபண்ணுங் குசவனுக்குத்
தெரிவையடா ஆதிமூலந் தெளிந்துபாரு
பையரவந் தனையணிந்த பரமனாரும்
பாருவகைப் படைக்கவல்லோ திருக்கையானார்
கைதனிலே பிடித்தகம்பு விஷ்ணுவானார்
கதித்தநவக் கிரகம்நவ பாண்டமாச்சு
மேதினியி லவன்குலமே பிரமம்ராச்சு
விண்ணோர்போற் றுங்கடவுள் பரமுமாச்சே. 115

பிர்மமென்ற திராசுமுனை சுழினையாச்சு
　　பெலமான குருக்களவன் பேரைக்கேளு
தர்மமென்ற தர்மமடா சிவமதாச்சு
　　தளைத்தோங்கு மிடமதுவு மதுவேயாச்சு
கர்மமென்ற கர்மவினை தன்னைப் போக்கக்
　　கயராக நாகமதை யெட்டும்சேர்த்து
தர்மமென்ற திராசினுட பலகைகேளு
　　தரணிதனில் விண்மண்ரெண் டாச்சுபாரே. 116

பாரப்பா குருபதத்தை யின்னங்காரு
　　பராபரையா ளெந்தனக்குப் பகர்ந்தவார்த்தை
ஆரப்பா எனைப்போலே சொல்லப்போறார்
　　ஆமிந்த நூல்முன்னூற் மூவெட்டுக்குள்
காரப்பா குருபதத்தைப் பனிரெண்டாண்டு
　　கருணையுடன் கைகொடுத்தாற் கண்டுதேரு
சேரப்பா சிவதலத்திற் சேருசேரு
　　ஜெகஜால வித்தையெல்லா மிதற்குள்ளாச்சு. 117

ஆச்சென்ற பலகையது ஆதாரமாச்சு
　　அப்பனே யென்மகனே புலத்தியாநீ
காச்சென்ற கனிவறிந்து கண்ணைமூடிக்
　　கயிலாச பதிகண்டா லெல்லாங்காணும்
பேச்சென்ற உபதேச மறியவேணும்
　　பேதையிட மாயைதனை யகற்றவேணும்
மூச்சென்ற மூச்சறிந்து தாயைப் போற்றி
　　முழுதுமே கண்டறிந்தால் சித்தனாமே. 118

சித்தான சித்ததுவை யெனக்குக்காட்டும்
　　ஜெகத்திலே ராகம்பதி னெட்டுங்காட்டும்
முத்தான குளவியம்மி முதலுங்காட்டும்
　　மூர்த்தியாய் நின்றதொரு நிலையுங்காட்டும்
வித்தான ரூபமது யெனக்குக்காட்டும்
　　விதவிதமாம் லோகமது பேரைச்சொல்லும்
கர்த்தாவே யென்குருவே சாமிநாதா
　　காலில்வீழ்ந் தேன்கருணை புரிவீர்தானே. 119

தானென்ற புலத்தியனே சொல்லக்கேளு
　　தாரணியில் விண்ணுமண்ணுஞ் சித்தமாகும்
மோனரா கத்தெழுத்து பத்துமெட்டும்
　　மோதகமாங் குளவியது மொழிந்தேனீசன்

பானென்ற அம்மியடா ரூபஞ்சத்தி
பதிவிரதை தனைக்கண்டால் பாவம்போகும்
ஆனென்ற நவலோகந் தன்னைக்கேளு
ஆதியாய் நின்றநவ லோகந்தானே. 120

தானென்ற பவம் நீக்கிச் சொர்க்கமீயும்
தற்பரா னந்தமே சாமிநாதா
மானென்ற விழிநாகம் பெயரைச் சொல்லும்
மகுடியென்ற சுரைக்காயின் பெயரைச்சொல்லும்
தேனென்ற ராகமுத லெனக்குச் சொல்லும்
தெய்வமாஞ் சோதியெனுந் தெய்வத்துக்கு
பானென்ற பலவிருது பூண்டதேது
பணிகள் செய்யுங் கன்னியுட பேர்·சொல்வீரே. 121

சொன்னமொழி தவறாத சுந்தரமே அய்யா
ஜோதியென்றால் சொல்வதற்கு நாவுமுண்டோ
பன்னாகந் தலையாட்டப் பிறந்தாரீசன்
பாருலகில் மூத்தவளே கன்னியாச்சு
என்னாளு மவரிடத்தி லிருந்த கன்னி
எளிதான சாமரையா ளென்பார் பாரில்
கண்ணான மகுடியடா கண்டுபாரு
கனத்தமால் குடியிருப்பு யென்றுசொல்லே, 122

யென்றுயெந்தன் நூல்பார்த்து வியம்பவேணும்
யெளிதான நாகமது யிரையோனாச்சு
கண்டுவந்த பலவிருதுங் கம்பளமேயாச்சு
கைலைவா வீசனதி லொருவனாச்சு
பண்டுரைத்த சத்தமடா ரீங்காரமாச்க
பாருலகில் சிகாரமடா யெழுத்ததாச்சு
கொண்டுவந்து வைத்தவர்கள் குலதெய்வமாச்சு
கோபாலர் தனக்குமவர் பிள்ளையாமே. 123

பிள்ளையென்ற கல்லுளியின் பெயரைச் சொல்லும்
பிரபலமா யிருக்குகின்ற பெயரைச் சொல்லும்
தள்ளையென்ற தனுவுபல பெயரைச் சொல்லும்
தற்கமிட்டுத் தலையுடைக்கும் வகையைச்சொல்லும்
பிள்ளையென்ற ஆடதுபோற் கூடல்சொல்லும்
புகழ்ந்துவிளை யாடுகின்ற பாட்டுஞ் சொல்லும்
யெல்லையென்றா விருப்பதுவு மெனக்குக்காட்டும்
யியல்ப்ர்க் கண்கண்ட குருவே அய்யா 124

குருவென்று யெந்தனையுங் கேட்கவந்த
குலமகளே புலத்தியனே சொல்லக்கேளு
மருவொன்று மில்லாதான் கல்லுளியனாச்சு
மகத்தான சத்தியடா மடுதலாச்சு
கருவொன்று மில்லைகர்த்தன் வேறேயில்லை
காசினியி லவரவரே தெய்வமப்பா
அருஉருவாய் நின்றவனைத் தியானம் பண்ணி
அவரர்க ளப்பாலே அறிந்துபாரே. 125

அறிந்துபா ரென்றெனக்குச் சொல்லவந்த
அய்யனே யின்னமொன்று அருளக்கேளு
தெரிந்துகொள்ள யெந்தனுக்குச் சொல்லவேணும்
தெய்வநல மாயிரத்தெட் டுரைக்கவேணும்
பிரிந்துமே நின்றதொரு எழுத்துமென்ன
பிசகாமல் நின்றெழுத்து நிறமுமென்ன
பரிந்துமே யெந்தனுக்குப் பகரவேணும்
பரசமைய மாறுக்குள் ளிருந்தநாதா. 126

நாதனா யிரத்தெட்டி லிருந்தநாதன்
நல்வினையுந் தீவினையுங் கண்டநாதன்
வேதமென்ற கடலுக்குள் ளிருந்தமூர்த்தி
வெளிவொளியாம் பரவெளிக்கு ளிருந்தநாதன்
மாதனென்று ஒருவனா யிருந்தனாதன்
மணியான மாசிலா மணிதானப்பா
பாதனென்றால் பாருலகம் படைத்தயீசன்
பண்பான மூலமடா பரிந்துபாரே. 127

பரிந்துபா ரென்று சொன்ன குருவேசாமி
பாருலகில் சதுர்மறைகள் வேறுமுண்டோ
அரிந்துபார் நம்முள்ளே ஐவருண்டானால்
அவர்களல்லால் தெய்வமது வேறுமுண்டோ
பரிந்துமே பார்த்தெனக்குப் பகுத்துச் சொல்லும்
பரமகுரு தேசிகனே யடியாருக்குத்
தெரிந்துமிக நடப்பதற்குத் தெளிவுகாட்டும்
தேசிகனே யென்குருவே தெட்சணாயா. 128

தெச்சனத்தி லிருந்தவர்க்கு வகுத்தாரீசன்
தெரித்த படியுலகுக்குச் சொல்லக்கேளு
பச்சமில்லாப் பேர்களுக்குப் பகரவேண்டாம்
பரியாச மென்றோர்க்குப் பாழ்நரகங்கிட்டும்

அச்சமில்லா ஆயிபதம் பணிந்தபேர்க்கு
அம்புலியைத் தரித்தசிவ னருளேகாணும்
நச்சரவ மணிந்தசிவ னெனக்குச் சொன்னார்
நல்வழி யிதுதானும் நடந்துபாரே. 129

பாருமென்று யெந்தனுக்குப் பகர்ந்தசாமி
பார்கிரந்த மேழுலக்ஷம் பாடினார்யார்
காருமென்று சொல்வதற்கு விபரமென்ன
கைவிட்ட சூத்திரத்தின் விபரமென்ன
சேருமென்ற செந்தமிழ் பேருமென்ன
ஜெகதலத்தில் ரெண்டான விபரமென்ன
ஊருமென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
உண்மையதனை யடியார்க்குக் காட்டுவீரே. 130

காட்டுவீ ரென்றுசொன்ன புலத்தியாகேள்
கருமறைப்பாய்ச் சொல்லவில்லை யிந்த நூலை
பார்த்திடீர் பெருநூலில் பகர் ந்தவார்த்தை
பராபரையா ளங்குசமுந் தொடுகரமுங்கூட
ஆத்திடீ டண்டமதின் வழக்கம்பார்த்து
அப்பரமே சட்டை முனி தற்கம்பார்த்து
காத்திடுவீர் ஞானகுரு பதத்திலேதான்
கனிந்துமிக யிருந்திடுவீர் பனிரெண்டாண்டே. 131

ஆண்டுபனி ரெண்டதுவு மடுத்துக்கார்த்தால்
அப்பவல்லோ அதிசயங்க ளெல்லாங்காணும்
தீண்டாத பேர்களுடன் சொல்லவேண்டாம்
திரிபுரையாள் பூஜையிலே திரமாய்நில்லு
வேண்டாத சீஷர்களைச் சேர்க்க வேண்டாம்
வெளியிலே யென்னூலைக் காட்ட வேண்டாம்
பூண்டாசை கொண்டவர்க்கு யென்னூலீய்ந்தால்
புழுத்துமே சாகவென்றா விந்நூலீயே. 132

ஈயாதே யென்றுசொன்ன குருவேசாமி
யிப்புவியி னியல்புசொன்னேன் சமயமாறும்
காயாதே கனிபழுத்த வாருசொல்லும்
கர்மவினை யானதொரு விபரஞ்சொல்லும்
பெய்யாத சத்தமேக மேழுஞ்சொல்லும்
புகழ்ந்தகரு விகளுடைய விபரமோதும்
மய்யாத மகாதேவர் வாழ்க்கையோதும்
மண்டலத்தில் பிரமமென்ற நிலையைக்காட்டும். 133

காட்டுதற்கு யின்னமொன்று கருதக்கேளு
கர்மவினை யுடனொற்ற கர்த்தன்றாலும்
மாட்டுமே லேறிவரு மார்க்கமென்ன
மங்கையிட பாகம்வைத்த விபரமென்ன
தேட்டிமையா யெந்தனுக்குச் செப்பவேணும்
தெளிவான அறுசமயம் பெயரைச் சொல்லும்
நாட்டிலே கீர்த்திபெற்ற யெம்பிரானே
நன்றாக யெந்தனக்கு நடத்துவீரே. 134

நடத்தவே யின்னமொன்று சொல்லக்கேளு
நற்பணிக ளாபரண நடக்கைசொல்லும்
கடத்தவே காலடியி லிட்டதண்டை
கதித்தவிரல் மோதிரத்தின் பெயரும்சொல்லும்
படைத்தபணம் பொன்வெள்ளி பேர்தானென்ள
பாருலக மதினாலே தளைத்ததேது
அடைத்ததொரு காரியங்க ளார்தானப்பா
ஆதிவஸ்து வேயெனக்கு அருள்செய்வீரே. 135

அறிவிப்பீ ரெனவுரைத்த புலத்தியனே அய்யா
ஆனந்தத் தாண்டவனா ரெனக்குச் சொன்னார்
தெரிவித்த அறுசமயம் தெளிவாய்க்கேளு
தேசத்தில் சமயத்திற் சைவமொன்றும்
மருவிப்பார் மாயனுட சமையமொன்றும்
மகத்தான சமணர்கள் சமயமொன்றும்
பருவிப்பார் மகமதியர் சமயமொன்றே
பலகாலம் நின்றவீர சைவமொன்றே. 136

சமயமென்றால் நால்சமயம் ஆறுமாச்சு
சார்பான பிறச்சமய மெனக்குச்சொல்லும்
அமையமென்ற தெவ்வாறு யெனக்குச்சொல்லும்
அகிலமேல் யெழுமேகப் பெயருஞ்சொல்லும்
தமையனென்ற பெயரெனக்குச் சொல்லவேணும்
தரணிதனி லெங்கேதா னிருந்தாரய்யா
யிமையமென்றா லிகபுரம் யெனக்குச்சொல்லும்
யிருப்பவர்க ளிறந்தவகை யியம்புவீரே. 137

யியம்புமென்று கேட்கவந்த புலத்தியாகேள்
யெதிரேநின் றார்மாரன் தமையனாச்சு
பாம்பணையில் பள்ளிகொண்டோ னொருவனாச்சு
பலபேருங் கொண்டாடு மாரியாச்சு

சாம்பனைய மலைமார்பு தனுவுமாச்சு
கதிர்மின்ன லிடிதூளி ஆழிவையேழும்
சாம்பனையே தொழுதவர்க்குக் கிட்டுமல்லால்
சமயமென்ற பிறசமய மாறுங்கேளே. 138

கேளப்பா புலத்தியனே மகனே அய்யா
கெடியான துர்க்கையடா சக்காதேவி
வேளப்பா யெரித்தசிவ னெனக்குச்சொன்னார்
வேதஅயன் பச்சைமாறி யானாளப்பா
நாளப்பா செயவீர பத்திரனோடு
நலமான சமயமாறு மாச்சுதப்பா
தேளப்பா கொட்டும்விஷம் போலேயானும்
தெளிவாக உங்களுக்குச் சொன்னேன் மைந்தா. 139

மைந்தனே யென்மகனே புலத்தியனே அய்யா
மதிகெட்ட மூடரிடஞ் சொல்லவேண்டாம்
சுந்தரம்போல ஞானவெளி கண்டுநீயும்
சுகம்பெறவே வேணுமென்றால் சொல்லக்கேளு
கந்தனையே என்னாளு மறக்க வேண்டாம்
கழுதையென்ற மூடரிடஞ் சேரவேண்டாம்
அந்தரத்தைக் கைகாட்டும் அசடருக்கு
ஆதிநூல் தற்கமடா யீயவேண்டாம். 140

ஈயாத மூடரிடஞ் சேரவேண்டாம்
யிகபரங் கிட்டாது சொன்னேனப்பா
காயாது கனிபழுத்த வாறுஞ்சொன்னேன்
கனியாகிக் கீழ்விழுந்த வாறுஞ்சொன்னேன்
பேயாத மாரியுட பெயருஞ்சொன்னேன்
புகழ்பெரிய வேளாளன் விபரஞ்சொன்னேன்
ஓயாம லுலகரிடஞ் சொல்லவேண்டாம்
உயர்ந்துநின்ற சதாசிவத்தி னெழுத்தைப்பத்தே. 141

பத்தென்று சொன்னகும்ப முனியே அய்யா
பரமகுரு தேசிகனே சொல்லக்கேளீர்
வித்தென்று சொல்வதற்குப் பெயர்தானேது
விதமான வாசனைக ளறிந்துகூறும்
பத்தென்ற வாசியுடன் கலந்தகாமன்
பயிர்விளைவில் லாவிபரம் பகரவேணும்
முத்தென்ற நவமணிக்கு வித்தே அய்யா
முதல்வனே யென்குருவே சொல்லவேணும். 142

வேணுமென்று கேட்கவந்த மைந்தாகேளு
வேருக்குள் நின்றவனே கர்த்தனப்பா
காணுமென்ற வாசனைகள் கற்பமப்பா
கலந்துநின்ற மாயனடா காணுகாணு
பானுமென்ற பூண்டதிலே விளைவுண்டப்பா
பகர்ந்திட்டேன் வைத்தியத்திற் பாருபாரு
தானுவென்ற வானத்தி லிருந்தவித்து
தரணிதனில் நவமணியா யமர்ந்தவாரே. 143

வானென்ற ஜனங்களுக்கு வானேவித்து
வழிபாடு தெரிந்தவர்க்கும் வானேவித்து
தானென்ற அண்டமதி லவனேவித்து
தரணிதனி லவனாக யிருந்தவித்து
கூனென்ற ஒளியெல்லா மவனேவித்து
கூறுப்ஞ்ச கர்த்தருக்கு மவனேவித்து
பானென்ற பரப்பிரம மவனேயாச்சு
பறையென்ற சத்தமடா விண்மண்ணாச்சே. 144

ஆச்சென்ற பிரணவமே யென்குருவே அய்யா
ஆதியென்ற வேதமதை அறிந்துகூறும்
பேச்சென்ற மூலமதி லிருப்பதாரு
பேரிகைகள் முழக்கமிட விபரஞ்சொல்லும்
காச்சென்ற பாலதிலே வெண்ணெய்யேது
கடைந்தபின்பு மோரான விபரஞ்சொல்லும்
மூச்சென்ற உலகமது தன்னில்வந்த
மூதுரையின் பயனெனக்கு மொழிந்திடீரே. 145

மொழியென்று யெந்தனையுங் கேட்கவந்த
முதற்பிள்ளை யானதொரு புதல்வாகேளு
அரியென்ற யெழுத்ததிலே கலந்ததேது
அப்புவிலே தேயுவது கலந்ததெப்போ
பனியான சொல்லங்கே நின்றதெங்கே
பரசமைய மாறுக்குந் தெய்வமாரு
வழியான தெய்வமெங்கே பிறந்ததெங்கே
வரிசைபெறப் பூஜைசெய்யும் மார்க்கங்காட்டே. 146

காட்டவே குருவருளைக் காட்டவேணும்
கலந்துநின்ற பூரணமே தெய்வமப்பா
மூட்டவே அரியெழுத்துச் சேராவிட்டால்
முழுமூட ரென்றல்லோ மொழிவார்பின்பு

வாட்டமில்லாக் குருவருளே வசனமாச்சு
வண்மைதருந் தேவியடா திரேகஞ்சத்தி
பாட்டடா மொழிந்தபடி விளங்குவாயென்
பாடலைக் குருவென்று பதனம்பண்ணே. 147

பண்ணென்று உலகதனில் விகடப்பேரும்
பாரிந்த நாதாந்தப் பேருஞ்சொன்னீர்
மண்ணென்றும் மரமென்றும் வகுத்தயீசர்
மலைக்குறவர் பூணுகின்ற யிறகின்பேரும்
கண்ணென்று கன்னமிடும் கன்னக்கோலும்
காடுகளைத் தேகட்டும் வலையின்பேரும்
பண்ணென்ற பலமணிகள் பூண்டதேது
பலதொழில்கள் பாடுபட்டுத் திரிவாராரோ. 148

ஆரோவென் றெந்தனைக் கேட்கவந்த
அய்யனே புலத்தியனே சொல்லக்கேளீர்
மாரனென்ற குறவனுட மாயக்கூத்து
மங்களஞ்செய் தன்பான மூவர்தேவி
காரனென்று யிறகதுவே பூண்டயீசன்
காளையின்மே லேறினதைக் காணயோகி
பேரனென்ற குறவனடா பெண்கள் வித்து
பேர்பெரியான் தாய்மாலை பூண்டான்காணே. 149

காணென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
கண்ணுதலே யென்குருவே கருதக்கேளீர்
வீணொன்றும் பேசாமல் விளங்கவேணும்
விதமான வாலையார் மயிகளாரு
கானென்ற வலைக்குள் சிக்குங் கயல்களெல்லாம்
கற்பதரு வானதுவே யென்பதாரு
மானென்ற மான்தனக்குக் கன்னிகுத்தி
மதிமோசஞ் செய்தவகை வகுத்திடீரே. 150

வகுத்திடீ ரென்றுசொன்ன புலத்தியாகேள்
வலையான மாயனடா வலையைவீசி
தகுத்திடவே முடிந்துவைத்தார் தரணிதன்னில்
தனியான மணியல்லோ தேவராச்சு
அகத்திடவே உன்னுள்ளே கருவியப்பா
ஆறுபத்து மாறாறுங் கயர்களாச்சு
பகத்திடவே வலைவீசும் வலையனப்பா
பாரளந்த மாயனென்று பகரலாமே. 151

பகராதே ஒருவருக்கும் இந்தவார்த்தை
பாணனுட வாழ்க்கையது பகரக்கேளு
கதராதே ஊடேயடா தித்தித்தங்கங்
கைப்பிடித்துத் தட்டுதலே கண்ணனாகும்
அதராதே நீண்டதொரு பாணந்தானும்
ஆதியடா சங்கீத மறிந்துபாரு
சிதராதே நின்றதுவுங் கணேசனப்பா
தேசத்தில் கண்ணனுட கூத்திதாச்சே. 152

கூத்தென்ற யெந்தனுக்குக் கூறவந்த
குருபரனே யின்னமுந்தான் கூறக்கேளீர்
மாத்தொன்று மில்லையப்பா மரத்திலேதான்
மாயனின்ற மரமேது வஞ்த்துச்சொல்லும்
பாத்தொன்று மில்லாத யிலையிலேதான்
பத்தினியாள் குடியிருந்த யிலையைக்காட்டும்
சாத்தொன்று மனையிலை யதனைக்காட்டும்
சதுரான மூலமதைச் சொல்லுவீரே. 153

சொல்லென்று யெந்தனையுங் கேட்கவந்த
சொற்பெரிய புலத்தியனே விளம்பக்கேளு
பல்லென்ற பல்விஷங்க ளெல்லாந்தீர்க்கப்
பார்தனிலே பரவேம்பாய்ப் பிறந்தாளத்தான்
கல்லென்ற சிலையாகி மூலமாச்சு
கதித்தயிலை யாணாகுங் கண்டுபாரு
பல்லன்று சேர்த்ததுவே பெண்ணதாகும்
பருமூல மாயிருந்த பரனைப்போற்றே. 154

போற்றவே யின்னமொன்று கேளுகேளு
பொருமையுள்ள ஆலயத்தில் மனுக்கள்சூழ்ந்து
சாற்றவே கைதட்டிச் சேவைசெய்யும்
தாட்டிமையை யின்னதென்று காட்டவேணும்
காத்தவே கனிவைத்து யெடுப்பதேது
கனியிதற்கு ஏறுசுவையுங் காட்டவேணும்
பூத்தவே புதுமைகளைச் சொல்லவேணும்
புதுமையுள்ள கனியின்பேர் புகழ்ந்திடீரே. 155

கனியான கனியல்லோ வசியஞ்சித்தி
காசினியோர் மனக்காட்சி கையைத்தட்டல்
பிணியான பிணியதுவுந் தீரவப்பா
பேயான மனக்கவடு திறமதப்பா

மணியான வித்தல்லோ சிகரமாச்சு
மந்திரத்தால் நின்றதடா அகாரமாச்சு
அனியான சடாட்சரமோ டாறுமைந்துந்
தயாசத்தி யிலுமிச்சம் பழமுமாச்சே. 156

பழமான பழமதிலே விதைதானாரு
பதியிருந்த மூலமதில் தெய்வமாரு
கழமான நிஷ்களத்தில் தெய்வமாரு
கலந்துநின்ற நிணங்களின் பெயரைச்சொல்லும்
சழமான சாகரஞ்சம் சாரமாரு
சஞ்சலத்தை யூடருத்த தீபமாரு
தலமான தலந்தனிலே சமுசாரஞ்செய்யும்
சட்டமதை யின்னதென்று சாற்றுவீரே. 157

சாத்தவே யின்னமொன்று சொல்லக்கேளீர்
சதுரான ஐம்பூதம் அதுக்குண்டாமோ
மாத்தவே கருவிகளு மதுக்குண்டாமோ
மறைநான்கு மோதுகின்ற மனைவியாமோ
பாத்தவே ரகலுமடா வேறேஞானம்
பராபரையாள் தனக்குமது பணிகளாமோ
ஆத்தவே னாருமன மதுக்குண்டாமோ
ஐந்தெழுத்து மூன்றெழுத்து மதுக்குள் காட்டும். 158

காட்டுமென்று யெந்தனையுங் கேட்கவந்த
காதல்கொண்ட புலத்தியனே சொல்லக்கேளீர்
மாட்டுமே வேறுமந்த யீசன்சொன்னார்
மறைநான்கு மதில்நரம்பு மாகும்பாரு
யேட்டெழுத்து யென்றுசொன்ன வாருதானும்
இலுமிச்சம் பழந்தனக்குச் சொல்லுவார்கள்
பாட்டிலே பலவிதமாய்ச் சொல்லுவார்கள்
பழிகாரப் படுகுழியில் தள்வார்காணே. 159

காணவே தேவிதனைக் காண வேணும்
கதிர்சாய்கை மதிசாய்கை யறியவேணும்
பூணவே வன்னிநிறை பூணவேணும்
புதுமையுள்ள வேதாந்தங் கற்கவேணும்
பேணவே பெண்டீரைத் தள்ளவேணும்
பேசுகிற மந்திரத்தைக் காணவேணும்
மானமில்லார்க் கென்னூலைக் காட்டவேண்டாம்
மரியாதை யில்லார்தன் னுறவைத்தள்ளே. 160

தள்ளென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
தாணுவே யென்குருவே போற்றிபோற்றி
தள்ளென்று சொல்லவந்த பெயர்தானென்ன
கள்குடிக்கு மாந்தரவர் பெயருமென்ன
நில்லென்ற மரமேது மரத்தின்பேரும்
நிலவரமாய்ப் பூச்சிவும் சாணான்பேரும்
தள்ளென்று தள்ளுகின்ற தள்ளுவானும்
சாதிக்கும் பலதிற்கும் பகருவீரே. 161

பகருமென்று யெந்தனையே கேட்கவந்த
பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
மகரமென்ற கொடியிருக்கு மாரன்கள்ளு
மரமேறுஞ் சாணானே மந்திமந்தி
அகரமென்ற எழுத்தாலே அதட்டலாச்சு
அவனடிக்கு மடியல்லோ வாயுமாச்சு
சிகரமென்ற கோபுரத்தி லாடுமந்தி
சிகரமடா அகரமுதல் தெளிந்துகாணே. 162

தெளிவான லிங்கத்துள் ளிருந்தவல்லி
தேசத்தில் விசமதிகள் கவர்ந்ததேது
பழிபாவந் தீர்க்கவந்த பறையின்மூலம்
பாரிலே யிதுவிபரம் பகரவேணும்
வழியறிந்து நடந்துகா ணேன்காணாத
வலக்காடு காத்தவயி ரவனார்பெயரும்
சலியாமற் குமித்தபோர் விதையாரய்யா
சச்சிதா னந்தவெள்ளச் சாமிநாதா. 163

வெள்ளமென்ற பேரின்பங் கற்றபேர்க்கு
மேலான புலத்தியனே விளம்பக்கேளு
கள்ளமென்ற மாரனுட அடிமூலமப்பா
காலகண்டி நீலியவ ளிருந்தாளப்பா
மெள்ளவே வழிமறித்தான் கணேசனாகி
மேலான மசானமடா ருத்திரன்காவல்
அல்லல்வினை தீர்க்கவல்லோ அய்யர்தாமும்
ஆதிவித்து விளைவாகி யிருந்தார்காணே. 164

காணவே யென்குருவே கருதக்கேளீர்
கைபார்க்கும் பண்டிதனார் கயர்தானாரு
பூணவே நால்வாசல் வீடாருக்கு
புதுமையுள்ள வாசல்நா லிருந்தோராரு

தோணவே அவர்களுட வாசல்தன்னில்
தொழில்செய்யுந் தொழிலாளி நால்வராரு
நாணவே யவர்தனக்கு வெட்கமேது
நாணயத்தில் தோற்றமெது கேட்கச்சொல்லும். 165

கேளென்று கேட்கவந்த புலத்தியாகேள்
கெம்பீர மானதொரு யீசனாரும்
களிப்பாகச் சொன்னதொரு வைத்தியமப்பா
கட்டிநின்ற பாசமடா கயரதாகும்
பழிப்பான நால்வாசல் வீட்டுப்பேரும்
பரையான வேதமடா பரிந்துபாரு
வழிபாடு கண்டறிந்தா லவனேவேதம்
வகையான வீடல்லோ பேதனமாச்சே. 166

பேதனத்தி னெழுத்தல்லோ பேசக்கேளு
பேர்பெறவே யெட்டெழுத்து மெட்டுங்கூடி
பேதனத்தால் வலம்புரியாய்ச் சுத்தியல்லோ
பெருமையுள்ள கயராச்சு பேசக்கேளு
பேதனத்தாற் கெலிப்புடனே தோப்புமாச்சு
பேசரிய நிறமல்லோ பேசக்கேளு
பேதனத்தால் நாலுமொன்று ஐந்துமாச்சு
பேசுகிறேன் சொல்கேட்டால் நன்றுபேசே. 167

பேசவந்த யென்குருவே சாமிநாதா
பேரின்பங் கற்றவர்க்கு வேணுமோசொல்
வாசவனுங் கேசவனு மதிலேயுண்டோ
வானமென்ற ஐந்துவர்ண மதிலேயுண்டோ
பாசமெனும் பரப்பிர்ம மதிலேயுண்டோ
பலநாளு மாடுகிற தெளிவுமுண்டோ
மோசமென்ற தொழிலதுவு மதிலேயுண்டோ
மெய்குழலார் தன்மாய்கை யுண்டோசொல்லே. 168

சொல்லென்று யெந்தனையே கேட்கவந்த
சொற்பெரிய புலத்தியனே கேளுகேளு
கல்லென்ற சத்தமடா அதிலேயுண்டு
காமியென்ற பெண்ணுமடா அதிலேயுண்டு
பல்லென்ற பலபாஷை யதிலேயுண்டு
பழிகார ராடுகின்ற ஆட்டம்பாரு
வில்லென்ற வேலவனா ராடுமாட்டம்
வேதாந்திக் கும்பிறமை தீர்க்கும்பாரே. 169

பராபரமே யென்குருவே பணியக்கேளு
பார்த்தநிலை சதுரங்கம் வந்ததேது
சராசரமாய்ச் சதுர்மாத ரிருப்பதேது
சகடையுடன் காலாளும் வந்ததேது
நிராமயமாய் நின்றவன்போற் காயுமேது
நிதியான யானையுடன் குதிரையேது
தராதரமாய் பாதாளம் வகுப்பதேது
தனித்தனியா யெந்தனுக்கு உரைசொல்வீரே. 170

சொல்லுவீ ரென்றுசொன்ன பிள்ளாய்கேளு
சொற்பெரிய சதுரங்க விபரந்தன்னை
நல்லுறவா யாடுகின்ற தொழிலைக்கேளு
நமனொருதன் நாராயண னொருத்தனப்பா
வெல்லுவதற்குச் சதுரங்கம் சேனையப்பா
வேதனுடன் ருத்திரனு மயேஷனாச்சு
அல்லுறவே அறுபத்து நாலுசித்தும்
ஆடுகிற தொழிலாளி யாடுவானே. 171

ஆடவே திருக்கூத்து ஆடவேணும்
அம்பலத்தி லகமடக்கி நிற்கவேணும்
பாடவே பராபரையைப் பாடவேணும்
பத்தியுட னொருமலரைக் கொய்யவேணும்
நாடவே சிவன்பதத்தை நாடவேணும்
நன்மையுட னோர்மனதாய்க் கூடவேணும்
கூடவே குருபதத்தைக் கூடவேணும்
குருவினட அருளாலே காணுவாயே. 172

காணுமென்று யெந்தனுக்குச் சொல்லிவந்த
கண்ணுதலே யென்குருவே சொல்லக்கேளு
தோணுமென்று தோணுகிற தோற்றஞ்சொல்லும்
தொல்புவியிற் பருவமென்ற மார்க்கஞ்சொல்லும்
ஆணென்றும் பெண்ணென்றும் திரிவதேது
ஆகாசத் தன்னிலவர் வாழ்வதேது
பூணுமென்று பூணாரந் தன்னிலாரு
புருஷனென்றும் பெண்டென்ற புதுமைகாட்டே. 173

காட்டுமென்று யெந்தனைக் கேட்கவந்த
கருத்துள்ள புலத்தியனே சொல்லக்கேளு
நாட்டுமென்று நாட்டிவைத்த உலகுதன்னில்
நல்வினைக்குந் தீவினைக்கு மவரேயாவார்

பூட்டென்றுந் தாயவளு மவரேயாவார்
புகழான சற்குருவு மவரேயாவார்
பாட்டென்றும் படிப்பென்று மவரேயாவார்
பரியாசம் போலல்லோ பகர்ந்தேன்பாரே. 174

பாரப்பா யின்னமொன்று பகரக்கேளு
பராபரைக்கு உறக்கமில்லை பசியுமில்லை
ஆரப்பா யென்னூல்போற் சொல்லப்போறார்
அய்யருக்கு மப்படியே யாகும்பாரு
காரப்பா குருவருளாற் காணவேணும்
கருத்தாலே காண்பதல்லால் காணப்போமோ
சாரப்பா ஆசானைச் சார்ந்துகாரு
சார்ந்திட்டு யெந்தனுக்குச் சொல்லுவீரே. 175

சொல்லவே வெகுவாகச் சொல்லவந்தீர்
சொற்பெரிய தாபரத்தில் பெரிதுசொல்லும்
வல்லார்க்கு வல்லவனா யிருந்ததாரு
வடிவான பெண்மாய்கை மயக்கங்காட்டும்
அல்லவர்க்குத் தெய்வமென்று யிருந்தபின்பு
யாவருக்கும் வெவ்வேறாய்ப் பிரிந்ததேது
பல்லவர்கள் பலவிமாய்த் தியானமேது
பலபாஷை பதினெட்டும் வந்ததேதே 176

வந்தவித மின்னதென்று புகலக்கேளு
வல்லவனா யிருந்தசதா சிவனுமப்பா
விந்தமதிற் பள்ளிகொண்டான் தன்னாலப்பா
விதமான மாய்கையடா விரும்பிப்பாரு
அந்தமுள்ள ஆணாக யிருந்தயீசன்
அருமையுள்ள பெண்மாலா யிருந்தாரப்பா
சந்தமுடன் தாபரமா மரசுவேம்புந்
தனித்தனியே நின்றாக்காற் றர்மமில்லை. 177

தருமமல்ல வென்றுரைத்த தாணுவேகேள்
தாரணியிற் காவியென்ற வஸ்திரமாரு
கருமமெல்லாந் தீர்த்தசிவ மாலையாரு
கருத்துடனே சந்தனங்கள் புஷ்பமென்ன
வருமமெல்லா மதில்வயித்திய மார்க்கமென்ன
வாலைசன்னி யாசமென்றால் நிற்காதென்ன
நிருமலம தாய்நிறைந்து திரிவதென்ன
நீதியுட னெந்தனுக்கு நிறைசொல்வீரே. 178

சொல்லுவீ ரென்றுமென்னைக் கேட்கவந்த
சுந்தரமே சொல்லுகிறேன் கேளுகேளு
அல்லலற நின்றதொரு ஆத்தாளப்பா
அம்பலத்தான் தனக்கீய்ந்தான் பாருபாரு
கல்லுறவே கற்பதற்குக் கையில்மாலை
காளகண்டன் கண்டமடா கண்டுபாரு
சொல்லுறவே சொல்வதற்குச் சோதியான
சொற்பெரிய சந்தனமு மானாள்பாரே. 179

பாரேநீ யென்றுசொன்ன குருவேஅய்யா
பகருவே னின்னமுந்தான் பகரக்கேளும்
ஆரென்ன கேட்டாலும் மவர் தானென்றீர்
ஐந்தெழுத்து மெட்டெழுத்து மவர்தானாமோ
பாரேநீ சொன்னதெல்லாம் பகுந்துபாரு
பராபரையா ளென்னாச்சி யிருந்தமார்க்கம்
சேரேநீ யென்றுசொன்னீர் சேர்த்துப்பார்த்தால்
ஜெகசாலக் கூத்தாக யிருந்தாளாத்தாள். 180

ஆத்தாளைப் பூஜைபண்ண விபரஞ்சொல்லும்
அம்பலத்தான் தனைக்காண மார்க்கஞ் சொல்லும்
பார்த்தாலோ சிறுபெண்ணா ளென்றுசொன்னீர்
பக்குவத்தை யின்னதென்று பகரவேணும்
சேர்த்தாலோ சிவனுமையுஞ் சேர்க்கச்சொன்னீர்
ஜெகமாய்கை யென்றதெல்லாந் தள்ளச்சொன்னீர்
பார்த்தாலோ முப்புரத்தைத் தீயதாகப்
பார்க்கவதை யின்னதென்று வசனிப்பீரே. 181

வசனிக்க வேணுமென்று கேட்கவந்த
வணக்கமுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
வசனித்த சத்தமெல்லாம் வாயுவாச்சு
வழிகாணாக் கோபமெல்லா மக்கினியேயாச்சு
வசனித்த அப்பல்லோ கெருவமாச்சு
வணங்கிநின்ற தொழிலெல்லாம் பிருதிவாச்சு
வசனித்த ஆகாச மழகுமாச்சு
வழிமுன்னே சொன்னதற்கு விபரங்காணே. 182

காணென்று சொல்லவந்த சாமிநாதா
காரணமாஞ் சற்குருவே அய்யாஅய்யா
ஊணென்று முறக்கமென்றுஞ் சொல்வதென்ன
உண்மைகுடி தெய்வமென்று உரைப்பதென்ன

மானென்ற விழியாளைப் பிடித்தாலையா
மந்தைதனி லேவைத்துப் பார்ப்பதென்ன
வேனென்ற மதன்கல்வி யதுக்குமுண்டோ
வேதியன்போ லோதும்பூ சாரியாரே. 183

பூசாரி யாரென்று கேட்கவந்த
புலத்தியனே யென்மகனே புகலக்கேளு
ஆசாரி யாசையல்லோ அவளுமாச்சு
அம்மையுட புத்திரனு மவனுமாச்சு
பேசாரி நின்றவளு மகளுமாச்சு
பேசுகின்ற ஊணுறக்கம் உறவுமாச்சு
வாசாரி வழக்குரைத்தா னொருவனென்று
வழியறியா மூடர்களு மயங்குவார்கள்
காசாரி விழுந்துதென்றால் கண்ணிற்காணுங்
கழுதைக்குர லோசைகாதிற் கேட்கும்பாரே. 184

கேளப்பா யிதுகளெல்லா முலகுதன்னில்
கேள்வியில்லை வியாசரவர் கட்டிப்போட்டார்
நாளப்பா கழியாமற் பிறந்துமாய்ந்தார்
நல்வழியைத் தேடாமல் நரகில்வீழ்ந்தார்
பாளப்பா பருமலரைக் கொய்துவந்து
பராபரத்துப் பாவைதனைப் பணிந்துபின்னும்
வாளப்பா யிரைதேடித் திரிந்தாப்போல
வாழ்வேந்தர் கன்னியடா மந்தைகாணே. 185

மந்தையிலே ஆட்டிவைத்த பூசாரிதானும்
மதிகெட்டா னவன்தானு மொன்றுங்காணான்
சந்தையிலே கண்டவன்போற் பேசுவான்பார்
சாட்சிவைத்துப் பேசுவதற்குச் சலிக்கமாட்டான்
தந்த்ததா யானாலுந் தள்ளமாட்டான்
தற்கமிட்டுத் தலையசைத்து விழிமிரட்டி
விந்தையாய் வெண்ணீறை யீவானப்பா
வீம்பான மூடரவர் அனாதிதானே. 186

அனாதி யாயிருந்த யீசர்தானும்
அம்பிகையாள் தனைப்பார்த்துப் பறைச்சி யென்றார்
அனாதியாய் நிற்பரை யுலகுதன்னில்
ஆச்சியா மிவர்தனக்குப் பிறந்தாள்காமி

அனாதியாய்ப் பலதொழிலா யிருந்தபேர்க்கு
பதவியென்ற மூலமதா யிருந்தாள் கன்னி
சேனாதி சேனைபடை யெடுத்தமாதா
ஜெகசாலக் கூத்தாக யிருந்தாள்நீலி. 187

நீலியென்ற கன்னியடா காட்டிற்தெய்வம்
நிமலனார் புதல்வனடா ஐயனாரு
காளியென்ற துற்கையுட னையன்கூடிக்
கன்னிகையாள் மாரியாய்ப் பிறந்தாரப்பா
கூளியென்ற குறைத்தலைப் பேய்களெல்லாம்
கூட்டுறவாய்க் கூட்டியே உலகுதன்னிற்
பேளியென்ற மார்க்கமதைப் படைத்துவைத்துப்
பிரபலத்தைக் காட்டிவைத்தார் பிரமந்தானே. 188

பிரமமுனி தவத்தாலே உலகுதன்னில்
பிரபலமாய் நின்றார்கள் பெரியோரப்பா
கர்மவினை தீரவல்லோ கைலைநாதர்
காசினியிற் சித்தம்பலம் படைத்தாரீசன்
வர்மமதைச் சாதித்துக் கமலநாதர்
வழிபாடு தெரியாமல் மார்க்கங்காட்டி
தர்மமே தெரியாத தருதலைகள்
தலைகீழாய் வேதமதைப் படைத்தாரய்யா. 189

அய்யாவே யென்மகனே சொல்லக்கேளு
அறுசமைய மாடுகள்தா னடங்கப்போமோ
மெய்யாகச் சொல்லுகிறேன் வேதமப்பா
மெய்காணாக் குருடரைப்போல் விளம்புவார்கள்
கய்யாரைச் செய்கின்ற கருமங்காணார்
காசினியில் வல்லவர்கள் கலங்குவார்கள்
மய்யாடுங் கன்னியர்தன் னுறவினாலே
மதிமோச மாகியல்லோ மயங்குவாரே. 190

வாரான உலகதனில் மயக்கமாக
வழிகாட்டும் வண்டருட வுறவுதள்ளு
தாரான அண்டத்திற் தாயைப்போலே
தாய்கிட்டு மென்றுரைத்த தருதலையைத்தள்ளு
பேரான பேய்தெய்வ மென்றுசொல்வார்
பேய்பிடித்த ஆண்டியுட பெருமைகாணார்
சீரான தற்கநூல் சொன்னேன்யானும்
சிறப்பாகு முலகத்தின் வாழ்க்கைதானே. 191

வாழ்க்கையடா தேவர்முனி வருக்குமுண்டு
    வழிகாணா மூடருக்கு யில்லையப்பா
கேழ்கையிலே கிழவனா யிருந்தாரப்பா
    கேள்விகொண்டு வத்தார்பின் குமரனானார்
வாழ்க்கையிலே பலதெய்வ முண்டுபாரு
    வழிகண்டா ரெல்லோர்க்குந் தெய்வமில்லை
கேழ்க்கையிலே வேளாளன் கிளையைநாட்டி
    கெம்பீர மாயிபதம் தொழுதான்பாரே. 192

தொழுதல்லோ வேப்பிலையில் காப்புக்கட்டித்
    தோத்திரமும் பூஜையது செய்தபேர்க்கு
பழுதொன்றும் வாராம லிருந்துகார்த்தாள்
    பராபரைக்கு முகந்தபிள்ளை யவன் தானப்பா
மழுவெடுக்க மனந்துணிந்து யிருந்தானப்பா
    மாடுமேய்க்கப் போனிடத்தே மகிழ்ந்துகண்டான்
தழுகெடுத்த பளிங்கிமலைச் சார்புதன்னில்
    தாயாரைக் கண்டெடுத்துப் போற்றிசெய்தான். 193

செய்யவே வேம்படியி லிருந்தாளாத்தாள்
    சிறுபிள்ளை யவன்வீட்டு வேலைக்காரி
பையவே நோய்பிடித்து வந்தபேர்க்குப்
    பச்சிலையும் வெண்ணீறுங் கொடுக்கச் சொன்னாள்
கொய்யவே வந்தநோ யெல்லாந்தீர்த்து
    நோன்புபல விரதங்க ளெல்லாஞ் சொன்னாள்
மையாடுங் கன்னியின்மேல் வருவேனென்றாள்
    மதியமக்க மாகவல்லோ திரிகுவாளே. 194

குலவையிட்டுக் கூக்குரலுஞ் சத்தத்தோடே
    கூசாம லில்லறத்திற் பூஜைகொண்டு
அலகையென்ற பேய்களுக்குக் கொடுத்தபின்னும்
    அம்புகுறி கும்பத்தி லடங்குவேனென்றாள்
அலைகையென்ற பூதகணந் தன்ளைச்சேர்த்து
    மானிலத்திற் தெய்வமென்று திரிந்திட்டாள்பார்
பலகையென்ற மேருவதை யவனுக்கீய்ந்து
    பலகாலம் பூசிக்கப் பூரித்தாள்பாரே. 195

பாரப்பா பத்திரங்கள் சாத்திப்பின்பு
    பணியிடைகள் செய்ததற்குப் பலனைக் கேட்டாள்
காரப்பா குருவருளால் சித்துடுக்கீய்ந்து
    கனிசொல்லப் பொற்பிரம்பு யீய்ந்தாளாத்தாள்

ஆரப்பா அவள்சடைதான் பிரம்புமாச்சு
அண்டபிண்ட முஞ்சேர்த்து உடுக்குமாச்சு
சேரப்பா யீசன்மால் சக்கரத்தைக்கூடச்
சேர்த்தபின்பு திரிபுரையா ளுடுக்குமாச்சே. 196

மாச்சப்பா சக்கரத்தை அதனிற்சேரு
மைந்தனே மண்ணடங்காச் சத்தங்காணும்
மூச்சப்பா கொள்வதன்முன் குபேரன் தன்னை
முகமான மேல்தட்டு தன்னில்வைத்து
பாச்சப்பா னாகமென்ற கயருகொண்டு
பஞ்சகர்த்தா ளைவருமே யிடைவாறாக
காச்சப்பா கண்ணனுடன் ருத்திரன்கூட
கைலைமலை பெற்றானைக் கலந்துகொள்ளே. 197

கலந்தபின்பு காராளன் கையுடுக்குமாச்சு
கதிரடித்தா லேயளக்கும் படியுமாச்சு
அளந்தபின்பு அவன்கையி லிருந்திட்டாக்கால்
அண்டபகி ரண்ட மெல்லா மனக்கும்பாரு
சலந்தனிலே ஈப்புகுந்தால் நீஞ்சுமோசொல்
சஞ்சலங்க ளூடருத்த சமையமாறும்
பலந்தனிலே யிதுபலனைக் காணவேணும்
பாக்கியம்வேண் டாதார்க்குப் பரமஞானம். 198

ஞானவான் தனக்குமவள் தெய்வமானாள்
நானிலத்தைக் கார்க்கவல்லோ மாரியானாள்
வானவட வாக்கினிக்கு நின்றசக்தி
வழிமறிந்த வழிகாட்டிப் பூஜைவாங்க
தானமென்ற தானமெல்லா மிருந்தகன்னி
தையலற்குக் தையலா யிருந்தாளாத்தாள்
கோணமென்ற கோணமெட்டி லிருந்தகன்னி
கோதையரைக் காணாத கொடுமைதானே. 199

கொடுமையென்று சொல்லிவந்த குருவேஅய்யா
கோதையென்ற கன்னியர்க ளெழுவராரு
அடுமையயென்ற பேர்படைத்துத் திரிவதாரு
ஐவரென்ற ராசாக்கள் தனக்குமுன்னே
படுலரென்ற பட்டவர்த்த னர்களாரு
பாரதத்தில் மாண்டதுவாய்ச் சொல்வதேது
நடுவிருந்த தெய்வமென்று சொல்வதாரு
நல்லபதம் பெற்றஐவர் தெய்வமாமோ. 200

தெய்வமென்று கேட்கவந்த புலத்தியாகேள்
தேவியென்ற மனோன்மணியாள் சிருஷ்டிப்பாலே
தெய்வகன்னி யெழுபேரும் பிறந்தார் பாரு
தேசத்தில் சத்தமாத ரென்றுபேரு
அவமென்ற அவையடக்கந் தன்னால்மைந்தா
அவரவற்குத் தெய்வமா யிருந்தாளாத்தாள்
கலமென்ற காளிகண் ணாடிமலையாச்சு
கதிர்சாய்கை மதிசாய்கை ரெண்டுமங்கே
தவமென்ற தவத்தாலே காணவேணும்
தாயைவிட வேறுமுண்டோ தவத்தோருக்கே. 201

தவத்தாலே பெரியோர்கள் தாயைக்கண்டார்
தனியான கன்னியர்கள் ஏழுபேரும்
அவத்தாலே அவரவர்க ளுலகுதன்னில்
ஆரணியந் தோருமே அலைந்தாரப்பா
தவத்தாலே கண்டவர்கள் கோடாகோடி
தனியான லாடர்தன் முனிவன்தானும்
தவத்தாலே சகலசித்தி முடிக்கவென்று
தங்கைமா ரெழுவருட னிருந்தார்காணே. 202

யிருந்தார்க ளவரவர்க ளொருசமையமாக
யிருளறுக்குந் தெய்வமென்று யிருக்கத்தானும்
மறந்தார்க ளைவருமே போனபின்பு
மதிகெட்ட மூடரவர் மாண்டபேரை
யிறந்தவர்கள் வந்தார்க ளென்று சொல்லி
யிரவுபகல் கொண்டாடிக் குலவையிட்டு
பறந்தவர்கள் பலகாலம் பறக்கமாட்டார்
பாடுவழி வந்தபின்பு பார்ப்பாரய்யா 203

பார்க்கவே பகவதியா யிருந்தாள்பாரு
பாசமய மாறுக்குள் ளிருந்தவல்லி
ஆர்க்கவே ஆதார மானாளாத்தாள்
ஐம்பூத மதிலுறவா யிருந்தாள்பாரு
மார்க்கமதை யின்னதென்று சொல்லப்போமோ
மணிநாகம் போலேயல்லோ மகிழ்ந்தகன்னி
தீர்க்கமதை யின்னதென்று செப்பக் கேளுந்
திரோதாயி கூத்தெல்லாஞ் செப்புவோமே. 204

செப்பவே ஜெகசால மிதுவேயாச்சு
செய்யவே அயோத்தி தன்னிலப்பா
கற்பழியா மாதர்கள் மெத்தவுண்டு
கைலைநக ரென்பதுவு மதுவேயாச்சு
எப்பாரு மில்லாத கன்னியோர்கள்
ஒகோகோ அவர்களெல்லாம் உலகுதன்னில்
மெய்ப்பாக ருத்திரனா ரம்சமாக
மேலான பதவியிலே நின்றார்பாரே. 205

நிற்கவே அம்பலத்தில் நடனங்காண
நிலவரையிற் பதுங்கியல்லோ நின்றாரப்பா
தக்கவே ருத்திரனார் பார்த்துப்பின்னும்
யாண்டவனா ருத்திரராய் நின்றாரப்பா
மெய்க்கவே கன்னியர்க ளேழுபேரும்
மேலான பதவிவிட்டு விண்ணுக்குள்ளே
வேர்க்கவே திரிந்தார்கள் வெளியிலேதான்
வேதனெனும் பிரமனுக்குச் சிவன் சொன்னாரே. 206

சிவன்சொன்ன மார்க்கமதைச் சொல்லக்கேளு
சிறுகன்னி யெழுபேரும் ஜெகத்தின்மீதில்
அவர்சொன்னார் பேய்போலே திரியவென்று
அருள் செய்த படியாலே தேவிகூடல்
திவனென்ற தெர்ப்பையதைக் கையிலேந்தி
திலகமிட்டு நாடுதனிற் திரிந்தார்பாரு
பவனென்ற செம்படவன் வீட்டிலாத்தாள்
பழிவாங்க வெனப்பிறந்தா ளென்தாய்தானே. 207

தாயான தாய்வந்து பிறந்தபோது
தைலயவர்க ளெழுபேரும் பிறந்தாரப்பா
மாயான மயானருத் திரன்பிறந்தான்
மானிலத்தில் மீனவனை செபிக்கவென்று
பாரான பூமியது குலுங்காமறகார்த்த
பாலகரெட் டுப்பேரும் பணிசெய்தார்கள்
காயாமற் பழம்பழுத்த கரியமாலும்
காரணிக்குக் குறிசொல்லக் குழந்தையானார். 208

குறிசொல்லக் குழந்தையென்று வந்தமாயன்
கூசாம லவன்மடியி லிருந்தபின்னும்
அரியென்ற யெழுத்தறியான் வல்லான்தன்னை
அம்மையடா கொண்டுபின் முறத்தில்வைத்தாள்

குறியென்ற நகக்குறியால் வயற்றைக்கீறி
குடல்பிடுங்கி மாலையிட்டாள் குமரியப்பா
பிரபலமாய் ரெண்டாக வகுந்துசேர்த்து
பேசரியப் பப்பையதாய்ச் செய்தாள்பாரே. 209

சேத்ததொரு பப்பையடா யிடம்பையாக
ஜெகசால உலகமெல்லாந் திடுக்கென்றென்ன
காத்ததொரு மூக்கனாங் கயரதாகக்
கரியமா லுந்தியடா பிரமமென்னு
யேத்ததொரு அடிக்கொம்பு ருத்திரனப்பா
யெதிர்காண வளையம்நால் யெதிரிக்கட்டை
பார்த்ததை யானறிந்து உனக்குச்சொன்னேன்
பண்பான மலைமகள் தன் கூத்துத்தானே. 210

தானென்ற கூத்தாலே யெல்லாமாச்சு
தரணியிலே தாய்சமயம் பெரிதுமாச்சு
ஊணென்று முறவென்று மிவர்கள்கூட்டம்
உத்தபந்தி யிருபத்தி ஒன்றுமாச்சு
தேனென்ற செம்படத்தி வேடம்பூண்டு
தெருவிலே வந்தல்லோ திரிந்தாள்பாரு
மானென்ற நாகமதைத் தரித்தயீசன்
மாசற்ற பிரமமென்று யிருந்தார்பாரே. 211

பார்க்கவே அவள்பூண்ட வேடந்தானும்
பழிகாரி போலேயவள் திரிந்துபின்னும்
மார்க்கமதைக் காணாத மூடர்தானும்
மாலையனூ ரெல்லையிலே பிறந்தாளென்பார்
ஆர்க்கவே அவதரித்தா ளந்தஊரில்
ஐந்துனாள் போனபின்பு சுருதியானாள்
ஏர்க்கவே பேர்படைத்து அசுரர்தன்னை
யிடரவே பிரமைகொண்டு யிருந்தார்பாரே. 212

யிருந்தயிட மவனூரை மசானமாக்கி
யேகாந்த ரூபமதைப் படைத்துப் பின்னும்
அருந்தவத்தோ ரமுர்தமது கடையும்போது
அரனாரு மமுர் தமென்று விஷத்தையுண்டார்
பொருந்தவே விஷமுண்ட யீசனாரும்
பெலியிரந்து வுண்டகூத்து யிதுதானப்பா
வருந்தவே வந்தவகை யெல்லாஞ்சொன்னேன்
வழிகாணா மூடருக்குச் சொல்ல வேண்டாம். 213

வேண்டாத நஞ்சுண்ட ருத்திரன்தானும்
வேதனுட சிரசறுத்த குருநாதன்றான்
தாண்டவியாள் தனைப்பெற்ற அயோத்திவிட்டு
தக்கனைப்போற் சூரனைத்தான் வதைத்தமார்க்கம்
ஆண்டவனா ராடியதோர் கூத்திலப்பா
அங்கையெனுந் திரிசூலி யானாள்பாரு
வேண்டியதே தபோதனர்கள் வந்துபோற்ற
வேதியர்கள் வேதமெல்லா மவளானாளே. 214

வேதமென்ற மனோன்மணியா ளவரைக்கொண்டு
மேலானஆரூரில் தவத்தைச் செய்து
பாதமென்ற யிடபாகப் பேருபெற்று
பதிவான காஞ்சியிலே பரனாருக்காய்
பேதமையாய் வாழைப்பந் தலிலேவந்து
பெரியதவஞ் செய்தல்லோ யிருந்தவல்லி
பாதமூர்த்தி பரமனுக்குத் தேவியானாள்
பச்சைவல்லி யென்றவளைப் பகரலாமே. 215

பகரலா மென்றுசொன்ன குருவே அய்யா
பரசமையா மாறதனில் நின்றரூபி
மணிமணியாய் நினறவல்லி யவளைக்காண
மணியான மணியாட்டம் வந்ததேது
கனியான ராசிபனி ரெண்டுமேது
கதிர்காணா அலகைபல போதானேது
துணியான கந்தையது வந்ததேது
துணிந்துபல பெலிகளது கொடுப்பதேதோ. 216

ஏதென்று கேட்பதற்கு யின்னங்கேளு
யெளிதான யெல்லம்மை யென்பதாரு
வாதென்ற அவள்நீலி காளியாரு
வழிமறித்துப் பூஜைகொள்ளும் பகவதியுமாரு
மாதென்று பூமியிலே மல்லாரிகொட்டு
மாரியென்ற வாசலிலே நிற்பதாரு
காதென்று மூக்கென்று மிருப்பதென்ன
களரிசெய்து பூஜைபோட்டுச் சொல்வதேதோ. 217

போடுவது யென்னவென்று கேட்கவந்த
புலத்தியனே சொல்லுகிறேன் கேளுகேளு
ஆடுகின்ற மணியாட்டம்மருரமேயாச்சு
அதைச்சேர்ந்த விபரமென்ன மரையக்கேளு

நாடுகின்ற ராசியடா செய்குறிகளாச்சு
நல்லதுணி கந்தையுடா வேதமாச்சு
போடுகின்ற பெலியல்லோ பெருமையாச்சு
போக்கறியார் மூலமென்று புகழுவாரே. 218

மூலமென்ற திதுமூல மல்லகண்டாய்
முக்கண்ணி யுடகூத்து முனிவராட்டு
காலமென்றா லதிகாலம் பூஜைவேணும்
கன்னியென்ற யெழுவருவே பரசமையாச்சு
ஆலமுண்ட கண்டரிட மொருத்தியாச்சு
ஆதியவ னிரணியனைக் கொன்றபோது
தாலமென்ற ஜெகந்தனிலே யுதிரபெலிவாங்கத்
தாயார் தன் வாசலிலே நின்றான்பாரே. 219

யெதிரான அவதாரந் தேகத்துள்ளே
யெங்களுட தேவியுட னிருந்தபின்னும்
சதிரான கதிர்சாய்ந்த உலகத்துள்ளே
கம்பத்தி னடியில் நின்றான் கரியமாலும்
சதிரான பெலியுமடா முப்பெலியும்வாங்கிச்
சந்தியிலே மடிந்தவர்க்குச் சாவுமில்லை
அதிரான அடிபட்டுச் செத்தபேரும்
ஆத்துமத்தைக் குறியாத அலகையாமே. 220

அலகையென்று மானிடரை மிரட்டிப் பின்னும்
ஆக்கிரமித்துப் பற்கடித்துப் பெலியும்வாங்கி
பலகையென்ற பலவூரு மயத்துநாளில்
பலசமய மாக்கமதைப் பார்த்துப்பின்னும்
அலகையென்ற ஆறான சமையந்தன்னில்
அக்கினியாம் வீரனென யிருக்கவென்றார்
சலகையென்ற அக்கினியும் படியுமானாள்
சஞ்சலங்கள் தீர்க்கவல்லோ தாயார்பாரே. 221

தாயான மூலத்தைச் சொல்லக்கேளு
தனியாலிற் பள்ளிகொண்டான் தாயாராகும்
பேயனா அலகையுடன் கூத்துமாகி
பெரியதெய்வ மென்றுமவள் பேருபெற்று
காயான காஞ்சிகா மாட்சியானாள்
கார்காலந் தன்னிலே மாரியானாள்
பாயான உலகதனிற் பத்தியுமானாள்
பரசமைய மாறுக்கு ளிருந்தாள்காணே. 222

யிருந்தவிடங் காணுதற்கு அச்சஞ்சொல்லும்
யீறென்று வேதமதி லிருந்தசத்தி
யீறாரு சமயமதி லிருந்ததெங்கே
யிருந்தவிட மெந்தனுக்குக் காட்ட வேணும்
யிருளிருக்குங் கோலமதைச் சொல்லவேணும்
யின்னதென்று அடியோர்க்கு யியம்பவேணும்
யிருந்தவிதங் காட்டியே சொல்லவேண்டா
மியல்பான குருசாமி யிறைஞ்சினேனே. 223

யிறைஞ்சவே யின்னமொன்று சொல்லக்கேளு
யியல்பான சட்டைமுனி பேரைச்சொல்லும்
மறைஞ்சகனி யின்னதென்று வகுத்துச்சொல்லும்
மாரியென்று மரபுகளில் வந்ததென்ன
அரன்செயலா யல்லாது வேறுமுண்டோ
அம்பிகைதன் னருளான விபரமென்ன
கரைஞ்சபின்பு யிரக்கமென்ன காண்பதென்ன
காசினியோர் தன்பகட்டைக் காட்டுவீரே. 224

காட்டாத பொகுள்களெல்லாங் காட்டச்சொன்ன
கருத்துள்ள புலத்தியனே கூறக்கேளு
மூட்டாத கம்பளி யதனைப்போத்தி
முதல்வனாய் நின்றவனே தெய்வமாச்சு
மாட்டாத நவசித்தர் வைத்தபேரு
மாரியென்ற வைசூரியது நானேயென்றாள்
கூட்டாத அக்கினியே சட்டைமுனியாச்சு
கூடிநின்ற கைப்பிடியே பிரமங்காணே. 225

பிரமமென்ற கபாலமடா ஆத்தாள்பீடம்
பிரசமைய மாறுக்கும் ஒருத்திதெய்வம்
கருமமென்ற பூமியிலே மாரியானாள்
காமாட்சி யானவளு மவளேயானாள்
வருமமென்ற யெல்லம்மை யவளுமாச்சு
வழிமறித்த பகவதியு மவளுமாச்சு
தருமமென்ற பச்சையுமே அவளுமப்பா
தரணிலே யீராறு சமையங்காணே. 226

காணென்று யெந்தனுடன் சொல்லவந்த
காரணசற் குருவேயான் கருதக்கேளீர்
ஊணென்றுங் கங்கைநதி யாடவென்று
உலகிலுள்ள மானிடர்கள் போவதேது

மானென்ற விழியான கன்னிதானும்
மதத்தாலே நீர்தனிலே முழுக்குமேது
தேனென்ற மொழியுடையா ளாத்தாள்தானும்
தெளிவான தெளிவெடுத்துக் காட்டிடீரே. 227

காட்டவே யின்னமொன்று கருதக்கேளீர்
கள்ளநதி யேழுமங்கே பிரவேசித்து
நாட்டினில்நா தன்சடைமேற் கெங்கையாரு
நாட்டிலுள்ள மானிடர்க்கு மோட்சமேது
பூட்டாகப் புதுமைகளைக் காட்டவந்தீர்
புவியிலே அய்யனாரும் ருத்திரனாரும்
காட்டவே யிதுபுதுமை காட்டவேணும்
கருத்துள்ள சீடரவர் மகிழத்தானே. 228

தானாக நின்றவன்றன் சிரசுமீதில்
தனியான கெங்கையுடன் கதிருஞ்சாத்தி
ஊனான உடலுக்குள் ளிருந்தாரீசன்
உண்மையா யிதனுடைய உணர்வுகேளு
மானாக யிடப்பாகம் வைத்தாரய்யா
மானிலத்து மானிடர்க்கு மதுவேயாச்சு
வானான யிவனேவல் கேட்ட வேகம்
வழியான சத்திநதி சாற்றக்கேளே. 229

சாற்றவே வினைதீர ஸ்நானஞ்செய்து
தாரணியில் மூடருக்குக் கங்கை நதியப்பா
ஆற்றவே யவளிடத்தில் வந்ததோஷம்
அப்புரத்தே போகாமல் முழுகவந்தாள்
தூற்றவே கெற்பமென்ற தோஷந்தீரச்
சுந்தரியாள் நீராடித் தூரநின்றாள்
பார்த்தபேர் பயப்பட்டுத் தூரநிற்கப்
பைங்கிளியா ளதுகண்டு பதுங்கினாளே. 230

பதுங்காத மலர்தன்னைச் சொல்லக்கேளீர்
பரவைமரம் பிர்மமடா பார்த்துக்கொள்ளு
ஒதுங்காத மலருருத்ரன் அனந்தவாகும்
ஒத்துப்பார் பிரபஞ்ச வாழ்க்கைதன்னை
பதுங்காத ஞானவழி யேறுயேறு
பஞ்சமா பாதகரி னுறவுதள்ளு
ததுங்காதே சத்தநதி பிறப்புயெந்தன்
தன்பொதிகை மலையல்லால் வேறுமுண்டோ. 231

வேரடா வென்மலையிற் பிறந்தநீர்த்தம்
 வெளிகண்டு யேழுமங்கே பிரவேசித்து
காரடா குருபதத்தைப் பனிரெண்டாண்டு
 கருணையுட னுந்தனுக்குக் காட்டுவார்கள்
பாரடா ஜெகஜாலக் கூத்தைமைந்தா
 பழிபாவம் வாராமற் பாருபாரு
ஆரடா யெனைப்போலே சொல்லப்போறார்
 ஆச்சரிய மிந்தநூல் முற்றும்பாரே. 232

யெந்தனுட னூல்பார்த்து யிருந்தபின்பு
 யெளிதாக நூல்தோறும் பார்க்கவேணும்
மைந்தனே யென்மகனே சொல்லக்கேளு
 மச்சமுனி சொற்படிக்கு நடக்கவேணும்
கந்தனா ரெந்தனுக்குச் சொன்னவார்த்தை
 காண்பதென்ன காணுமந்தப் பருபதந்தான்
பந்தான மாதர்கள் தன்னைச்சேர்ந்தாள்
 பழிபாவ மெத்தவடா பாருபாரே. 233

பாரிலே நடப்புல விதங்களாகும்
 பழிகாரப் படுகுழியிற் றள்ளுவார்கள்
ஆரிலே நீராடப் போறேனென்பான்
 அவர்கள் செய்யுங் கருமங்க ளறியமட்டான்
பேரிலே பிரபலமா யிருப்பாரப்பா
 பெரும்பாவஞ் செய்வார்கள் பேருள்ளோர்கள்
காரிலே முளைத்தவிதை தன்னைக்காணார்
 கசடர்கள்தன் னுறவாலே கலங்குவீரே. 234

கலங்காமற் பூசாரி பெயரைக்கேளு
 கருத்துள்ள மானிடரி லொருவரப்பா
மலங்காமல் மாரியைத்தான் மனதில்வைத்தான்
 மகத்தான பூசாரி யென்பாரப்பா
தலங்காமற் தேவரிஷி சித்தர்போற்றும்
 தாய்பதத்தி லனுதினமுங் கார்க்கவேணும்
அலங்காத தீபமதை யறியவேணும்
 அப்பவல்லோ பூசாரி யென்னலாமே. 235

எண்ணாமல் மானிடர்க ளுலகுதன்னில்
 எண்ணியெண்ணி எளிதாகப் பூஜைசெய்வார்
கண்ணான கங்காளி வீரபத்திரன்
 கருத்துள்ள செயமுனிவர் தன்னைக்காணார்

கையுடுக்கு விபரமதைக் காணாரப்பா
கன்னியிலே நிகர்சொல்லத் திறமுங்காணார்
மண்ணான மணிச்சிலம்பின் பெயரைக்காணார்
மந்தையிலே மாடுமேய்க்கு மனிதர்தானே. 236

மார்க்கமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
மண்டபத்தில் தேவதைகள் வெவ்வேறப்பா
ஆர்க்குமே தெரியாது யிந்தக்கேள்வி
அவனிதனில் வீரனெல்லாந் துஷ்டனாகும்
கார்க்கவே வைத்ததொரு அட்டகாளி
காசினியிற் துஷ்டர்களை யடக்கிக்கொண்டு
பார்க்கவே பிரபலமா யிருந்துபின்னும்
பதிகார்க்க வேணுமென்று யிருந்தவாரே. 237

யிருந்தாக்கா லொன்றுமில்லை யேகவெளியப்பா
யிருகையுஞ் சிவமொன்று சத்தியொன்று
மருந்தான தேகமடா மாயக்கூத்து
மயக்கத்தால் கோடிஜன மிழந்தாரப்பா
அருந்தாத கனியதுவே யிந்தக்காயம்
அம்பலத்தான் கூத்தடா அறிந்துபாரு
பொருந்தாத விடம்போலே பொய்களவநீக்கி
பொல்லாப்பு ஒருநாளுஞ் செய்யவேண்டாம். 238

செய்வினையே பிறப்புமாந் தெளிந்துபாரு
செய்காவ ருத்திரனே புண்யமாச்சு
கைவினையாய்ச் செய்த தெல்லாங் கருமமாகும்
காசியினில் மாயவனே கர்த்தனாகும்
ஐவருமே பலவிதமா யிருந்தமார்க்கம்
அம்பிகையாள் தன்னருளால் வந்தபாவை
மைவிழியாள் தன்மாய்கை யற்றுப்பின்னும்
மகாதேவர் தன்னருளை வணங்குவீரே. 239

வணங்காத பேர்கள்தனை வணங்கவேணும்
வணங்கினா லின்னூலை வணங்கவேணும்
யிணங்காம லொருவருக்குச் சொல்லவேண்டாம்
யிப்புவியிற் சிறுமைந்த னுறவுதள்ளு
அணங்கனென்ற மாரனுட மாய்கைதள்ளு
அரண்பாத மாயிபதம் பணிந்துபோற்று
யிணங்கவே யின்னமொன்று சொல்லக்கேளு
யிதையறிந்து நடந்தவனே ஞானிதானே. 240

ஞானியென்று லோகத்தில் மெத்தவுண்டு
நல்லிணக்க மில்லாதான் ஞானியல்ல
காணிகொண்டு கோடிதந்து திரியவேண்டாம்
காசினியில் மெத்தவடா கண்டுபாரு
தானியத்தில் வித்தாக யிருந்தயீசன்
தனையறிந்து மார்க்கமதைக் காணுகாணு
பேணியே ஒருவருடன் பேசவேண்டாம்
பேச்சாலே ஒன்றுமில்லை பிழைக்கத்தானே. 241

பிழைப்பதற்கு வேணுமென்று சொல்லவந்த
பெருந்தமிழில் வல்லவரே சொல்லக்கேளீர்
அழைப்பான அஞ்செழுத்துப் பிறந்ததெங்கே
ஐம்பத்தோ ரட்சரமும் பிறந்ததெங்கே
உழைப்பதற்கு மந்திரந்தான் பிறந்ததெங்கே
மாசில்லான் தன்கையிலே மழுவதெங்கே
வழைப்பதற்கு விந்துமது வந்ததெங்கே
வழியாக விபரமாய் வழுத்தீடீரே. 242

விபரமினிக் கேட்கவந்த பிள்ளாய்க்கேளு
விதமான அஞ்செழுத்து விந்துவாச்சு
தபரமே தத்துவந்தான் தொண்ணூற்றாறும்
தவஞானி கண்டதடா அகாரத்துள்ளே
பவரமினிச் செய்யாமற் குருவைக்காரு
பதிவான பிரணவத்தில் பின்புகாட்டு
மகரமினி மீனமதா யிருந்தமார்க்கம்
மகதேவ ரெழுத்தாலே மழுவைத்தாரே. 243

வாமியிவள் மார்க்கமிது ஐம்பத்தொன்றும்
வரையேழுங் கடந்தபே ரின்பமப்பா
காமியிவள் வெகுசாமி கன்னிகன்னி
காமனுக்குத் தாயான ஐம்பத்தொன்று
ஆமிவளை யறிந்தாக்கா லெல்லாங்காணும்
அவளுடைய பிரதமையே யெல்லாமாச்சு
தாமிவளைப் பூஜைபண்ண யெல்லாங்காணும்
தாயைவிட்டாற் பிரபஞ்ச மில்லைகாணே. 244

இல்லாம லிருப்பதற்கு யியல்புகேளு
இயல்பான பூஜையடா சிதம்பரமேயாச்சு
சொல்லாமற் சிவபூஜை செய்யவேணும்
சோதித்துச் சிவனடியை வணங்கவேணும்

நில்லாமல் நெடுமூச்சை யடக்கிப்பாரு
நிலைக்குமடா தவமுனக்கு நேர்ந்துபாரு
கல்லாமற் கற்பவற்கு யிந்தஞானம்
கருதவே தோணுமடா கண்டுகொள்ளே. 245

கண்டுகொள் ளென்றுசொன்னேன் புலத்தியாகேள்
கமலத்தில் பிரமன்வந்த விதங்கள் சொல்வார்
காணாத காட்சியடா பரமஞானம்
கலந்தாக்கா லப்போது தெளிவுகாணும்
பூணாத பொன்னணிந்து வருவான்பாரு
பொய்மாய்கை யென்றதெல்லாம் பொய்யதாமே
வீணான மாய்கையினில் விழாமல்தானே
விரும்புகின்ற சூட்சமதே மாய்கைதானே. 246

மாய்கையென்ற சூட்சமத்தை மருவிப்பாரு
மனையாட்டி யாசைதனை மறந்துபாரு
ஆகையா லாகாமிய மொடுங்கவேணும்
அறுமறையி லுள்ளபடி உரைத்தேனப்பா
பாகையுண்ட யீயதுபோற் பறக்கவேண்டாம்
பஞ்சமா பாதகத்தை மறந்துநீயும்
யீகையென்ற அறமதுவே தத்தளிக்கப்பண்ணி
யிருந்தயிடங் காணியடா யியம்புவேனே. 247

இயம்புவே னென்றுசொன்ன குருவேஅய்யா
யெளியேனா னோசிறுவனே துங்காணேன்
பாம்புமேல் பள்ளிகொண்டான் றனக்குயெட்டுப்
பாரியென்று சொன்னவகை பகரவேணும்
காம்பணைய தோளார்தன் மாய்கையெல்லாம்
கண்ணனுட மாய்கையது யென்றதேது.
சாம்பசிவன் நிரந்தரமாய் நின்றநிலைசொல்லும்
சர்ப்பத்தில் விஷம்வந்த வார்சொல்வீரே. 248

விசமென்ற மாய்கையது பெண்ணதாச்சு
விமலனுட திருக்கூத்து விளங்கப்போமோ
கசமென்ற குழிதனிலே விழுந்தமாந்தர்
கருதுவார் பலவிதமாய்க் கண்டுபாரு
வசமென்ற ஞானத்தைக் கண்டபேர்கள்
வழிவசத்தைக் காண்பார்கள் மற்றோர்காணார்
மசமென்ற கொசுப்போல மயங்கவேண்டாம்
மதியிரவி யற்றபிர்ம யோகம்பாரே. 249

யோகமென்றால் சிவயோக முண்மையாச்சு
ஒத்துநின்ற கிரிகையடா யோகவாழ்க்கை
பாகமென்றா லிடப்பாகம் பெற்றாளாத்தாள்
பதியறிந்து நின்றவனே சிவயோகியப்பா
ஆகமபு ராணமெல்லா மவனேயாச்சு
ஆதியாய் நின்றசத்தி யவளுங்கூட
ஆகமத்தைப் பேசிவைத்தா ரீசன்தானும்
அப்படியே உலகமது நடந்தவாரே. 250

நடந்தவா ரென்றுசொன்ன நாதாகேளீர்
நானிலத்தில விருதுபதி னெட்டுஞ் சொல்லும்
கடந்தோர்சொற் கவிசிதறு மெழுத்துஞ்சொல்லும்
கைலாச மேருவென்ற வரையுஞ்சொல்லும்
படர்ந்தகொடி கயருக்கும் பம்பைக்குந்தான்
படியான டப்பைக்கு மெழுத்துச் சொல்லும்
வடம்புனரு முடலுக்குங் கிடுகிட்டிக்கும்
வளமைபெற்ற சவுரிக்கு மெழுத்துமுண்டோ. 251

முதலான ஆலையமாங் கோவிலுக்கு
முன்னின்ற பிடத்தி னெழுத்தைச் சொல்லும்
அதிலான பாலைகொடு பீடத்துக்கும்
அம்மனுக்குத் தீபக்கா லெழுத்துஞ் சொல்லும்
மதிலான பிரகாச மட்டத் கும்
மற்றையோதும் பூரிக் மெழுத்துச் சொல்லும்
காதலாங் கன்னியர்க்கு யோகத்தாலே
கைப்பிடிக்கு மெழுத்ததனைக் காட்டவேணும். 252

மாட்டினதோர் வளையமடா அகாரமாச்சு
மருவிநின்ற குஞ்சமடா பிஞ்சுமாச்சு
காட்டினதோர் விருதெழுத்து யிகாரமாச்சு
கடுத்துநின்ற சலவிருது அதின்பிஞ்சுமாச்சு
ஆட்டியதோர் மணியல்லோ உகாரமாச்சு
அதில் நாவுடன் கூடப்பிஞ் செழுத்துமாச்சு
கூட்டியதோ ரெழுத்தாலோ மணிகள் சேர்த்து
குறமகளை மாலையிட்டார் முருகன்தானே. 253

தானென்ற குறவருக்கு மணிகள் சேர்த்துத்
தனிக்காட்டில் குடியிருக்க வைத்தாளாத்தாள்
ஊனென்ற உடலெழுத்துத் தீபக்காலாச்சு
உத்துநின்ற பம்பையடா ரீங்காரமாச்

பானென்ற வளையமடா சங்றிங்காச்சு
பதிவான குச்சியடா ஓங்காரமாச்சு
ஆணென்ற ஆணுவத்தைப் படைத்தபேர்க்கு
அடக்கமல்லோ ரகசியங்க ளானவாரே. 254

வாருகொண்டு யிறக்கியல்லோ மேளந்தன்னை
வையகங்கள் தானதிர முழக்கமிட்டு
பேருகொண்ட சேகண்டி யடிப்பதேது
பெலமான நாதாக்கள் முழக்கஞ்சொல்லும்
ஆருகொண்டு அம்பலத்தி லாடும்போது
அவருடைய்ய தன்காலில் சலங்கையேது
ஊருகொண்டு சொல்லாமல் வென்றுசோம
னுணற்சிலம்புக் கோர்வையுட யெழுத்துச்சொல்லே. 255

வீரான வீராப்பு யேழுமாச்சு
விதமான அகாரமடா அதுவேயாச்சு
பாரான சேகண்டி இகாரமாச்க
பறையெழுத்தும் பரனுமங்கே கூடிநின்றார்
வாரான யெழுத்தல்லோ யெட்டுமாச்சு
வடமென்ற நாகமடா கயரதாச்சு
கூரான சலங்கையடா ஐந்துமூன்றும்
கூடிநின்ற யெழுத்தாலே யெல்லாமாச்சே. 256

ஆச்சடா அகாரமுத லைம்பத்தொன்றும்
அறிவான மூலமடா ஐந்து ஐந்து
பேச்சடா பிரணவமு மைந்துமாச்சு
பேசரிய மந்திரமு மதுவேயாச்சு
காச்சடா பாலதுக்கு மோர்தெளிந்தாப்போலக்
கண்ணுக்குள் மணியான கருத்தைப்பாரு
நீச்சடா நிலைகாணாக் குருடருக்கு
நிலவரத்தைக் கண்டவர்கள் நிசங்காட்டாரே. 257

நிசமான பூரணமே தெய்வமென்றும்
நிலையான பஞ்சகர்த்தாள் நீதியாகும்
கெசமான கெசமல்லோ சமுசாரவாழ்க்கை
கிரியையோர்க் கிதுவேணும் கிலேசம்வேண்டாம்
பசமான பாசமது பற்றிற்றானால்
பரகெதிக்கு வழியில்லை பாருபாரு
வசமான மாயையதைத் தள்ளவேணும்
வழிபாடு கண்டுமெள்ளத் தேறுதேறு

தேறுமென்று யெந்தனுக்குச் சொல்லிவந்த
தெளிவுதா னின்னதென்று காட்டவேணும்
காறுமென்று சொல்லாமல் கருத்தைச்சொல்லும்
கரைகாணாப் பேரின்பங் கண்டநாதா
கூறுமென்று நானடியேன் கேட்கவந்தேன்
குருவென்றுஞ் சீடரென்ற யெழுத்தைச் சொல்லும்
மாறுமென்ற யெழுத்ததிலே உண்டோசொல்லும்
மாதவத்தில் சத்திநின்ற வகைசொல்வீரே. 259

வகையான வகையின்னம் வணங்கக்கேளீர்
வயிரவனார் காவலென்ற மார்க்கஞ்சொல்லும்
துகையறிந்து தோத்திரங்கள் செய்வதேது
துரைத்தனஞ் செய்கின்ற யெழுத்தைச்சொல்லும்
பகையான பகையறிந்த யெழுத்துஞ்சொல்லும்
பழிகண்ட வழிபாடு யெனக்குச்சொல்லும்
தகையான தகையறிந்த எழுத்தைச் சொல்லும்
தனித்தனியே வெளியெங்கே காட்டுவீரே. 260

காட்டுமென்று யெந்தனைக் கேட்கவந்த
கருத்துள்ள சுந்தரமே கருதிக்கேளு
பூட்டுப்போ லிருந்துலக வாழ்க்கையப்பா
பொய்யென்று யெண்ணியே தள்ளவேணும்
மாட்டுமே லேறுமந்த யீசன்றானும்
மதிரவியாய் நின்றதுவும் கண்டுநீயும்
நாட்டிவைத்த மரந்தனக்குத் தாயைப்போலே
நானிலத்தோர் தங்களுக்கு யீசனாச்சே. 261

ஈசான்ய முதலாக யெட்டுத் திக்கும்
இருப்பவனே ஒருவனப்பா யியல்பாய்க்கேளு
மாசான மோரெழுத்தில் முடிந்ததப்பா
மனோன்மணியா ளெந்தனுக்கு மகிழ்ந்தவார்த்தை
ஆசானும் சொல்வதல்லால் மற்றோர் சொல்வார்
அவனிதனில் கல்விகளு மதிகமுண்டு
கூசாம லொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
கூருகெட்டார் தன்னுறவு தள்ளுதள்ளே. 52

கண்ணுக்கு ளொருவனின்ற நிலையைக்காட்டும்
கருவிலே துன்பமென்ற கருவைக்காட்டும்
மண்ணுக்கு ளொருவனுமாய் நின்றநாதன்
மதிகெட்டு மதியான வாறுஞ்சொல்லும்

விண்ணுக்கு ளொருவனுமா யிருந்தமூர்த்தி
விதிதனக்கும் மதிதனக்கும் விபரங்காட்டும்
பண்ணுதமி ழாராய்ந்த குருவேசாமி
பரகெதிக்கு ஒருவனல்லால் வேறுமுண்டோ. 263

பரகெதியைக் காண்பதற்கு விபரங்கேளு
பாரிலுள்ள தேவதையைப் பூஜைபண்ணி
பரகெதிக்கு ஆளாக யிருந்தாயானால்
பட்சம்வைத்து யென்குருவும் பகர்வாரய்யா
பரகெதிக்கு வழிகாட்டுந் தெய்வங்கேளு
பட்சம்வைத்து வீரபத்திரன் வடுகனோடு
பரகெதிக்கு யிவர்கள்முத லைந்துபேரும்
பாரதனிற் குண்டலியும் பகர்ந்திட்டேனே. 264

திட்டமாய்ச் சொல்லுகிறேன் யின்னங்கேளு
திரிகால பூஜையடா தேவபூஜை
வட்டமாய் வளையமிட்டு அறுகோணமிட்டு
வாசலிலே காவல்வைத்து வணங்கவேணும்
அட்டமா சித்தோடு அனேகம்வித்தை
அவள்காட்டி வழிகூட்டி ஆட்டங்கொள்வாள்
பட்டமாம் பால்சொரிய வைத்தாள்கன்னி
பழிகாரி தனைப்பணிந்து பாதங்காணே. 265

பாதமது பணிவதற்கு யின்னங்கேளு
பரிபாஷை தனைமறந்து பணியவேணும்
வேதமது காணாத குறைவுதள்ளு
வெள்ளாட்டிப் பயல்களைநீ சேர்க்கவேண்டாம்
தாதமது வல்லவடா தாயைப்போற்று
தையலர்க ளுறவாமோ தரணிமீது
மாதமதி லேயொருநாள் மைந்தாகேளு
மாசில்லா மணியாள்தன் னுள்ளமாமே. 266

தாமெனவும் போமெனவும் நின்றநாதன்
தரணியீ ரேழுக்கு மொருவனானோன்
தாமெனவும் நின்றசதா சிவனுமானோன்
சரமெல்லாம் நிறைந்துநின்ற பரமஜோதி
பூமெனவு மிவ்வாரி லொருவனானோன்
புண்ணியனை யென்னாளும் புகழவேணும்
நாமெனவு மஞ்செழுத்தைப் பணியவேணும்
நல்லகெதி யடைவதற்குப் பாதையாமே. 267

பாதையறிந் தேநடந்தால் பலனுங்கிட்டும்
　　பழிபாவ மேதுமில்லை பரணைக்கண்டால்
கோதையரைச் சேர்ந்தாக்கா லேதுமில்லை
　　கொடும்பாவங் கிட்டுமடா கூர்ந்துபாரு
சதையறிந்த ஊணதுபோல் தயங்கவேண்டாம்
　　சமுசார மாயமெல்லாந் தள்ளவேணும்
கதையறிந்து மலகைபோற் கலங்கவேண்டாம்
　　காசினியிற் பொருள்தேடிப் புதைத்திடாதே. 268

காசிமுதல் கன்னிவகை தெய்வமுண்டு
　　கலந்துநின்ற வகையடா கண்டுபாரு
தாதிமக னொருவனல்லோ தாயைக்காண்பான்
　　தற்கமிட்ட சுந்தரமே சொல்லக்கேளு
ஆசுகவி பாடுவோர்க்கு மோட்சமில்லை
　　அரிஅரா ளென்பார்க்கு மோட்சமுண்டு
வாசிதனில் ஒளிந்தோர்க்குச் சாயுட்சியங்காட்டும்
　　வழிபாதை யிதுவல்லோ வணங்குவாயே. 269

வணங்கென்று சொல்லவந்த குருவே அய்யா
　　வழிகண்ட தேவதைக்கு உயிருண்டோசொல்
யெணங்கவே யெந்திரங்க ளுண்டோசொல்லும்
　　யேகாட்சர பூரணமு மெழுத்துஞ்சொல்லும்
அணங்கனைப்போ லலங்கரித்து திரிவதேது
　　அன்னைபிதா யிருவரென்ற மார்க்கமேது
மனங்கண்ட தெய்வமதை மறந்துமின்னும்
　　மாகினாக் கண்டதுஞ்சொல் வணங்குவேனே. 270

வணங்குதற்கு விபரமினிச் சொல்லவேணும்
　　மைந்தனே சொல்லுகிறேன் மருவிப்பாரு
அணங்கனுட தனுப்போலே கீறிக்கொண்டு
　　ஆதித்தன் வளையமொன்று அதிலேகீறி
அணங்கனென்ற யெழுத்திலே யிட்டுப்பின்னும்
　　அப்பனே சூலமிட்டு ரீங்காரமிட்டு
பணங்காசு போகுதென்று பார்க்கவேண்டாம்
　　பாலோடு பலகாரம் வைத்துப்போற்றே. 271

போற்றியபின் வீரனங்கே நிர்த்தஞ் செய்வான்
　　பொல்லாத வினைகளெல்லாந் தீர்ந்துபோகும்
மாற்றியே அறுகோண மிட்டுநீயும்
　　மைந்தனே வளையமிட்டுச் சூலங்கட்டி

நாற்றிசைகொண் டாடஆ றெழுத்தைப்போட்டு
நால்வாச லிட்டல்லோ நடுவேகேளு
தாட்டிமையாய் ஐமூன்று யெழுத்தைக் கூட்டி
தருவென்ற மாரிதனை நடுவேவையே. 272

நடுவிருந்த மாரிதனைப் பூஜைபண்ணு
நாட்டில்ஜீவ காருண்ய னென்றுசொல்ல
படுபாவி யானாக்கால் பழிப்பானப்பா
பரமசிவ னடியார்கள் பழிக்கமாட்டார்
கடுகடுத்து முகம்வெறுத்துக் காட்டுந்தெய்வங்
காளியடா அட்டசித்தி கண்டுபாரு
வெடுவெடுத்த ரூபமடா வேதனாகும்
வேதாந்த சிரோன்மணியா ளாத்தாள்கூத்தே. 273

ஆத்தாளைப் பூஜைபண்ண அறிவுவேணும்
அறிவில்லா மூடருக்கு அதிர்ஷ்டமில்லை
பாத்தாளே முப்புசத்தைத் தீயதாகம்
பழிகாரி கண்ணிலே தான் படவும்வேண்டாம்
வேத்தாளைப் போலேயவள் வருவாள்பாரு
வேடங்கள் மாறியல்லோ மாரியானாள்
மாத்தாளைக் கண்டவர்கள் மதிக்கமாட்டார்
மகராசி வடிவெல்லாம் மாயக்கூத்தே. 274

கூத்தான ஆத்தாளைப் பூஜைபண்ண
குருவென்றுஞ் சீடனென்று மிருக்கவேணும்
காத்தான அலகையடா லோகவாழ்க்கை
கண்பார் பிரபஞ்சம் வீணதாச்சு
வேதாந்தங் கண்டாக்கால் வேதஞ்சொல்லும்
வேதாந்த சிரோன்மணியாய் விளங்கவேணும்
பார்த்தாலோ சிறுபிள்ளை பிராயம்பத்து
பக்குவத்தை யின்னதென்று பகரொண்ணாதே. 275

ஒண்ணான யீஸ்வரியைத் தியானம்பண்ணி
ஓதுவான் காராளன் உகந்துபாரு
கண்ணான கண்ணிமையி லிருந்தகன்னி
காட்டுவாள் கன்னிசொல்லக் கண்டுபாரு
புண்ணான பூவையரைச் சேர்ந்தாயானால்
பூருவத்து தெய்வமெல்லாம் பொய்யாப்போச்சு
யென்னாளு மிடரில்லை யுனக்குமைந்தா
யெதிரியுட யேவல்பில்லி யெகிரிப்போச்சு 276

பேச்சுதடா மாய்கையென்ற தெல்லாம்போச்சு
பொன்மாரி யுந்தனுக்கு நிமித்தஞ்செய்வாள்
வாச்சுதடா பேரின்ப முந்தனுக்கு
வழிபாதை கண்டாக்க லெல்லாங்காணும்
ஆச்சுதடா யிதைப் பழித்தா லவமாய்ப்போவாய்
அனேககர்மங் கிட்டுமடா அழிந்துபோவாய்
காச்சுதடா பேரின்ப முந்தனுக்குக்
கலந்தேற வழிசொல்வேன் காணுகாணே. 277

காணவே யின்னமொன்று கருதக்கேளு
கன்னியரைப் பூசிக்க மந்திரங்கேள்
பூணவே ஆபரண மெல்லாம்பூட்டி
பூவையற்குக் கெந்தபரி மளங்கள்சாத்தி
நாணவே ஆணுவங்க ளெல்லாம்போக்கி
நங்மங்சிங் வங்யங்ஐயுங் கிலியுஞ்சவ்வும்
றீங்றீங்றங்றங் மாதிரிவீரி வயிரவிசண்டி சாமுண்டி
கெவுரி வுச்சாடனி உச்சாடுஉச்சாடுவென
லச்சமோதே. 278

லெட்சமடா பட்சம்வைத்து ஓதுநீயும்
நிலவரமாய் ரேகத்தில் நில்லுநில்லு
அச்சரமாய் ஐஸ்வரியங் கொடுத்துப்பின்பு
அம்பலத்தான் தெரிசனமுங் காட்டுவார்பார்
பச்சம்வைத்து உன்னிடத்தி லிருப்பாளாத்தாள்
பழிகாரி தனைக்கண்டால் பாவம்போச்சு
நிச்சயமா யுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்
நிலவரத்தைக் கண்டறிநீ நிசஞ்சொன்னேனே. 279

நிசமான யென்குருவே சாமினாதா
நீறணிந்தோ னட்சரத்தி லென்ன ஆகும்
பசமான பாசமதை நீக்குமோசொல்
பாசவினைக் கொடுமையெல்லாந் தீர்க்குமோசொல்
வசமான ஞானவெளி தங்குமோசொல்
வழிபாதை தீர்க்கமதைக் காட்டுமோசொல்
கசமான மறலிதனை யகற்றுமோசொல்
கசடருட வுறவுவிட்டுப் பணிந்தேன்சீடன். 280

பணிந்ததொரு சீடனையே பார்த்துப்பின்பு
பாலகனே யென்மகனே யென்றுசொல்லி
கணிந்ததொரு கண்மலரி லொற்றிப்பின்பு
கனியான நற்கனியே சுந்தரமேஅய்யா

அணிந்ததொரு ஐந்தெழுத்தா லெல்லாந்தீரும்
ஆத்மாவி லைந்தெழுத்துங் கலந்துநிற்கும்
அணிந்ததொரு நீறுமடா ஐந்தெழுத்துமாச்சு
அம்பலத்தி லாடினது மஞ்சுமாச்சே. 281

ஆச்சடா வூனெழுத்தால் வினைகள் தீரும்
அம்பல ருந்தனுக்கு அருள்கொடுப்பார்
பேச்சடா பேய்த்தனமா யிருக்கவேண்டாம்
பெண்ணரவங் கடித்துதென்றால் பிழைக்கமாட்டாய்
காச்சடா தியானத்தா லிருவரையுங்காச்சு
கண்மூடித் திறக்குமுன்னே காட்சிகாணும்
வாச்சுதடா உந்தனுக்குப் பேரின்பமப்பா
வழிகாட்டி உந்தனுக்கு வழிசொன்னேனே. 282

வழிகாட்டு யென்குருவே அய்யா அய்யா
வழக்குண்டு மெந்தனுக்கு முந்தனக்கும்
பழிகாட்டும் பெண்ணாளைச் சேர்ந்தபின்பு
பரகெதிக்கு வழியில்லை யென்றதேது
சழிகாட்டுஞ் சதாசிவனா ராட்டமென்றும்
சாற்றினீர் முன்புமோ சாற்றப்போமோ
அழிகாட்டுந் தடக்கையான் யெம்பிரானும்
ஆத்தாளை யிடப்பாகம் வைத்ததேதோ. 283

யேதென்று யெந்தனைக் கேட்கவந்த
யென்மகனே சுந்தரமே சொல்லக்கேளு
போதென்ற பெண்ணாலேபொறி கலங்கிப்போகும்
பொக்கிஷத்தின் மேலாசை யதிகமாகும்
வாதொன்று மில்லையடா வழிகாணமாட்டாய்
வழக்குவேண் டாமினிச் சொன்னேனையா
மாதென்ற பொன்னாலே மாண்டுபோன
மானிடர்கள் மெத்தவுண்டு மருவிப்பாரே. 284

மருவாம லிருந்தாக்கால் மனம்பொங்காதே
மாநிலத்தில் மானிடர்கள் பெருக்கமேது
பெருகாமற் போனாக்கா லுலகமேது
பெம்மானை யார்கண்டு தொழவேபோறார்
சருகாம லிருந்தாக்கால் கால்வழியேபொங்கி
சஞ்சலங்க ளுண்டாகும் சாமிநாதா
அருகாகி யணையாம லறிவுகாட்டும்
ஆத்தாளைப் பூஜைசெய்ய அருள்செய்வீரே. 285

அருகாமல் விந்துநிலை யுணரவேணும்
அவனியோர் செய்கரும மறக்கவேணும்
பருவமாய்ப் பெண்ணாசை மறக்கவேணும்
பக்குவத்தை யின்னதென்று அரியவேணும்
அருவமாய் நின்றெழுத்தைக் காணவேணும்
ஆத்தாளைப் பூஜைபண்ண அறிவுவேணும்
பக்குவமாய்ப் பூஜையிலே மனதைவைத்துப்
பராபரையை யனுதினமும் போற்றுவாயே. 286

போற்றாமற் போற்றுதற்கு விபரஞ்சொல்லும்
பொறியைந்தும் புலனைந்து மெழுத்துங்காட்டும்
ஆத்தாளைக் காண்பதற்கு விபரஞ்சொல்லும்
அம்பலவர் பதம்போற்ற விபரஞ்சொல்லும்
பார்த்தாலே சிறுபிள்ளை யென்பது வுஞ்சொல்லும்
பரகெதிக்குப் பானிருந்த விபரஞ்சொல்லும்
மாத்தாலே லோகமெங்கு மதியாக்கன்னி
மாமரையுங் காணாத விபரஞ்சொல்வீரே 287

விபரமென்ன பூருவத்திற் சொன்னேனப்பா
விளங்கவே முக்காண்டங் கொங்கணவர் சொன்னார்
கயரமென்ன ராஜாக்க ளைவருக்கும்
காட்டினார் வேதமுனி கண்டுபாரு
கபரமென்ன காகமென்ன கோடாகோடி
காட்டினார் நூல்தோறுங் கண்டுபாரு
விபரமென்ன பூரணத்தை ஒட்டினாக்கால்
வேதாந்தத் திறவுகோ லிதுக்குள்ளாச்சே. 288

ஆச்சென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
அய்யனே யென்குருவே அன்பாய்க்கேளு
மூச்சென்ற யிடமறிந்தா லெல்லாங்காணும்
மூலத்தில் நின்றசிவ மெல்லாந்தோணும்
பேச்சென்று மெண்ணாம லிருந்தபேர்க்கும்
பேருலகில் ஞானமது தங்கும்பாரு
காச்சியதோர் கனியறிந்த பட்சிபோலே
கலந்தேற வழிகாணுங் கண்டுபாரே. 289

பார்க்கவே முனிவரவர் பாடும்நூல்கள்
பலவிதமாய்ப் பாடியல்லோ பாழாய்ப்போச்சு
பார்க்கவே பலவிதங்க ளாகப்பாடிப்
பண்டிதற்குக் கைக்குறிப்புக் காட்டினார்பார்

பார்க்கவே நூல்கட்டிப் பகர்ந்தாப்போலப்
பாடவில்லை யென்றுசொல்லப் பழித்தார்மாண்பர்
பார்க்கவே யென்நூலைப் பார்க்கவேணும்
பரியாச மென்றுசொன்னால் பாழாய்போச்சே. 290

போச்சென்று சொல்லாம லிருந்துநீயும்
பொய்கைமாய்கை யென்பதெல்லாந் தள்ளுதள்ளு
ஆச்சென்று மனமுரைத்து நின்றாயானால்
அம்பலத்தான் பதஞ்சேர அறிவுதோணும்
மூச்சென்ற திரேகமடா யிந்தக்காயம்
முன்னில்லை பின்னில்லை முக்கால்பாரு
பாச்சென்ற பாழ்மாய்கை யெல்லாம்போகப்
பராபரையைப் பூசித்துப் பலனைக்காணே. 291

பலனென்ன யிப்பூஜை பலனைப்பாரு
பரதேசிக் காவலனைப் பணிந்துநீயும்
பலனென்ன பாக்கியத்தை யாண்டபேர்க்குப்
பலன்கிட்டு மென்பார்கள் பாரின்மீதில்
பலனென்ன வேதாந்தம் பார்த்தபேர்க்குப்
பலனுண்டு பரியாசம் பகரப்போமோ
பலனென்ன தேவதைக்குப் பகரவேண்டாம்
பரதேசிக் கன்னமது பகரவேணும். 292

வேணுமென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
வேதாந்த சிவமயமே விளம்பக்கேளீர்
காணுமென்ற ரூபமெல்லா மழிவதேது
கன்னிவசம் மணவாளன் கடம்பனாமோ
தோணுமென்ற ரூபவல்லி வேதாந்தமெங்கே
தொல்புவியை அளந்தவருந் தானுமெங்கே
நானுமென்ற நாதனங்கே யிருந்தவீட்டில்
நமசிவய மென்றெழுத்து மறைந்ததெங்கே. 293

மறைந்தவகை முன்சொன்ன மார்க்கங்கேளு
மறைநான்கு மறியாத வயலொன்றுண்டு
கறைந்தவெள்ள முருவான கரிசல்குள்ளே
காசினியில் யாவருங்கை தொழுநாட்டில்
வறைந்தமல ராயிரத்தெட் டிதழுக்குள்ளே
வரும்வெள்ளம் வரும்வழியே லிங்கமாச்சு
குறைந்தமதி நிறைந்தவித மிதனுக்குள்ளே
குறையில்லாப் பூரணமே தெய்வமாச்சே. 294

தெய்வமடா தெரிசனத்திற் கண்டபோது
    தேவரோடு முனிவர்களுங் காணமாட்டார்
கவசமடா கைவல்யந் தன்னைப் பாரு
    கருத்திலே தோணுமடா கண்டுபாரு
சைவமடா சாயுட்ச பதவியாகும்
    சகலருக்குந் தெய்வஞ்சண் முகனுமாச்சு
யெய்துமடா பேரின்பக் கணையினாலே
    யிதமறியா மூடர்களை யெய்துபாரே. 295

யெய்துபா ரென்றுசொன்ன குருவே அய்யா
    யெக்காலந் துயரமெல்லாந் தீருமோசொல்
வயதுமே பத்தான கன்னிதானும்
    வையகத்தி லடுமையெனக் கொள்வதெப்போ
செய்துபா ரென்றுமே சொல்லவேண்டாம்
    செய்கரும மெந்தனுக்குச் சொல்லவேணும்
மையதுபார் காமனுட பாணந்தானும்
    மார்பில்தைக் காமல்மனம் காட்டுவீரே. 296

மனங்காட்டு மென்றுசொன்ன மகனேகேளு
    மறைநான்கு மறியாத மகாதேவர் தானும்
தனங்காட்டுந் தலங்காட்டு மிந்தநூலில்
    தவத்தினுட மகிமையெல்லாந் தானேகாட்டும்
வனங்காட்டு மனங்காட்டும் வறுமைநீங்கி
    வாதத்தி லாசைவைத்தாள் வறுமைகாணும்
செனங்கெட்டுந் தடங்கையா னெம்பிரானும்
    சிவன்செயலாம் வேறுண்டோ செப்பொண்ணாதே 297

செப்பொணா தென்றுசொன்ன குருவேஅய்யா
    செயங்கொண்டக் கிளியேந்தித் திரிவதேது
கம்பொணா தென்றுசொன்ன கெவுரிதன்னை
    கழுத்திலே அணிந்ததென்ன கருத்தைச்சொல்லும்
தப்பொணா தொன்றுமில்லை யுலகுதன்னில்
    தவறாமல் நானடியேன் கேட்கவந்தேன்
ஒப்பான தென்றறிந்து அடியேற்கிப்போ
    ஒளியாம லின்னதென்று காட்டுவீரே. 298

காட்டுமென்று யெந்தனையே கேட்கவந்த
    கருத்துள்ள சுந்தரமே கேளுகேளு
சாட்டவே சாகரங்க ளேழுமாச்சு
    சமையமென்றால் குறிப்புக்கு அருத்தமாச்சு

வேட்டவே வேசியர்போ லலையவேண்டாம்
வேதாந்த சிவமயத்தின் பாதம்போற்று
ஆட்டவே அருந்தவத்தோர் தனக்குதெய்வம்
அய்யன்தான் கலங்கண்டால் பலன்காண்பாரே. 299

உரைத்தமொழி வேதனுட. யாகசாலை
ஒருவருக்கு மாகாத வேதனாடு
மறைத்தமொழி மஞ்சளடா மாரியானால்
மகாதேவ ரெந்தனக்கு மகிழ்ந்தவாக்கு
பரத்தைமொழி பலவிதங்கள் பேசினாப்போல்
பாடினா ருலகத்திற் கோடாகோடி
தரத்தைமொழி கேட்டிருந்த தந்தைபோல
தற்கமிட்ட சுந்தரமே பொருத்தேனப்பா. 300

பொருத்தேனென் றுரைத்தபுண்ய மூர்த்தி அய்யா
பொக்கிஷத்தைக் கேட்டாலும் பொருமைவேண்டும்
வருத்திவைத்த வருத்தமெல்லாந் தீர்வதற்கு
வந்தாண்ட குருநாதா அடியேனுக்கு
பொருத்திவைத்த தீபமது நாட்டினாப்போல்
பொருளறிந்து யெந்தனுக்குச் சொல்லவேணும்
கருத்தறிந்த வுடலுக்குள் காயமானாப்போல்
காட்டவே வேணுமையா கைலைநாதா. 301

கைலையிலே கண்டதொரு கர்த்தன் தானும்
கார்வண்ணன் மாயத்தில் வந்ததேது
கைலையிலே தான்பிறந்த முருகர்தானும்
கன்னியரை மாலையிட வந்ததேது
கைலையிலே வைத்திருந்த காவற்காரன்
கண்ணனுக்குப் பகையாளி யானதேது
கைலையிலே கண்டதொரு கரியமாலும்
கருங்கடலிற் பள்ளிகொண்ட கருத்துஞ்சொல்வீரே. 302

கருத்தாலே நானடியேன் கேட்கவந்தேன்
கற்பனையை யின்னதென்று கருதவேணும்
கருத்தாலே கேட்கவந்த சுந்தரமேகேளு
கைலைமகா மேருவிலே கர்த்தன்கூத்து
கருத்தாலே கண்டவர்க ளொருவரில்லை
காசிமுதற் கன்னிவரை யாத்தாள்கூத்து
பொருத்ததொரு பொருமையினா லெல்லாங்காணும்
பொறிகளைந்துங் கலங்காமல் நிலையில்நில்லே. 303

நில்லாமல் மேரு தனிற் தவசியாகி
நிலைகாணாச் சமுத்திரத்தை நீஞ்சிநீங்கள்
கல்லாமற் கற்றகல்வி யார்க்குமுண்டோ
கருங்கடலில் கார்வண்ணன் யிறப்பதேது
அல்லாமல் வேதனுக்கு அரிதந்தையேது
ஆலமுண்ட கண்டருக்கு மாத்தாளுக்கும்
சொல்லாமற் பெரியதாய் வந்ததேது
சொர்க்கமென்ற வீடுதனைக் காட்டவேணும். 304

வெல்லவே யிதையறிந்து உரைத்தநாதா
வேதனுக்கு நால்சிரசு வந்ததேது
அல்லாம லாலிலையில் துயின்றதேது
அலைகடலி லேயமுர்தங் கடைந்ததேது
வெல்லாமல் வேதனுக்குத் தெய்வமாரு
வேதாந்த சிரோன்மணியே குருவேசொல்லும்
சொல்லாம லிதையொளித்தால் தர்மமாமோ
சொற்பெரியதாய் நின்றதொரு மூலனாதா. 305

மூலத்தே நின்றதொரு சத்திதானும்
முக்கண்ண ரிடபாகம் வந்ததேது
ஞாலத்தைப் படைத்ததொரு யீசன்றானும்
ஞானியற்குத் தெய்வமது வானதெங்கே
ஆலத்தை யுண்டசதா சிவன்தனக்கு
அக்கினியாங் கண்வந்த விபரஞ்சொல்லும்
கோலத்தைக் கொண்டதொரு அத்தர்தானும்
குமரனைப் பெற்றதொரு விபரஞ்சொல்லும். 306

சாலத்தைக் கண்டதொரு சாம்பான்தானும்
சத்தியென்ற மார்க்கமதைப் பார்க்கவேணும்
வேலத்தைப் படைத்தயீசன் கையிற்சூலம்
வேதனும் ருத்திரனு மானதெப்போ
சீலத்தைச் சிவாயநம யென்றநாமம்
திரிபுரைக்குஞ் சீஷனுக்கு முண்டோ சொல்லும்
சேலொற்ற கண்படைத்த பேதையற்குச்
சிறையிருந்தால் மதிநின்ற யிடஞ்சொல்வீரே. 307

நின்றவிடம் போனவிடம் நிலையைச் சொல்லும்
நிராமயமாய் நின்றதொரு யெழுத்தைச்சொல்லும்
கண்டவிடம் பூரணத்தில் கலையைக்காட்டும்
கற்புடைய மங்கையற்குத் தெய்வமாரு

உண்டயிடம் உறங்குமிட மிரண்டுஞ் சொல்லும்
ஊமையென்ற யெழுத்திலே கலந்ததெப்போ
அண்டவிட மில்லாத அரசருக்கு
அரண்மனையும் பெருந்தவசும் வந்ததேதோ. 308

கண்டவள்ளி தனைக்கார்க்கும் கணபதிக்குக்
காலகண்டன் தகப்பனென்று சொல்வதேது
கண்டவிடந் தனில்துயின்ற திருமாலுக்குக்
கன்னியர்க ளெட்டான விதத்தைக் காட்டும்
அண்டவிட மில்லாத அந்தரத்தில்
அருந்தவத்தோர் நின்றதொரு நிலமைசொல்லும்
அண்டுமிட மறிந்தவனே தெய்வமாகும்
அருந்தவத்தோர் காணாத அய்யன்தானே. 309

அய்யனே யென்குருவே யாகுமாகும்
ஆதார மானசிவந் தன்னைக்காண
அய்யனே தினமுமணி பூஜைபண்ண
அருந்தவத்தால் கண்ட்வர்கள் சொல்வாரப்பா
அய்யனே அருந்தவத்தோர் தெய்வமாகும்
ஆறணிந்தோன் மகிமைதனைக் காணப்போமோ
அய்யனே ஆதார மானார்காணும்
அவரவற்குந் தெய்வமென்ற தரன்தான்பாரே. 310

பர்ரென்று யெந்தனுக்குச் சொல்லவந்த
பரதேசி காவலனே பகரக்கேளீர்
பேரொன்று மில்லாத தேவருக்குப்
பேர்வந்த விபரமதைப் பிரிக்கவேணும்
ஆரென்றுந் தீயென்று மாவதேது
அம்பலத்தான் சடைதனிலே யிருப்பதேது
காரென்று கலப்பைமுனை தன்னைக்கார்க்கும்
கார்முகில் மேனியனார் கண்ணர்தாரே. 311

தாரென்ற மாலைதனை யணிந்தயீசன்
சாம்பல்மேல் பள்ளிகொண்ட விபரமென்ன
பேரென்ற பேர்கள்வந்த விபரமென்ன
பேசரிதாய் நின்றதொரு நிலையைச்சொல்லும்
ஊரென்றுந் தேசமென்றுஞ் சொல்வதென்ன
உற்றோர்கள் தெய்வமாய் வந்ததேது
சீரென்றும் வரிசையென்றுஞ் செப்பொண்ணாத
ஜெகசாலக் கூத்தை யினிச் செப்புவீரே. 312

கூத்தான வீராப்பு மெத்தப்பேசும்
கூருகெட்ட மானிடற்குக் குருவைச்சொல்லும்
ஆத்தாள்தன் பூஜையிலே வைத்தவஷ்து
ஆதரவாய் வைத்திருந்த சுத்தியாரு
காத்தான்தன் ரூபமதைக் காணாமற்றான்
கலங்கிநின்ற மார்க்கமதைக் காட்டவேணும்
மாத்தான மாரணத்தின் பேரைச்சொல்லும்
மணிக்கைகுறி காட்டுகிற விபரஞ்சொல்லே. 313

சாத்தான்றன் பூஜையொன்று சொல்லவேண்டும்
சஞ்சலங்க ளுடறுத்த சாமினாதா
தோத்தாத வீராப்புச் சொல்லவேண்டாம்
தொல்புவியி லுள்ளபடி துலங்கவேணும்
தீத்தாத வீடுகட்டி வைத்தபேர்க்குந்
திருவுளத்தின் மகிமைதனைக் காட்டவேணும்
நாத்திசையுங் கொண்டாடுந் தாயுமாரு
நல்லகெதி தருஞ்சாமி நவிலுவீரே. 314

சாமியென்ற பிரணவத்தின் தெய்வமாரு
சரஸ்பதிக்குத் தகப்பனார் தாயுமாரு
வாமியென்ற வாமமது வந்தவாரும்
வன்னியுட தாய்தமரு மெனக்குச்சொல்லும்
மாமியென்ற மாதினுட மாமனாரு
மகாதேவர் தனக்குமொரு தெய்வமுண்டோ
பூமியென்ற மாதுக்குத் தெய்வமாரு
பூதலத்தில் புண்ணியரே புகலுவீரே. 315

காமியென்ற கன்னிக்குக் கணவனாரு
கைப்பொருளில் லாதார்க்குத் தெய்வமாரு
சோமனென்ற சந்திரனுந் தேய்ந்ததெப்போ
சொற்பெரிதாய் நின்றவிடந் தன்னைக்காட்டும்
பாமியென்ற பரமகளை யிடத்தில்வைத்த
பரமசிவ னென்றவரை யழைத்ததாரு
வாமியுட வேலனுக்குத் தந்தைபாரு
பழுதறவே யெந்தனுக்குப் பகருவீரே. 316

பகரவே பாசாசினுட தெய்வமாரு
பாரளந்தான் தாயாரு தகப்பனாரு
மகரமென்ற மீன்தனக்கு ராசியாரு
மகரபல ஜீவருக் காதாரமாரு

நகரமென்ற வீட்டுக்குத் தெய்வமாரு
நாற்றிசையும் வெல்வேறா யிருப்பதென்ன
சிகரமென்ற கோபுரத்தில் வாழ்ந்தபொம்மை
சுமந்தவகை யெந்தனக்குச் செப்பிடீரே. 317

செப்பாத செப்படி வித்தையேது
ஜெயஜெயா வென்றதற்கு விபரமென்ன
தப்பாமற் தாதுவென்ற புவிதனக்குத்
தமிழறிந்த யென்குருவே சாமிநாதா
குப்பாமற் கூப்பிக்கும் யிட்டதாரை
குருவுக்குக் குருவிருப்பா ரென்பதாரு
அப்பாம லப்பில்நின்ற தெய்வமாரு
அறுசமையக் கோளனென்ற தாரைச்சொல்லே. 318

கோளறிந்து சொல்லவந்த குருவேசாமி
கொம்பனையாள் தனையீன்ற தந்தையாரு
பாழறிந்த பெரியோர்கள் நின்றதெங்கே
பரமனென்ற பிரமனுக்குக் குருதானாரு
தேளறிந்த விஷந்தனக்கு உறவுமுண்டே
தெளிவான ஞானவெளி காண்பதாரு
ஆளறிந்த மங்கையரைச் சேர்ந்தபேர்கள்
அம்பலத்தி லாடுகின்ற ஆட்டங்காட்டே. 319

ஆட்டமென்றா லைம்பூத அறிவுகூட்டம்
ஆனதொரு தத்துவத்தி லடக்கிப் போட்டீர்
கூட்டமென்ற கூட்டமெல்லாங் கூரைநீர்கள்
குறமகளைக் கைப்பிடிக்க மார்க்கஞ்சொன்னீர்
பாட்டமென்ற பாட்டெல்லா மிதுக்குள்சொன்னீர்
பரமசிவன் தன்னருளைப் பகரவேணும்
நாட்டமென்ற யிருகண்ணில் விபரஞ்சொல்லும்
நல்வழிக்கு மார்க்கமதை நடத்திடீரே. 320

தீயான அக்கினிக்குத் தந்தையாரு
திரிபுரத்தார் செய்தவத்தின் தெய்வமாரு
காயான பெண்ணாரு கனியுமாரு
கலந்துநின்ற உலகத்துக் காதாரமாரு
பேயான அலகைக்கு ஆதாரமாரு
பேசரிய மந்திரத்திற் குயிருமாரு
நாயான கோபமது நின்றதெங்கே
நல்லகெதி தந்தசிவ மய்யாஅய்யா 321

அய்யனே யென்குருவே சாமிநாதா
அற்புதமே யென்னரசே அமரர்கோவே
மெய்யான பொருளேமே தினியோருக்கு
மேன்மைபுரி தேசிகனே குருவேசாமி
மெய்யனே உலகமெங்குஞ் செனித்தநாதா
மேலான தமிழுக்குப் பிறந்தமூர்த்தி
கய்யனே உனைத்தொழுது பணிந்துநின்ற
காளைநான் செய்தபிழை கார்த்திடீரே. 322

கார்க்கவே கடனென்று காலில்வீழ்ந்தேன்
கபடநான் செய்தபிழை யெல்லாங்காரும்
பார்க்கவே பழம்பொருளைப் பகரவேணும்
பாவிநான் செய்தகுற்ற மெல்லாங்காரும்
ஆருக்குந் தெரியாது யிந்தமார்க்கம்
அசடனான் தற்கமிட்டு அறிந்துகொண்டேன்
தீர்க்கவே யெந்தனுக்குத் தெரியச் சொன்னீர்
திரிபுரையாள் அருளெனக்குத் தெரிவிப்பீரே. 323

தெரியாமல் நானடியேன் செய்தகுற்றம்
தெளிவுள்ளோர் பொருத்திடுவீ ரெம்பிரானே
அறியாமற் செய்தபிழை யெல்லாங்கார்த்து
ஆளடுமை கொள்வதற்கு அடியனானேன்
பரியாமல் ஒருவருடன் பகராமல்தான்
படித்தவற்கு யிந்தநூல் பலிக்குமப்பா
தெரியாம லாருக்கு மீய்ந்தாயானால்
தேசத்தில் நாய்போலத் திரிவார்முற்றே. 324

அகஸ்தியர் தற்க சாஸ்திரம் முற்றிற்று.

உ

சிவமயம்

அகஸ்திய மகாமுனிவர் அருளிச்செய்த

ஊத்துமுறை -24

பாரப்பா ஊத்துமுறை வகையைக்கேளு
பக்குவமாய் யுருக்குமுறை துருத்தியொன்று
சேரப்பா சத்துவகை துருத்திநாலு
செயமான நீற்றினமோ ரெட்டுமைந்தா
தேரப்பா வரண்வகை வுபரசங்கள்
மெய்மார்க்கங் குருமுன்னி லறிந்துகொண்டு
சேரப்பா குருமுடித்து செந்தூரித்து
சிவசிவா கேசரியை தினமும்நோக்கே. 1

காலம்

நோக்கடா ஐப்பசிமுதல் மூன்றுமாதம்
நுண்மையுட னுருக்கினத்துக் காலமாகும்
வாக்கடா தைமுதலாய் மூன்றுமாதம்
மகத்தான செயநீருக் காலமாகும்
தாக்கடா சித்திரை மூன்றுமாதஞ்
சங்கையுடன் குருமுடிக்குங் காலமாகுந்
தூக்கடா ஆடிமுதல் மூன்றுமாதஞ்
சுத்தமுடன் திராவகஞ்செந் தூரஞ்செய்யே. 2

நீற்றினம்

செய்யப்பா நீற்றினத்தின் கருவைக்கேளு
சிவசிவா பளுகுரவி வீரம்பூரம்
மெய்யப்பா குருவண்டு சூதந்தாரம்
விதமான கார்முகியுஞ் சவுக்கார்முதலுஞ்

செய்யப்பா சற்குருவை யொன்பதிலுமைந்தா
திருவான நவலோக நீறிப்போகுங்
கையப்பா கைமுறையா யறிந்தாயானாற்
கசடற்று வேதமுறை காணலாமே. 3

உருக்கினம்

காணவே வுருக்கினத்துச் சரக்கைக்கேளு
காரமுஞ் சவ்வாது வெடிசாரவுப்பு
பேணவே கண்டதொரு மால்தேவிவெள்ளை
பிலமான ரங்குடனே ஆமணக்குக்குன்றி
தோணவே தேனுடனே புறாவினெச்சந்
தொகுத்தறிந்து கருமானங் கண்டாயானா
லூணவே நவலோக முருகிப்போகு
முத்தமனே கண்டறிந் தோகங்காணே. 4

நவலோக வுபரசங்கள்

காணவே நவலோக வுபரசங்கள்
கடிதான பாஷாண வகைகட்கெல்லாம்
பேணவே செந்தூரஞ் செய்யநல்ல
பிலமான சரக்குவகை சொல்லக்கேளு
தோணவே மனோசிலை தாரங்கெந்தி
சுத்தமுள்ள வப்பிரகங் கெவுரித்துத்தம்
பூணவே வெடியுப்பு யிதுவெல்லாந்தான்
புத்தியுடன் செந்தூத்தின் குருவைப்பாரே. 5

வரணவகை சரக்கு

பாரப்பா வரணவகை சரக்கைக்கேளும்
பரிவான தங்கமொடு நாதசூதம்
நேரப்பா நிமிளையொடு கெந்தியுப்பு
நேரரிந்து கைபாக முறையாப்பார்த்தால்
பேரப்பா எடுத்ததொரு நவலோகங்கள்
பிலமான வகாரவகைக் கிதுவேயாகுஞ்
சாரப்பா சற்குருவின் பாதங்கண்டு
சங்கையுடன் சவுமியசா கரத்தைப்பாரே. 6

சூதம்

பாரடா சற்குருவின் கடாட்சத்தாலே
பதிலாகக் கட்டியதோர் சூதந்தன்னில்
நேரடா காரீயஞ் சரியாய்க்கூட்டி
நேர்மையுட னாலிலொன்று தங்கஞ்சேர்த்து
தீரடா கெந்தியுமே நாலிலொன்று
செம்மையுடன் சூதமெட்டி லொன்றதாகுஞ்
சேரடா பொடியாக்கி குப்பிக்கேற்றி
சிவசிவா வாலுகையின் மேலேயேத்தே. 7

ஏத்தி நன்றாய்த் தீமூட்டி மைந்தாநீதான்
இன்பமுடன் பதம்பார்த்து செந்தூரித்து
போற்றியே நவலோகம் நூற்றுக்கொன்று
பூட்டடா பன்னிரெண்டு மாத்துமாகும்
பார்த்திபனே வேறுவகை சூதந்தானும்
பரிவாக பலமெட்டு யெடுத்துக்கொண்டு
சாத்தியதோர் தங்கமொரு பலமுங்கூட்டி
சங்கையுடன் தெளிவாக வுருக்கிப்பாரே. 8

பாரப்பா வுருக்கியதைப் பொடியாய்ச்செய்து
பார்த்திபனே பதினாலு பலந்தான்கெந்தி
நேரப்பா பொடிசெய்து கூட்டிநீயும்
நேர்மையுடன் குப்பியிலே நிறையச்சேர்த்து
சேரப்பா வாலுகையி லேத்திமைந்தா
தீர்க்கமுடன் பதம்பார்த்து செந்தூரித்து
காரப்பா யிதையெடுத்து நூற்றுக்கொன்று
காட்டவே நவலோகங் கனகமாமே. 9

ஆமப்பா யிதின்பேர்தான் வாலச்சந்திரன்
அரகரா குன்றியிரு நேரங்கொண்டாற்
தாமப்பா மண்டலந்தான் கொண்டாயானாற்
கலைமதிபேற் றேகமது காந்தியாகும்
போமப்பா சட்டையது வுரிந்துபோகும்
பூரணமாங் கண்கள்ரெண்டு மொளிவாய்நிற்குந்
தோமப்பா வுடம்புருகி வாலையாகுஞ்
சுத்தமுள்ள கற்பமடா வந்துமார்க்கம்
போமப்பா வுண்போர்க்கு சோதிகாணும்
பேர்பெரிய வேதாந்த சித்தராமே. 10

உபரச சத்து

சித்தருடனு பரசத்தின் சத்துச்சொல்வேன்
செயமான நவாச்சாரம் விராகன்ரெண்டு
பத்தியுள்ள வீரமது விராகன்ரெண்டு
பதிவான மண்டலத்தின் தம்பலமோபத்து
புத்தியுட ஏண்டநீர்விட்டு ஆட்டி
பூர்ணமாய்க் குகையிலிட் டுருக்கச்சத்தாம்
வெற்றியுள்ள சத்து தாரகம்போல்
வேகமுட னுருகுமதைக் கண்டுபாரே. 11

துத்த சத்து

பாரப்பா துத்தசத்து வேதைசொல்வேன்
பரிசமுதல் சந்தான தூபதீபம்
நேரப்பா சூதத்தைச் சமனதாக
நேர்மையுடன் கூட்டிநன்றா யுருக்கிப்பாரு
காரப்பா நாலிலொன்று தங்கஞ்சேர்த்துக்
கருணையுட னுருக்கியதை மணியாய்வாங்கி
தேரப்பா வந்திடைக்குக் கெந்திசேர்த்து
சிவசிவா பொடிசெய்து குப்பிக்கேத்தே. 12

ஏத்திநன்றாய் வாலுகையி லங்கிபூட்டி
யெடுத்து சிவந்தான பதமும்பார்த்துப்
போற்றிநன்றாய் நவலோக நூற்றுக்கொன்று
பூட்டினாற் பதினாலு மாத்துமாகு
மாற்றிநன்றாய் வீரமிட்டு செந்தூரித்து
மகத்தான சூதமிட்டரைத்துக் கொண்டு
தோற்றியதோர் தூசிலிட்டு திரித்துத்தானே
சுத்தமுள்ள நீர்தனிலே துவைத்திடாயே. 13

துவைத்ததொரு திரியெடுத்து தீபமேந்தி
சூழவே கடுதாசி கூடுகட்டிப்
பலித்ததொரு நவலோகத் தகடுக்கேதான்
பத்தியதோர் திரியவித்து தூபங்காட்டில்
தனித்ததொரு தகடெல்லாங் கறுத்துப்போகுந்
தண்மையுடன் தணல்காட்டத் தங்கமாகுஞ்
சிவத்ததொரு தாம்பிரமாம் வேதைமார்க்கஞ்
சிரேட்டமுள்ள மாணாக்கர் கண்டுகொள்ளே. 14

காந்தச் சத்து

கண்டுபார் காந்தமது பலந்தானொன்று
கட்டியதோர் சாரமது பலந்தானைந்து
விண்டுபார் சவ்வீரம் பலந்தானைந்து
வெற்றியுள்ள வெங்காரஞ் சமனாய்ப்போடு
கொண்டதொரு செம்பினி லிட்டுத்தானுங்
குறியாகத் தானுருட்டிக் குகையில்வைத்து
சென்றிடவே செப்பிலிட் டுருக்கிப்பாரு
சிவசிவா நாகம்போற் சத்துபாரே. 15

பாரப்பா நாகம்போற் காந்தமானால்
பதிவாக காயசித்தி யோகசித்தி
நேரப்பா கண்டிடைக்கி ரசமுங்கூட்டி
நிசமான சத்திடைக்கித் தங்கங்கூட்டி
சேரப்பா தானுருக்கி மணியாய்வாங்கி
தீர்க்கமுள்ள கெந்தகமுஞ் சமனாய்ச்செய்து
காரப்பா பொடிசெய்து குப்பிக்கேத்திக்
கருணையுடன் வாலுகையிற் றீயைமூட்டே. 16

மூட்டி நன்றாய்ச் செந்தூரப் பதத்தைப்பாரு
மோசங்கள் வாராமல் சலாகைபோட்டு
நீட்டியதோர் சலாகைமுனைக் காப்புக்கண்டால்
நிலைத்ததொரு செந்தூரம் பதமாய்ச்செய்து
பூட்டியதோ ரீசான்யம் பூசைசெய்து
புகழாக குழைந்தபின் னிறக்கிப்பாரு
ஆட்டியதோ ரருணனைப் போலவாகு
மந்திசந்தி யிரண்டுகுன்றி தின்னுதின்னே 17

திண்ணடா மண்டலத்திற் காயசித்தி
சிவசிவா அருணனைப்போற் றேகமாகும்
கண்ணடா சோதிவெகு காந்தியாகும்
கலகலத்த தந்தமெல்லா மிருகிப்போகும்
எண்ணடா கோடான கோடிபேர்க
ளிதையறிந்து குருமுடிக்க திகைத்துநின்றார்
பொன்னடா பொன்னதனைக் காணவென்றாற்
பூட்டுகிற வகையதனைப் புகலக்கேளே. 18

காந்த செந்தூரம்

கேளடா காந்தசத்து நாகமொன்று
கெடியான தங்கமொன்று ரசந்தானொன்று
நாளடா மூன்றுமொன்றா யுருக்கும்போது
நல்லதொரு நாகமது மூன்றுபோடு
காலடா புகையமர்ந்து கட்டிப்போகுங்
கருணையுட னின்றுருகி மணியுமாகும்
ஆளடா யிந்திடைக்கி கெந்திகூட்டி
அப்பனே நாலுவித வைப்புஞ்சேரே. 19

சேரப்பா பொடித்தல்லோ குப்பியிற்றாக்கி
திறமாக வாலுகையில் நீற்றிக்கொண்டு
நேரப்பா நவலோகம் நூற்றுக்கொன்று
நீட்டவே பன்னிரண்டு மாத்துமாகுந்
தேரப்பா மயங்காதே பொன்னைப்பார்த்து
தீர்க்கமுடன் குழிக்கல்லிட் டரைத்ததின்பின்
நீரப்பா துருசுசத்து சமானாய்ச்சேர்த்து
நீற்றியதை பதமாக வெடுத்துப்பாரே. 20

பூநாக சத்து


பாரப்பா பூநாகச் சத்துச்சொல்வேன்
பதிவாக பூமிவேர் தன்னைவாங்கி
சேரப்பா வுலர்த்திநன்றாய்ப் பொடியேசெய்து
செயமான சாரமது யிடைகளஞ்சி
காரப்பா சல்வீர மிடைகளஞ்சி
கட்டான வெங்கார மிடைகளஞ்சி
சேரப்பா யிதுவெல்லாஞ் செயநீர்தன்னாற்
செம்மையுடன் வார்த்துருட்டிக் குகையில்வையே. 21

வைத்துநன்றாய் சில்லிட்டு வுருக்கிப்பாரு
மார்க்கமுடன் மணிமணியாய் சத்துவிழும்
வைத்தல்லோ மணியெல்லா முருக்கிப்பார்க்க
மகத்தான வயிரம்போற் பளபளக்குங்
கைத்ததொரு பூனாக சத்திற்றானுங்
கருணையுடன் காசிடைதா னுருட்டிமைந்தா
கைத்ததொரு நாகமைந் திடையேபோட்டு
நல்லகரு விரண்டுமொன்றா யுருகும்பாரே. 22

பாரப்பா வப்படியே யுருக்கிப்பார்க்க
பதிவாக வேரிடைதா னாகமட்டுஞ்
சாரப்பா கட்டியதோர் நாகமொன்று
சங்கையுள்ள சூதமொன்று தங்கமொன்று
நேரப்பா யுருக்கியதை வாங்கிக்கொண்டு
செழுமையுடன் வாலுகையி லேத்திடாயே. 23

ஏத்தியல்லோ தீயெரித்து செந்திரித்தா
லென்னசொல்வேன் நவலோகம் நூற்றுக்கொன்று
சாத்தியல்லோ தானுருக்கிப் பார்த்தால்மைந்தா
சங்கையுடன் பதினாறு மாத்துக்காணுங்
கூற்றனுனை காண்பதற் கஞ்சுவான்பார்
குருவருள்ால் பராசத்தி பாதந்தன்னைப்
போற்றியே யாரெடுத்துப் பார்த்தாலுந்தான்
புண்ணியர்க்கு ரசவாதப் புகழுண்டாமே. 24

அகஸ்திய மகாமனிவர் அருளிச் செய்த
ஊத்துமுறை – 24 முற்றிற்று


தாமரை
நூலகம்